ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி—37

ஸ்ரீ சுரேஸ்வராசார்யாளின்

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்

மானஸோல்லாஸ வார்த்திகத்துடன் கூடியது





ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள்

ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி—37

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்

(ஸ்ரீ ஸுரேச்வராசார்யாளின்
மானஸோல்லாஸ வார்த்திகத்துடன் கூடியது)

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்
அருளிய திவ்ய ஸ்ரீமுகத்துடனும்

அண்ணாமலை சர்வகலாசாலை
பண்டிதராஜ சுப்ரமணிய சாஸ்திரிகள்
அவர்களின் தமிழில் பத உரை, அர்த்தத்துடனும்

சென்னை கவர்ண்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜ் லெக்சரர்
பி. சங்கரநாராயணன்
அவர்களின் முன்னுரையுடனும் கூடியது

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை -1
பதிப்புரிமை] 1957 [விலை ரூ. 1.75 ந.பை.

முதற் பதிப்பு 1951
இரண்டாம் பதிப்பு 1957

All rights reserved

PRINTED AT THE LIBERTY PRESS, MADRAS-1

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி,
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

॥ श्रीः ॥

मुद्रा

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य

श्रीमच्छङ्करभगवत्पाद् प्रतिष्ठित

श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु

श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः

क्रियते नारायणस्मृतिः ॥

विदिततरमेवैतदास्तिकानां सहृदयानां यद्दयासागराः **श्रीमच्छङ्करभगवत्पादाचार्याः** मुमुक्षुजनतोद्दिधीर्षया **श्रीदक्षिणामूर्तिस्तोत्रा**भिधमद्वैतसिद्धान्तप्रकाशकं ग्रन्थमणिमन्वगृह्णन्निति । अयं ह्यादिमगुरोरुपदेशक्रमं संक्षेपेण शारीरकशास्त्रतत्त्वं च बोधयति । अतः शान्तिपाठपुरस्सरं प्रस्थानत्रयभाष्यश्रवणावसरे यस्य देवे पराभक्तिरिति शास्त्रप्रमाणकाचार्यवन्दने उपयुञ्जन्ति संप्रदायविदश्शास्त्रचिन्तकाः दशश्लोकविराजमानमिदं स्तोत्रश्रेष्ठम् ।

श्रीभगवत्पादविनेयेष्वग्रेसराः तैत्तिरीयकबृहदारण्यकभाष्यवार्तिककाराः **श्रीसुरेश्वराचार्याः** प्रकृतस्तोत्ररत्नं काञ्चनमयपतकायमाने सुधीजनमानससमुल्लासकतया अन्वर्थनामधेये **मानसोल्लासाख्ये** स्वीयवार्तिके विन्यस्य मुमुक्षूणां मानसं समतोषयन् । सचायं ग्रन्थः षट्त्रिंश-

तत्त्वात्मकशैवसिद्धान्तं योगसिद्धिमार्गं च सरलया हृदयंगमया च शैल्या निरूपयन् पञ्चषष्ट्युत्तरत्रिशतश्लोकैर्वेदान्तसिद्धान्तं सुखेन विवृणोतीत्यद्वैतिलोकप्रसिद्धमेतत् ।

एतदपि प्रमोदस्थानं यद्विशिष्याद्वैतबुभुत्सूनां गीर्वाणवाण्य-परिश्रान्तमानसानामप्युपकाराय भवतु प्रकृतग्रन्थरत्नद्वयमिति निश्चित्य **श्रीकामकोटिकोशस्थाने** द्रविडभाषानुवादनिबद्धं मुद्राप्य प्रकाश्यत इति । अतस्सर्वे मुमुक्षवः—

सर्वात्मत्वमिति स्फुटीकृतमिदं यस्मादमुष्मिंस्तवे
तेनास्य श्रवणात्तदर्थमननात् ध्यानाच्च संकीर्तनात् ।
सर्वात्मत्वमहाविभूतिसहितं स्यादीश्वरत्वं स्वत-
स्सिद्ध्येत्तत्पुनरष्टधा परिणतं चैश्वर्यमव्याहतम् ॥

इत्यस्मिन् प्रकृतस्तोत्रान्तिमश्लोके श्रीमद्भगवत्पादानुगृहीतरीत्या एतत्-स्तोत्रपठनेन श्रवणेन तदर्थमननध्यानाभ्यां च **श्रीमहात्रिपुरसुन्दरीसमेत श्रीचन्द्रमौलीश**कृपया स्वात्मसाक्षात्कारलाभं संपादयन्तश्श्रेयांसि प्राप्नुवन्त्वित्याशास्महे ।

विजययात्रास्थानम्
अरशवनङ्काडु
खरनाम सं०
वैशाखशुद्ध दशमी

नारायणस्मृतिः

முத்திரை

ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜக ஆசார்யவர்யர்களான ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர்களினல் ப்ரதிஷ்டை செய்யப் பெற்ற ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிச்வரர்களான ஸ்ரீ ஜகத் குரு ஸ்ரீமத்சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ பாதர்களால் நாராயண ஸ்மரணம் செய்யப்படுகிறது.

கருணைக் கடலான ஸ்ரீஆதி சங்கரபகவத்பாதர்கள் முமுக்ஷுக்களைக் கரையேற்றுவதற்காக அத்வைத ஸித் தாந்தத்தை விளக்கக்கூடிய ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்ர மெனும் பெயருடைய க்ரந்தரத்நத்தை அநுக்ரஹித்திருக் கிறார்களென்று ஸஹ்ருதயர்களான ஆஸ்திகர்களனைவரும் அறிந்ததே. இக்கிரந்தம், ஆதிகுருவின் உபதேசக்ரமத் தையும் சுருக்கமாக ஸம்க்ஷேபசாரீரக சாஸ்த்ரதத்வத்தை யும் தெரிவிக்குமதாகையாலே ப்ரஸ்த்தாந த்ரயபாஷ்ய ச்ரவணம் பண்ணும்போது சாந்தி பாடத்தை முன்னிட்டுக் கொண்டு ஆசார்யவந்தனத்தால் ஸம்ப்ரதாய மறிந்தவர் கள் ஷ ஸ்தோத்ரத்தை உபயோகித்து வருகிறார்கள்.

ஸ்ரீ பகவத்பாதர்சிஷ்யர்களில் தலைவரான ஸ்ரீஸுரேச் வராசார்யர்களும் இந்த ஸ்தோத்ரத்தை ஸுவர்ணபதகம் போல் முமுக்ஷுக்களுக்கு ஆதரணீயமாக மாநஸோல் லாஸமென்னும் தன் வார்திகத்தில் முதலில் சேர்த்துக் கொண்டார். இக்ரந்தம் முப்பத்தாறு ஸித்தாந்தங்கள டங்கிய சைவஸித்தாந்தத்தையும் யோகமார்க்கத்தையும் விளக்கிக்கொண்டு எளிய நடையில் வேதாந்த ஸித்தாந் தத்தையும் விளக்குகிறதென்பது அத்வைதிகளுக்குத் தெரிந்ததே. மேலும் இக்ரந்தங்களிரண்டும் ஸம்ஸ்கிருத

பாஷையில் அதிக பரிசயமிலாதார்க்கும் அத்வைதம் கற்க விருப்பமுடையவர்களுக்கு உபகாரமாகும் என்று நிச்சயித்து ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தில் தமிழநுவாதத்துடன் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஸ்தோத்ரத்தின் (ஸர்வாத்மத்வம்) என்கிற கடைசி பத்யத்தில் சொல்லியபடி முமுக்ஷுக்கள் இதைப் படித்தும் கேட்டும் அர்த்தாநு ஸந்தாநம் பண்ணியும் ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்த்ர மௌலீச்வர க்ருபையினால் ஸ்வாத்மஸாக்ஷாத்காரத்தைப் பெற்று ச்ரேயஸ்ஸை அடைவர்களென்று ஆசாஸிக்கிறோம்.

விஜயயாத்ராஸ்தானம் அரசவனங்காடு கர நாம ஸம்வத்ஸரம் வைசாக சுத்த தசமீ	**நாராயணஸ்ம்ருதி:**

Sri

SEAL

Meditation on Sri Narayana

BY

His Holiness The Jagadguru

SRI CHANDRASEKHARENDRA SARASWATI SWAMIGAL

Head of the Sri Kanchi Kamakoti Mutt

ESTABLISHED BY

HIS DIVINE HOLINESS THE SUPREME ASCETIC

AND

WORLD TEACHER

Paramahamsa Parivrajakacharyavarya

SRI SANKARA BHAGAVATPADAH

It is well known to all earnest devotees that, out of the abundance of His compassion and to enlighten those desiring salvation, His Divine Holiness Sri Sankara Bhagavatpada graciously dowered them with a nosegay

of supplicatory verses called *Sri Dakshinamurti Stotra*, a composition of rare excellence. This work which invokes the grace of the Supreme Guru, who is Paramesvara Himself in His aspect of Sri Dakshinamurti gives a brief and clear summary of the truths of Brahma Vidya known as Sariraka Mimamsa as taught by our first Acharya. It is customary for the students of the Adhyatma Sastra to begin their study of the Prasthanatraya bhashyas of Sri Sankara Bhagavatpada with an invocatory prayer in keeping with our tradition of identifying the Guru with God Himself and seeking His aid for the dawn of enlightenment. This meritorious Stotra of ten verses in Praise of Him who is God and Guru in one is recited by conforming students of Sastraic wisdom on the occasion of such invocation known as Santi Pata.

The foremost among the immediate disciples of Sri Sankara Bhagavatpada is *Sri Suresvaracharya* who wrote explanatory commentaries known as *Vartikas* on our Acharya's Bhashyas on the Taittiriya and the Brihadaranyaka upanishads. He also wrote for the benefit of earnest seekers of salvation a clear exposition of the substance of Dakshinamurti Stotra. This work bears the very appropriate title of *Manasollasa;* for, it fills the mind of every intelligent student with the delight born of clear understanding of the hymn and its commentary. All students of Advaita are also aware that this work expounds in an easy and attractive style the 36 truths of Saiva Siddhanta and the path of Yoga Siddhi and very lucidly describes the Vedanta in 365 slokas.

The Kamakoti Kosasthanam has brought out in the following pages a new edition of the Sri Dakshinamurti Stotra and the Manasollasa with a Tamil translation of

both for the benefit of seekers of Advaitic lore who cannot read the originals in Samskrit. The final and benedictory sloka of the Stotra says:

> "Because the universality of the Atman has thus been explained in this hymn, therefore, by hearing it with devotion, by reflecting on its meaning, by meditating on its significance and by reciting it with fervour, that divine state which is endued with mighty grandeur of being the Universal Self will come into existence as also that unimpeded divine Power presenting Itself in Its eight-fold form."

In accord with this benign assurance of Sri Bhagavatpada, We confer Our benediction on all earnest seekers of salvation that they be dowered with the realisation of their true Self and supreme bliss as a result of their reading and hearing of this Stotra and reflection and meditation on it. In doing so, We invoke for them the grace of Sri Tripurasundari and Sri Chandramoulisvara.

CAMP:
ARASAVANANKADU
10th day after the New Moon of Vaisakha Month of the Khara year

NARAYANA SMRITHIH

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி

நாயன்மார்களும் தாயுமானவ சுவாமிகளும் தமது நூல்களில் சிவபிரான் சனகாதிகளான நால்வருக்கு அற முரைத்ததாக ஆங்காங்கு குறிப்பிடுகிறார்கள். ஒவ்வொரு சிவாலயத்திலும் இளம்வயதுடைய கோலத்துடனே ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, மிகவும் வயது முதிர்ந்த கோலத்தைத் தாங்கிய சனக, சனந்தன, சனாதன, சனத்ஸுஜாதர்க ளுக்கு இடது கையில் ஒரு சுவடியையும், வலது கையில் ஞான முத்திரையும் தாங்கி உபதேசிப்பதாக சில்ப ஒவி யத்தில் காண்கிறோம். ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் பாதம் அரக்கவடிவந் தாங்கிய மயக்கமேயாம் முயலகனை மிதித்து அழுத்திக் கொண்டிருப்பதையும் காண்கிறோம். ஸ்ரீ நட ராஜப்பெருமானின் வடிவத்திலும் அவர்பாதம் இதே மயக் கமாம் முயலகனை அழுத்திக்கொண்டிருப்பதைக் காண் கிறோம். தக்ஷிணாமூர்த்தி ஞானமூர்த்தி. நடராஜமூர்த்தி ஆனந்த மூர்த்தி. அத்வைததத்வத்தில் ஞானமும் ஆனந் தமும் ஒன்றே. மயக்கமழியும்போது ஞானானந்தம் ப்ர காசிக்கிறது. இதுவே இம்மூர்த்திகளின் தத்வம். இவ் விரு மூர்த்திகளுமே தென்திசை நோக்கி நிற்பன. இம் மூர்த்திகளில் ஒன்றை வழிபடுவோர் தென்னவனும் யமன் வசம் சிக்கவேண்டியதில்லை. ஜீவன்முக்தி யடைந்தவரா கிறார். நடராஜ மூர்த்தி தனது ஆனந்த தாண்டவ முடிவில் தமது கையிலிருக்கும் உடுக்கையை '14' தடவை ஒலிக்கிறார். [1] அவ்வோசைகள் '14' சூத்திரங்களாயின.

---

1 * ந்ருத்தாவஸானே நடராஜ ராஜ: நநாத டக்காம் நவ பஞ்சவாரம் | உத்தர்த்து காமஸ் ஸனகாதி ஸித்தான் ஏதத் விமர்சே சிவஸூத்ரஜாலம்.

[2] சனகாதி முனிவர்கள் சன்னிதியில் நிற்கின்ருர்கள். அவர்களை உய்விக்கவே இவ்வொலிகளை எம்பிரான் ஒலிப்பித்தது.

உடனே நந்திகேசர் அவ்வொலிகளைச் சுவடியில் வரிவடிவிலேற்றி அவைகளுக்கு உரையாக '27' சிறு சுலோகங்களை இயற்றினர். இவ்வுரைக்கு நந்திகேசுவர காரிகை என்று பெயர். இக்காரிகைக்கு உபமன்யு முனிவர் ஸம்ஸ்கிருத வசன நடையில் பாஷ்ய மியற்றியிருக்கிருர். இந்நூல்கள் அத்வைத ஞானத்தையே போதிக்கின்றன. இவ்வொலிகளே சுவடி வடிவில் ஸ்ரீ தக்ஷிண மூர்த்தியின் இடது திருக்கரத்தில் துலங்குகின்றன. இவ்வொலிகளின் உரையே திருமுகத்தில் துலங்கும் மோனமுத்திரையும் வலது திருக்கரத்தில் துலங்கும் ஞானமுத்திரையுமாம்.

---

2 * அஇஉண் - ருலுக் - ஏஓங் - ஐஔச் - ஹயவரட் - லண் - ஞமஙணனம் - ஜபஞ் - கடதஷ் - ஜப கடதஶ் - கபசடதசடதவ் - கபய் - ஶஷஸர் - ஹல். இச்சூத்ரங்களையே பாணினி முனிவர் தம் வியாகரண சாஸ்திரங்களுக்கு மூல சூத்ரங்களாகவும் வைத்துக்கொண்டிருக்கிருர்.

|| श्रीः ||

|| "तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये" ||

|| "भव शङ्करदेशिक मे शरणम्" ||

|| श्री सद्गुरुचरणाभ्यां नमः ||

முன்னுரை

I

ஸ்ரீ பரமேஶ்வரனின் அவதாரமாய் விளங்கிய லோக குருவான நம்முடைய பரமாசாரியாள் **ஸ்ரீ சங்கர பகவத் பாதாள்** நாம் தினந்தோறும் அனுசந்தானம் செய்வதற்கு பல ஸ்தோத்ரங்களைச் செய்து அனுக்ரஹித்திருக்கிறார்கள். அவைகள் 'பக்திஸ்தோத்ரங்கள்' என்றும், 'வேதாந்த ஸ்தோத்ரங்கள்' என்றும் இருவகைப்படும். வேதாந்த ஸ்தோத்ரங்களில் ப்ரஹ்மசூத்ரம், உபநிஷத்துக்கள், பகவத்கீதை என்ற ப்ரஸ்தானத்ரயங்களில் விளக்கப்பட்டுள்ள வேதாந்த தத்வங்களைச் சுருக்கமாகவும் ஆயினும், வெகு தெளிவாகவும் அமைத்து, விசாரத்திற்கும் த்யானத்திற்கும் சுலபமாய் இருக்கும் வழியில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ஸ்தோத்ரங்களில் மிகவும் சிறப்புற்றது **ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்** என்பது. 'பலஶ்ருதி' ஶ்லோகம் உள்பட இதில் பத்து ஶ்லோகங்கள் இருக்கின்றன. இந்தப் புத்தகத்தில் இந்த ஸ்தோத்ரமும், தமிழில் அதன் பதவுரையும் கருத்தும், ஸ்ரீ ஆதி சங்கரரின் முக்கிய சிஷ்யரான **ஸ்ரீ ஸுரேஶ்வராசாரியாள்** இதற்கு அருளிச்செய்த **மானஸோல்லாஸம்** என்ற கிரந்தமும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

II

நமது வைதிக சம்பிரதாயத்தின்படி எல்லா வித்யையும் குருமுகமாகத்தான் கிரஹிக்கப்பட வேண்டும். வித்யாப்யாஸத்திற்கு இன்றியமையாத சில அங்கங்கள் உண்டு. முதலாவதாக பிரகிருத வித்யையைக் கற்றறிய ஓர் ஆசை அல்லது அவா வேண்டும். அதற்கு 'ஜிஜ்ஞாஸா' என்று பெயர். அறிய ஆற்றல் இல்லாத ஒருவன் எந்த வித்யையையும் தெரிந்துகொள்ள முடியாது. இரண்டாவதாக 'ஜிஜ்ஞாஸு' வாய் இருப்பவனுக்கு, அதை அப்யஸிக்க 'அதிகாரம்' வேண்டும். ஜன்மத்தாலும், குணத்தாலும் மானிடர்களுக்கு 'அதிகாரபேதம்' ஏற்படுகிறது. எவனும் எந்த வித்யையையும் கற்றுக்கொள்ளலாம், கற்றுக்கொள்ள முடியும் என்ற கொள்கையை நம் வைதிக சம்பிரதாயம் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு மாறுன ப்ரவிருத்தியின் பயனின்மையும், விபரீத பலனுமே இந்த கொள்கையின் உண்மையை நன்கு விளக்கும். இத்தகைய 'அதிகாரிபேத'த்தைத் தவிர, ஜிஜ்ஞாஸுவான ஒருவனுக்கு அப்படியாக மூன்று லக்ஷணங்கள் பொருந்தியிருக்க வேண்டும். அவை 'மேதை', 'சிரத்தை'. 'குரு பக்தி' எனப்படும். மேதை யில்லாதவனுடைய மூடத்தனமும், சிரத்தையில்லாமையின் ஆலஸ்யமும் வித்யாப்ராப்திக்கு இடையூறுகளாகும். கடவுளின் அருளால் மேதையைப் பெற்று ஶ்ரத்தையுடன் கூடினாலன்றி ஜ்ஞானப்ராப்தி ஏற்படாது. இவற்றோடு கூட, ஜிஜ்ஞாஸுவுக்கு 'குரு பக்தி' என்பது மூன்றாவது லக்ஷணமாக அமைய வேண்டும். நம் நாட்டில் எந்த வித்யையையும் குரு உபதேசிக்க, சிஷ்யன் கிரஹித்துத்தெரிந்து கொள்ள வேண்டும் என்பது சம்பிரதாயம். எதையும் ஒருவன் தானாகவே, குருவின் உபதேசமில்லாமல் தெரிந்துகொண்டு விடலாம் என்பதை நம்மவர் ஒத்துக் கொள்ளவில்லை. துரோணாசாரியரால் நிராகரிக்கப்பட்ட ஏகலவ்யன், வில் வித்தையைப்பயில, துரோணரைப்போல் ஓர் விக்ரஹம் செய்து, தினந்தோறும் அதற்கு வந்தனம் பண்ணி

அதன் அனுக்ரஹத்தை யாசித்து, ஸ்வப்ரயத்னத்தால் இணையற்ற தேர்ச்சியை யடைந்தது குருப்ரஸாதத்தின் முக்யத்வத்தைத் தெளிவுறுத்துகிறது. வித்யாப்ராப்தி யென்பது குருவின் உபதேசத்தின் பயன். இந்த உபதேசத்திற்கு இரண்டு பக்கபலங்கள் அவசியம். ஒன்று: சிஷ்யனுக்கு ஆசாரியனிடத்தில் விசுவாஸமும் பக்தியும். இரண்டு: ஆசாரியனுக்கு சிஷ்யனிடத்தில் அனுக்ரஹ புத்தி. சிஷ்யனுக்கு 'வித்யார்த்தி' 'அந்தேவாஸி' என்று மற்ற பெயர்களும் உண்டு. ஜிஜ்ஞாஸுவான சிஷ்யன் ஆசாரியனை விநயத்துடன் அணுகி, விரும்பிய வித்யையை உபதேசிக்குமாறு 'அர்த்திக்க' வேண்டும். 'ஹே! குரோ! அதீஹி' (हे गुरो अधीहि) என்று யாசிக்க வேண்டும். இப்படி யாசிக்கும்பொழுது சிஷ்யனுக்கு குருவிடத்தில் சற்றேனும் குற்றங்குறைவில்லாத பரிபூர்ண மான விசுவாஸமும் பக்தியும் இருக்கவேண்டும். சிஷ்யன் இவ்வண்ணம் யாசிக்க, ஆசாரியன் அத்யந்த கருணை யுடன் சிஷ்யனை அனுக்ரஹித்து, யாசித்த வித்யையைத் தக்கமுறையில் அவனுடைய சக்திக்குகந்தவாறு உபதே சிப்பார். இவ்வுபதேசத்தால் அஜ்ஞானமாகிய இருள் நீங்கி, சிஷ்யனுக்கு ஞானோதயம் ஏற்படும்.

குருவின் உபதேசத்தால் சிஷ்யனுடைய மனதில் ஜ்ஞானபாஸ்கரன் உதயமாகிறானேயன்றி, அவனுடைய தேஜஸ்ஸும் ப்ரகாசமும் பூர்ணமாய் மனதை வியாபித்து சிஷ்யனை ஜ்ஞானவானாக்க சிஷ்யனின் பிரயத்ன ரூபமான சில அங்கங்கள் அவசியம். குருவினுடைய உபதேசத்தை சிரத்தையுடன் ஶ்ரவணம் பண்ணிய பிறகு, தனிமையான இடத்தில் இருந்துகொண்டு, ஏகாக்ரசித்தத்துடன் அந்த உபதேசத்தின் வசனத்தையும் அர்த்தத்தையும் சிந்தனை பண்ணி நன்றாய் தெளிவுபடத் தெரிந்து கொள்ளவேண் டும். ஸம்ஶயம்வந்தால் மறுபடியும் குருவையணுகி ஸம்ஶய நிவ்ருத்தி செய்துகொள்ளவேண்டும். இப்படி த்யானம் செய்து, உபதேசிக்கப்பட்டவித்யையின் தத்வார்த்தத்தை நிதித்யாஸநம் பண்ணித் தெரிந்துகொண்டு அடிக்கடிச்

சொல்லித் தெளிவடைந்து பிறருக்குப் போதிக்கவேண்டும். ஶ்ரவணம், மனனம், த்யானம், ஸங்கிர்த்தனம் என்ற நான்கும் வித்யாப்யாஸத்தின் பகுதிகளாகும். இப்படி கிரஹித்துத் தேர்ச்சியடைந்தவனே ஞானியாவான், இதுவே ஜிஜ்ஞாஸு ஜ்ஞானவானுவதற்கான மார்க்கம். இந்த உண்மையைத்தான் "ஆசாரியவான் புருஷோ வேத" (आचार्यवान् पुरुषो वेद) என்ற வாக்யம் வற்புறுத்துகிறது, வித்யார்த்தியான சிஷ்யன், உபதேசப்ரஸாதகனுன குரு, ஆக இருவரின் ஸம்பந்தத்தால் உண்டாவது வித்யை என்ற ப்ரயோஜனம். இதையேதான் தைத்திரீய உபநிஷத்தில்:
अथाधिविद्यम् । आचार्यः पूर्वरूपम् । अन्तेवास्युत्तररूपम् । विद्या सन्धिः । प्रवचनꣳ सन्धानम् । इत्यधिविद्यम् । என்றும், பிறகு, य एवमेता महासꣳहिता व्याख्याता वेद । सन्धीयते प्रजया पशुभिः । ब्रह्मवर्चसेनान्नाद्येन सुवर्गेण लोकेन । என்று अधिलोकम्, अधिज्यौतिषम्, अधिविद्यम्, अधिप्रजम्, अध्यात्मम् என்ற மஹா ஸம்ஹிதைகளைப்பற்றிக் கூறுமிடத்து अधिविद्या ஸம்ஹிதை விளக்கப்படுவது கவனிக்கத் தக்கது.

III

இந்த தத்வத்திற்கிணங்க நம் நாட்டில் சகல வித்யைகளும் குருபரம்பரையால் உபதேச க்ரமமமாய் மேதையும் சிரத்தையுமுள்ள தக்க அதிகாரிகளுக்குப் போதிக்கப்பட்டு நிலை நின்று வருகின்றன. இந்த முறை எல்லா விதமான ப்ராக்ருத ஆதிபௌதிக (आधिभौतिक) வித்யைகள் விஷயத்திலும் அனுஷ்டிக்கப்பட்டிருக்கும்பொழுது, ஸர்வோத்க்ருஷ்டமாய் மோக்ஷப்ரதமான அத்யாத்ம (अध्यात्म) வித்யா விஷயத்திலும் அப்யஸிக்கப்படவேண்டும் என்பது கூறுமலே விளங்கும்.

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुर्गुरुर्देवो महेश्वरः ।
गुरुस्साक्षात्परंब्रह्म तस्मै श्रीगुरवे नमः ॥ என்றபடி

நாம் ஜ்ஞாநோபதேசகரான குருவை தெய்வமாகவே கருது கிறோம். குருவினிடத்தில் தேவதா விசுவாஸத்துடன் இருக்கவேண்டும். இதையேதான் ஸ்ரீஸுரேஶ்வராசாரியாள்

यस्य देवे परा भक्तिर्यथा देवे तथा गुरौ ।
तस्यैते कथिता ह्यर्थाः प्रकाशन्ते महात्मनः ॥

'எவன் ஈஶ்வரனிடத்தில் பக்தியை உடையவனும், ஈஶ்வரனிடத்தில் வைத்திருக்கும் பக்திபோல குருவினிடத்திலும் பக்தியுடையவனுகவும் இருக்கிறனே, அந்த மஹானுபாவனுக்குத்தான் குருவால் உபதேசிக்கப்பட்ட விஷயங்கள் பிரகாசிக்கின்றன.' என்று மானஸோல்லாஸத்தின் முடிவில் சொல்லி யிருக்கிறுர்கள்.

உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் ஜீவனோபாயமாய் சாஸ்திர சம்மதமான தனக்கு உகந்த லௌகிக வித்யையை அப்யஸிப்பதோடுகூட, அந்திம புருஷார்த்தமான மோக்ஷப்ராப்திக்கு ப்ரஹ்ம வித்யை என்ற ஆத்ம வித்யையை குருமுகமாக ஶ்ரவணஞ்செய்து தெரிந்து கொண்டு, மனன, த்யான சங்கீர்த்தனங்களால் ஸ்வானுபவத்தை யடைந்து ब्रह्मविद् ब्रह्मैव भवति என்றும் ब्रह्मविदाप्नोति परम् என்றும் கூறிய ஶ்ருதிகளுக்கிணங்க முக்தி நிலையை யடைய முயற்சிக்கவேண்டும் என்பது நமது வைதிக தர்மம் இட்ட கட்டளை. अयमात्मा श्रोतव्यः मन्तव्यः निधिध्यासितव्यश्च என்றபடி ஆத்ம வித்யை குருவிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளப்பட வேண்டியது.

IV

நம்முடைய குருபரம்பரையில் ஸாக்ஷாத் ஸர்வேஶ்வரனே ஆதிகுருவாய் விளங்குகிறார். அவர் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற காரியங்களுக்காக முவ்விதமாய் மூர்த்திகரித்து இக்காரியங்களைச் செய்வதுமன்றி உலகத்தில் மாறிமாறி ஜனன மரணங்களையனுபவித்து, இந்த ஜன்மாவில் மனிதராய் பிறந்து ஸம்ஸார பந்தத்தால் கட்டுண்டுஅஜ்ஞான இருளில் தவிப்போருக்கு ஞானோதயம் உண்டாக்கும் பொருட்டுபரமகாருணிகரானஸர்வேஶ்வரன் ஞானப்ரதரான தக்ஷிணாமூர்த்தியாய் விஶ்வகுருவாய் ஆவிர்பவித்து, மௌனியாய் சொல்லாமற் சொல்லி சின் முத்ரையால் ஆத்மஞானத்தை உலகத்தவற்கு உபதேசிக்கிறார்.

ஸத்யம்,ஜ்ஞானம்,அனந்தம் ப்ரஹ்ம (सत्यं ज्ञानमनन्तं ब्रह्म) என்று மூன்று பிரகாரமாய் பரப்ரஹ்மதத்வம் வ்யவஹரிக்கப்படுகிறது. இம்மூன்றில் மத்யமாய் உள்ளது ஞானம். இந்த ஞானந்தான் ஸத்தாய் இருக்கும் எதற்கும் பிரகாசத்தையும் சைதன்யத்தையும் கொடுப்பது. ஜ்ஞானரஹிதமான ஸத் அப்பெயர் கொண்டு வ்யவஹரிக்கத்தக்கதல்ல. ப்ரஹ்மம் ஞானஸ்வரூபம், சிதாத்மகம், சின்மயம். ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சின்மயமான பரப்ரஹ்மத்தின் த்ருஶ்யமாயும் உபாஸனா சுலபமாயும் மூர்த்திகரித்த அவதாரம். அவர் (1) வட விருக்ஷத்தினடியில் (2) மௌனியாய் (3) கையில் சின் முத்ரையுடன் (4) இடது காலை வலது துடையின்மேல் வைத்து (5) வலது காலால் ஒரு அசுரனை உதைத்துக்கொண்டு (6) தெற்கு திசையை நோக்கி வீற்றிருக்கிறார். பரதத்வத்திற்கும் வடவிருக்ஷத்திற்கும் நித்யமான சம்பந்தம் உண்டு. ऊर्ध्वमूलं अधः शाखं என்ற ஶ்ருதிக்கு ப்ரதிபாத்யமாயுள்ளது விருக்ஷம். வட பத்ரசாயியாய் பரம்பொருள் ஆலிலையின் மேல் பள்ளி கொண்டிருப்பதுபோல், பரமேஶ்வரன் தக்ஷிணாமூர்த்தியாய் வட விருக்ஷத்தினடியில் உட்கார்ந்து கொண்டு

ஞானோபதேசம் செய்கிறார். ஆனால், இது, வாய்பேசாத உபதேசம். மௌனமாய், சின்முத்ரையால் பரதத்வமாகிய ஜீவ ப்ரஹ்ம ஐக்யத்தைக் கூறும் ''தத்த்வமஸி'' (तत्त्वमसि) என்ற மஹா வாக்யத்தை உபதேசிக்கிறார். இந்த ப்ரஹ்ம தத்வத்தை அறிந்தவன் அஜ்ஞானம் நீங்கி, மிருத்யு பயமின்றி, புனர்பவமில்லாமல், ஜீவன்முக்தி ஸாம்ராஜ்யத்தையடைந்து ஸ்வராட் என்பதற்குப் பொருளான ஸ்வாராஜ்ய நிலையையடைகிறான் என்று காட்ட கால்மேல் கால்வைத்து வீராஸனத்துடன், ஒரு காலால் அஜ்ஞானமென்ற அசுரனை மிதித்துக்கொண்டு, தெற்கு திக்கை நோக்கி யமபய நிவர்த்தகராய் காட்சியளிக்கிறார். ஆகவே ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியே பரதவித்யையை உபதேசிக்கும் குரு பரம்பரையில் ஆதிகுருவென்று கருதி பூஜிக்கப்படுபவர். ஆத்ம வித்யை சித்திப்பதற்கு அவருடைய அனுக்ரஹம் மிகவும் அவசியம். இந்த உண்மையை விளக்கவே நம்முடைய பரமாசாரியாளான ஸ்ரீசங்கரபகவத்பாதாள் பத்து ஶ்லோகங்களடங்கிய இந்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரத்தை இயற்றி அதன் மூலம் விஶ்வகுருவான பரமேஶ்வரனை வந்தனம் செய்வதற்காக உபகரித்திருக்கிறார்கள். அதன்படி, நம் பரமாசாரியாள் செய்தருளிய ப்ரஸ்தானத்ரய பாஷ்யங்கள் சாந்தி பாடக்ரமமாக கிரஹிக்கப்படும் பொழுது முதலில் பாட ஆரம்பத்தில் இந்த ஸ்தோத்ரம் குருவந்தனமாக அனுசந்திக்கப்படுவது வழக்கம்.

V

இவ்வண்ணம், ஸ்ரீ பகவத்பாதாள் செய்த ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி ஸ்தோத்ரத்தை அனுசந்தித்து நமஸ்காரம் செய்யும்பொழுது பரமேஶ்வரன் வேறு, நமது பரமாசாரியாள் வேறு என்ற எண்ணத்துடன் இந்த நமஸ்காரங்கள் செய்யப்படுவதில்லை. ஸ்ரீ ஆதிசங்கரர் ஸ்ரீ சங்கரபகவானின் அவதாரமே என்பது நம் நம்பிக்கை.

अज्ञानान्तर्गहनपतितानात्मविद्योपदेशैः
त्रातुं लोकान् भवदवशिखातापपापच्यमानान् ।
मुक्त्वा मौनं वटविटपिनो मूलतो निष्पतन्ती
शंभोर्मूर्तिश्चरति भुवने शङ्कराचार्यरूपा ॥

என்றபடி ஸாக்ஷாத் ஸ்ரீசங்கரரே அஜ்ஞானமாகிய அடர்ந்த காட்டில் ஸம்ஸாராக்னியால் தவித்துக்கொண்டிருக்கும் ஜனங்களை ஆத்ம வித்யோபதேசங்களால் காப்பாற்ற கிருபையுடன், வடவிருக்ஷத்தினடியில் அசையாமல் மௌனியாய் வீற்றிருக்கும் நிலையை விட்டு, ஸ்ரீசங்கரா சாரியராய் அவதாரம் செய்து, எல்லா திக்குகளுக்கும் சென்று உபதேசிக்கும் பரமதேசிகனாய் விளங்குகிறார். ஸ்ரீ பரமேஶ்வரன் தக்ஷிணாமூர்த்தி என்ற நிலையில் விஶ்வ குரு. அவர் என்றும் இருப்பவர். காலத்தைக் கடந்த வர். ஆதியும் அந்தமும் இல்லாதவர். ஆனால் அவருடைய அவதாரமாகிய ஸ்ரீ பகவத்பாதாள், ஒரு காலத்தில் தோன்றி, 32-வது வயதில் சித்தியடைந்தது போல் நடித்து காலவறைக்குத் தன்னை உட்படுத்திக்கொண்டார். ஈஶ்வரன் வடவிருக்ஷத்தினடியில் அசையாமல் மௌனியாய் சின்முத்திரையின் அடையாளத்தினால் மாத்திரம் உபதேசிக்கும் கோலத்துடன் வீற்றிருக்கிறார். நமது ஆசாரியாள் ஆஸேதுஹிமாசலம் பர்யடனம் செய்து, வாய் திறந்து பேசி வாதம் பண்ணி தன் உபதேசத்தால் ஆத்மவித்யாப்ரசாரம் செய்தார். இதற்காகவே அவதரித்த ஸ்ரீ ஆதிசங்கரர் இம்மாதிரியான பர்யடனத்திற்கும் ப்ரசாரத்திற்கும் அநுகூலமான துரீயாஶ்ரமமாகிய ஸன்யாஸாஶ்ரமத்தை ஏற்றுக்கொண்டார். ஏனெனில் இந்த ஆஶ்ரமந்தான் ஊர் ஊராய்ச் செல்லச் சௌகரியமான ஆஶ்ரமம். ஓரிடத்திலும் ஸ்திரவாஸமாய் இருக்கக் கூடாது என்ற நிர்பந்தத்தால் பர்யடனம் அத்யாவஶ்யகமாயிற்று. அவர் போகும் இடங்களிலெல்லாம் வாத பிக்ஷாஸ்வீகரணமும் ஆத்மவித்யா ப்ரசாரமும் செய்து

பரமதேஶிகனாய் விளங்கினார். ஆகவே, எந்த சர்வேஶ்வரன் "சங்கரர்" என்றும், 'மயஸ்கரர்' என்றும், 'சம்பு' வென்றும் ஶ்ருதியில் கூறப்படுகிறாரோ, அவரே சங்கராசாரியராய்' பேசும் குருவாய், அத்வைத ஸித்தாந்த ஸ்தாபகமூர்த்தியாய் அவதரித்தார். குருப்ரஸாதத்தை அடையும் மார்க்கத்தை நமக்கெல்லோருக்கும் போதிக்க நம் பரமாசாரியாள் விஶ்வகுருவான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை இந்த பத்து ஶ்லோகங்களால் துதித்து நமஸ்கரித்து குரு வந்தனம் செய்து காட்டுகிறார்.

VI

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரத்தினால் குருவந்தன முறையைக் காட்டுவதுமின்றி, நமது பரமாசாரியாள் அதன் மூலம் அத்வைத சித்தாந்தத்தின் அடிப்படையான தத்வங்களை வெகு சுருக்கமாகவும் வெகு அழகாகவும் கூறியிருக்கிறார்கள். ஆத்மதத்வத்தைப்பற்றி விசாரிக்கும்பொழுது, ப்ரம்மம் (அல்லது ஈஶ்வரன்), ஜீவன், பிரபஞ்சம் என்ற மூன்றில் எது சத்யம், எது அசத்யம் என்ற கேள்வியும், இம்மூன்றுக்குமுள்ள சம்பந்தம் என்ன என்ற விசாரமும் ஏற்படுகின்றன. அத்வைத சித்தாந்தப்படி பரப்ரம்மம் ஒன்றுதான் சத்யம். மற்றவையெல்லாம் மாயையாலும் அஜ்ஞானத்தாலும் தோன்றும் மித்யை. (ब्रह्म सत्यं जगन्मिथ्या). பரமாத்மாவும் ஜீவாத்மாவும் வெவ்வேறல்ல. அவை இரண்டும் ஒன்றே. பரதத்வம் ஒன்றே, இரண்டல்ல, பலவாயுமல்ல. அது சுத்த சத்வமானது. ப்ரம்மம் எனப்படும். சத், சித். ஆனந்தஸ்வரூபம். நிரவயவம், நிற்குணம். அதை 'இது' 'அது' என்று கூறி விளக்கமுடியாது. 'இது இல்லை, இது இல்லை, (नेति नेति) என்று வ்யதிரேக வாக்யங்களால்தான் சொல்லமுடியும். உலகத்தில் த்ருஶ்யமாய் நாம ரூபத்துடன் காணப்படும் வஸ்துக்களெல்லாம் வெறும் தோற்றங்களே, அவைகள் தோன்றுவதுபோல்

சத்யமல்ல. இந்தத் தோற்றம் அஜ்ஞானத்தாலும் மாயையாலும் ஏற்பட்டது. மாயை என்பது சத்யமுமல்ல, அசத்யமுமல்ல. அது பொய் யுலகத்தை வாஸ்தவம் போல் தோன்றுவிக்கும் ஓர் பொய்க் காரணம். பாரமார்த்திகத்தில் அசத்யமாயும் வியாவஹாரிக தசையில் சத்யமாயும் உள்ள பிரபஞ்சத்திற்கு காரணமாய் விளங்குகிறது. பிரபஞ்ச வஸ்துக்களெல்லாம் நாம ரூபத்தால் பல்வேருகக் காணப்பட்டாலும் அவைகாணப்படுவதுபோல் மெய்யல்ல. ப்ரஹ்மத்தின் தோற்றங்களே. பிரபஞ்சம் முழுவதும் ப்ரஹ்மம், ப்ரஹ்மத்தைத் தவிர வேறல்ல. இந்த ப்ரஹ்மம் ஒன்றுதான். இரண்டல்லாதது. பிரபஞ்சத்தின் அசத்யத்தையும் ஜீவ ப்ரஹ்ம ஐக்யத்தையுமறிவதுதான் அத்யாத்ம வித்யையின் முக்யாம்ஸம், இந்த ஆத்மஜ்ஞானம் ஏற்பட்டால் அஜ்ஞானம் நீங்கி, மாயை விலகி, தத்த்வமஸி (तत्त्वमसि) என்ற மஹா வாக்யத்தின் உண்மை அனுபவ ஸித்தமாய் விளங்க 'அஹம்ப்ரஹ்மாஸ்மி' (अहं ब्रह्मास्मि) என்று சொல்லத்தகுந்த ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறது. இதற்குத்தான் மோக்ஷ நிலை அல்லது முக்திநிலை யெனப் பெயர். இந்த நிலையை இந்த ஜன்மாவிலேயே அடையமுடியும். இப்படியடைந்தவர்கள் ஜீவன்முக்தர்களெனப்படுவார்கள். இவர்கள் பிராரப்தகர்மாவின் சேஷத்தை அனுபவித்துக்கொண்டு, விருப்பு வெறுப்பற்று, தன்னை மறந்து, லோகக்ஷேமார்த்தம் பாக்கியிருக்கும் வாழ் நாட்களை பால, உன்மத்த, மூகர்களைப்போல் கழிக்கிருர்கள்.

VII

மேற்கூறிய அத்வைத சித்தாந்தத்தின் முக்ய தத்வங்களை ஸ்ரீ பகவத்பாதாள் ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்ரத்தில் வெகு அழகாயும் சுலபமாய்த் தெரிந்து கொள்ளும் விதத்திலும் அமைத்துக் காட்டியிருக்கிருர்கள். பரப்ரஹ்மமே த்யானத்திற்கும் உபாசனைக்கும்

எளிதான தக்ஷிணமூர்த்தியாய் விளங்குவதால், குருமூர்த்தியையே ப்ரஹ்மமாயும், ப்ரஹ்மதத்வோபதேசகராயும் தியானித்து வந்தனம் செய்யவேண்டும் என்று போதிக்க ஸ்ரீ ஆசாரியாள் ஒவ்வொரு ஸ்லோகத்தின் முடிவிலும்

तस्मै श्री गुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥

என்று சொல்லி நமஸ்காரம் செய்கிறார். இதே அபிப்ராயத்தையே ஸ்ரீ ஸுரேஸ்வராசாரியாள்

ईश्वरो गुरुरात्मेति मूर्तिभेदविभागिने ।
व्योमवद्व्याप्तदेहाय दक्षिणामूर्तये नमः ॥ என்ற ஸ்லோகத்தால் தெரிவிக்கிறார்.

அத்வைத சித்தாந்தத்தின் முதல்படி அத்யாஸ (अध्यास) வாதம் எனலாம். அனாத்மாவான வஸ்துக்களில் ஆத்மபுத்தியை உண்டாக்கி 'இது நான்', 'இது என்னுடையது' (अहमिदं ममेदं) என்ற லோகவியவஹாரத்திற்குக் காரணமாயிருப்பதும், ஒரு வஸ்துவில் அதற்கு விபரீதமான மற்றொன்றின் தர்மத்தை ஆரோபிப்பதுமே அத்யாஸம். இதனால் மித்யாஜ்ஞானம் ஏற்படுகிறது. முன்னால் பார்த்த வெள்ளியின் வெண்மையின் நினைவினால் அத்தகைய வெண்மை சுக்தியில் இருக்கக் கண்டு சுக்தியை சுக்தியென்று தெரிந்து கொள்ளாமல் வெள்ளியின் வெண்மைதர்மங் கொண்டதால் அதை வெள்ளியென்றே எண்ணுவதுதான் அத்யாஸம். (अध्यासः स्मृतिरूपः परत्र पूर्वदृष्टावभासः) 'இந்த அத்யாஸம் அஜ்ஞானத்திற்குக் காரணமாய் இருந்து மித்யா ரூபமாய் கர்த்ருத்வ போக்த்ருத்வப்ரவர்தகமாய் பிரபஞ்சத்தை சத்யம்போல் தோன்றுவித்து அநர்த்தஹேதுவாய் இருக்கிறது. இதைத் தொலைக்கக்கூடிய ஆத்ம வித்யாப்ராப்திக்காக எல்லா வேதாந்தங்களும் ஆரம்பிக்கப்படுகின்றன' என்று ஸ்ரீபகவத்பாதாள் ப்ரம்ம ஸூத்ர பாஷ்யத்தின் உபோத்காதத்தில் விளக்குகிறார். இந்திரியங்களுக்கு கோசரமான பிரபஞ்சம் ஸ்வப்

னத்திலும் கண்ணுடியில் பிரதிபிம்பத்திலும் தோன்றும் ப்ராதிபாஸிகங்கள்போல் பொய்யேயன்றி உண்மையல்ல. ஸ்வப்னுவஸ்தையில் ஏற்படும் அனுபவங்கள் விழித்துக்கொள்ளும் வரையில் உண்மையாய்த் தோன்றினும் விழித்துக் கொண்டவுடன் அவை அசத்தியமாவது போல் பிரபஞ்சமும் வியவஹாராவஸ்தையில் உண்மை போல் தோன்றினுலும் ஆத்மஞானம் வந்தவுடன் அது அசத்தியமாய் விளங்குகிறது. மாயையால் ஆத்மாவினின்றும் வேருகத் தோன்றினுலும் ஆத்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகும் பொழுது ஆத்மாவைத் தவிர ஒன்றும் வேருக இல்லையென்ற அனுபவம் ஏற்படும் என்று போதிக்கும் ब्रह्म सत्यं जगन्मिथ्या என்ற வாக்யத்தின் தத்வத்தை विश्वं दर्पणदृश्यमान नगरीतुल्यं निजान्तर्गतं என்று ஆரம்பிக்கும் ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி ஸ்தோத்ரத்தின் முதல் ஶ்லோகம் கூறுகிறது.

உலகம் ஆத்மாவில் உள்ளது, மாயையால் வெளியில் இருப்பதாகத் தோன்றுகிறது என்று முதல் ஶ்லோகம் கூறியதை நையாயிகர்களும் ஸாங்கியர்களும் ஒப்புக்கொள்ளவில்லை. நையாயிக மதத்தின்படி உலகத்திற்கு பரமாணுக்கள் உபாதானகாரணம். ஈஶ்வரன் நிமித்த காரணம். சாங்கியர்கள் பிரதானத்தின் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களே உலகத்திற்குக் காரணம் என்கிருர்கள். बीजस्यान्तरिवाङ्कुरो जगदिदं प्राङ्निर्विकल्पं पुनः........... ....என்ற இரண்டாவது ஶ்லோகத்தில் இந்த இரண்டு மதங்களும் நிராகரிக்கப்பட்டு அத்வைத சித்தாந்தத்தின்படி, ஸ்ருஷ்டிக்குமுன் விதையில் முளை இருந்ததுபோல், உலகம் ஆத்ம ஸ்வரூபத்தில் இருந்து, ஈஶ்வரனுடைய ஸஹஜமான மாயாசக்தியால் தோற்றுவிக்கப்பட்டது. ஆனல் அது பரமார்த்தமல்ல, மாயாமயமே என்று விளக்கப்படுகிறது.

சத், சித், ஆனந்தம் என்று கூறப்படும் ப்ரஹ்மம் ஒன்று தான் ஸ்வப்ரகாசமான ஸத்ஸ்வரூபத்துடன் கூடி

யது. வியாவஹாரிகஸத்யமான பிரபஞ்சத்தில் தோன்றும் ஸ்வரூப ப்ரகாசம் ப்ரஹ்மத்தினுடையதேயன்றி அதற் குரியதல்ல. பிரபஞ்சம் ஸத் போல் தோன்றினலும் உண்மையில் மாயா கல்பிதம். இல்லாதது. அனாத் மாவான பிரபஞ்சத்தின் சத்தை அதிஷ்டானமான ப்ரஹ்ம சத்தையே என்பதை அறிவித்து, இப்படி சகல ப்ரபஞ்சத் திற்கும் அதிஷ்டானமான ப்ரஹ்மந்தான் ஜீவன் என்று "தத் த்வமஸி" (तत्त्वमसि) என்ற ம்ருதிவாக்கியத்தால் போதித்து, இந்த ஆத்ம ப்ரஹ்ம ஐக்கிய ஸாக்ஷாத்காரத் தால் ஸம்ஸாரபந்தம் விடுபட்டு மோக்ஷத்தையடையும் மார்க்கத்தை ஸ்ரீ குரு மூர்த்தி உபதேசிக்கிருர் என்று यस्यैव स्फुरणं என்று ஆரம்பிக்கும் மூன்ருவது ம்லோகத் தில் சொல்லப்படுகிறது.

பிரபஞ்சத்திலுள்ள வஸ்துக்கள் ஸ்வப்ரகாசத்துடன் கூடியவையல்ல. அவையெல்லாம் ஆத்மதத்வத்தை அனுசரித்தே ப்ரகாசிக்கின்றன. तमेव भान्तमनुभाति सर्वं, तस्य भासा सर्वमिदं विभाति என்றபடி அநேக த்வாரங்களை உடைய குடத்தின் மத்தியில் உள்ள தீபத்தின் வெளிச்சம் போல் ஆத்ம தத்வத்தின் ப்ரகாசந்தான் இந்திரியங்கள் வழியாய் வெளிச்சென்று எல்லா உலக வஸ்துக்களுக்கும் ப்ரகாசத்தைத் தருகிறது என்பது नानाच्छिद्रघटोदरस्थित: ....என்ற நான்காவது ம்லோகத்தின் தாத்பர்யம்,

देहं प्राणमपीन्द्रियाण्यपि......................என்ற ஐந்தாவது ம்லோகம் அஹம் என்பது தேஹம் என்றும், பிராணன் என்றும், இந்திரியங்கள் என்றும், சூன்யம் என்றும் மாயை யால் புத்தி மோகங்கொண்டு தவருக நினைக்கும் சார்வா கம் முதல் பௌத்தம் வரையில் உள்ள மதங்களைக் கண் டித்து, மாயையால் உண்டாகும் இந்த வ்யாமோஹங்க ளெல்லாம் பரப்ரஹ்மத்தின் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் உண்டானவுடன் நீங்கிவிடும் என்பதைச் சொல்விகிறது.

राहुग्रस्तदिवाकरेन्दुसदृशो..........என்ற ஆறுவது ச்லோகம் ஆத்மாவைப்பற்றி பௌத்தனின் ஆக்ஷேபத்திற்கு சமாதானம் கூறுகிறது. ஸ்வப்னவஸ்தையிலும் ஜாகிராவஸ்தையிலும் ஆத்மதத்வத்தின் பிரகாசத்தால் ஸ்வப்ன ப்ரபஞ்சமும், பாஹ்ய ப்ரபஞ்பமும் தோன்றுகின்றன; இந்த இரண்டு ப்ரபஞ்சங்களும் ஆத்மஸ்வரூபத்தில் தான் இருக்கின்றனவென்றால் ஸுஷுப்தியில் ஒரு ப்ரபஞ்சமும் தோன்றுவதில்லையே, அப்பொழுது சேதஸின் காரியம் ஒன்றுமில்லை. அந்த அவஸ்தையில் ஆத்மப்ரகாசம் இல்லாததால், ஸ்திரமாயும் ஸ்வப்ரகாசமுமான ஆத்மா இல்லையென்றுதானே ஏற்படுகிறது என்ற பௌத்தனின் ஆக்ஷேபத்திற்கு இந்த ச்லோகத்தில் சமாதானம் கூறப்படுகிறது. சந்திர சூர்யர்களுக்கு கிரஹண சமயத்தில் உள்ள ப்ரகாசம் க்ராஸத்திற்கு முன்னும் மோக்ஷத்திற்குப்பிறகும் இருக்கும் ப்ரகாசம்போல் இல்லை. ஆனால் முற்றும் ப்ரகாசமில்லையென்று சொல்ல முடியாது. அதுபோல சுஷுப்தி காலத்தில் சேதனன், க்ரஸ்த சந்தர சூர்யர்கள் ப்ரகாசிக்காததுபோல், இந்திரியங்கள் அவைகளின் காரணத்தில் லயத்தையடைவதால் விசேஷ ஞானமில்லாததால் ப்ரகாசிப்பதில்லை. கிரஹணத்திலிருந்து விடுபட்ட சூரியனின் ப்ரகாசம் கிரஹணத்திற்கு முன் தோன்றிய சூரியனின் பிரகாசம்போல் இருப்பதால் கிரஹண காலத்தில் சூரியனுக்கு மங்கியதானாலும் ப்ரகாசம் உண்டு என்று ஊகிக்க வேண்டியதுபோல, சுஷுப்தியிலிருந்து எழுந்தவன் தூங்குவதற்கு முன்னால் தன் ஜாகிராவஸ்தையையும், தூங்கி எழுந்ததால் ஏற்பட்ட ஜாகிராவஸ்தையையும் ஒன்று பண்ணிக்கொண்டு 'நான் சுகமாய் தூங்கினேன்', 'இதுவரையில் ஒன்றுமறியாமல் இருந்தேன், இப்பொழுது விழித்துக்கொண்டதும் வஸ்துக்களை முன்போல் அறிகிறேன்' என்பதால் ஜாகிரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி யென்ற மூன்று அவஸ்தைகளிலும் ஆத்ம சைதன்யம் ஸ்வப்ரகாசமாய் விளங்குகிறது என்று கூறி பௌத்தனின் ஆக்ஷேபம் நிராகரிக்கப்படுகிறது.

ஸுஷுப்தியிலிருந்து விழித்துக்கொண்டவன் தூங்குவதற்கு முன்னிருந்த தன்னையும் தூங்கி விழித்த தன்னையும் ஒன்றுபடுத்திக்கொண்டு, இந்த இரண்டு நிலைகளுக்கும் மத்தியில் ஏற்பட்ட தூக்கத்தில் தன்னைப்பற்றி 'நான் சுகமாய் தூங்கினேன்' என்று விழித்துக் கொண்ட பொழுது அடையும் ஸ்பூர்த்திக்கு 'ப்ரத்யபிக்ஞை' (प्रत्यभिज्ञा) என்று பெயர். 'தூங்குவதற்கு முன் இருந்த நான்தான் இப்பொழுது விழித்துக் கொண்டேன். தூக்கத்திற்கு முன் அப்பொழுதும் தூக்கத்திற்குப் பின் இப்பொழுதும் இருக்கும் நான்தான் நடுவில் (சுஷுப்தியில்) தூங்கினேன். தூக்கத்திற்கு முன் இருந்த அவன்தான் இப்பொழுது விழித்துக்கொண்ட நான். அவனே நான் (सोहम्) என்ற ப்ரத்யபிக்ஞைபோல ஜீவனின் பால்யம், யௌவனம், வார்த்தக்யம் முதலிய எல்லா அவஸ்தைகளிலும் 'நான்' என்ற ஸ்பூர்த்தி மாறுதல் இல்லாமல் அவைகளுக்கு ப்ரகாசத்தைக் கொடுக்கிறது என்ற ப்ரத்யபிக்ஞையை ஸ்ரீ குருமூர்த்தியின் சின்முத்ரை உபதேசிக்கிறது என்பதை बाल्यादिष्वपि...................என்ற ஏழாவது ஸ்லோகம் தெரிவிக்கிறது

ஜகத் மித்யை என்றால் பிரபஞ்சவியவகாரங்களுக்கு ஆதாரமென்ன? குரு வேறு, சிஷ்யன் வேறு, குருவால் சிஷ்யனுக்கு உபதேசம். அந்த உபதேசத்தால் பந்த நிவிருத்தி மோக்ஷப்ராப்தி என்ற வியவகாரங்களுக்கும் வியாபாரங்களுக்கும் அவகாசம் இல்லாமல் போய்விடுமே என்ற ஆக்ஷேபத்திற்கு ஸ்ரீ பகவத்பாதாள் विश्वं पश्यति कार्यकारणतया ....என்ற எட்டாவது ஸ்லோகத்தால் சமாதானம் கூறுகிறார்கள். காரியம் காரணம், யஜமானன் வேலைக்காரன், சிஷ்யன் ஆசாரியன், பிதா புத்ரன் என்பவையெல்லாம் ஒரே வஸ்துவின் பின்னமான வியவஹாரங்கள். ஸ்வப்னத்தில் ஒரே ஆத்மதத்வம் பலவகையாகவும் பல வியாபாரங்களோடு கூடியதாகவும் தோன்றுவதுபோல் ஜாகிராவஸ்தையிலும் ஒரே பிரும்ம தத்வம் மாயையால்

பலவாய்த்தோன்றி பல வியாபாரங்களைச் செய்வது போலக் காணப்படுகிறது. இவையெல்லாம் முற்றும் கல்பனைகளே. तत्त्वमसि என்ற உபதேசத்தால் सोऽहं, अहं ब्रह्मास्मि என்ற சம்யக்ஞானம் உதயமானவுடன் சிஷ்யன், ஆசாரியன், அவருடைய உபதேசம் முதலிய பேத ப்ர பஞ்சமெல்லாம் ஸ்வப்னத்தில் காணப்பட்டவை விழித்துக் கொண்டதும் அற்றுப்போவதுபோல், இல்லாமல் போய்விடும். பாரமார்த்திகத்தில், குரு, சிஷ்யன், உபதேசம் அனைத்தும் பொய்யானுல், இப்பொய்யான உபதேசத்தால் தத்வ ஞானம் ஏற்படுமா ? என்ருல், கண்ணுடியில் தோன்றும் பொய்யான ப்ரதிபிம்பத்தில் காணப்படும் அழுக்கைப் பார்த்து நம் முகத்தைத் துடைத்துக் கொள்வதுபோல் அஸத்யமான வியவஹார தசையில் ஏற்படும் வேதாந்த உபதேசம் ஸத்யமான தத்வஜ்ஞானத்தை உண்டுபண்ணும். ஆகவே உலகத்திலுள்ள எல்லா வியவஹாரங்களும் சத் என்ருே அஸத் என்ருே சொல்ல முடியாத அநிர்வசனியமான மாயையால் ஏற்பட்டவை. தோன்றுவதால் மாயையை அசத் என முடியாது. ஆனுல் சம்யக்ஞானத்தால் அது பாதிக்கப்படுவதால் அது சத் இல்லை. ஆகையால் மாயை சத் என்ருே அசத் என்ருே கூறமுடியாதது. அவயவமுள்ளதுமல்ல, இல்லாததுமல்ல. பேதபுத்தியையுண்டுபண்ணி கர்மாக்களைச் செய்வித்து, பந்தமென்றும் மோக்ஷமென்றுமுள்ள வியவஹாரங்களுக்குக் காரணமாயிருப்பது மாயை.

இத்தகைய மாயை எப்படி நிவர்த்தியாகும்? அது अहं ब्रह्मास्मि என்ற சாக்ஷாத்காரத்தால் நிவர்த்தியாகும் என்ருல் அந்த சாக்ஷாத்காரத்தையடைய உபாயம் என்ன? என்ற கேள்விக்கு ஸ்ரீ ஆசாரியாள் ஒன்பதாவது ஶ்லோகத்தில் பதில் கூறுகிருர்கள். பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம், சூரியன் சந்திரன் புமான் என்று சரமாயும் அசரமாயும் உள்ள இந்த உலகம் விபுவான பரமேஶ்வரனின் மூர்த்தியாய் சமஷ்டியான ப்ரஹ்மாண்டமாகவும்

வியஷ்டியான பிராணிசரீரங்களாகவும் விளக்குவதன்றி வேறொன்று மில்லையென்று அறிந்து ஈஶ்வரனை உபாஸனை செய்தால், ஈஶ்வரானுக்ரஹத்தால். அந்த ஈஶ்வரனின் பரமார்த்தமான ஸ்வயம்ப்ரகாச நிர்குண தத்வத்தின் சாக்ஷாத் காரம் ஏற்படும் என்பதால், அப்பேர்ப்பட்ட ஈஶ்வரனை குருமூர்த்தியாகிய தக்ஷிணாமூர்த்திக்கு இந்த ஶ்லோகத்தால் நமஸ்காரம் பண்ணப்படுகிறது.

இப்படியாக இந்த ஸ்தோத்ரத்தின் முதல் ஒன்பது ஶ்லோகங்களில் ஜகத் மித்யை, ப்ரஹ்மந்தான் சத்யம்; விதையில் முளைபோல் ப்ரஹ்மத்தில் உலகம் அமைந்து, பிரும்மத்தின் (ஈஶ்வரனின் ஸ்வேச்சையால் மாயாகார்ய மாய் ஏற்படுகிறது; இப்படி மாயையால் தோன்றும் சகல பிரபஞ்சத்திற்கும் அதிஷ்டானமான ப்ரஹ்மதத்வமே ஆத்மா என்று तत्त्वमसि என்ற மஹாவாக்யோபதேசத் தால் அறியவேண்டும்; பிரபஞ்ச வஸ்துக்கள் ஸ்வப்ரகாச முள்ளவையல்ல, ஆத்மாவின் ப்ரகாசத்தால்தான் அவை ப்ரகாசிக்கின்றன; இந்த ஆத்மா. தேஹம், ப்ராணன், இந்திரியங்கள் முதலியவைகளிலிருந்து வேறுபட்டது; தேஹாத்மவாதம் போன்றவையெல்லாம் வ்யாமோஹத் தால் ஏற்படுவன. பிரத்யகாத்மசாக்ஷாத்காரம் உண்டாகும் பொழுது இந்த ப்ராந்திகள் நீங்கிவிடும்; இப்பிரத்திய காத்மா ஸ்வப்னத்திலும், ஜாகிரத்திலும் பிரகாசிப்பது போல் ஸுஷுப்தியில், இந்திரியங்களின் உபஸம்ஹா ரத்தால் நன்றாய் வெளிக்குத் தோன்றாவிட்டாலும் விழித்துக் கொண்டதும் 'நான் சுகமாய் தூங்கினேன்' என்ற வசனத்தால் ராகுக் கிரஸ்த சூரிய சந்திரர்களின் ஒளியைப்போல் நிலையுற்ற சத்தையுள்ளது, ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி போல், பால்யம், யௌவனம், வார்த் தக்யம் ஆகிய அவஸ்தா பேதங்களிலும் 'நான்' என்று வியவகரிக்கப்படும் ஆத்மா ஒன்றே, அதுதான் ப்ரத்யகாத் மாவென்று சின் முத்ரையால் ஸ்ரீ குருமூர்த்தி உபதேசிக் கிறார் என்றும் பின்னமாய் நாமரூபத்தால் பலவகையாய்த் தோன்றும் பிரபஞ்சம் மாயாகல்பிதம், இந்த மாயை

நிவர்த்தியாக எட்டுவிதமாய் மூர்த்திகரித்து சமஷ்டியாகவும் வியஷ்டியாகவும் விளங்கும் ஈஶ்வரனின் உபாசனையே உபாயம் என்றும் கூறி பிரும்மதத்வ உபதேசம், அதன் உபதேஷ்டா இரண்டையும் இந்த ஸ்தோத்திரத்தில் ஸ்ரீ பகவத்பாதாள் நமக்குக் காட்டித் தருகிறார்கள்.

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் பத்தாவது ஶ்லோகம் 'பலஶ்ருதி' யைக் கூறுகிறது. முதல் ஒன்பது ஶ்லோகங்களால் எல்லாம் ஆத்ம ஸ்வரூபம் என்று நன்கு விளக்கப்பட்டது. இந்த தத்வத்தைத் தெரிந்து கொண்டால் மாத்திரம் போதாது. அது அனுபவ சித்தமாக வேண்டும். இந்த ஸ்தோத்ரத்தின் அர்த்தத்தை குரு முகமாய்க் கேட்டு, அதைச் சிந்தித்துத் தியானம் பண்ணி அடிக்கடி அனுஸந்தானம் செய்தால் ஆத்மஜ்ஞானமும் ஆத்ம ஸாக்ஷாத்காரமும் பரிபூர்ணமாய் ஏற்பட்டு 'ஸர்வாத்மத்வம்' என்ற மஹா விபூதியுடன் கூடிய ஐஶ்வர்யம் தானாகவே சித்திக்கும். பகவான் ஸ்ரீமத் பகவத் கீதையில்

यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिकं ततः ।
यस्मिन्स्थितो न दुःखेन गुरुणापि विचाल्यते ॥

என்றபடி, இந்த ஸர்வாத்மத்வம் சித்தித்துவிட்டால் முமுக்ஷுவாயிருப்பவன் விரும்பத்தக்கது அதைவிட உயர்ந்த லாபம் ஒன்றுமில்லை. ஆயினும் இந்த ஸ்தோத்ரானுசந்தானம் அணிமாதி மற்ற பலன்களையும் கொடுக்கும். அன்னம் வேண்டுமென்று இச்சித்து அதைச் சமைக்க அடுப்பினருகில் உட்கார்ந்து பசனக்கிரியையைச் செய்வதால் அன்னம் தயாராவதுடன்கூட சரீரத்தில் தோன்றும் குளிரும் நிவர்த்தியாவதுபோல், இந்த ஸ்தோத்ர சிந்தனத்தால் சர்வாத்மத்வானுபவத்துடன் கூட மற்ற ஐச்வர்யங்களும் சித்திக்கும் என்று सर्वात्मत्व-मिति स्फुटीकृतमिदं.................... என்ற பத்தாவது ஶ்லோ

கத்தில் ஸ்ரீ பகவத்பாதாள் அனுக்கிரஹம் செய்கிருர்கள். இதனுல், ஆத்மஜ்ஞானி இந்த கீழ்தரமான ஐஶ்வர்யங்களில் ஆசைவைத்து அவைகளையடைய உத்ஸாகனுய் இருக்கிருன் என்று கொள்ளக்கூடாது. ஸ்ரீ ஸுரேஶ்வராசாரியாள் சொன்னபடி,

स्वर्गादिराज्यं साम्राज्यं मनुते नहि पण्डितः ।
तदेव तस्य स्वाराज्यं यत्तु स्वाराज्यमात्मनि ॥

இப்படி ஆத்மஸ்வாராஜ்யத்தை யடைந்தவனை மற்ற லௌகிகமான ஐஶ்வர்யங்கள் தானுகவே வந்து அடைகின்றன. அவன் அவைகளை விரும்பி அடைவதற்கு மாருக அவைகள் அவனை அடைந்து அவன் கட்டளைக் குட்பட்டு நிற்கின்றன,

सर्वात्मभावानावन्तं सेवन्ते सर्वसिद्धयः ।
तस्मादात्मनि साम्राज्यं कुर्यान्नियतमानसः ॥

என்கிருர்கள் ஸ்ரீ ஸுரேஶ்வராசாரியாள்.

VIII

நான்காவது புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை யடைய நமது சாஸ்திரங்களில் கர்மா, பக்தி, ஞானம் என்று மூன்று மார்க்கங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. சிலர், இம்மூன்றும் தனித்தனி மார்க்கங்கள், அவைகளில் ஒவ்வொன்றும் தனிப்பட்ட நிலையில் முக்திக்கு சாதனமாகும் என்று கூறுகிருர்கள். முக்தியடைய, கர்மா, பக்தி ஞானம் ஏதேனும் ஒன்றை பின்பற்றலாம் என்பது இவர்கள் அபிப்ராயம். பூர்வமீமாம்சகர்கள் கர்மாவினுலேயே மோக்ஷத்தை யடையலாம் என்கின்றனர். ஜனகர் முதலானவர் கர்மாவினுலேயே ஸம்ஸித்தியை யடைந்தவர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. துருவன், பிரஹ்லாதன், நாரதர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலியோரெல்லோரும் பக்தி மார்க்கத்தை

அவலம்பித்து மோக்ஷநிலையை யடைந்தனர். சுகர், வியாசர், சனகர். சனந்தர், சனத்குமாரர் இவர்ளெல்லாரும் ஞானமார்க்கத்தால் முக்தியடைந்த பிரும்மரிஷிகள். கர்மா, பக்தி, ஞானம் என்றவற்றில் ஒன்றின் வழியாய்ச் செல்பவர், மற்ற இரண்டு மார்க்கங்களும் அதற்கு சஹகாரியான அங்கங்கள் எனக் கூறுவர்.

அத்வைத வேதாந்தத்தின்படி ஞானமார்க்கமே மற்றவைகளை விட உயர்ந்தது எனக் கருதப்படுகிறது. இந்த ஸம்ஸாரமும் அதன் பந்தமும் அனாதி அவித்யையால் உண்டானவை. இவ்வித்யை நம் மனதில் குடி கொண்டிருக்கும் வரை இவைகளிலிருந்து நமக்கு நிவர்த்தி ஏற்படாது. அவித்யையைத் தொலைப்பது ஞானம் ஒன்றுதான். அதுதான் மோக்ஷத்தைத் தரக்கூடியது. இந்த ஞானம் குரு உபதேசத்தாலும் ஸ்வதபஸ்ஸாலும் அடையப்பட வேண்டியது. குருவாய்த் தோன்றும் ஈச்வரனின் ப்ரஸாதத்திற்கு பக்திவேண்டும். ஈச்வர பக்திக்கு, பாஹ்ய ஆந்தர சௌசங்களைத் தரக்கூடிய கர்மா அவசியம். ஆகவே மோக்ஷத்தையடைய ஞானந்தான் முக்கிய மார்க்கம். பக்தியும் கர்மாவும் அதற்கு உதவி புரியும் அங்கங்கள் என்பது அத்வைத சித்தாந்தம். சத்கர்மாவால் சித்த சுத்தி ஏற்பட்டு, சுத்த சித்தத்துடன் ஈச்வரனிடத்தில் பக்தி செய்து, அவருடைய ப்ரஸாதத்தால் ஞானத்தையடைவது தான் மோக்ஷோபாயம். ब्रह्मविदाप्नोति परम्, ब्रह्मविद्ब्रह्मैव भवति என்றதால், ப்ரஹ்மஜ்ஞானமே மோக்ஷ நிலை யென்று கொள்ளவேண்டும். ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் ज्ञानी त्वात्मैव मे मतम् என்ருர். ப்ரஹ்மஞானமடைந்த மஹாத்மாக்கள் वासुदेवः सर्वम् என்றும், பரப்ரஹ்மம் இந்த வாசுதேவனின் பரமார்த்த தத்வம் என்றும் அறிந்து 'தத் த்வமஸி' என்ற உபதேசத்தால் सोहम् 'அந்த ப்ரஹ்மந்தான் நான் अहं ब्रह्मास्मि' என்ற ஆத்மானுபவத்தால் 'ப்ரஹ்ம நிர்வாணத்தை' யடைகிருர்கள்.

இவ்விதமான ப்ரஹ்ம நிர்வாண நிலை இந்த ஜன்மா விலேயே சித்திக்கும் என்பது அத்வைத வேதாந்தத்தின் முக்கிய கொள்கை. கர்மமார்க்கமும் பக்திமார்க்கமும் க்ரம முக்தியைத்தான் கொடுக்கும். ஆனால் ஞான மார்க்கத் தால்இந்தஜன்மாவிலேயேகைவல்யமுக்தநிலையை அடைய முடியும். பந்தத்திற்குக் காரணம் அக்ஞானமாகையால், ஞான தீபத்தால் அக்ஞான இருள் போக்கப்பட்டால், அக்ஞானம் நீங்கியவுடன் இதுவரை அதன் காரியமா யிருந்த பந்தம் தானுகவே விலகிவிடும். பந்தத்திலிருந்து விடுபடுவது தான் மோக்ஷ நிலை. அது இங்கேயே, இப் பொழுதே इहैव प्राक्शरीरविमोक्षणात् ஞான ப்ராப்தியால் சித்திப்பது. இந்த ஜன்மாவில் இவ்வண்ணம் பந்த நிவர்த்தி யடைபவர்கள் ஜீவன்முக்தர்கள் எனப்படுவார்கள். இப் பேர்ப்பட்ட ஜீவன்முக்தருக்கு न पुनरावर्तते என்றபடி மறு ஜன்மா கிடையாது. ஏனெனில் புனர்பவம் புனர்பந்தத் தால் உண்டாவது. பந்தம்அஜ்ஞானத்தால்தான் ஏற்படும். ஞானியான ஜீவன்முக்தனுக்கு பந்தஹேதுவான அஜ்ஞா னம் மறுபடியும் உண்டாகமுடியாது. சம்யக்ஜ்ஞானம் வந்த வனுக்கு அஜ்ஞானமோ, விபரீதஞானமோ மறுபடியும் வராது. கயிற்றை பாம்பு என்று நினைத்து மிரண்டவன், பிறன் சொல்லி, தானும் நன்ருய்ப் பார்த்து அது பாம் பல்ல கயிறுதான் என்று தெரிந்து கொண்ட பிறகு மறுபடி யும் அது பாம்பு என்று நினைத்து மிரளமாட்டான். ஆகவே ப்ரஹ்மஞானமடைந்த ஜீவமுக்தர்களுக்கு புனர் ஜன்மா உண்டாவதற்குக் காரணமில்லை.

அத்வைத சித்தாந்தத்தின் அடிப்படையான ஞான மார்க்கத்தைத்தான் ஸ்ரீ பரமாசாரியாள் ஸ்ரீ தக்ஷிணு மூர்த்தி ஸ்தோத்ரத்தின் பத்து ம்லோகங்களில் விளக்கிக் கூறுகிருர். साक्षात्कुरुते प्रबोधसमये स्वात्मानमेवाद्वयम् என்ற முதல் ம்லோகத்தின் உபதேசத்தால் சரீரம், உலகம் இவைகளிடத்திலிருந்து தன்னை வேறுபடுத்தி,

न भूमिर्न तोयं न तेजो न वायु-
र्न खं नेन्द्रियं वा न तेषां समूहः ।
अनैकान्तिकत्वात्सुषुप्त्येकसिद्ध-
स्तदेकोऽविशिष्टः शिवः केवलोऽहम् ॥

என்று 'ஸ்வாத்ம' (स्वात्म) ஞானத்தையடைந்து, முடிவில்

घटादिकानि कार्याणि विश्राम्यन्ति मृदादिषु ।
विश्वं प्रकाशाभिन्नत्वाद्विश्राम्येत्परमेश्वरे ॥ என்றபடி

கடம் முதலியவைகளெல்லாம் ம்ருத்திகா மாத்திரமே. அதுபோல ஜகத் சர்வமும் ப்ரஹ்மம். இந்த ப்ரஹ்மந்தான் ஸத்யம். ஜகத் மித்யை. ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றே, எல்லாம் ஆத்மஸ்வரூபம் என்ற 'ஸர்வாத்மத்வ' (सर्वात्मत्व) அனுபவம் உண்டாகிறது. ஆகவே स्वात्म போதமும் सर्वात्मत्व போதமும் அத்வைத ஸித்தாந்தத்தின் அடிவேரும் முடிவான பலமும் (फल) எனலாம். ஸ்ரீ ஆசாரியாள் அத்வயமான 'ஸ்வாத்ம' ஸாக்ஷாத்காரத்தை ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரத்தின் முதல் ஶ்லோகத்திலும் 'ஸர்வாத்மத்வ' அனுபவத்தை கடைசி ஶ்லோகத்திலும் அமைத்துக்காட்டி யிருக்கிறார்கள்.

IX

மானஸோல்லாஸத்தின் கிரந்த கர்த்தாவான **ஸ்ரீஸுரேஶ்வராசாரியாள்** ஸ்ரீபகவத்பாதாளின் சிஷ்யர்கள் நால்வரில் முக்கியமானவர். ஸன்யாஸாஶ்ரமத்தை ஸ்வீகரிக்கும் முன், மண்டனமிஶ்ரர் என்ற நாமதேயத்துடன் அவர் கிருஹஸ்தராய் பூர்வ மீமாம்ஸையில் விதிக்கப்பட்டுள்ள கர்ம மார்க்கத்தையே அவலம்பித்து ஞான மார்க்கத்திலும் அத்வைத மதத்திலும் பற்றில்லாமல்

இருந்ததுமனறி அவைகளை மிகவும் கண்டித்தும் வந்தார். ஸ்ரீ பகவத்பாதாள் அவருடன் வாதஞ்செய்து, அவரை ஜயித்த பிறகு, மண்டனமிஸ்ரர் ஸன்யாஸாஶ்ரமத்தை மேற்கொண்டு, சுரேஶ்வரர் என்ற நாமதேயத்துடன் ஸ்ரீ சங்கரரின் சிஷ்யராய் அத்வைதமத ஸ்தாபனத்தின் பொருட்டுப் பல கிரந்தங்களைச் செய்தார். இவற்றுள் முக்கியமானவை 'மானஸோல்லாஸம்' 'ப்ரணவ வார்த்திகம்', 'நைஷ்கர்ம்ய ஸித்தி' என்பவை. இவைகளைத் தவிர ஸ்ரீ ஆசாரியாளின் தைத்திரீய, ப்ருஹதாரண்யக உபநிஷத் பாஷ்யங்களுக்கு விரிவுரை எழுதியிருக்கிறார்கள்.

'மானஸோல்லாஸம்' அந்த பெயருக்குப் பொருத்தமாய், படிக்கப்படிக்க மனதுக்குத் தெளிவான அறிவையும் உத்ஸாகத்தையும் தரக்கூடிய ரீதியில் எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஸுரேஶ்வராசாரியாள், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரத்தின் ஒவ்வொரு ஶ்லோகத்தையும் விளக்கும்பொழுது, அந்த ஶ்லோகத்தின் தாத்பர்யம் என்னவென்று முதலில் அவதாரிகையில் சொல்லி, பிறகு அதன் பூர்வபக்ஷங்களை எடுத்துக்காட்டி அவைகளைக் காரணங் கூறி கண்டித்து ஶ்லோகத்தின் சித்தாந்தத்தைப் பிரதிபாதனம் பண்ணுகிறார்கள். இந்த கிரந்தத்தில் சைலி லளிதமாயும் மனோரஞ்ஜகமாயும் இருப்பது அதைப்படிப்பவருக்கு நன்கு புலப்படும். முதல் ஶ்லோகத்தில் ஸ்ரீ பரமாசாரியாள் வாக்யமான यस्साक्षात्कुरुते प्रबोधसमये स्वात्मानमेवाद्वयम् என்பதை

निद्रया दर्शितानर्थान् न पश्यति यथोत्थितः ।
सम्यग्ज्ञानोदयादूर्ध्वं तथा विश्वं न पश्यति ॥
अनादिमायया सुप्तो यदा जीवः प्रबुध्यते ।
अजमनिद्रमस्वप्नमद्वैतं बुध्यते तदा ॥

என்று மிகவும் எளிதான முறையில் விளக்கிச் சொல்லுகிறார். இரண்டாவது உல்லாஸத்தில் அத்வைத ஸித்தாந்த

மாகிய விவர்த்தவாதத்தைக் கூறும்பொழுது, அதற்குப் பூர்வபக்ஷமான நியாய வைசேஷிக மதங்களையும் அவைகளுக்குச் சமாதானத்தையும் சைவ சித்தாந்தத்தின் 36 தத்வங்களையும் கூறுகிருர். மூன்ருவது உல்லாஸத்தில் 'தத் த்வமஸி' तत्त्वमसि என்ற மஹாவாக்யத்தை விஷயமாய் வைத்துக்கொண்டு 'தத்', 'த்வம்' (तत्, त्वं) என்ற இரண்டு பதங்களுக்குமுள்ள ஸாமானுதிகரண்யத்தை விளக்க ஜஹல்லக்ஷணை, அஜஹல்லக்ஷணை ஜஹதஜஹல் லக்ஷணை இவைகளைப் பற்றிச் சொல்லி, 'தத்' பதார்த் தத்திற்கும் 'த்வம்' பதார்த்தத்திற்கும் ஸ்வரூப லக்ஷணம் ஒன்றே, ஆகையால் एकलक्षणयोरैक्यं वाक्येन प्रतिपाद्यते என்கிருர். ஆத்மாவினுடைய ஸ்வரூபஜ்ஞானம் கண் முதலிய கரணங்களின் வழியாய் வெளியில் சென்று 'நான் அறிகிறேன்' என்ற வியாபாரத்திற்கும் விஷயத்திற்கும் காரணமாகிறது. ஸ்வயம்பிரகாசமான ஆத்மாவை யனுசரித்து அதன் பிரகாசத்தால் தான் பிரபஞ்ச வஸ்துக்கள் பிரகாசித்து அறியப்படுகின்றன. ஞான சக்தியுடன் கூடிய அந்தக்கரணத்திற்கும் 'ஜ்ஞாதா' என்று பெயர். அதுடன் சம்பந்தப்பட்ட இந்திரியங்களின் சஞ்சார ஸ்தானமான நாடிகள், அவற்றின் உபஸம்ஹாரம், நிர்விகல்பம், சுத்தம், மலினம் என்ற மூவகையான ஆத்மபாஸம் நிர்விகல்பானுசந்தானத்தால் ஏற்படும் ஆத்மாவின் ஸம்யக்ப்ரகாசம் இவைகளைப்பற்றி நான்காவது ச்லோகத்தின் வியாக்யானமாயமைந்த உல்லாஸத்தில் விவரிக்கப் பட்டிருக்கிறது. ஐந்தாவது உல்லாஸத்தில் ஸ்ரீ தக்ஷிணு மூர்த்தியாய் மூர்த்திகரித்த பரமாத்ம ஸ்வரூபம் தேஹம், இந்திரியம், முதலியவைகளைக்காட்டிலும் பின்னமாய் வேறுபட்டது. மனதுக்கும் வாக்குக்கும் எட்டாததால் ப்ரமாணங்களால் ப்ரகாசப்படுத்த முடியாதது मानदूरस्वरूपं, அது கேவலம் ஜ்ஞானனந்தமயம் என்றும் கூறி ஆத்மாவை தேஹாதிகளாக மதிக்கும் மதங்களை விஸ்தாரமாய் விசாரித்துக் கண்டித்து, தேஹாதிகளில் அஹம்புத்தி ப்ரமத்தி

ளுல் உண்டாவது, அது ஸம்ஸாரத்திற்கு ஹேது, ஆத்மா अन्तः प्रविष्टः शास्ति ஸ்ருஷ்டிக்கப்பட்ட தேஹங்களில் உள்ளே ப்ரவேசித்து ஆளுகிருர் என்ற ஞானமே மோக்ஷோபாயம் என்றும் விளக்கிக் காட்டப்படுகிறது. பௌத்தர்களின் க்ஷணிகவாதம், சூன்யவாதம் இவைக ளைக் கண்டிக்கும் முறையை ஆருவது உல்லாஸம் விமர் சனம் செய்து, प्रत्यभिज्ञायते என்பது 'கர்மகர்த்தரி ப்ரயோகம்' என்றும், 'ஆத்மா தன்னுல் அறியப்படுகிருன்' என்று பொருள் என்றும் கூறுகிறது.

இந்த ப்ரத்யபிஜ்ஞையின் தன்மையையும் அதன் ப்ராமாண்யத்தையும் எட்டாவது ஶ்லோகத்தின் உல்லா ஸம் தெளிவு படுத்துகிறது. மாயையால் உண்டான அஜ்ஞானத்தாலான கிஞ்சித்ஞத்வத்தைத் தள்ளி, ஸர்வஜ் ஞத்வஜ்ஞானமே ப்ரத்யபிஜ்ஞையெனப்படும். இதுபுதிதாய் உண்டாகும் ஞானமல்ல. மோஹத்தால் உண்டான அஜ் ஞானம்ஸம்யக்ஜ்ஞானத்தை மறைத்திருந்தது. மோஹநா சம் ஏற்பட்டவுடன் அஜ்ஞானம் விலகுகிறது. அஜ்ஞானம் ஒழிந்தவுடன் இதுவரை அஜ்ஞானத்தால் மறைக்கப்பட்ட ஞானம் ப்ரகாசிக்கிறது. இந்த ஜ்ஞானப்ரகாசத்திற்கு ப்ரத்யபிஜ்ஞை எனப் பெயர். प्रत्यभिज्ञापनं नाम मोहापसरणं परम्. இந்த உல்லாசத்தில் ஸ்ரீ ஸுரேஶ்வராசாரியாள் அஸத்க்யாதி (असत्ख्याति) அன்யதாக்யாதி (अन्यथाख्याति) முதலிய வாதங்களை விசாரித்துக் கண்டித்து, பிரத்ய பிஜ்ஞை ஸித்திக்கும் விஷயத்தில் ஸ்மிருதி வாக்யம், ஸாக்ஷாத்காரானுபவம், மஹோபதேச வாக்யங்கள் எல் லாம் ப்ரமாணங்கள் என்று சொல்லி முடிக்கிருர். பிரபஞ் சத்தின் விஷயங்களும் வியாபாரங்களும் மாயாகல்பித மான வியாவஹாரிக ஸத்யம் எனப்போதிக்கும் எட்டாவது ஶ்லோகத்தை விமர்ஶிக்கும் உல்லாசம் மாயையின் தன் மையையும், ஆத்மா கர்மாக்களுக்கு சாக்ஷியாய் மாத்திரம்

இருப்பதால் அவற்ருல் பந்தத்தை அடைவதில்லை, யோகாப்யாஸத்தால் மனம் விஷயவசமாகாமல் நிவிருத்தனை புருஷனே ஜீவன்முக்தனென்றும் விளக்குகிறது. ஒன்பதாவது ச்லோகம் பிரத்யபிஜ்ஞையையடைய உபாயத்தை உபதேசிக்கிறது. அதன் உல்லாசத்தில் உலகத்தின் ஸமஷ்டித்வம், பிரதி ப்ராணி சரீரத்தின் வ்யஷ்டித்வம், அஷ்டாங்கயோக முறை, ப்ருதிவீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என்ற ஐந்து ஸ்தானங்களின் யோக லக்ஷணங்கள், யோகநிலைகளில் கேழ்க்கும் சப்தங்கள், सोऽहं என்ற ப்ரத்யபிஜ்ஞை ப்ரணவமாகும் விதம், ப்ரணவத்தின் 'அ'கார, 'உ'கார, 'ம'காரங்களுக்கு முறையே ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் அதிஷ்டான தேவதைகளாய் இருப்பது, அவைகள் ஸத், சித், ஆனந்த மென்ற ப்ரஹ்மத்தின் மூன்று ஸ்வரூப தத்வங்களைப் பிரதிபாதனம் செய்வது இவைகளை யெல்லாம் பற்றிச் சொல்லுகிறது. பத்தாவதான फलश्रुति ச்லோக உல்லாஸத்தில் அணிமாதி அஷ்டைச்வர்யங்களைப்பற்றி விவரிக்கப்படுகிறது.

X

இந்த ப்ரகாரமாக மானஸோல்லாஸத்தில் ஸ்ரீஸுரேச்வராசாரியாள் அன்யமத கண்டனம் செய்து ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்ரத்தில் உள்ளடங்கிய அத்வைத ஸித்தாந்தத்தை நிரூபிக்கிருர்கள். இந்த கிரந்தம் மிகவும் சுலபமாய் விளங்கும் ச்லோக ரூபமாய் எழுதப்பட்டிருக்கிறது. இதை ஆஸ்திகர்களான ஜிஜ்ஞாஸுக்கள் குருமுகமாய்க் கேட்டு அறியவேண்டும். அச்சிடப்பட்ட புத்தகத்தை தானகவே படித்தால் மட்டும் தத்வபோதம் ஏற்படாது. ஆசாரிய உபதேசத்தால்தான் அறிவு அனுபவமாக முதிர்ந்து வேதாந்த விஜ்ஞானம் வேதாந்தானுபவமாகும். கிரஹித்ததை அனுஸந்தானம் பண்ணுவதற்குப்

புத்தகம் கருவியே தவிற, புத்தகம் கையிலிருப்பதால் ஆசாரியன் அவசியமில்லை என்பது தவறு.* இதுவுமன்றி மற்றொரு தப்பபிப்ராயம் நம்மவர்களில் இக்காலத்தில் குடி கொண்டிருக்கிறது. கதா காலக்ஷேபம் பண்ணும் பௌராணிகர்களும், மற்றவர்களும் 'ஞானமார்க்கம் கலியுகத்துக்கு உகந்ததல்ல. கர்ம மார்க்கமும் சிரம சாத்யம். ஆகையால் பக்தி மார்க்கந்தான் நமக்கு ஏற்றது' என்று கூறி ஞானமார்க்கத்தின் மேன்மையையும் ஆவசியகத்தையும் குறைவுபடுத்துகிறார்கள். கர்ம, பக்தி,

---

* 'The soul can receive impulses from another soul, and from nothing else. We may study books all our lives, we may become very intellectual, but in the end we find that we have not developed at all spiritually. It is not true that a high order of intellectual development always goes hand in hand with a proportionate development of the spiritual side in man. In studying books we are sometimes deluded into thinking that thereby we are being spiritually developed; but if we analyse the effect of the study of books on ourselves, we shall find that at the utmost, it is only our intellect that derives profit form such studies and not our inner spirit. This inadequacy of books to quicken spiritual growth is the reason why, although almost eveay one of us † can *speak* wonderfully on spiritual matters, when it comes to action and the living of a truly spiritual life, we find ourselves so woefully deficient. To quicken the spirit, the impulse *must* come from another soul. The person from whom such impulse comes is called the Guru—the teacher.'—*Swami Vivekananda.*

† including the writer of this Introduction.

ஞான யோகங்கள் மூன்றும் வைதிக ஸம்மதமானவை யென்ருலும். ஞான மார்க்கத்திற்கு ஒரு தனிப் பெருமை உண்டு என்பதை நாம் மறக்கக்கூடாது. அன்றியும் ஞான மார்க்கம் மிகவும் கடினம் ஆனல் பக்திமார்க்கம் மிகச்சுலப மானது என்று எண்ணுவதும் தவறு. பக்திக்கு அவசிய மான வைராக்யம் முதலிய சாதனங்களும் ஒரு முனைப் பட்ட மனமும் எளிதில் அடையக்கூடியவையல்ல. ஞானத்திற்கு அதிகாரியாயும் ஜிஜ்ஞாஸுவாயும் இருப் பதே மனித ஜன்மாவின் உன்னதத்திற்கு லக்ஷணம். ஞானமார்க்கம் பரிபக்வத்தைத் தந்து ப்ரஹ்மானுபவத்தை யளிக்கவல்லது. அது கஷ்டமானது என்று அதைத் தள்ளுவது மானிடப் பிறப்பின் பெருமையைக் குறைப்ப தாகும். ஈச்வர ப்ரஸாதமும். ஆசாரியானுக்ரஹமும் ஸ்வப்ரயத்னமும் ஒன்று சேர்ந்தால் ஞானயோகம் சித்திக்குமென்பதில் சந்தேகமில்லை. விச்வ குருவான **ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கும்**, அந்த பரமேச்வரரின் அவதார மான **ஸ்ரீ பகவத்பாதாளுக்கும்**. நமது பூர்வஜன்ம பாக்ய வசத்தால் இப்பொழுது நமக்கெல்லோருக்கும் அனுக்ர ஹம் செய்ய பத்தகங்கணாய் விளங்கும் ஸ்ரீ காமகோடி பீடாதிபதி பூஜ்யபாதாளான நமது **ஜகத்குருவர்யாளின் திவ்ய சரணங்களுக்கும்** நமஸ்காரங்களைச் செய்து, அவர் கள் ப்ரஸாதத்தையடைந்து, சம்பிரதாய ரீதியில், இந்த மஹோத்க்ருஷ்டமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரத்தை யும் அதன் வார்த்திகத்தையும் தெரிந்துகொண்டு அனுஸந் தானம் செய்யவேண்டியது நமது கடமையாகும். இந்த கிரந்தங்களை தமிழில் பொருத்தமாயும் சுலபமாயும் மொழி பெயர்த்த **ப்ரஹ்மஸ்ரீ பண்டிதராஜவேப்பத்தூர்சுப்ரமண்ய சாஸ்திரிகளுக்கும்**, இந்த ப்ரசுரத்தை பிரசுரிக்க வேண்டு மென்று அவா கொண்ட காலஞ்சென்ற திருவிடைமருதூர் ஸ்ரீதேவராஜ பாலசுப்ரமணிய அய்யர் விருப்பத்தை பூர்த்தி செய்வதற்கு திரவ்யோபகாரம் செய்து ஊக்கமளித்து

ஸ்ரீமான் முடிகொண்டான் ஜானகிராமய்யருக்கும், வைதிக கிரந்தங்கள் பலவற்றை நமது ஆசாரியாள் ஸ்ரீ ஆஜ்ஞையை சிரமேற்கொண்டு அச்சிட்டுவெளியிட்டுவரும் ஸ்ரீகாமகோடி கோசஸ்தான நிர்வாகிகளுக்கும் இந்த பேருபகாரங்களுக்கா்க ஆஸ்திக லோகம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

॥ शरणम् श्री सद्गुरुचरणम् ॥

13, கல்பகாம்பாள் நகர்,
திருமயிலை, சென்னை.
கர ஞு, மிதுனம் , 12-ௗ

ப. சங்கரநாராயணன்



ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி

ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்

மானஸோல்லாஸ உரையுடன் கூடியது

॥ श्री गुरुभ्यो नमः ॥

॥ श्रीदक्षिणामूर्तिस्तोत्रम् ॥

मानसोल्लाससहितम्

முதல் உல்லாஸம்

मङ्गलं दिशतु मे विनायको
मङ्गलं दिशतु मे सरस्वती ।
मङ्गलं दिशतु मे महेश्वरी
मङ्गलं दिशतु मे सदाशिवः ॥ १ ॥

1. விநாயகரும் ஸரஸ்வதியும் பரமேச்வரியும் ஸதாசிவரும் எனக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.

आत्मलाभात्परो लाभो नास्तीति मुनयो विदुः ।
तल्लाभार्थं कविः स्तौति स्वात्मानं परमेश्वरम् ॥ २ ॥

2. ஆபஸ்தம்பர் முதலிய முனிவர்கள் ஆத்ம லாபத்தைவிட மேலான லாபம் கிடையாது என்று கூறியுள்ளார்கள். நம்முடைய ஆத்மா அனாத்மாவான பதார்த்தங்களுடன் கலந்திருக்கிறது. ஞானத்தால் அனாத்மாம்சத்தைத் தள்ளி, சுத்தமான ஆத்மஸ்வரூபமாகவே நாமிருப்பதுதான் ஆத்மலாபம் என்று கூறப்படுகிறது. அந்த உயர்ந்த லாபத்தை (ஆத்ம

லாபத்தை) அடையவேண்டியதற்காக, ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி ஸ்தோத்திரமியற்றிய கவியான ஸ்ரீ சங்கர பகவத்பாதாசாரியர் தன்னுடைய ஆத்மஸ்வரூப மான பரமேச்வரனைத் துதிக்கிறார்.

स्वेच्छया सृष्टमाविश्य विश्वं यो मनसि स्थितः ।
स्तोत्रेण स्तूयतेऽनेन स एव परमेश्वरः ॥ ३ ॥

3. ஸ்வேச்சை என்று சொல்லப்படும் மாயை யால் உண்டுபண்ணப்பட்ட ஸூக்ஷ்ம ஸ்தூலரூப மான உலகத்தில், சூரியன், குடம் முதலான பாத்ரங் களிலிருக்கும் ஜலங்களில் தன் ப்ரதிபிம்பரூபமாக ப்ரவேசிப்பதுபோல ப்ரவேசித்து, பலவித வ்ருத்தி களையுடைய மனதில் எந்த பரமேச்வரன் விசேஷ மான ஆவிர்பாவத்தை அடைவதால் மனதில் இருக் கிறாரோ, அந்த பரமேச்வரனே இந்த ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி ஸ்தோத்திரத்தால் துதிக்கப்படுகிறார்.

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தில் முதல் ச்லோகத்தின் அவதரணிகை

अस्ति प्रकाशत इति व्यवहारः प्रवर्तते ।
तच्चास्तित्वं प्रकाशत्वं कस्मिन्नर्थे प्रतिष्ठितम् ॥ ४ ॥
किं तेषु तेषु वार्थेषु किं वा सर्वात्मनीश्वरे ।
ईश्वरत्वञ्च जीवत्वं सर्वात्मत्वञ्च कीदृशम् ॥ ५ ॥

4—5. வஸ்துக்கள் இருக்கின்றனவென்றும், ப்ரகாசிக்கின்றனவென்றும் உலகத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் வ்யவஹரிக்கப் படும் ஸத்தா என்பதும் ப்ரகாசம் என்பதும் மற் றொரு பொருளைத் தழுவாமல் எங்கே இருக்கிறது?

I. குடம் இருக்கிறது, ப்ரகாசிக்கிறது என்று சொல்லுவதுபோல், ஒவ்வொரு வஸ்துவும் இருப்பதாகவும் ப்ரகாசிப்பதாகவும் சொல்லுகிறோம். ரூபம் பரிமாணம் முதலியவைகள் ஒவ்வொரு வஸ்துவிலும் வெவ்வேருய் இருப்பதுபோல, குடத்தில் ஒரு ஸத்தையும் மற்ற பொருள்களிலும் தனித்தனி ஸத்தையும் பிரகாசமும் இருக்கிறது என்று உண்டா?

II. அல்லது, எல்லா வஸ்துக்களிலும் अस्ति, प्रकाशते என்ற வ்யவஹாரம் ஒரே மாதிரியாய் இருப்பதால், எல்லா வஸ்துக்கள் ஸ்வரூபமான (सर्वानुस्यूते) ஈச்வரனிடத்தில் மட்டும் ஸத்தையும் பிரகாசமும் இருக்கிறதா?

(a) ஈச்வரத்தன்மை எப்படிப்பட்டது? குயவன் குடத்தைச் செய்வதுபோல் உலகத்தை ஈச்வரன் செய்கிருனு? அல்லது கயிறு தன்னிடம் தோன்றும் ஸர்ப்பத்துக்கு ஸத்தையைக் கொடுப்பதுபோல அதிஷ்டானமாக இருக்கிருனு?

(b) ஆத்மா ஸ்வபாவமாகவே ஜீவத்தன்மையை அடைந்திருக்கிருனு? அல்லது வேறு வஸ்துவின் ஸம்பந்தத்தால் ஜீவத்தன்மையை அடைந்திருக்கிருனு?

(c) ஸர்வவஸ்துஸ்வரூபியாக ஆத்மா கூறப்படுகிறதே, அதன் பொருள் என்ன? தங்கம் அதன் விகாரமான எல்லா நகைஸ்வரூபமாக இருப்பதுபோல, ஆத்மா ஸர்வஸ்வரூபியாக இருக்கிருன் என்பதா? வேறு விதமா?

जानीयात्तत्कथं जीवः किं तज्ज्ञानस्य साधनम् ।
ज्ञानात्तस्य फलं किं स्यादेकत्वं च कथं भवेत् ॥ ६ ॥
सर्वज्ञः सर्वकर्ता च कथमात्मा भविष्यति ।
शिष्यं प्रतीत्थं पृच्छन्तं वक्तुमारभते गुरुः ॥ ७ ॥

6—7. (a) ஈச்வரத்வம், ஜீவத்வம், ஸர்வாத்மத்வம் இவைகளை எவ்வித ஞானத்தால் அறியமுடியும்? (कीदृशेन ज्ञानेन अवगन्ता भवेत् ।)

(b) அவ்வித ஞானத்தை அடைய ஸாதனம்–(காரணம்) உபாயம் என்ன?

(c) ஞானத்தால் உண்டாகும் பலன் என்ன? ஸ்வர்க்கம் முதலிய பலன்போல புதிதாக உண்டாகிறதா? அல்லது இருப்பதே அறியாமையால் நம்மிடமில்லாமலிருப்பதுபோலிருந்து ஞானத்தால் அகப்படுகிறதா?

(d) ஜீவனும், ஈச்வரனும் ஒன்று என்று எப்படிச் சொல்லமுடியும்? ஸர்வத்தையும் அறிந்தவனும் ஸர்வபொருளை யுண்டாக்கினவனுமான ஈச்வரன், ஸ்வல்பமான வஸ்துக்களை செய்கிறவனுயும், அறிகிறவனுயும் உள்ள ஜீவாத்மாவாக எப்படி இருக்கமுடியும்? விருத்தமான தர்மங்கள் ஒரே இடத்தில் இருக்காதல்லவா? இவ்விதம் கேள்விகளைக் கேட்கும் சிஷ்யனுக்கு குரு பதில் சொல்வதற்காக தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்திரத்தை ஆரம்பிக்கிருர்.

विश्वं दर्पणदृश्यमाननगरीतुल्यं निजान्तर्गतं
पश्यन्नात्मनि मायया बहिरिवोद्भूतं यथा निद्रया ।

यस्साक्षात्कुरुते प्रबोधसमये स्वात्मानमेवाद्वयं
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ १ ॥

பதவுரை :—निद्रया = தூக்கத்தினுல் (ஸ்வப்ன காலத்தில்) निजान्तर्गतं = தன்னுள் அடங்கிய (வாஸனுமயங்களாக விளங்கும்) विश्वं = உலகத்தை बहिः उद्भूतमिव = வெளியில் இருப்பதுபோல पश्यन् = பார்த்துக்கொண்டு प्रबोधसमये = விழித்துக்கொண்ட சமயத்தில் अद्वयम् आत्मानं = ஸ்வப்னத்தில் கண்ட உலகமற்ற தன் ஸ்வரூபத்தை यथा साक्षात्कुरुते = அனுபவிப்பது போல (ஜாகரண காலத்திலும்) दर्पणदृश्यमाननगरीतुल्यं = கண்ணுடியில் காணப்படும் பட்டணம் போன்றதாயும் निजान्तर्गतं = ஆத்மஸ்வரூபத்தில் அடங்கியதாயும் உள்ள (ஆத்மாவில் கல்பிதமாயுள்ள) विश्वं = உலகத்தை आत्मनि मायया = (தன்னிடத்தில்) ஆத்மஸ்வரூபத்தில் இருக்கும் மாயையால் (ஆத்மஸ்வரூபத்தின் அறியாமையால்) बहिः उद्भूतमिव = ஆத்மாவைக் காட்டிலும் வேருக வெளியிலிருப்பதுபோல पश्यन् = பார்த்துக்கொண்டு यः = எவர் प्रबोधसमये = ஆத்மஸாக்ஷாத்காரம் ஏற்படும்பொழுது अद्वयं = இரண்டாவது வஸ்து இல்லாததான स्वात्मानमेव = தன் ஸ்வரூபத்தையே साक्षात्कुरुते = அனுபவிக்கிருரோ तस्मै = அந்த श्रीगुरुमूर्तये = தத்துவத்தை உபதேசிக்கும் குருஸ்வரூபமான श्रीदक्षिणामूर्तये = தெற்கு நோக்கி இருக்கிற தக்ஷிணுமூர்த்திக்கு इदं नमः இந்த நமஸ்காரம் உரியது.

1. நித்ராகாலத்தில் வாஸனமயமாக உள்ளே இருக்கும் மலை, காடு, நகரம் முதலிய வஸ்துக்களை வெளியில் இருப்பதுபோல பார்த்துவிட்டு விழித்துக்கொண்ட சமயத்தில், ஸ்வப்நத்தில் பார்த்த உலகமற்ற தன் ஸ்வரூபத்தையே பார்க்கிறான். அது போலவே, யாதொருவன் ஜாகரணகாலத்திலும் கண்ணுடியில் உண்மையில் இல்லாததாய் கண்ணுடியில் இருப்பதாகத் தோன்றும் நகரம்போல, தன்னுடைய நிஜமான (பரமாத்ம ஸ்வரூபமான) ஸ்வப்ரகாச ஸத்ரூபத்தில் இருக்கும் இவ்வுலகத்தைத் தன்னிடம் இருக்கும் மாயாசக்தியால் வெளியிலிருப்பதுபோல பார்த்துக்கொள்வானே, பிறகு ஆசார்யாளின் உபதேசத்தால் ஸாக்ஷாத்காரம் வரும் சமயத்தில் உலகமற்றதான தன்னுடைய ஸ்வரூபத்தையே ப்ரத்யக்ஷமாக அனுபவிக்கிறானே, அவன் ஸ்வரூபமாயும், தத்வத்தை உபதேசிக்கும் ஆசார்யஸ்வரூபமாயுமிருக்கிற தக்ஷிணமுகமான ஸ்ரீபரமேச்வரனுக்கு இந்த நமஸ்காரம் என்று பொருள். உள்ளேயிருக்கும் பொருள் வெளியிலிருப்பதாகத் தோன்றுவதற்கு நித்ரா த்ருஷ்டாந்தமும், உண்மையில் தன்னிடமில்லாத வஸ்து தன்னிடமிருப்பதாகத் தோன்றுவதற்கு உதாஹரணமாக கண்ணுடியில் தோன்றும் நகரத்ருஷ்டாந்தமும் சொல்லப்பட்டிருக்கிறது.

अस्यार्थः = இந்த சுலோகத்தின் பொருள் :—

अन्तरस्मिन्निमे लोकाः अन्तर्विश्वमिदं जगत् ।
बहिर्वन्मायया॓ऽऽभाति दर्पणे प्रतिबिम्बितम् ॥ ८ ॥

8. ஆத்மஸ்வரூபத்திலேயே எல்லா லோகங்களுமிருக்கின்றன; அதாவது இந்த எல்லா உலகமும் பரமாத்ம மத்யத்தில் இருக்கிறது. இந்த சுலோகத்தின் பூர்வார்த்தம் வேதவாக்கியம். கண்ணுடியில் ப்ரதிபலிக்கும் வஸ்து கண்ணுடிக்குள் இருப்பதாகத் தோன்றுவதுபோல, உள்ளுக்குள் இருக்கும் உலகம் மாயாபலத்தால் வெளியில் இருப்பது போலத் தோன்றுகிறது.

स्वप्ने स्वान्तर्गतं विश्वं यथा पृथगवेक्ष्यते ।

तथैव जाग्रत्कालेऽपि प्रपञ्चोऽयं विविच्यताम् ॥ ९ ॥

9. ஸ்வப்நத்தில் ஆத்மஸ்வரூபத்தின் உள்ளேயே இருக்கும் எல்லா வஸ்துவும் வெளியில் இருப்பதாகத் தோன்றுவதுபோல, ஜாக்ரத் தசையிலும் உள்ளே இருக்கும் உலகமே வெளியிலிருப்பதாகத் தோன்றுகிறது என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

स्वप्ने स्वसत्तैवार्थानां सत्ता नान्येति निश्चिता ।

को जाग्रति विशेषोऽस्ति जडानामाशुनाशिनाम् ॥ १० ॥

10. ஸ்வப்நத்தில் பார்க்கப்படும் வஸ்துக்கள் வெளியில் இருப்பவை அல்ல வெளியிலிருக்கும் வஸ்துக்களை அறிய இந்திரியங்களின் வ்யாபாரங்கள் வேண்டும். நித்ராகாலத்தில் இந்திரிய வியாபாரமே கிடையாது. ஆகவே ஆத்மாவில் ஆரோபிக்கப்பட்ட மித்யா (பொய்) என்று சொல்லும் வஸ்துவைப் பார்க்கிறோம். கயிற்றில் பாம்பு தோன்றினுல் அந்த பாம்புக்குத் தனியாக ஸத்தை கிடையாது. அதிஷ்டானமான கயிற்றின் ஸத்தையே பாம்பின்

ஸத்தை. ஆகவே ஸ்வப்நத்தில் தோன்றும் வஸ்துக்களுக்கு தனி ஸத்தை இல்லை. ஆத்ம ஸத்தையே அவைகளின் ஸத்தை. ஸ்வப்ந பதார்த்தம்போல ஜாக்ரத் காலத்திலுள்ள பதார்த்தமும் ஜடமாக (அசேதனமாக) இருக்கிறது. சீக்கிரம் நாசத்தை அடைகிறது. ஆகையால் ஜாக்ரத் தசையிலுள்ள வஸ்துக்களுக்கும் தனியான ஸத்தை இல்லை. ஆத்ம ஸத்தைதான். ஆத்ம ஸ்வரூபத்தைவிட வேருன ஸ்வரூபமில்லை மித்யை என்று பொருள்.

स्वप्ने प्रकाशो भावानां स्वप्रकाशान्नहीतरः ।
जाग्रत्यपि तथैवेति निश्चिन्वन्ति विपश्चितः ॥ ११ ॥

11. ஸ்வப்ந பதார்த்தங்களுக்கு ஆத்மஸ்வரூப ப்ரகாசமே ப்ரகாசம். ஆத்மா ஸ்வப்ரகாசம். அந்த பதார்த்தங்களுக்கு வேறு ப்ரகாசமில்லை. அது போலவே ஜாக்ரத் காலத்திலும் பதார்த்தங்களின் ப்ரகாசம் ஸ்வப்ரகாசமான ஆத்ம ப்ரகாசமே. வேறு ப்ரகாசமில்லை என்று வித்வான்கள் தீர்மானம் செய்கிருர்கள்.

பதார்த்தங்களுக்கு தனியாக ஸத்தையும் இல்லை. ப்ரகாசமும் இல்லை. ஆத்மஸத்தையும் ஆத்ம ப்ரகாசமும் தான் பதார்த்தங்களின் ஸத்தையும் ப்ரகாசமும் என்று நிரூபிக்கப்பட்டது.

निद्रया दर्शितानर्थान् न पश्यति यथोत्थितः ।
सम्यग्ज्ञानोदयादूर्ध्वं तथा विश्वं न पश्यति ॥ १२ ॥

12. நித்ரையால் காண்பிக்கப்பட்ட பதார்த்தங்களை தூங்கி விழித்துக்கொண்டவன் பார்ப்பதில்லை.

அதுபோல ஆத்ம ஸ்வரூபத்தின் தத்வ ஜ்ஞானம் அஹं ब्रह्मास्मि என்னும் ப்ரத்யக்ஷம் வந்தபின் ஜாக்ரத்காலத்தில் காணப்படும் உலகத்தைப் பார்ப்பதில்லை.

अनादिमायया सुप्तो यदा जीवः प्रबुध्यते ।
अजमनिद्रमस्वप्नमद्वैतं बुध्यते तदा ॥ १३ ॥

13. உற்பத்தியில்லாத மாயையால் தூங்கிக் கொண்டிருக்கும் ஜீவன் விழித்துக் கொள்ளும் பொழுது, ஜாக்ரதவஸ்தை, ஸுஷுப்தி, மூர்ச்சை, ஸ்வப்நம் முதலிய அவஸ்தைகள் அற்றதாயும், இரண்டாவது வஸ்து இல்லாததாயுமுள்ள ஆத்மதத்வத்தை ப்ரத்யக்ஷமாக அறிகிருன்.

श्रुत्याचार्यप्रसादेन योगाभ्यासवशेन च ।
ईश्वरानुग्रहेणापि स्वात्मबोधो यदा भवेत् ॥ १४ ॥
भुक्तं यथान्नं कुक्षिस्थं स्वात्मत्वेनैव पश्यति ।
पूर्णाहन्ताकबलितं विश्वं योगीश्वरस्तथा ॥ १५ ॥

14—15. ஜீவன் ஞானத்தை அடையும் ஸாதனமும் அத்வைத ஆத்மஜ்ஞானமும் இந்த ச்லோகங்களில் கூறப்படுகிறது. ஆசார்யரின் அனுக்ரஹத்தாலும், விசாரிக்கப்பட்ட வேதத்தாலும், நிதித்யாஸனம் என்னும் யோகாப்யாஸத்தாலும், முன் உபாஸிக்கப்பட்டபரமேச்வரனுடைய அனுக்ரஹத்தாலும் ஆத்மஜ்ஞானம் எப்பொழுது உண்டாகுமோ அப்பொழுது, சாப்பிடுவதற்கு முன்பு தன்னைவிட வேருகத் தோன்றின அன்னத்தைச் சாப்பிட்ட பிறகு வேருக நினைக்காமல் நான் (அஹं) என்று அன்னத்தைச் சேர்த்தே நினைப்பதுபோல **ஆத்மஜ்ஞானி**

உலகத்தைத் தன்னைவிட வேருக நினைக்காமல், எல்லாவற்றையும் நான் (अहं) என்று அத்வைத ஆத்மரூபமாகவே பார்க்கிருன்.

यथा स्वप्ने नृपो भूत्वा भुक्त्वा भोगान्यथेप्सितान् ।
चतुरङ्गबलोपेतः शत्रुं जित्वा रणाङ्गणे ॥ १६ ॥
पश्चात्पराजितो भूत्वा वनं प्राप्य तपश्चरन् ।
मुहूर्तमात्रमात्मानं मन्यते कल्पजीविनम् ॥ १७ ॥

16—17. ஈச்வரத்தன்மையும் ஜீவத்தன்மையும் எவ்விதம்? என்ற கேள்விக்கு இனி பதில் சொல்லப் படுகிறது. ஸ்வப்நத்தில் சற்று நேரத்திற்குள் தான் ஒரு அரசனுயிருந்து, இஷ்டப்ரகாரம் போகங்களை அனுபவிக்கிருன். தேர், யானை, குதிரை, காலாட்கள் என்று நாலுவித ஸைன்யத்தோடு யுத்தத்தில் சத்துருவை ஜயிக்கிருன். பிறகு ஒரு சமயம் தோற்கடிக்கப்பட்டவனுய், காட்டிற்குப்போய் தவம் செய்துகொண்டிருப்பதாக எண்ணுகிருன். இப்படி அநேக கல்பகாலம் வரையில் தன்னை ஜீவித்திருப்பவனுக நினைத்துக்கொள்ளுகிருன்.

तथैव जाग्रत्कालेऽपि मनोराज्यं करोत्यसौ ।
कालनद्योघवेगेन क्षीणमायुर्न पश्यति ॥ १८ ॥
मेघच्छन्नोंऽशुमालीव मायया मोहितोऽधिकम् ।
किञ्चित्कर्ता च किञ्चिज्ज्ञो लक्ष्यते परमेश्वरः ॥ १९ ॥

18—19. அதுபோலவே ஜாத்ரத் காலத்திலும் மனிதன் கல்பகாலம் தான் ஜீவித்திருப்பதாக மனோராஜ்யத்தைச் செய்துகொண்டிருக்கிருன். காலம்

என்னும் நதீ ப்ரவாஹ வேகத்தால் தனது ஆயுள் குறைந்துகொண்டு வருகிறது என்பதைத் தெரிந்து கொள்ளுகிறதில்லை.

மேகங்களால் மறைக்கப்பட்ட ஸூர்யன்போல மாயையால் அதிகமாய் மறைக்கப்பட்டு மோஹிக் கப்பட்டு, பரமேச்வரனே சில விஷயங்களைமட்டும் அறிகிறவனும், சிலவற்றைமட்டும் செய்பவனாக வும் காணப்படுகிறான்.

यद्यत्करोति जानाति तस्मिंस्तस्मिन्परेश्वरः ।
राजा विद्वान् स्वसामर्थ्यात् ईश्वरोऽयमितीर्यते ॥ २० ॥

20. யார் எந்த காரியத்தை தன் ஸாமர்த்தியத் தால் ஸ்வதந்த்ரமாகச் செய்கிறானோ அந்தக் காரியத் தில் பரமேச்வரன் ராஜா என்றும், தன் ஸாமர்த்தியத் தால் எந்த விஷயத்தை அறிந்துகொள்ளுகிறானோ அந்த விஷயத்தில் அவன் வித்வான், ஸ்வதந்த்ர ஜ்ஞானமுள்ளவன் என்றும் ஆதலால் ஈச்வரன் என்றும் சொல்லப்படுகிறான்.

ஸ்வப்நத்தில் ஒருவனே ராஜாவாகவும் தபஸ்வி யாகவும் இருப்பதுபோல, பரமேச்வரனே மாயாவசத் தால் ஈச்வரனாகவும் ஜீவனாகவும் இருக்கிறார் என்பது கருத்து.

ज्ञानक्रिये शिवेनैक्यात्संक्रान्ते सर्वजन्तुषु ।
ईश्वरत्वं च जीवानां सिद्धं तच्छक्तिसंगमात् ॥ २१ ॥

21. எல்லா ஜீவனிடத்திலும் ஞானமும் க்ரியை யும் தோன்றுகிறது. அந்த ஜீவனையே ஜ்ஞாதாவா கவும் கர்த்தாவாகவும் நினைக்கிறோம்.

நெருப்பிலே காய்ச்சின இரும்புத்துண்டு சுடுகிறது. ஸ்வபாவமாக இரும்புத்துண்டு சுடுவதில்லை. ஆனால் சுடும் நெருப்போடு ஒன்றாகப் போனபடியால் சுடுகிறது. அதுபோல ஞானமும் க்ரியையும் உள்ள சிவஸ்வரூபமான ஈச்வரனோடு ஐக்யத்தால் எல்லா ப்ராணிகளிடத்திலும் ஞானமும் க்ரியையும் சம்பந்தப்படுகின்றது. ஆகவே ஈச்வர சக்தி ஸம்பந்தத்தால் ஜீவர்களுக்கு ஈச்வரத்வம் ஸித்திக்கிறது.

सर्वात्मत्वं च कीदृशम् ஸர்வாத்மத்தன்மை எப்படிப் பட்டது? என்ற கேள்விக்கு ஸமாதானம் இந்த ச்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

अयं घटोऽयं पट इत्येवं नानाप्रतीतिषु ।
अर्कप्रभेव ज्ञानं तत्स्वयमेव प्रकाशते ॥ २२ ॥

22. எல்லா ஜீவன்களுக்கும், இது குடம் இது துணி என்ற அநேகவிதமான ப்ரதீதிகள் (மனதின் பரிணாம ரூபமான வ்ருத்திகள்) உண்டாகின்றன. அவைகளில், ஒரு ஸூரியனுடைய காந்தி எல்லா இடத்திலும் ப்ரகாசிப்பது போல, த்ரஷ்டாவான ஆத்மஸ்வரூபஜ்ஞானம் ஒன்று ப்ரகாசிக்கிறது. ஆத்மஸ்வரூபஜ்ஞானம் தானாகவே ப்ரகாசிக்கிறது. வேறு வஸ்துவால் ப்ரகாசிப்பதில்லை. ஸ்வப்ரகாசம் என்று சொல்லுகிறார்கள்.

ज्ञानं न चेत्स्वयं सिद्धं जगदन्धं तमो भवेत् ।
न चेदस्य क्रिया काचित् व्यवहारः कथं भवेत् ॥२३॥

23. எல்லா மனோவ்ருத்திகளில் ப்ரகாசிக்கும் ஆத்மஸ்வரூபமான (சிவஸ்வரூபமான) ஞானம்

ஸ்வயம் ப்ரகாசமாக இல்லாவிட்டால் உலகம்முழுவதும் இருளாயிருக்கும். ஒருவித வஸ்துவும் பிரகாசிக்காது. அப்படியே ஈச்வர ஸ்வரூபத்தில் ஒருவிதமான க்ரியை இல்லாவிட்டால் ஈச்வரன் கர்த்தா என்ற வ்யவஹாரம் பொருந்தாது. ஆகையால் ஈச்வரஸ்வரூபத்தில் க்ரியையையும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

क्रिया नाम परिस्पन्दपरिणामस्वरूपिणी ।
स्पन्दमाने बहिर्ज्ञाने तदङ्कुरवदुद्भवेत् ॥ २४ ॥

24. க்ரியை என்பது, அசைவது, பரிணமம் என்று இருவகைப்படும். ஒரு பாணம் லக்ஷ்யத்தைக் குறித்துச் செல்லுகின்றது. பாணத்தில் சலனம் என்பது க்ரியை. தங்கம் கட்டியாயிருப்பது ஆபரணமாக மாறுகிறது. கட்டியாயிருக்கும் அவஸ்தையை விட்டு வேறுவிதமான அவஸ்தையை அடைகிறது. அது ஸ்வர்ணத்தின் க்ரியை. இவ்விரண்டு விதமான க்ரியையும் மூர்த்தமாக இல்லாத சிவஸ்வரூபத்தில் ஸ்வபாவமாயிருக்க முடியாது. ஆனாலும் கண் முதலிய இந்திரியம் வழியாக மனது வெளியில் வருகிறது. அந்த மனதின் வ்ருத்தியில் சிவஸ்வரூபமான ஞானம் ப்ரகாசித்து சலிக்கும்போது, ஞானத்தின் கார்யம்போல க்ரியை உண்டாகிறது. ஈச்வர ஸான்னித்யத்தாலேயே எல்லா ஜந்துக்களிலும் சேஷ்டை உண்டாவதால் எல்லாவித சேஷ்டையும் ஈச்வரனுடையதுதான் என்பது கருத்து.

उत्पाद्य प्राप्य संस्कार्य विकार्योपाश्रया क्रिया ।
करोति गच्छत्युन्मार्ष्टि छिनत्तीति प्रतीयते ॥ २५ ॥

25. சில க்ரியையால் புதிதாக வஸ்து உண்டாகிறது. அந்த வஸ்துவை उत्पाद्यं உத்பாத்யம் என்று சொல்லுகிறார்கள். குடத்தை உண்டு பண்ணும் க்ரியை घटं करोति கடம் கரோதி என்று அனுபவிக்கப்படுகிறது. சில க்ரியையால் சிலவஸ்து அடையப்படுகிறது. நடப்பதால் நகரத்தை அடைகிறோம். நகரத்தை प्राप्यं ப்ராப்யம் என்று சொல்லுகிறோம். அந்த க்ரியை नगरं गच्छति நகரம் கச்சதி என்று அனுபவிக்கப்படுகிறது. சில க்ரியையால் சில வஸ்துவுக்கு ஸம்ஸ்காரம் ஏற்படுகிறது. அந்த வஸ்துவை संस्कार्यं ஸம்ஸ்கார்யம் என்று சொல்லுவார்கள். பெருக்குவதால் பூமிக்கு ஸம்ஸ்காரம் ஏற்படுகிறது. அந்த க்ரியை भूमिम् उन्मार्ष्टि பூமிம் உன்மார்ஷ்டி என்று அனுபவிக்கப்படுகிறது. சில க்ரியையால் சில வஸ்துவுக்கு விகாரம் ஏற்படுகிறது. அந்த வஸ்துவை विकार्यं விகார்யம் என்று சொல்லுவார்கள். வெட்டும் க்ரியையால் மரத்திற்கு விகாரம் ஏற்படுகிறது. அந்த க்ரியை वृक्षं छिनत्ति வ்ருக்ஷம் ச்சினத்தி என்று அனுபவிக்கப்படுகிறது.

शिवो ब्रह्मादिदेहेषु सर्वज्ञ इति भासते ।
देवतिर्यङ्मनुष्येषु किञ्चिज्ज्ञस्तारतम्यतः ॥ २६ ॥
जरायुजोऽण्डजश्चैव स्वेदजः पुनरुद्भिदः(ज्जः) ।
एते चतुर्विधा देहाः क्रमशो न्यूनवृत्तयः ॥ २७ ॥

26—27. ஒரே சிவஸ்வரூபம் ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் முதலிய ஈச்வர தேஹங்களில் எல்லாவற்றையும் அறிந்த ஸர்வஜ்ஞனாகத் தோன்றுகிறது. பசு பக்ஷிகள், மனிதர்கள், தேவர்கள் முதலிய

சரீரங்களில் சிவஸ்வரூபம் சில விஷயங்களை அறிந்த வனாகக் காணப்படுகிறது. அதிலும் திர்யக் தேஹத்திலிருக்கும் ஜீவனைவிட மனுஷ்ய தேஹத்திலிருக்கும் ஜீவன் அதிகம் தெரிந்தவன். அவனைவிட தேவ சரீரத்திலிருக்கும் சிவஸ்வரூபம் அதிகம் தெரிந்த வன். தேகத்தின் உயர்வுதாழ்வை அனுஸரித்து ஒரே சிவஸ்வரூபம் ஸர்வஜ்ஞனாகவும் தாரதம்யத்தோடு கூடிய கிஞ்சிஜ்ஜ்ஞனாகவும் (கொஞ்சம் தெரிந்தவனாகவும்) காணப்படுகிறது. தேஹங்கள் நாலுவகைப்பட்டன. கர்ப்பத்தைச் சுற்றிக்கொண்டிருக்கும் தோல் பை ஜராயு என்று சொல்லப்படும். அதிலிருந்து உண்டான தேஹம் மனுஷ்யன், பசு முதலியவற்றின் தேஹம். அது ஜராயுஜம் என்று சொல்லப்படுகிறது. முட்டையிலிருந்து உண்டாகும் தேஹம், கோழி, பாம்பு முதலிய சரீரம். அது அண்டஜம் எனப்படும். இது ஜராயுஜ தேஹத்தைவிடத் தாழ்ந்தது. வேர்வையிலிருந்து உண்டான சரீரம் ஸ்வேதஜம். இது அண்டஜ சரீரத்தையும் விடத் தாழ்ந்தது. பூமியைப் பிளந்து கொண்டு உண்டாகும் தேஹம் உத்பிதம் (உத்பிஜ்ஜம்) என்று சொல்லப்படுகிறது. இவை வ்ருக்ஷம், செடி, கொடி முதலியவைகள். இது மிகவும் தாழ்ந்தது. இவ்வாறு உபாதியான சரீரத்தின் உயர்வு தாழ்வு காரணமாக ஒரு சிவஸ்வரூபமே ஸர்வஜ்ஞனாகவும் வித்யாஸப்பட்ட முறையில் கிஞ்சிஜ்ஜ்ஞனாகவும் தோன்றுகிறது.

ब्रह्मादिस्तम्बपर्यन्ता स्वप्नकल्पैव कल्पना ।
साक्षात्कृतेऽनवच्छिन्ने प्रकाशे परमात्मनि ॥ २८ ॥

28. தூங்கிவிழித்துக் கொண்டவுடன் ஸ்வப்நத்தில் தோன்றிய ப்ரபஞ்சம் (மலை, காடு, நகரம் முதலியன) லயத்தை அடைவதுபோல, வேறு வஸ்து இல்லாத ப்ரகாச ஸ்வரூபமான பரமாத்மாவாவின் அனுபவம் ஏற்பட்டபொழுது பெரியவரான ப்ரஹ்மா முதல் ஸ்தம்பம் என்னும் சிறிய பூச்சி வரையிலுள்ள உலககல்பனை லயத்தை அடைவதால் ஸ்வப்நத்தில் தோன்றிய உலகத்துக்குச் சமமானது.

अणोरणीयान्महतो महीयानिति वेदवाक् ।

रुद्रोपनिषदप्येवं स्तौति सर्वात्मकं शिवम् ॥ २९ ॥

29. மிகச் சிறிய வஸ்துவைவிடச் சிறியவர் என்றும், மிகப் பெரிய வஸ்துவைவிடப் பெரியவர் என்றும், ருத்ரோபநிஷத் என்ற வேதமும் சிவஸ்வரூபத்தை ஸர்வஸ்வரூபியாக ஸ்தோத்ரம் செய்கிறது. சிறியது, பெரியது எல்லாம் சிவனே என்று வேதத்தின் பொருள்.

ईश्वरो गुरुरात्मेति मूर्तिभेदविभागिने ।

व्योमवद्व्याप्तदेहाय दक्षिणामूर्तये नमः ॥ ३० ॥

30. பரமேச்வரன், ஆசார்யன், (சிஷ்யன்) ஆத்மா என்று மூன்று மூர்த்தியுடையவரானலும் ஆகாசம் போல் எங்கும் நிறைந்த ஸ்ரீ தக்ஷிணமூர்த்திக்கு நமஸ்காரம்.

इति श्रीदक्षिणामूर्तिस्तोत्रार्थप्रतिपादके ।

प्रबन्धे मानसोल्लासे प्रथमोल्लाससंग्रहः ॥ ३१ ॥

31. ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்திரத்தின் தாத்பர்யத்தை விளக்கும் மானஸோல்லாஸம் என்னும் புத்தகத்தில் முதல் உல்லாஸச் சுருக்கம் முடிவடைந்தது.

இரண்டாவது உல்லாஸம்

அவதாரணிகை

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் முதல் ச்லோகத்தில் உலகம் ஆத்மாவில் உள்ளது. மாயையால் வெளியிலிருப்பதாகத் தோன்றுகிறது என்று சொல்லியதை நையாயிகர்களும் ஸாங்க்யர்களும் ஒத்துக்கொள்வதில்லை. உலகத்துக்குப் பரமாணுக்கள் உபாதானகாரணம், ஈச்வரன் நிமித்த காரணம் என்று நையாயிகர்கள் கூறுகிறார்கள். ப்ரதானத்தின் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்கள் உலகத்தின் ஸ்ருஷ்டிக்கும், ஸ்திதிக்கும், நாசத்திற்கும் காரணமாகின்றன என்று ஸாங்க்யர்கள் சொல்லுகிறார்கள்.

இவ்விரண்டு மதத்திலும் தோஷத்தைச் சொல்லுவதாக ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் இரண்டாவது ச்லோகத்திற்கு அவதாரிகை வைக்கப்பட்டிருக்கிறது. முதலில் நையாயிகர்களின் மதம் நிரூபிக்கப்படுகிறது.

उपादानं प्रपञ्चस्य संयुक्ताः परमाणवः ।
मृदन्वितो घटस्तस्माद्भासते नेश्वरान्वितः ॥ १ ॥

1. உலகத்திற்கு ப்ருதிவி, ஜலம், தேஜஸ், வாயு என்னும் நாலுவித பரமாணுக்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்தவைகள் உபாதான காரணம். (ஸமவாயிகாரணம்,) காரியங்கள் உபாதான காரணத்தோடு கூடவே அறியப்படுகின்றன, மண்குடம், தங்கக் காப்பு என்று அறியப்படுகிறது. ஈச்வரக்குடம்

என்று ஈசுவரனேடுகூட குடம் முதலிய காரியங்கள் தோன்றப்படவில்லை. ஆகையால் உலகத்திற்கு ஈச்வரன் உபாதான காரணமில்லை.

परमाणुगता एव गुणा रूपरसादय: ।
कार्ये समानजातीयमारभन्ते गुणान्तरम् ॥ २ ॥

2. இரண்டு பரமாணுக்களால் ஒரு த்வ்யணுகம் உண்டாகிறது. பரமாணுவில் இருக்கும் கருப்பு ரூபம் பரமாணுவால் உண்டாக்கப்பட்ட த்வ்யணுகம் என்னும் கார்யத்தில் கருப்பு ரூபத்தை உண்டுபண்ணுகிறது. இவ்விதமே பரமாணு (ஸமவாயிகாரணம்)வில் இருக்கும் ரூபம் ரஸம் முதலிய விசேஷ குணங்கள் தனக்கு ஸஜாதீயமான குணங்களை பரமாணுகார்யத்தில் உண்டுபண்ணுகின்றன.

कार्यं यत्र समन्वेति कारणं समवायि तत् ।
चक्राद्यं साधनं यत्तु घटस्यासमवायि तत् ॥ ३ ॥

3. உலகத்திற்கு ஈச்வரன் நிமித்த காரணம் என்று நிரூபணம் பண்ணுவதற்காக முதலில் மூன்று வித காரணம் சொல்லப்படுகிறது. (1) ஸமவாயி காரணம் (உபாதான காரணம்). (2) அஸமவாயிகாரணம், (3) நிமித்தகாரணம் என்று காரணம் மூன்று விதம்

கார்யம் எந்த பதார்த்தத்தில் ஸமவாயஸம்பந்தத்தால் உண்டாகிறதோ அது ஸமவாயிகாரணம் (உபாதான காரணம்). நூல்களில் வஸ்திரம் ஸமவாயஸம்பந்தத்தால் உண்டாகிறது. ஆகவே

நூல்கள் வஸ்திரத்திற்கு ஸமவாயி காரணம். மண்ணின் அவயவங்கள் (கபாலம்) குடத்திற்கு ஸமவாயி காரணம்.

உத்தரார்த்தத்தில் குடத்திற்குச் சக்கரம் முதலிய சாதனம் அஸமவாயிகாரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ந்யாய சாஸ்திரத்தில் குடத்திற்கு அதன் அவயவங்களின் ஸம்யோகமே அஸமவாயிகாரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ச்லோகத்திலிருக்கும் அஸமவாயி என்ற பதத்திற்கு ஸமவாயிகாரணத்தைவிட வேறான காரணம் என்று பொருள் கொள்ளவேண்டும். ஆகவே சக்ரம் முதலியவை நிமித்த காரணம் என்று தாத்பர்யம்.

वस्तुतः ननु चक्रे अव्याप्तिरिति आशङ्कां तस्य अलक्ष्यतया परिहरति चक्राद्यमिति। असमवायि इत्यत्र अ इति भिन्नं पदं निषेधार्थकम्। चक्रादिकं न समवायिकारणम् इति भावः। असमवायिकारणनिरूपणपूर्वं निमित्तकारणनिरूपणस्यासंगतत्वात् तस्य उपरि क्रियमाणत्वाच्च ॥

समवायिनि तिष्ठद्यत् समवाय्याश्रये तथा ।
कार्येऽवधृतसामर्थ्यं कल्प्यतेऽसमवायि तत् ॥ ४ ॥

4. இரண்டு விதமான அஸமவாயிகாரணங்களின் லக்ஷணம் இந்த ச்லோகத்தில் நிரூபிக்கப்படுகிறது.

(a) ஸமவாயி காரணத்தில் இருப்பதும் கார்யத்தை உண்டுபண்ணக்கூடிய ஸாமர்த்தியத்தையுடையதாயுமுள்ளது ஒரு அஸமவாயிகாரணம்.

நூல்களின் ஸம்யோகம் நூல்களில் இருக்கிறது. நூல்கள் வஸ்திரத்திற்கு ஸமவாயிகாரணம். நூல்களின் ஸம்யோகம் இல்லாவிட்டால் வஸ்திரம் உண்டாகாது. ஆகையால் வஸ்திரத்தின் ஸமவாயிகாரணமான நூல்களில் இருந்துகொண்டு, வஸ்த்ரத்திற்குக் காரணமாயிருப்பதால், நூல்களின் ஸம்யோகம் அஸமவாயிகாரணம் என்று சொல்லப்படுகிறது.

(b) ஸமவாயி காரணத்தின் ஆதாரமான வஸ்துவில் இருந்துகொண்டிருப்பதும், கார்யத்தை யுண்டுபண்ணும் ஸாமர்த்தியத்தை யுடையதாயுமுள்ளது இரண்டாவது அஸமவாயிகாரணம் எனப்படும். கருப்பு நூல்களால் உண்டாகிய வஸ்திரம் கருப்பாயிருக்கிறது. வஸ்திரத்திலிருக்கும் கருப்புரூபத்திற்கு நூலில் இருக்கும் கருப்புரூபம் அஸமவாயிகாரணம். கார்யம் வஸ்திரத்தின் கருப்பு ரூபம். அதன் ஸமவாயிகாரணம் வஸ்திரம். அதற்கு ஆதாரமானவை நூல்கள். அவைகளில் இருக்கும் கருப்பு ரூபம் வஸ்திரத்தின் கருப்பு ரூபத்தை உண்டுபண்ணுவதால் அஸமவாயிகாரணம் என்று சொல்லப்படுகிறது.

निमित्तं कारणं तेषामीश्वरश्च कुलालवत् ।

5. ஸமவாயிகாரணம், அஸமவாயிகாரணம் என்ற இருவகைக் காரணங்களைக்காட்டிலும் வேறு காரணம் நிமித்தகாரணம் எனப்படும். குடத்திற்குக் குயவன், வஸ்திரத்திற்குச் சேணியன் நிமித்த காரணம் என்பார்கள். அதுபோலவே எல்லா காரியங்களுக்கும் ஈச்வரன் நிமித்தகாரணம் ஆவார்.

यत्कार्यं जायते यस्मात्तस्मिन् तत्प्रतितिष्ठति ॥ ५ ॥
मृत्तिकायां घटः तन्तौ पटः स्वर्णेऽङ्गुलीयकम् ।
इति वैशेषिकाः प्राहुः तथा नैयायिका अपि ॥ ६ ॥

5—6. எந்தக் கார்யம் யாதொரு உபாதான காரணத்தால் உண்டாகிறதோ. அந்தக்காரணத்திலேயே நிலையுற்றிருக்கிறது. ம்ருத்திகை என்னும் ஸமவாயி காரணத்தால் குடம் உண்டானதால். குடம் ம்ருத்திகையில் நிலைநிற்கிறது. அதுபோல வஸ்திரம் தன்னுடைய உபாதானமான நூல்களிலும், மோதிரம் தன் ஸமவாயிகாரணமான ஸுவர்ணத்திலும் நிலைநிற்கிறது. ஈச்வரன் உபாதான காரணமல்ல. ஆகையால் ப்ரபஞ்சம் ஆத்ம ஸ்வரூபத்தில் இருக்கிறது என்பது சரியில்லை என்பது கருத்து.

இவ்வாறு வைசேஷிகர்களும் நையாயிகர்களும் கூறுகிறார்கள். விசேஷம் என்ற தனிப்பட்ட பதார்த்தத்தை ஒத்துக்கொண்ட கணாதமஹர்ஷியின் மதத்தைப் பின்பற்றியவர்கள் வைசேஷிகர்கள். ந்யாயத்தை முக்கியமாக நிரூபணம் செய்த கௌதம மஹர்ஷியின் மதத்தைப் பின்பற்றியவர்கள் நையாயிகர்கள். இருவர்களுக்கும் சில அபிப்பிராய பேதங்கள் இருந்தபோதிலும், மேற்கூறிய விஷயத்தில் ஒரே அபிப்பிராயம்.

रजः सत्त्वं तमश्चेति प्रधानस्य गुणास्त्रयः ।
रजो रक्तं चलं तेषु सत्त्वं शुक्लं प्रकाशकम् ॥ ७ ॥
तमः कृष्णं चावरकं सृष्टिस्थित्यन्तहेतवः ।
इति सांख्याश्च भाषन्ते तेषां दूषणमुच्यते ॥ ८ ॥

7—8. ப்ரபஞ்சகாரணம் ஸாங்க்ய மதப்பிரகாரம் சொல்லப்படுகிறது. ரஜஸ், ஸத்வம், தமஸ் என்று மூன்று குணங்கள் இருக்கின்றன. அவைகள் மூன்றும் ஸமமாயிருக்கும் அவஸ்தை ப்ரதானம் என்று சொல்லப்படும். அவைகளில் ரஜோகுணம் சலன ஸ்வபாவமாயும், ரக்தமாகவும்(ரஞ்ஜகமாகவும்,வேறு வஸ்துக்களோடு ஸம்பந்தத்தையுண்டு பண்ணுவதாகவும், ப்ரேரகமாகவும்) இருக்கும். (प्रेरकत्वं सक्रियत्वं च रजसः लक्षणम् ।) ரஜோகுணம் மேலிட்டிருக்கும் பொழுது ஏதாவது கார்யத்தைச் செய்து கொண்டிருப்பான்.

ஸத்வகுணம் சுக்லமாகவும் (சுத்தமாகவும், லகுவாகவும்), வஸ்துக்களை ப்ரகாசிக்கச் செய்வதாயும் உள்ளது. (लघुत्वं प्रकाशकत्वं च सत्त्वस्य लक्षणम् ।) ஸத்வ குணம் மேலிட்டபொழுது சரீராவயவங்கள் லகுவாகத் தோன்றுகின்றன. இந்திரியங்கள் தன் தன் விஷயத்தை ப்ரகாசிப்பிக்க ஸாமர்த்திய முள்ளவைகளாகவும் இருக்கின்றன.

தமஸ் க்ருஷ்ணமாகவும் (மலினமாகவும், குருவாகவும்), விஷயங்கள் தோன்றுவதைத் தடுப்பதாயும் உள்ளது. தமோகுணம் மேலிட்ட சமயத்தில் சரீராவயவங்கள் கனமாயிருப்பதாகத் தோன்றுகின்றன. இந்திரியங்களுக்கும் விஷயத்தை ப்ரகாசப்படுத்தும் ஸாமர்த்தியம் இல்லை. (गुरुत्वं तत्तदिन्द्रियव्यापारनिवृत्तिद्वारा तत्तत्कार्यप्रतिबन्धकत्वं च तमोलक्षणम् ।)

இம்மூன்றுகளில் ரஜோகுணம் உலக ஸ்ருஷ்டிக்குக் காரணம். ஸத்வகுணம் ஸ்திதிக்குக் காரணம். தமோகுணம் நாசத்திற்குக்காரணம் என்று ஸாங்க்யர்கள் சொல்லுகிறார்கள்.

இவ்வாறு நையாயிகர்கள், ஸாங்க்யர்கள் சொல்லியவாதத்தில் தோஷம், வைதிகமதத்தை நிரூபணம் செய்யும் இரண்டாவது சுலோகத்தால் சொல்லப்படுகிறது,

बीजस्यान्तरिवाङ्कुरो जगदिदं प्राङ्निर्विकल्पं पुनः
मायाकल्पित देशकाल कलना वैचित्र्य चित्रीकृतम् ।
मायावीव विजृम्भयत्यपि महायोगीव यस्स्वेच्छया
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ २ ॥

பதவுரை: बीजस्यान्तः = விதையினுள் अङ्कुर इव = முளைபோல் इदं जगत् = இந்த உலகம் प्राक् = ஸ்ருஷ்டிக்குமுன் (ப்ரளயகாலத்தில்) निर्विकल्पं = ரூபம்குணம் முதலிய விகல்பம் இல்லாததாக (இருந்தது). पुनः = மறுபடியும் (ஸ்ருஷ்டிகாலத்தில்) मायावीव = இந்திரஜால வித்தைக்காரன்போலவும் महायोगीव (अपि) = (விசுவாமித்திரர்முதலிய) பெரிய யோகிகள் போலவும் यः = எவர் स्वेच्छया = தன் விருப்பத்தினால் मायाकल्पित-देशकाल कलना वैचित्र्यचित्रीकृतं = மாயையால் உண்டு பண்ணப்பட்ட இடம் காலம் இவைகளுடைய சம்பந்த விசேஷத்தினால் பலவகையாகச் செய்யப்பட்டதாக विजृम्भयति = தோன்றுவிக்கிறாரோ तस्मै नमः = அந்த குருமூர்த்தி ஸ்வரூபமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் உரியது.

2. விதையிலிருந்து அங்குரம் (முளை) உண்டாகிறது. அது ஒருவிதமான ரூபத்தோடு கூடியிருக்கிறது. பூமியில் ஜலம் விடுவதற்கு முன்னால், முளை

விதைக்குள்ளே இருந்தது. அதுபோல இப்பொழுது வெவ்வேறு பெயர், உருவம், குணம், கர்ம முதலிய வைகளோடு கூடின உலகம் ஸ்ருஷ்டிக்குமுன் அதாவது ப்ரளயகாலத்தில் நாமரூபம் முதலிய விகல்பங்கள் இல்லாத ஸத்ரூப ப்ரஹ்மமாகவே இருந்தது. ஸ்ருஷ்டி காலத்தில், ஒருஇந்திர ஜாலவித்தைக்காரன் மாயையின் ஸஹாயத்தை வைத்துக்கொண்டு யானை, குதிரை, வீடு, காடு முதலிய உலகத்தைத் தோன்றும்படி செய்வதுபோல. எந்த தக்ஷிணமூர்த்தி தனக்கு சக்தியென்று வேதங்களில் சொல்லப்படும் மாயையால் கல்பிக்கப்பட்டதேசம், காலம் இவைகளுடைய சம்பந்தத்தால் ஏற்பட்ட வைசித்ரியத்தால் சித்ரமாகச் செய்து இந்த உலகத்தைத் தோன்றும்படி செய்கிருரோ, மஹாயோகிகளான விச்வாமித்ராதி மஹர்ஷிகள் வெளியிலிருக்கும் சாதனங்களை அபேக்ஷிக்காமலேயே ஸங்கல்ப மாத்திரத்தாலேயே விசித்திரமான வஸ்துக்களை ஸ்ருஷ்டித்ததுபோலவும் सोऽकामयत என்று வேதத்தில் சொல்லியபடி தன்னுடைய இச்சாமாத்ரத்தால் உலகைத் தோன்றுவிக்கிருரோ, அந்த குருமூர்த்தியான தக்ஷிணமூர்த்திக்கு இந்த நமஸ்காரம்.

अस्यायमभिप्राय: = இந்த ச்லோகத்தின் கருத்து விளக்கப்படுகிறது.

अङ्कुरादिफलान्तेषु कार्येष्वस्तित्वमिष्यते ।
कुत आगत्य संबद्धा वटबीजेषु ते कणा: ॥ ९ ॥

9. பரமாணுக்கள் உலகத்திற்கு உபாதான காரணம் என்னும் வாதம் இந்த ச்லோகத்தில் நிராகரிக்கப்படுகிறது. கார்யங்களில்உபாதானகாரணம்

அனுஸ்யூதமாகத் தோன்றுகிறது என்று சொல்லப் படுகிறது. முளை (அங்குரம்) முதல் பழம் வரையில் உள்ள ஸகல காரியங்களிலும் ஸத்தை தோன்று கிறது. अङ्कुरः सन्, फलं सत् முளை இருக்கிறது, பழம் இருக்கிறது என்று எல்லா காரியங்களிலும் ஸத்தை தோன்றுகிறது, ஆகையால் ப்ரகாசிக்கிற ஸத்ரூபமே உபாதானம் என்று கொள்ளுவது சரியானது. ஆலை விதைகளில் பரமாணுக்கள் என்னும் கணங்கள் எங்கிருந்து வந்து சேர்ந்து தோன்றுகின்றன? தோன்றுவதில்லை. ஆகையால் பரமாணுக்கள் உபா தானமாகாது.

कारणान्तर्गतं कार्यमिति सर्वैश्च सम्मतम् ।
तस्मात्सत्ता स्फुरत्ता च सर्वत्राप्यनुवर्तते ॥ १० ॥

10. கார்யம் உபாதான காரணத்தில் அந்தர் கதமாயிருப்பது எல்லாராலும் ஒத்துக்கொள்ளப் பட்டது. எல்லா கார்யமும் இருக்கிறது என்றும், பிரகாசிக்கிறது என்றும் தோன்றுகிறது, ஆகவே ஸத்தையும், ப்ரகாசமும் (स्फुरत्ता) எல்லா இடத்திலும் அனுகதமாகத் தோன்றுவதால் ப்ரகாசமும் ஸத்தை யும் ஸகல கார்யத்திற்கும் உபாதானம்.

पुष्पे फलत्वमापन्ने क्षीरे च दधितां गते ।
विजातीयाः प्रवर्तन्ते गुणा रूपरसादयः ॥ ११ ॥

11. புஷ்பம் பழமாகிறது. பால் தயிராக ஆகி றது. பழத்திற்கு புஷ்பம் உபாதானகாரணம்; தயிருக்குப் பால் உபாதான காரணம் என்று சொன்னால், நையாயிக சாஸ்திர ந்யாயப்படி உபா தானத்திலுள்ள ரூபம், ரஸம் இவைகளுக்கு ஸஜா

தீயமான ரூபம், ரஸம் கார்யத்தில் உண்டாகவேண்டும். அப்படிக் காண்பதில்லை. புஷ்பத்தின்ரூபத்தை விட வேறுமாதிரியான ரூபம் பழத்தில் இருக்கிறது. பாலின் வெளுப்பு ரூபத்திற்கும் தயிரின் ரூபத்திற்கும் வித்தியாஸம் இருக்கிறது. புஷ்பத்தின் ரஸம் வேறு. பழத்தின் ரஸம் வேறு மாதிரியானது. பாலில் ரஸம் ஒருவிதமானது. தயிரில் ரஸம் வேறு விதமானது. ஆகையால் முன்னால் உண்டாகும் கார்யம் அதற்குப் பின்னால் உண்டான கார்யத்திற்கு உபாதான காரணம் அல்ல. எல்லா கார்யத்திற்கும் ப்ரகாச ஸத்ரூபமே உபாதான காரணம்.

कारणं कार्यमंशोंऽशी जातिव्यक्ती गुणी गुणः ।

क्रिया क्रियावानित्याद्याः प्रकाशस्यैव कल्पनाः ॥ १२ ॥

12. மூர்த்தமல்லாத ஸத்ரூபம் எவ்வாறு காரியங்களுக்குக் காரணமாக முடியும்? என்று நினைக்க வேண்டாம். ஸத்ரூபம் கார்யங்களை புதிதாக உண்டு பண்ணுவதில்லை. காரியங்களாக பரிணமத்தையும் அடையவுமில்லை. கயிற்றைப் பார்த்து பாம்பு, ஜலதாரை, பூமியின் வெடிப்பு என்று பலவிதமாக ப்ரமிக்கிறோம். பாம்பு முதலியவைகள் கல்பனைகள். அவைகளுக்கு விவர்தாதிஷ்டானம் (विवर्ताधिष्ठानं) கயிறு. அதுபோல ஸகல கார்யங்களும் ஸத்ரூபத்தின் கல்பனைகளே. ஸத்ரூபம் விவர்தாதிஷ்டானம் விவர்த்தோபாதானம்—விதை முதலிய காரணம், முளை முதலிய கார்யம், நெல் குவியல் முதலிய அம்சீ, குவியலிலிருக்கும் ஒவ்வொரு நெல் அம்சம், எல்லா குடங்களில் இருக்கும் घटत्वं முதலிய ஜாதி, அதற்கு ஆதாரமான அடி பருத்து வாய் சிறுத்த

வஸ்து, (व्यक्ति) ரூபம் முதலிய குணத்தையுடைய வஸ்திரம் முதலியவை குணீ, அவற்றின் ரூபம் ரஸம் முதலிய குணம், அசைவது முதலிய க்ரியை, அதற்கு ஆச்ரயமான வஸ்து க்ரியாவான், என்று இவ்வாறு உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும் ப்ரகாசமான ஸத்ரூபத்தின் கல்பனைகளே.

चैतन्यं परमाणूनां प्रधानस्यापि नेष्यते ।

ज्ञानक्रिये जगत्क्लृप्तौ दृश्यते चेतनाश्रये ॥ १३ ॥

13. ஜகத்தின் காரணம் என்று நையாயிகர்களால் சொல்லப்படும் பரமாணுவும், ஸாங்க்யர்கள் சொல்லும் ப்ரதானமும் வேதத்தில் ஸகல கார்யங்களுக்கும் விவர்தோபாதானமாக சொல்லப்படும் ஸத்ரூபம் என்று சொல்ல முடியாது. ஸத் ஸ்வரூபம் சேதனமாயிருக்கும். நையாயிகர்கள் பரமாணுவைச் சேதனமாகச் சொல்லுவதில்லை. ஸாங்க்யர்களும் ப்ரதானத்தைச் சேதனமாகச் சொல்லுவதில்லை. உலகத்தை உண்டுபண்ண ஞானசக்தி, க்ரியாசக்தி என்ற இரண்டு சக்திகள் வேண்டும். அவை இரண்டும் குடத்தை உண்டுபண்ணும் குயவன் முதலிய சேதனனிடத்திலேயே காண்கிறோம். ஆகையால் உலக காரணம் ஸத்ரூபம் சேதனம். அது கூடஸ்தம் என்று வேதங்களில் சொல்லியிருக்கிறது. மாயா வசத்தால் ஞானசக்தியும் க்ரியா சக்தியும் ஸத்ரூபமான ஈச்வரனுக்கு உண்டு.

कालरूपक्रियाशक्त्या क्षीरात्परिणमेद्दधि ।

ज्ञातृज्ञानज्ञेयरूपं ज्ञानशक्त्या सर्वज्जगत् ॥ १४ ॥

14. ஒரு சேதனனுடைய ஸஹாயமில்லாமலேயே பால் தயிராகிறது என்று ஸாங்கியர்கள் சொல்லுவது சரியல்ல. பால் தானகவே தயிராக மாறுமானல் எப்பொழுதும் பால் தயிராக ஆகவேண்டும். அப்படி ஆவதில்லை. குறிப்பிட்ட காலத்தை அபேக்ஷித்துக் கொண்டே தயிராக ஆகிறது. காலம் என்பது ஈச்வரனுடைய க்ரியாசக்தி. परास्य शक्तिर्विविधैव श्रूयते என்று வேதம் ஈச்வரனுக்கு பலவித சக்திகள் உண்டு என்று கூறுகிறது. यस्सर्वेषु भूतेषु तिष्ठन् என்ற ப்ருஹதாரண்யக உபநிஷத்து ஸமஸ்த பூதத்திலும் அந்தர்யாமியாக ஈச்வரன் இருக்கிறன் என்று நிரூபணம் செய்கிறது. ஆகையால் பாலில் அந்தர்யாமியாயிருக்கும் ஈச்வரனுடைய காலம் என்னும் க்ரியாசக்தியாலேயே தயிருண்டாகிறது. சேதனனில்லாமல் காரியம் உண்டாவதில்லை. உலகத்தை ஸ்ருஷ்டிப்பதற்குமுன் ஈச்வரனுக்கு உபாதியான மாயையில் எல்லா உலகரூபமாக நாமே ஆகவேண்டுமென்ற மாயா விருத்தி உண்டாகிறது. அதில் ஈச்வரஸ்வரூபம் பிரதிபலனத்தை அடைகிறது. பிரதிபலனத்தை चिदाभास‌ம் என்று சொல்லுவார்கள். चिदाभासத்தோடு கூடின மாயாவிருத்தி ஜ்ஞானம். அதை உடைய மாயையை உபாதியாகக் கொண்ட ஈச்வரன் ஜ்ஞாதா. அந்த விருத்தி உலகாகாரமாய் உண்டானதால் ஜ்ஞேயரூபமான ஜகத்தையும் பிரகாசப்படுத்துகிறது. இவ்விதமாக ஈச்வரனுடைய மாயாவிருத்தியாகிற ஜ்ஞானசக்தியால் ஜ்ஞாதா ஜ்ஞேயம் என்று சொல்லப்படும் ஜகத்து உண்டாகிறது.

ज्ञानं द्विधा वस्तुमात्रद्योतकं निर्विकल्पकम् ।
सविकल्पं तु संज्ञादिद्योतकत्वादनेकधा ॥ १५ ॥

15. ஜ்ஞானம் நிர்விகல்பகம் என்றும் ஸவிகல்பகம் என்றும் இருவகைப்படும். ஒரு வஸ்துவின் பெயர் ஜாதி முதலியவைகளோடு சம்பந்தத்தை பிரகாசப்படுத்தாமல் வஸ்துவின் ஸ்வரூபமாத்திரத்தை பிரகாசப்படுத்தும் ஞானம் நிர்விகல்பகம் என்று சொல்லப்படும். இந்த ஞானத்தை இவ்வாறு என்று சப்தங்களால் சொல்லமுடியாது. अयं घटः இது குடம் என்ற ஞானம் ஸவிகல்பகம். இந்த ஞானத்தில் குடம் என்ற பெயர் கடத்துவம் என்ற ஜாதி முதலியவைகளோடு கூடின கடஸ்வரூபம் தோன்றுகிறது. ஆகையால் ஸவிகல்பக ஜ்ஞானம். அந்த ஞானம் அனேக விதமானது. ஸவிகல்பக ஜ்ஞானத்தில் வஸ்துவின் நாமதேயசப்தமும் தோன்றுகிறது என்று பிராசீன நையாயிகர்கள் சொல்லுகிருர்கள்.

संकल्पसंशयभ्रान्तिस्मृतिसादृश्यनिश्चयाः ।
ऊहोऽनध्यवसायश्च तथान्येऽनुभवा अपि ॥ १६ ॥

16. ஸவிகல்பக ஞானத்தின் வகைகள் சொல்லப்படுகின்றன. நான் இதை செய்யப்போகிறேன் என்ற விருத்தி ஸங்கல்பம். தூரத்தில் உள்ள உயரமுள்ள வஸ்துவைப் பார்த்து இது கட்டையா மனிதனு என்ற ஞானம் ஸம்சயம். ஒரு வஸ்துவை வேறு வஸ்துவாகத் தோற்றமளிக்கும் கயிறைப் பாம்பு என அறிவது ப்ராந்தி. முன் அனுபவித்த வஸ்துவை நினைப்பது ஸ்மிருதி. அவன்போல் இவனிருக்கிருன் என்று இவ்வாறு ஞானம் ஸாத்

ருச்ய நிச்சயம். இவ்விதம் சொன்னால் பொருத்தமா யிருக்கும் என்ற சம்பாவனம் ஞானம் ஊகம். தூரத் தில் இருக்கும் வஸ்துவைப் பார்த்து தீர்மான ஞான மில்லாமல் இது என்ன என்ற ஞானம் அனத்ய வஸாய ஜ்ஞானம். இவ்வாறு பல ஸவிகல்பக ஞானங்கள் உண்டு. வேறு பலவிதமான அனுபவங் கள் ஸவிகல்பகங்கள் சாஸ்திரக்காரர்களால் சொல் லப்படுகின்றன.

प्रत्यक्षमेकं चार्वाकाः कणादसुगतौ पुनः ।
अनुमानं च तच्चापि सांख्याः शब्दं च ते अपि ॥ १७ ॥
न्यायैकदेशिनोऽप्येवमुपमानंच केचन ।
अर्थापत्त्या सहैतानि चत्वार्याह प्रभाकरः ॥ १८ ॥
अभावषष्ठान्येतानि भाट्टा वेदान्तिनस्तथा ।
संभवैतिह्ययुक्तानि तानि पौराणिका जगुः ॥ १९ ॥

17—19. எந்த வஸ்து எவ்விதமிருக்கிறதோ அவ்விதமே அந்த வஸ்துவின் ஞானம் யதார்த்த ஞானம் என்றும் ப்ரமா என்றும் சொல்லப்படும். அதற்கு காரணம் பிரமாணம். ப்ரமை எவ்வளவு விதமோ அவ்வளவு விதம் பிரமாணம். பிரமாணம் ஒன்று என்னும் வாதத்தில் ஆரம்பித்து எட்டு ப்ர மாணம் என்று சொல்லும் வாதம் வரையில் பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன. மதவேற்றுமை கள் 17 முதல் 19 முடிய 3 ச்லோகங்களால் நிரூபிக் கப்படுகின்றன.

1. சாருவாகர்கள் இந்திரியங்களால் உண்டா கும் ஞானம் ப்ரத்தியக்ஷம். அது ஒன்றே யதார்த்த

ஞானம். ஆகவே ப்ரத்தியக்ஷமொன்றே ப்ரமாணம் என்று சொல்லுகிறார்கள்.

2. வைசேஷிக சாஸ்திரத்தின் ப்ரவர்த்தகரான கணாதரும் ஸுகதர் என்ற புத்தரும் ப்ரத்யக்ஷம் அனுமானம் என்ற இரண்டு ப்ரமாணங்களை ஒத்துக் கொள்ளுகிறார்கள். பல இடங்களில் சேர்ந்தே பார்க்கப்பட்ட வ்யாப்தி என்னும் சம்பந்தமுள்ள ஒரு ஹேதுவால் மற்றொரு வஸ்துவை (ஸாத்யத்தை) அறிவது அனுமானம்.

3. ஸாங்கியர்கள் ப்ரத்யக்ஷம் அனுமானம் இவ்விரண்டு ப்ரமாணங்களையும் சப்தப்ரமாணத்தையும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். உண்மையறிந்து ஏமாற்றவேண்டுமென்று எண்ணமில்லாத புருஷனால் சொல்லப்பட்ட சப்தம் சப்தப்ரமாணம். அதிலிருந்து உண்டாகும் ஞானம் சாப்தபோதம். நையாயிகர்களில் சிலரும் ப்ரத்யக்ஷம் அனுமானம் சப்தம் என்னும் மூன்று ப்ரமாணங்களை ஸ்வீகரிக்கிறார்கள்.

4. சில நையாயிகர்கள் கீழே சொன்ன மூன்று பிரமாணங்களுடன் உபமானம் என்ற ப்ரமாணத்தைச் சேர்த்து 4 பிரமாணங்கள் என்று கூறுகிறார்கள். 'பசுவின் உருவம்போலிருக்கும் பிராணி (गवय) கவயம் என்று சொல்லப்படும்' என்ற வாக்யத்தைக் கேட்டபின் பசுவிற்கு சமமான உருவங் கொண்ட பிராணியைப் பார்த்தவுடன் இந்தப் பிராணிதான் கவயபதத்தின் பொருள் என்ற அறிவு ஏற்படுகிறது. இது உபமிதி என்று சொல்

லப்படும். இதற்குக் காரணமான பசுவின் ஸாத்ருச்ய ஜ்ஞானம் உபமானப்ரமாணம் எனப்படும்.

5. ப்ரபாகரர் என்னும் மீமாம்ஸகர் அர்த்தாபத்தி என்னும் பிரமாணத்தோடு கீழே சொன்ன நான்கு ப்ரமாணங்களை ஒத்துக்கொள்ளுகிறார். சரீரம் புஷ்டியாகவேண்டுமானால் சாப்பிடவேண்டும். ஒருவன் பகலில் சாப்பிடவில்லை என்று நன்றாய்த் தெரிகிறது. ஆனால் புஷ்டியாய் இருக்கிறான். ராத்திரியில் சாப்பிடாவிட்டால் புஷ்டியிருக்க முடியாது. ஆகையால் ராத்திரி சாப்பிடுகிறான் என்று கல்பிப்பது அர்த்தாபத்தி ப்ரமாணம். புஷ்டியாயிருக்கிறான் என்னும் ஞானம் அர்த்தாபத்தி ப்ரமாணம். ராத்திரியில் சாப்பிட்டிருக்கவேண்டும் என்னும் ஞானம் அர்த்தாபத்திப்பிரமா. ஆகவே ப்ரபாகரர் ஐந்து பிரமாணங்களை ஒத்துக்கொள்ளுகிறார்.

6. குமரிலபட்டரை அனுஸரித்த மீமாம்ஸகர்களும் வேதாந்திகளும் அபாவம் என்னும் பிரமாணத்தோடு கீழே சொன்ன ஐந்து பிரமாணங்களைச் சேர்த்து ஆறு ப்ரமாணங்களை ஸ்வீகரிக்கிறார்கள். பூமியில் குடமில்லை என்று அறிந்துகொள்கிறோம். பூமியில் குடமிருப்பதாகத் தெரிந்தால் குடமில்லை என்ற ஞானம் உண்டாவதில்லை. இங்கு வெளிச்சமானவிடத்தில் குடமிருந்தால் குடமிருப்பதாக ஞானமுண்டாகும். குடமிருப்பதாகவோ ஞானமுண்டாகவில்லை. ஆகையால் பூமியில் குடமில்லையென்று அபாவஞானம் பூமியில் குடத்தின் அறிவில்லாமையால் உண்டாகிறது. अनुपलब्धिः उपलम्भाभावः என்பது அபாவத்தின் அறிவுக்கு சாதனமான ப்ர

மாணம். வேதாந்திகள் என்ற பதம் அத்வைத வேதாந்திகளேயே குறிக்கும். பழைய புஸ்தகங்களில் இதைக் காணலாம்.

7—8. கீழே சொன்ன ஆறு ப்ரமாணங்களோடு ஸம்பவம் ஐதிஹ்யம் என்று இரண்டு ப்ரமாணங்களைச் சேர்த்து எட்டு ப்ரமாணங்களை பௌராணிகர்கள் ஸ்வீகரிக்கிறார்கள். நூறில் ஐம்பது இருக்கிறது என்பது ஸம்பவ ப்ரமாணத்தால் அறியப்படுகிறது.

இந்த மரத்தில் யக்ஷம் இருக்கிறது என்பது யார் முதலில் ப்ரமாணமாகச் சொன்னார் என்று தெரியாமல் சொல் வழக்கத்தினால் ஐதிஹ்யத்தால் அறிகிறோம்.

द्रव्यं गुणस्तथा कर्म सामान्यं सविशेषकम् ।

समवायश्च काणादाः पदार्थान् षट् प्रचक्षते ॥ २० ॥

20. பிரமாண விஷயத்தில் பல சாஸ்திரக்காரர்களுக்கு அபிப்பிராயபேதம் இருப்பதுபோல் பிரமாணத்தால் அறியப்படும் வஸ்து தத்துவத்திலும் சாஸ்திரக்காரர்களுக்குள்ள அபிப்பிராய பேதங்கள் நிரூபிக்கப்படுகின்றன. கணாதர் என்ற மஹர்ஷியின் அபிப்பிராயத்தை அனுசரித்தவர்களான வைசேஷிகர்கள் பதார்த்தங்கள் ஆறு என்று சொல்லுகிறார்கள். த்ரவ்யம், குணம், கர்ம, ஸாமான்யம், விசேஷம், ஸமவாயம் என்று ஆறு பதார்த்தங்கள்

नव द्रव्याणिभूतानि दिक्कालात्ममनांसि च ।

21. ப்ருதிவீ, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம் என ஐந்து பூதங்கள், திசை காலம் ஆத்மா மனது என்று ஒன்பது விதமாக த்ரவ்யம் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.

चतुर्विंशतिरेव स्युः गुणाः शब्दादिपञ्चकम् ॥ २१ ॥
परिमाणं च संख्या च द्वौ संयोगविभागकौ ।
स्वभावतः पृथक्त्वंच गुरुत्वं द्रवता पुनः ॥ २२ ॥
परत्वं चापरत्वं च स्नेहः संस्कार इत्यपि ।
धीद्वेषसुखदुःखेच्छा धर्माधर्म प्रयत्नकाः ॥ २३ ॥

21—23 இரண்டாவது பதார்த்தமான குணம் 24 விதமானது. ரூபம், ரஸம், கந்தம், ஸ்பர்சம், சப்தம் இவை 5. சப்தம் முதலிய ஐந்து என்று சொல்லி யிருப்பது வேதாந்த வாஸனையால், ஈச்வரனிட மிருந்து ஆகாசம் முதலிய ஐந்து பதார்த்தங்கள் உண்டாகின்றன. ஆகாச குணம் சப்தம் வாயுவின் குணம் ஸ்பர்சம் தேஜஸ்ஸின் குணம் ரூபம் ஜலத் தின் குணம் ரஸம் ப்ருதிவியின் குணம் கந்தம் என் பது வேதாந்த ப்ரக்ரியை. வைசேஷிக சாஸ்திரத் தில் ரூபம் முதல்தான் கணக்குச் சொல்வது வழக் கம். 6 பரிமாணம் குட்டை, நீளம் முதலிய அளவு. 7 ஸங்கியை ஒன்று ஏகத்துவம், இரண்டு த்வித்துவம் முதலிய எண்கள். 8 ஸம்யோகம். 9 விபாகம் கையைத் தூக்கினல் கிரியையால் கையில் கையி ருந்த இடத்திற்கும் கைக்கும் விபாகம் என்ற குண முண்டாகிறது. அதனல் அந்த இடத்திற்கும் கைக் கும் இருந்த ஸம்யோகத்தின் நாசமுண்டாகிறது. 10 ப்ருதக்த்வம் இதைவிட இது தனிப்பட்டது என்று

வ்யவஹரிக்கப்படும் குணம். 11 குருத்வம் எடை. 12 த்ரவத்வம் ஜலம் முதலியவற்றில் இருக்கும் குணம். அதனுலேயே ஜலம் பள்ளப்பிரதேசத்திற்கு ப்ரவஹிக்கிறது. 13 பரத்வம். 14 அபரத்வம். தம்பி லக்ஷ்மணனைவிட தமையன் ராமன் பரன், ராமனைவிட லக்ஷ்மணன் அபரன் என்று வ்யவஹரிக்கப்படும் குணங்கள். 15 ஸ்நேஹம் ஜலத்தில் இருக்கிறது. அதனுல்தான் உண்டையாக்கப்படுகிறது. 16 ஸம்ஸ்காரம். 17 ஞானம். 18 த்வேஷம் 19 சுகம். 20 துக்கம். 21 ஆசை. 22 தர்மம்: சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட காரியத்தைச் செய்வதால் ஆத்மாவில் உண்டாகும் ப்ரத்யக்ஷமாகத் தெரியாத ஒரு குணம். 23 அதர்மம்: சாஸ்திரங்களால் செய்யக்கூடாதென்று சொல்லப்பட்ட காரியங்களைச் செய்வதால் ஆத்மாவிலுண்டாகும் அதீந்திரியமான ஒரு குணம், பாபம் என்றும் சொல்லப்படும். 24 ப்ரயத்னம் சரீரத்திலுண்டாகும் சேஷ்டைக்குக் காரணமாக ஆத்மாவிலுண்டாகும் குணம்.

संस्कारस्त्रिविधो वेग इष्वादेर्गतिकारणम् ।

दृष्टश्रुतानुभूतार्थस्मृतिहेतुश्च भावना ॥ २४ ॥

स्थितस्थापकता नाम पूर्ववत्स्थितिकारणम् ।

आकृष्टशाखाभूर्जादौ स्पष्टमेवोपलक्ष्यते ॥ २५ ॥

24—25. கீழே சொன்ன 24 குணங்களுள் ஸம்ஸ்காரம் என்னும் குணம், வேகம், பாவனை, ஸ்திதஸ்தாபகம் என்று மூன்று வகைப்படும். 1 பாணம் தன்னிடமிருக்கும் வேக குணத்தால் செல்லுகிறது.

பாணம் செல்லுவதற்குக் காரணமாக பாணத்திலுள்ளது வேகம் என்ற ஸம்ஸ்காரம். 2 முன்பு கண்ணுல் பார்க்கப்பட்டதையும் காதினுல் கேட்கப்பட்டதையும் அனுமானம் முதலிய ப்ரமாணங்களால் அனுபவிக்கப்பட்டதையும் மற்ருெரு ஸமயத்தில் நினைத்துக் கொள்ளுகிருேம். பூர்வானுபவத்தால் ஆத்மாவில் பாவனை என்னும் ஸம்ஸ்காரம் உண்டாகிறது. அந்த ஸம்ஸ்காரம் நினைவூட்டக்கூடிய பதார்த்தங்களைப் பார்ப்பது முதலிய உத்போதகம் சேரும்போது ஸ்மிருதியை உண்டுபண்ணுகிறது. 3 மரத்தின் கிளை உச்சியிலிருக்கிறது. அதை இழுக்கும்போது அது கீழ்ப் பிரதேசத்திற்கு வருகிறது. கிளையை விட்டுவிட்டால் கிளை தாஞகவே முன்பு தானிருந்த இடத்திலேயே இருக்கிறது. அவ்விதம் முன்போல் தானிருப்பதற்கு காரணம் கிளையிலிருக்கும ஸ்திதஸ்தாபகம் என்னும் ஸம்ஸ்காரமே. இது இழுக்கப்பட்ட பூர்ஜ மரக்கிளையில் நன்ருய்த் தெரிகிறது.

उत्क्षेपणमवक्षेपो गमनञ्च प्रसारणम् ।

आकुञ्चनमिति प्राहुः कर्म पञ्चविधं बुधाः ॥ २६ ॥

26. மூன்ருவது பதார்த்தம் கர்ம ஐந்துவிதம் 1 உத்க்ஷேபணம் ஊர்த்துவ பாகத்தில் செல்லுதல், 2 அவக்ஷேபணம் கீழே செல்லுதல், 3 கமனம் செல்லுதல், 4 ப்ரஸாரணம் சரீராவயவங்களை விரித்துக்கொள்ளுதல், 5 ஆகுஞ்சனம் சுருக்கிக் கொள்ளுதல் என்று ஐந்துவிதமென்று வித்வான்கள் சொல்லுகிருர்கள்.

सामान्यं द्विविधं प्रोक्तं परं चापरमेव च ।
परं सत्तैव सर्वत्र तदनुस्यूतवर्तनम् ॥ २७ ॥
द्रव्यत्वं गुणतेत्यादि सामान्यमपरं तथा ।

27—27½. நான்காவது பதார்த்தம் ஸாமான்யம். அநேக வஸ்துக்களிலிருக்கும் ஒரு பொருளுக்கு ஸாமான்யம் என்று பெயர். இதை ஜாதி என்றும் சொல்லுவார்கள். பல குடங்களில் கடத்துவம் என்ற ஒரே தர்மம் இருக்கிறது. அது ஸாமான்யம். ஸாமான்யம் பரம் என்றும் அபரம் என்றும் இரு வகைப்படும். ஸத்தா என்னும் ஜாதி, த்ரவ்யம் குணம் கர்ம என்ற மூன்றிலிருக்கிறது. இதுதான் அதிகமான ப்ரதேசத்திலிருக்கும் ஜாதி. ஆகையால் ஸத்தா பரஸாமான்யம். த்ரவ்யத்வம் ஒன்பது விதமான த்ரவ்யங்களிலுமிருக்கிறது. ஆகையால் ஸாமான்யம். ஆனுல் ஸத்தா ஜாதியைவிட குறைவான இடத்தில் இருப்பதால் அதாவது த்ரவ்யத்தில் மட்டும் இருப்பதால் அபரஸாமான்யம் எனப்படும். இவ்விதமே குணத்வம் கர்மத்வம் கடத்வம் ப்ருதிவீத்வம் முதலிய ஜாதிகள் அபரஸாமான்யம் என்று சொல்லப்படுகின்றன.

विशेषाः स्युरनन्तास्ते व्यावृत्तिज्ञानहेतवः ॥ २८ ॥

28. ஒரு வஸ்துவுக்கு வேறு வஸ்துவிடமிருந்து எப்படி பேதம் ஸித்திக்கிறது என்பதை ஆலோசித்தால் அந்தந்த வஸ்துக்களின் அவயவங்களின் பேதத்தால் ஸித்திக்கிறது. அதாவது இந்த வஸ்திரம் இந்த நூல்களில் இருக்கிறது. அந்த வஸ்திரம் வேறு நூல்களில் இருக்கிறது. ஆகையால் இந்த

நூல்களில் இருக்கும் வஸ்திரத்தைக் காட்டிலும் வேறு நூல்களிலிருக்கும் வஸ்திரம் வேறு என்று தெரிகிறது. இவ்விதம் அவயவமுள்ள வஸ்துக்களுக்கு தன் தன் அவயவத்தின் பேதத்தால் பேதம் ஸித்திக்கிறது. அவயவமில்லாத பரமாணுக்களுக்கு ஒன்றுக்கொன்று பேதம் ஸித்திப்பது எப்படி? ஒரு பரமாணுவை மற்ருெருபரமாணுவிடமிருந்துபிரித்து அறிவிக்கக்கூடிய அவயவமில்லை. ஆகையால் பரமாணுக்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விசேஷம் இருக்கிறது. ஒரு பரமாணுவில் இருக்கும் விசேஷம் வேறு பரமாணுவில் இராது. பரமாணுவை மற்ருெரு பரமாணுவிடமிருந்து வேருகப் பிரித்து அறிவிப்பது விசேஷம். பரமாணுக்கள் கணக்கிட முடியாததால் அவைகளில் தனித்தனியே இருக்கும் விசேஷங்களும் கணக்கிட முடியாதவைகள். இந்த பதார்த்தத்தை ஒத்துக்கொண்ட காரணத்தினலேயே வைசேஷிகர்கள் என்ற பெயரை வழங்குகிருர்கள்.

रूपस्येव घटे नित्यः संबन्धः समवायकः ।

28½. ஆருவது பதார்த்தம் ஸமவாயம். இது ஒரு ஸம்பந்தம். கைக்கும் புஸ்தகத்திற்கும் உள்ள ஸம்பந்தம் ஸம்யோகம். இது உண்டாகிறது. கையை எடுத்துவிட்டால் ஸம்யோகம் போய்விடும். அவ்விதமில்லாமல் நித்யமான ஸம்பந்தம் ஸமவாயம். அதாவது குடத்தில் கருப்பு ரூபம் இருக்கிறது. ரூபத்திற்கும் குடத்திற்குமுள்ள ஸம்பந்தம் ஸமவாயம். அது, கையை எடுத்துவிட்டால் கைக்கும் புஸ்தகத்திற்கும் உள்ள ஸம்யோக ஸம்பந்தம் நாசமடைவதுபோல

நாசமடையாது. குடத்தில் ரூபத்திற்குள்ள ஸம்பந்தம் போலுள்ளது ஸமவாயம்.

कालाकाशदिगात्मानो नित्याश्च विभवश्च ते ॥ २९ ॥

चतुर्विधाः परिच्छिन्नाः नित्याश्च परमाणवः ।

इति वैशेषिकमते पदार्थाः षट् प्रकीर्तिताः ॥ ३० ॥

29–30. முதல்வகையான த்ரவ்யங்களில் காலம், ஆகாசம், திசை, ஆத்மா என்னும் நாலு த்ரவ்யங்கள் உத்பத்தி நாசமில்லாதவை. எங்கும் வ்யாபித்தவை (विभु). ப்ருதிவி, ஜலம், தேஜஸ், வாயு என்ற நாலு த்ரவ்யங்களில் அவயவமுள்ளவைகள் அநித்யமானவை. அவயவமில்லாத மிகவும் சிறியதான நாலுவித பரமாணுக்கள் நித்யமானவை. இவ்வாறு வைசேஷிகர்களின் மதத்தில் ஆறு பதார்த்தங்கள் கூறப்பட்டுள்ளன. அபாவத்தை ஒத்துக்கொண்டாலும் பாவ பதார்த்தம் ஆறு என்று கூறியிருப்பதால் வைசேஷிகர்களை ஷட்பதார்த்த வாதிகள் என்று சொல்லுகிறார்கள்.

माया प्रधानमव्यक्तमविद्याऽज्ञानमक्षरम् ।

अव्याकृतं च प्रकृतिः तम इत्यभिधीयते ॥ ३१ ॥

31. ஸாங்க்யர்கள், ஈச்வரனை ஒத்துக்கொண்டவர்கள் ஸேச்வர ஸாங்க்யர்கள் என்றும் ஈச்வரனை ஒத்துக்கொள்ளாதவர்கள் நிரீச்வர ஸாங்க்யர்கள் என்றும் இருவகைப்படுவர்கள். ஸேச்வரஸாங்க்யர்களால் சொல்லிய பதார்த்தங்கள் பத்து ச்லோகங்களால் சொல்லப்படுகின்றன. உலகமாக பரிணமத்தை அடையும் மூலப்ரகிருதி ஒன்று இருக்கிறது.

அது மாயை, ப்ரதானம், அவ்யக்தம், அவித்யை, அஜ்ஞானம், அக்ஷரம், அவ்யாக்ருதம், ப்ரகிருதி, தமஸ் என்னும் சொற்களால் வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் புராணங்களிலும் சொல்லப்படுகிறது.

मायायां ब्रह्मचैतन्यप्रतिबिम्बानुषङ्गतः ।
महत्कालपुमांसः स्युः महत्तत्त्वादहंकृतिः ॥ ३२ ॥

32. மாயை என்று சொல்லப்படும் ப்ரகிருதியில் ஈச்வரஸ்வரூபமான சைதன்யம் பிரதிபலிக்கிறது. ஈச்வரப்பிரதிபிம்பம் ஸம்பந்தப்படுவதால் மாயையிலிருந்து மஹத், காலம், புருஷன் என மூன்று தத்வங்கள் உண்டாகின்றன. (நிரீச்வர ஸாங்க்ய மதத்தில் பிரகிருதி தானகவே மஹத் என்ற தத்வமாக பரிணமத்தை அடைகிறது என்று சொல்லுவார்கள்.) காலம் என்பது ஈச்வரனுடைய ப்ரகிருதி ஸம்பந்தத்தால் உண்டான ஒருவித அவஸ்தை. அதுதான் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களை வேலை செய்யும்படி செய்கிறது. புருஷன் என்பவன் ஜீவன். மஹத்தத்துவத்திலிருந்து அஹங்காரம் உண்டாகிறது.

तामसात्स्युरहंकारात् खानिलाग्न्यम्बुभूमयः ।
शब्दः स्पर्शश्च रूपं च रसो गन्धोऽप्यनुक्रमात् ॥ ३३ ॥
इन्द्रियाणां च विषया भूतानामपि ते गुणाः ।
देवाः सदाशिवश्चेशो रुद्रो विष्णुश्चतुर्मुखः ॥ ३४ ॥

33—34. ப்ரகிருதி, குணத்ரயஸ்வரூபமானதால் அதன் பரிணமமான அஹங்காரம், தாமஸம், ஸாத்விகம், ராஜஸம் என மூவகைப்படும். தமோ

குணம் மேலிட்ட தாமஸமான அஹங்காரத்திலிருந்து खं=ஆகாசம் अनिलः=வாயு अग्निः=தேஜஸ் अंबु =ஜலம் भूमिः=ப்ருதிவி என்று 5 பூதஸூக்ஷ்மங்கள் உண்டாகின்றன. ச்ரவணேந்திரியத்தால் அறியக்கூடியதான சப்தம் ஆகாசத்தின் குணம். த்வக் இந்திரியத்தால் அறியக்கூடிய ஸ்பர்சம் வாயுவின் குணம். கண்ணால் அறியப்படும் ரூபம் தேஜஸ்ஸின் குணம். நாக்கால் அறியப்படும் ரஸம் ஜலத்தின் குணம். மூக்கால் அறியப்படும் கந்தம் ப்ருதிவியின் குணமாகும். ஆகாசத்திற்கு ஸதாசிவனும், வாயுவுக்கு ஈசனும், தேஜஸ்ஸுக்கு ருத்ரனும், ஜலத்திற்கு விஷ்ணுவும், ப்ருதிவிக்கு ப்ரஹ்மாவும் அதிஷ்டாத்ரு தேவர்கள் ஆவார்கள்.

सात्त्विकात्स्यादहङ्कारादन्तःकरणधीन्द्रियम् ।
मनो बुद्धिरहङ्कारः चित्तं करणमान्तरम् ॥ ३५ ॥
संशयो निश्चयो गर्वः स्मरणं विषया अमी ।
चन्द्रः प्रजापतीरुद्रः क्षेत्रज्ञ इति देवताः ॥ ३६ ॥
श्रोत्रं त्वक्चक्षुषी जिह्वाघ्राणे ज्ञानेन्द्रियं विदुः ।
दिग्वातसूर्यवरुणनासत्या इति देवताः ॥ ३७ ॥

35—37. ஸத்வகுணம் மேலிட்ட ஸாத்விகமான அஹங்காரத்திலிருந்து அந்தக்கரணமும் (धीन्द्रियम्) அறிவையுண்டுபண்ணும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் உண்டாகின்றன. அந்தக்கரணம், மனஸ், புத்தி, அஹங்காரம் சித்தம் என நாலுவகைப்படும். ஸந்தேஹமான வ்ருத்தியையுடைய அந்தக்கரணம் மனஸ் என்றும், நிச்சயரூபமான வ்ருத்தியையுடைய

அந்தக்கரணம் புத்தி என்றும், கர்வம் என்னும் விருத்தியையுடைய அந்தக்கரணம் அஹங்ஹாரம் என்றும், ஸ்மரணம் என்னும் விருத்தியோடுகூடிய அந்தக்கரணம் சித்தம் என்றும் வ்யவஹாரத்தில் வழங்கப்படுகிறது. மனஸுக்குச் சந்திரனும் புத்திக்கு ப்ரஜாபதியும் அஹங்காரத்திற்கு ருத்ரனும் சித்தத்திற்கு க்ஷேத்ரஜ்ஞனும் அதிஷ்டான தேவர்கள் ஆவார்கள். காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்ற ஐந்தும் ஜ்ஞானேந்த்ரியங்களாகும். இவைகளுக்கு முறையே, திக்கு, காற்று, சூரியன், வருணன், அச்விநீதேவதைகள் இவர்கள் அதிஷ்டாந தேவதைகள் ஆவார்கள்.

राजसात्स्युरहङ्कारात् कर्मेन्द्रियसमीरणाः ।
कर्मेन्द्रियाणि वाक्पाणिः पादः पायुरुपस्थकम् ॥ ३८ ॥
वचनादानगमनविसर्गानन्दसंज्ञकाः ।
विषया देवतास्तेषां वह्नीन्द्रोपेन्द्रमृत्युकाः ॥ ३९ ॥
प्राणोऽपानः समानश्चोदानव्यानौ च वायवः ।

38—39½. ரஜோகுணம் மேலிட்டதான ராஜஸமான அஹங்காரத்திலிருந்து வேலை செய்யும் ஐந்து கர்மேந்திரியங்களும் சரீரத்திற்குள் ஸஞ்சரிக்கும் ஐந்துவித வாயுக்களும் உண்டாகின்றன. 1 பேசுவது என்ற காரியத்தையுடைய வாக்கு. 2 எடுப்பது என்ற காரியத்தையுடைய (கை) பாணி. 3 நடப்பது என்னும் காரியத்தையுடைய பாதம். 4 மலங்களை வெளியில் தள்ளுவது என்னும் காரியத்தையுடைய பாயு. 5 ஆநந்த காரியத்தையுடைய ப்ரஜனநேந்த்ரியம் என்று கர்மேந்திரியம் ஐந்துவகைப்படும்.

இந்தச்லோகத்திலுள்ள விஷயா: என்ற பதத்திற்கு இந்திரியத்தின் காரியங்கள் என்று அர்த்தம். வாக் இந்திரியத்திற்கு அக்நியும், பாணி இந்திரியத்திற்கு இந்திரனும். பாதத்திற்கு உபேந்திரனும், பாயுவிற்கு ம்ருத்யுவும், உபஸ்தேந்திரியத்திற்கு ப்ரஜாபதியும் அதிஷ்டான தேவர்கள் ஆவார்கள், இந்த ச்லோகத்தில் वह्नीन्द्रोपेन्द्रमृत्युका: என்ற பதத்தில் क என்ற பதத்தால் ப்ரஹ்மா சொல்லப்படுகிறார். சரீரத்திற்குள் ஸஞ்சரிக்கும் வாயு, ப்ராணன், அபானன், ஸமானன், உதானன், வ்யானன் என ஐந்து வகைப்படும்.

भूतैस्तु पञ्चभिः प्राणैः चतुर्दशभिरिन्द्रियैः ॥ ४० ॥

चतुर्विंशतितत्त्वानि सांख्यशास्त्रविदो विदुः ।

40—40½. பிரகிருதி, ஈச்வரன், மஹத், காலம், ஜீவன், அஹங்காரம் இவைகளை நீக்கி ஐந்து ப்ருதிவீ முதலிய பூதங்கள், ப்ராணன் முதலிய ஐந்து வாயுக்கள், ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள் ஐந்து அந்தக்கரணம் நாலு ஆக பதினலு இந்திரியங்கள் என்று 24 தத்துவங்களை ஸேச்வர ஸாங்க்ய சாஸ்திரத்தை அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

महान् कालः प्रधानं च मायाविद्ये च पूरुषः ॥ ४१ ॥

इति पौराणिकाः प्राहुः त्रिंशत्तत्त्वानि तैः सह ।

41—41½. பௌராணிகர்கள் கீழே சொன்ன 24 தத்துவங்களோடுகூட ஆறு தத்துவங்களைச் சேர்த்து 30 தத்துவங்களைச் சொல்லுகிறார்கள். 1 மஹத்: பிரகிருதியின் முதலாவது விகாரம். 2 காலம்

ஈச்வரனுடைய சேஷ்டை, 3 ப்ரதானம் : மூலப்ரகிருதி த்ரிகுணாத்மகமானது, 4 மாயை : தான் இருக்கும் புருஷனை மோஹப்படுத்தாமல் பிறரை மோஹப் படுத்துவது மாயை. மாயாவியின் காரியங்களில் பார்ப்பவர்களே மோஹமடைகிறார்கள். மாயாவி மோஹமடைவதில்லை. 5 அவித்யை : கயிற்றை கயிறு என்று அறியாமல் பாம்பு என்று மோஹிக்கி றான். ஆகவே அவித்யை அஜ்ஞானம். தானிருக்கும் புருஷனை மோஹிக்கச் செய்யும். 6 புருஷன் : ஈச்வர னுடைய அம்சனான ஜீவன் என்று ஆறு தத்வங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முன்சொன்ன மதத்தில் ப்ரகிருதிக்கே ப்ரதானம் மாயை அவித்யை என்கிற பெயருண்டு என்று கூறப்பட்டது.

विन्दुनादौ शक्तिशिवौ शान्तातीतौ ततः परम् ॥ ४२ ॥

षट्त्रिंशत्तत्त्वमित्युक्तं शैवागमविशारदैः ।

42—42½. சைவாகம சாஸ்திர நிபுணர்கள் கீழே சொன்ன 30 தத்துவங்களோடு 6 தத்வங்களைச் சேர்த்து 36 தத்துவங்கள் என்று சொல்லுகிறார்கள். 1 பிந்து : எல்லாவற்றிற்கும் அதிஷ்டானமான ஸதா சிவம் என்னும் தத்துவம். 2 நாதம் : ஸதாசிவமே ஓங்காரமாக ஆவிர்பாவத்தையடைகிறது. அது வேதநாதம். 3 சக்தி : எல்லாவற்றிற்கும் அதிஷ் டானமாகும் சாமர்த்தியம். 4 சிவ : முக்கண் முதலிய அவயவங்களோடு லீலா விக்ரஹத்தை யுடையவர். 5 சாந்த : சிவனுடைய ப்ரஸன்னமான மங்களகர மான ரூபம். 6 அதீதம் : கோரமான ரூபம். 'तस्यैते तनुवौ घोरान्या शिवान्या' என்று வேதத்தில் சொல்லிய

இரண்டு ரூபங்கள் சாந்தம் அதீதம் என்னும் தத்வங்கள். இந்த ஆறு தத்வங்களை அதிகமாக சைவர்கள் சொல்லுகிறார்கள்.

सर्वे विकल्पाः प्रागासन् बीजेऽङ्कुर इवात्मनि ॥ ४३ ॥

इच्छाज्ञानक्रियारूपमायया ते विजम्भिताः ।

43—43½. இவ்விதம் பல சாஸ்திரக்காரர்களால் பலவிதமாகக் கல்பிக்கப்பட்ட விகல்பங்களும் ஸ்ருஷ்டிக்குமுன் விதையில் முளை இருந்ததுபோல் ஆத்மஸ்வரூபத்தில் இருந்தன. இவைகள் ஞானம் இச்சை கிரியை என்னும் ஈச்வரனுடைய ஸஹஜ சக்தியான மாயையால் ப்ரகடனம் செய்யப்பட்டவை. பரமார்த்தமல்ல. மாயாமயமே. ஈச்வரனுடைய இச்சை முதலியவை மாயாவிருத்தியாகையால், விருத்தி மாயையின் பரிணமமாதலால், பரிணமமும் பரிணமிக்கும் வஸ்துவும் ஒன்றானதால், இச்சாஜ்ஞான க்ரியாரூபமான மாயை என்று சொல்லப்படுகிறது.

इच्छाज्ञानक्रियापूर्वाः यस्मात्सर्वाः प्रवृत्तयः ॥ ४४ ॥

सर्वेऽपि जन्तवस्तस्मादीश्वरा इति निश्चिताः ।

44—44½. வஸ்துவை அறிந்து அதில் இச்சையுண்டாகி அதற்குப் பிறகு ப்ரயத்னமுண்டாகி பிறகு எல்லோருடைய சேஷ்டைகள் உண்டாகின்றன. ஆகையால் இச்சை ஞானம் முதலிய மாயையின் பரிணமம் மாயாசபலமான ஈச்வரனிடமே இருக்குமானபடியால் எல்லாரும் ஈச்வரஸ்ரூபமே என்று தீர்மானிக்கப்பட்டார்கள். சரீரம் முதலிய

உபாதியின் ஸம்பந்தத்தைவிட ஸ்வபாவமாகவே சேதனர்கள் வெவ்வேறு என்பதற்கு ப்ரமாண மில்லை. ஆகவே ஆத்மா ஒன்றே. ஈச்வரனுடைய இச்சை முதலியவை மாயாமயம். அவைகளால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட உலகமும் மாயாமயம். பரமார்த்த மல்ல.

वीजाद्वृक्षस्तरोर्वीजं पारंपर्येण जायते ॥ ४५ ॥
इति शङ्कानिवृत्त्यर्थं योगिदृष्टान्तकीर्तनम् ।

45—45½. முளை விதையிலிருந்து உண்டாவது போல உலகம் ஈச்வரனிடமிருந்து உண்டானதென்று சொன்னதிலிருந்து வந்த, 'ஒரு விதையே காரணமாவதில்லை. விதையிலிருந்து முளை மரம் உண்டாகிறது. அந்த மரத்திலிருந்து வேறு விதை உண்டாகிறது. அதுபோலவே ஈச்வரனிடமிருந்து உலகமுண்டானல் மறுபடி உலகத்திலிருந்து வேறு ஈச்வரன் உண்டாகுமோ' என்ற ஸந்தேஹத்தை நிவர்த்தி செய்வதற்காக மஹாயோகீவ என்னும் பதத்தால் மஹாயோகிபோல் வேறு ஒன்றையும் அபேக்ஷிக்காமல் தன் இச்சாமாத்திரத்தாலேயே ஈச்வரன் உலகத்தை ஸ்ருஷ்டிக்கிருன் என்று திருஷ்டாந்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

विश्वामित्रादयः पूर्वे परिपक्वसमाधयः ॥ ४६ ॥
उपादानोपकरणप्रयोजनविवर्जिताः ।
स्वेच्छया ससृजुः स्वर्गं सर्वभोगोपबृंहितम् ॥ ४७ ॥
ईश्वरोऽनन्तशक्तित्वात् स्वतन्त्रोऽन्यानपेक्षकः ।
स्वेच्छामात्रेण सकलं सृजत्यवति हन्ति च ॥ ४८ ॥

46—48. குடத்தைக் குயவன் மண்ணுகிய உபாதானத்தையும் சக்கரம் ஜலம் முதலிய ஸஹகாரிகளேயும் வைத்துக்கொண்டு ஜலம் கொண்டு வரவேண்டிய ப்ரயோஜனத்தைக் குறித்து ஸ்ருஷ்டி செய்கிறுன். யோகாப்யாஸத்தில் மிகவும் தேர்ச்சியடைந்த விச்வாமித்திரர் முதலிய மஹாயோகிகள் உபாதானம் ஸஹகாரிகாரணம் ப்ரயோஜனம் இவைகள் இல்லாமலே ஸர்வ போகத்தால் ஸம்ருத்தமான ஸ்வர்க்கத்தை தன் இச்சாமாத்திரத்தால் ஸ்ருஷ்டி செய்தார்கள். அதுபோல ஈச்வரன் அளவற்ற சக்தியுள்ளவனுனபடியாலும் ஸ்வதந்திரனுனபடியாலும் பாஹ்யமான ஒருவித ஸாதனத்தையும் அபேக்ஷிக்காமலே தன் இச்சாமாத்திரத்தால் உலகத்தை உண்டு பண்ணுகிறுன், காப்பாற்றுகிறுன், ஸம்ஹாரம் செய்கிறுன்.

न कारकाणां व्यापारात् कर्ता स्यान्नित्य ईश्वरः ।

नापि प्रमाणव्यापाराद् ज्ञाताऽसौ स्वप्रकाशकः ॥ ४९ ॥

49. குயவன் குடத்தை உண்டுபண்ணக் காரணமான சக்ரம் முதலிய காரகங்களே வேலே செய்யும்படி செய்வதால் கர்த்தாவாகிறுன். அவ்வாறு ஈச்வரன் உலகத்திற்கு காரகங்களே வ்யாபாரம் செய்யும்படிச் செய்து கர்த்தாவாக ஆவதில்லே. மற்றொன்றை வியாபாரம் செய்யும்படி செய்வதே ஒரு விகாரம். விகாரம் உள்ள வஸ்து நித்யமாக இருக்க முடியாது. ஆகையால் அயஸ்காந்தம் ஒரு வ்யாபாரமும் செய்யாமலே தன்னுடைய ஸாங்நித்யத்தாலே தனக்கு சமீபத்திலுள்ள இரும்பில் சலனத்தை எப்படி உண்டுபண்ணுகிறதோ அப்படி

ஈச்வரனுடைய ஸந்நிதி மாத்ரத்தாலேயே காரகங்கள் வேலை செய்கின்றன. இவ்விதமாக நித்யனான ஈச்வரன் கர்த்தாவாகிறான். உலகத்தில் சக்ஷுஸ் முதலிய ப்ரமாணங்களின் ஸம்பந்தம் முதலிய வ்யாபாரத்தால் அறிவாளியாக ஆகிறான். அவ்விதம் ஈச்வரன் ப்ரமாண வ்யாபாரத்தால் ஜ்ஞாதாவாக இருப்பதில்லை. ஏனெனில் அவன் ஸ்வப்ரகாசன்.

ज्ञातृत्वमपि कर्तृत्वं स्वातन्त्र्यं तस्य केवलम् ।
या चेच्छाशक्तिवैचित्री साऽस्य स्वच्छन्दकारिता ॥ ५० ॥

50. ஆகையால் ஈச்வரனுக்கு ஜ்ஞாத்ருத்வமும் கர்த்ருத்வமும் வேறு வஸ்துவை அபேக்ஷிக்காமலிருப்பதே. கர்த்தாவாக இருப்பதற்காக ஈச்வரனிடத்தில் ஒரு விகாரமும் உண்டாவதில்லை. அவருடைய இச்சா சக்தியும் வேறு ஒன்றையும் அபேக்ஷிப்பதில்லை. தடங்கலில்லாமல் எவ்விஷயத்திலும் ப்ரவர்த்திக்கும்.

यया कर्तुमथाकर्तुम् अन्यथा कर्तुमर्हति ।
स्वतन्त्रामीश्वरेच्छां के परिच्छेत्तुमिहेशते ॥ ५१ ॥

51. யாதொரு இச்சையால் ஒரு காரியத்தைச் செய்வதற்கும் அல்லது செய்யாமலிருப்பதற்கும் அல்லது வேறாகச் செய்யவும் முடியுமோ அந்த ஸ்வதந்திரமான ஈச்வரேச்சையை எவர்கள் தான் அளவிட முடியும்? ஈச்வரேச்சை ஸ்வச்சந்தமாக ப்ரவர்த்திக்கும் என்று கருத்து.

श्रुतिश्च सोऽकामयतेतीच्छया सृष्टिमीशितुः ।
तस्मादात्मन आकाशः संभूत इति चाब्रवीत् ॥ ५२ ॥

52. सोऽकामयत என்று வேதம், ஈச்வரன் ஸ்ருஷ்டிக்கவேண்டுமென்று இச்சித்தான். பிறகு ஈச்வரனை ஆத்மாவினிடமிருந்து ஆகாசம் உண்டாயிற்று என்று சொல்லுகிறது. ஆகையால் ஈச்வரன் தன் இச்சையாலேயே உலகத்தை ஸ்ருஷ்டித்தான். அவன் உலகத்திற்கு விவர்த்தோபாதானன் கர்த்தாவாகவுமிருக்கிருன் என்று வேதமதம்.

निमित्तं चेद्भवेदस्य जगतः परमेश्वरः ।
विकारित्वं विनाशित्वं भवेदस्य कुलालवत् ॥ ५३ ॥

53. பரமாணுக்கள் உபாதானகாரணம், குடத்திற்கு குயவன்போல ஈச்வரன் நிமித்த காரணம் என்ற மதம் தூஷிக்கப்படுகிறது. தன்னிடம் கிரியை இருந்தால்தான் வேறு பதார்த்தத்தை விகாரம் அடையும்படி செய்ய முடியும். கிரியை இருந்தால் சரீரம் உள்ளவனுய் இருக்கவேண்டும். சரீரம் உள்ளவனுய் இருந்தால் அவச்யம் நாசம் ஏற்படும். சரீரமுள்ள குயவன் நசிப்பதைப் பார்க்கிறோம். ஆகையால் ஈச்வரன் கேவலம் நிமித்த காரணம் பரமார்த்தமாகவே கர்த்தா என்பது சரியல்ல.

बुद्ध्यादयो नवगुणाः नित्या एवेश्वरस्य चेत् ।
नित्येच्छावान् जगत्सृष्टौ प्रवर्तेतैव सर्वदा ॥ ५४ ॥

54. நையாயிகர்கள் குடம் முதலிய உண்டாகும் வஸ்துக்கள் கர்த்தாவினுல் உண்டாக்கப்படுவதால் உலகத்திற்கு ஒரு கர்த்தா வேண்டும். ஞானம் இச்சை ப்ரயத்னம் இல்லாமல் கர்த்தாவாக இருக்க முடியாது. அனுமான ப்ரமாணத்தால் ஸாதிக்கப்படும் ஞானம் இச்சை ப்ரயத்னம் நித்யமாக சித்

தித்தால் லாகவமிருப்பதால் ஈச்வரன் அனுமான ப்ரமாணத்தால் சித்திக்கும்போதே நித்ய ஜ்ஞானம் முதலிய குணங்களோடு சித்திக்கிருன். ஆகையால் நாசமடைவான் என்ற தோஷம் வராது என்று சொன்னாலும் ஈச்வரனுக்கு இச்சை நித்யமாக இருப்பதால் எப்பொழுதும் ஈச்வரன் உலகத்தை ஸ்ருஷ்டிக்க முன்படுவான். நையாயிகர்கள் ஈச்வரனிடம் எட்டு குணங்களை ஒத்துக்கொள்கிருர்கள். ஸங்கியா, பரிமாணம், ஸம்யோகம், விபாகம், ப்ருதக்த்வம் என்னும் ஐந்து குணங்கள் எல்லா த்ரவ்யத்திலும் இருப்பவை. ஞானம் இச்சை ப்ரயத்னம் ஆக எட்டு குணங்கள். संख्यादि पचकं बुद्धिरिच्छा यत्नोऽपि चेश्वरे। ஜீவாத்மாவிற்கு பதினுலு குணங்கள். ஸங்க்யா முதலிய ஐந்து குணங்கள் புத்தி ஸுகம் துக்கம் இச்சை த்வேஷம் ப்ரயத்னம் பாவனை (ஸம்ஸ்காரம்) தர்மம் அதர்மம் என்பவை அங்கீகரிக்கப்படுகின்றன. ஒன்பது குணங்கள் ஈச்வரனுக்கும் சொல்லவில்லை. ஜீவனுக்கும் சொல்லவில்லை. ஆனுல் ச்லோகத்தில் இருக்கும் குணம் என்னும் பதத்திற்கு விசேஷ குணம் என்று அர்த்தத்தைக் கொண்டாலும் ஞானம் முதலிய ஒன்பது விசேஷ குணங்கள் ஜீவனுக்கு ஒத்துக்கொள்ளப்படுகின்றன. ஞானம் இச்சை ப்ரயத்னம் இந்த மூன்றைத்தவிர வேறு விசேஷ குணங்கள் ஈச்வரனிடம் நையாயிகர்கள் சொல்வதில்லை. ஆத்மாவாகையாலே ஈச்வரனுக்கும் ஒன்பது விசேஷ குணங்கள் இருப்பதாக ஆபாதனம் செய்து ச்லோகத்தில் கூறப்பட்டிருக்கிறது. எப்படியாலும் நித்யஜ்ஞானம் நித்ய இச்சை நித்ய

ப்ரயத்னம் ஈச்வரனுக்கு ஒத்துக்கொண்டபடியால் எப்போதும் உலகத்தை ஸ்ருஷ்டிப்பதிலேயே ப்ரவர்த்திப்பான் என்ற தோஷம் சொல்லப்பட்டது பொருத்தமானதே.

प्रवृत्त्युपरमाभावात् संसारो नैव नश्यति ।
मोक्षोपदेशो व्यर्थः स्यात् आगमोऽपि निरर्थकः ॥ ५५ ॥

55. ஈச்வரனுக்கு உலகத்தை ஸ்ருஷ்டிக்கும் ப்ரவ்ருத்திக்கு ஓய்வு இல்லாமையால் ஸம்ஸாரம் ஒரு நாளும் நாசத்தையடையாது. ஆகையால் ஸம்ஸார நிவ்ருத்தி என்னும் மோக்ஷத்தை உபதேசிப்பதும் ப்ரயோஜனமற்றது. அதை ருஜுப்பிக்கும் வேதமும் உபயோகமற்றதாகி விடும்.

तस्मान्मायाविलासोऽयं जगत्कर्तृत्वमीशितुः ।
बन्धमोक्षोपदेशादिव्यवहारोऽपि मायया ॥ ५६ ॥

56. ஈச்வரனுக்கு பரமார்த்தமாக லோக கர்த்ருத்வத்தை ஒத்துக்கொண்டால் தோஷம் வருகிறபடியால் ஈச்வரனுக்கு கர்த்ருத்வம் மாயிகம், புருஷனுக்கு பந்தம் மாயாவிலாஸம். மோக்ஷம் அதன் உபதேசம் எல்லாம் மாயாவிலாஸமே.

इति श्रीदक्षिणामूर्तिस्तोत्रार्थप्रतिपादके ।
प्रबन्धे मानसोल्लासे द्वितीयोल्लाससंग्रहः ॥ ५७ ॥

57. ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் தாத்பர்யத்தை விளக்கும் மானஸோல்லாஸம் என்னும் க்ரந்தத்தில் (புஸ்தகத்தில்) இரண்டாவது உல்லாஸச் சுருக்கம் முற்றிற்று.

மூன்றாவது சுலோகத்தின்

அவதாரணிகை

सत्तास्फुरत्ते भावेषु कुत आगत्य संगते ।
बिम्बादिदर्पणन्यायादित्थं पृच्छन् प्रबोध्यते ॥ १ ॥

1. வஸ்துக்களுக்கு ஸத்தையும் ஸ்புரணமும் சொந்தமல்லவென்றால் முகம் என்ற பிம்பம் கண்ணாடியில் ப்ரதிபலனமடைவதுபோல் குடம் முதலிய வஸ்துக்களில் ஏதோ ஒரு வஸ்துவின் ஸத்தையும் ஸ்புரணமும் பிரதிபலிக்கிறதென்று கொள்ள வேண்டும். ஆகவே எந்த வஸ்துவிடமிருந்து ஸத்தையும் ஸ்புரணமும் குடம் முதலிய வஸ்துக்களில் ஸம்பந்தப் பட்டிருக்கிறது: அதாவது பிரதிபலன மடைந்து இருக்கிறது என்று கேள்வி கேட்கும் சிஷ்யன் மூன்றாவது சுலோகத்தால் போதிக்கப்படுகிறான்.

यस्यैव स्फुरणं सदात्मकमसत्कल्पार्थकं भासते
साक्षात्तत्त्वमसीति वेदवचसा यो बोधयत्याश्रितान् ।
यत्साक्षात्करणाद्भवेन्न पुनरावृत्तिर्भवाम्भोनिधौ
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ३ ॥

பதவுரை :—यस्यैव = யாதொரு சித்ஸ்வரூபத்தினுடைய स्फुरणं = ஸ்வரூபப்ரகாசம் सदात्मकं = ஸந்மாத்ர ஸ்வரூபம். असत्कल्पार्थकं = அஸத் போன்ற அநிர்வசநீய பதார்த்தாகாரமாக भासते = பிரகாசிக்கிறதோ यः = எவர் आश्रितान् = தன்னை உபாஸித்தவர்களை तत्त्वमसि इति = தத்துவமஸிஎன்ற वेदवचसा =

வேதவாக்யத்தால் साक्षात् ப்ர த்ய க்ஷ மா க (நேரில்) बोधयति = உபதேசிக்கிருரோ यत्साक्षात्करणात् = எவருடைய ஸாக்ஷாத்காரத்தால் भवाम्भोनिधौ = ஸம்ஸார சமுத்திரத்தில் पुनरावृत्तिः :=மறுபடியும் திரும்புதல் न भवेत् = உன்டாகாதோ तस्मै + नमः = அப்பேர்பட்ட குருமூர்த்தி ஸ்வரூபமான தக்ஷிணுமூர்த்திக்கு நமஸ்காரம்.

முயல் கொம்பு என்பது அஸத் துச்சம் என்று சாஸ்திரஜ்ஞர்கள் சொல்லுகிருர்கள். அது ஒரு காரியத்தையும் செய்வதில்லை. குடம் முதலிய ப்ரபஞ்சம் காரியங்களைச் செய்வதால் அஸத் அல்ல. ஆனுல் ஸத்து என்றும் சொல்லமுடியாது. ஆத்மஜ்ஞானத்தால் நிவர்த்தி அடைகிறது. முக்காலத்திலும் பாதிக்கப்படாததே ஸத்து என்று சொல்லப்படும். ஆகவே ஸத்தாக இல்லாமலும் அஸத்தாக இல்லாமலும் ஸதஸத்விலக்ஷணமாய் அநிர்வசனீயமாயிருக்கும் உலகத்தில் தோன்றும் ப்ரகாசமும் ஸத்தும் எந்த பரமாத்மாவின் ஸத்ரூபமான ஸ்புரணந்தானே, எவர் தன்னை அண்டி உபாஸிப்பவர்களுக்கு தத்வமஸி என்னும் மஹாவாக்கியத்தால் தத்வத்தை ப்ரத்யக்ஷமாக போதிக்கிருரோ, எவருடைய ஸாக்ஷாத்காரத்தை அடைந்தால் மறுபடியும் ஸம்ஸார ஸமுத்ரத்தில் திரும்புவது கிடையாதோ, அந்த குருமூர்த்தி ஸ்வரூபமான ஸ்ரீ தக்ஷிணுமூர்த்திக்கு நமஸ்காரம்.

इदमत्राकूतम् இந்த ச்லோகத்தின் தாத்பரியம் விவரிக்கப்படுகிறது.

असत्कल्पेषु भावेषु जडेषु क्षणनाशिषु ।
अस्तित्वं च प्रकाशत्वं नित्यात्संक्रामतीश्वरात् ॥ २ ॥

2. ஸத்தாக இல்லாமலும் அஸத்தாகவுமில்லாமலும் அஸத்துபோலிருக்கும் அதிசீக்கிரம் நாசத்தை யடையும் ஜடமான வஸ்துக்களில் ஸத்தையும் ப்ரகாசத்வமும் நித்யமாயும் ஸத்ரூபமாயும் ப்ரகாசரூபமாயுமுள்ள ஈச்வரனிடமிருந்து வருகிறது: ஸம்பந்தப்படுகிறது.

आत्मसत्त्वैव सत्तैषां भावानां न ततोऽधिका ।
तथैव स्फुरणं चैषां नात्मस्फुरणतोऽधिकम् ॥ ३ ॥

3. ஈச்வரனிடமிருந்து அஸ்தித்வமும் ப்ரகாசத்வமும் உலகத்திற்கு ஸங்க்ரமிக்கிறது என்ற விஷயம் ஐந்து ச்லோகங்களால் விவரிக்கப்படுகிறது.

குடம் முதலிய வஸ்துக்களில் ஸத்தை என்பது ஆத்ம ஸத்தையே. அதைத்தவிற வேறு ஸத்தை இல்லை. குடத்தில் ஸ்புரணம் என்பது ஆத்ம ஸ்புரணமே, அதை விட வேறு ஸ்புரணமில்லை.

கயிற்றை ஸர்ப்பம் என்று நினைக்கிறோம், பயப்படுகிறோம், அங்கே ஸத்யமான ஸர்ப்பம் இல்லை. சற்று நேரத்திற்கெல்லாம் ஒருவன் கயிற்றை புரட்டிப்போட்டு கயிறு என்று காட்டினுல் ஸர்ப்பம் போய்விடுகிறது. ஆகவே ஸர்ப்பம் அங்கு ஸத்தில்லை. ப்ரத்யக்ஷமாகத்தோன்றுவதாலும் பயத்தை உண்டுபண்ணுவதாலும் அஸத்துமில்லை. அநிர்வசனீயமான ஸர்ப்பம் அது. கயிறே ஸர்ப்பமாய்த் தோன்றுகிறது. சாஸ்திரஜ்ஞர்கள் கயிற்றில் ஸர்ப்

பம் தாதாம்ய ஸம்பந்தத்தால் அத்யஸ்தம் என்று கயிற்றை அதிஷ்டானம் என்றும் சொல்லுகிறுர்கள். அந்த ஸர்ப்பத்தின் ஸ்வரூபம் கயிறுதான். ஆகையால் அதிஷ்டானத்தின் ஸத்தையே அத்யஸ்தத்தின் ஸத்தை, தனியாக ஸத்தை யில்லை. கயிற்றின் ப்ரகாசமே ஸர்ப்பத்தின் ப்ரகாசம். ஸர்ப்பத்திற்குத் தனியாக ப்ரகாசம் கிடையாது. அதுபோல் ப்ரகாசமான ஆத்ம ஸ்வரூபத்தில் ப்ரபஞ்சம் அத்யஸ்தமான படியால் அதிஷ்டானமான ஆத்மாவின் ஸத்தையே ப்ரபஞ்சத்திற்கு ஸத்தை. வேறு ஸத்தை இல்லை. அதிஷ்டானமான ஆத்ம ஸ்புரணமே ப்ரபஞ்சத்தின் ஸ்புரணம். வேறு ஸ்புரணமில்லை. ப்ரபஞ்சத்தின் உண்மையான ஸ்வரூபம் ஸ்வப்பிரகாச ஸத்ரூபமான ஆத்மாவே என்பது கருத்து.

ज्ञानानि बहुरूपाणि तेषां च विषया अपि ।
अहंकारेऽनुषज्यन्ते सूत्रे मणिगणा इव ॥ ४ ॥

4. மணி மாலையில் மணிகள் கயிற்றில் தொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுபோலவே இது குடம் இது வஸ்திரம் என்று உண்டாகும் மனோவிருத்தி என்னும் பலவித ஞானங்களும் அவைகளில் தோன்றும் குடம் முதலிய வஸ்துக்களும் அஹம் நான் என்று ப்ரகாசிக்கும் ஆத்ம ப்ரகாசத்திலே தொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ச்லோகத்திலுள்ள அஹங்கார பதத்திற்கு அஹம் என்று ப்ரகாசிக்கும் ஆத்மா என்று பொருள் கொள்ளவேண்டும்.

प्रकाशाभिन्नमेवैतद्विश्वं सर्वस्य भासते ।
लहरी बुद्बुदादीनां सलिलान्न पृथक्स्थितिः ॥ ५ ॥

5. ஜலத்திலிருக்கும் குமுழிகள் (லஹரி:ப்ரவாஹம்) ஜலத்தோடு ப்ரகாசிக்கின்றன. ஜலஸ்வரூபமில்லாமல் தனியாக அவைகள் ப்ரகாசிப்பதில்லை. ஜலத்தின் ஸ்திதியே ஸத்தையே குமுழிகளின் ஸத்தை, வேறு ஸத்தையில்லை. எல்லா மனிதருக்கும் எல்லா ப்ரபஞ்முசம் ப்ரகாசத்தோடு (அதாவது ப்ரகாசமாக)த் தோன்றுகிறது. ஆகையால் ப்ரகாச ஸத்தையைக் காட்டிலும் வேறு ஸத்தை உலகத்திற்கில்லை.

जानामीत्येव यज्ज्ञानं भावानाश्रित्य वर्तते ।
ज्ञानं मयेति तत्पश्चाद्विश्राम्यत्यन्तरात्मनि ॥ ६ ॥

6. ग्रामं गच्छति என்று சொல்லுமிடத்தில் கமனக்ரியையால் க்ராமம் வ்யாபிக்கப்படுகிறது என்று சாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்லுகிறார்கள். நான் குடத்தையறிகிறேன் என்று சொல்லுமிடத்தில் ஞானம் என்ற க்ரியையால் குடம் வ்யாபிக்கப்படுகிறது. अहं घटं जानामि என்ற வ்யவஹாரத்தில் குடத்தை வ்யாபித்து ஞானமிருப்பதாகத் தெரிகிறது. அந்த ஞானமே मया ज्ञातः घटः என்றால் குடம் அறியப்பட்டது என்ற வ்யவஹாரத்தில் நான் என்று சொல்லப்படும் ஆத்ம ப்ரகாசத்தில் பர்யவஸானத்தை (முடிவை) அடைகிறது. ஆகவே குடம் முதலிய வஸ்துவின் ப்ரகாசம் ஆத்ம ப்ரகாசமே.

घटादिकानि कार्याणि विश्राम्यन्ति मृदादिषु ।
विश्वं प्रकाशाभिन्नत्वाद्विश्राम्येत्परमेश्वरे ॥ ७ ॥

7. குடம் முதலிய மண்ணின் காரியங்கள் தன் காரணமான ம்ருத் ஸ்வரூபத்தில் பர்யவஸானத்தை

அடைவதுபோலஉலகமும் ஆத்மப்ரகாசத்தில்பர்யவ ஸானத்தை அடைவதால் ஆத்ம ப்ரகாசமும் ஈச்வரஸ் ரூபமும் ஒன்ருகையால் 'ப்ரமேச்வர ஸ்வரூபத்தில் பர்யவஸானத்தை (முடிவை) அடைகிறது. ஆகை யால் கண்ணுடியில் முகத்திலிருந்து ப்ரதிபிம்பம் வந்ததுபோல வஸ்துக்களில் ஸத்தை வரவில்லை. ஆத்ம ஸத்தையே உலகஸத்தை என்ற தாத்பரியங் கொண்டு नित्यात् संक्रामतीश्वरात् என்று சொல்லப் பட்டது. இந்த ச்லோகத்தில் பூர்வார்த்தம் த்ருஷ்டாந்தத்தைச் சொல்லுவதால் அவ்விடம் यथा என்ற பதத்தையும் உத்தரார்த்தம் தார்ஷ்டாந்தி கத்தைச் சொல்லுவதால் அவ்விடம் तथा என்றும் சேர்த்துக்கொண்டு வ்யாக்யானம் செய்யவேண்டும்.

स्वगतेनैव कालिम्ना दर्पणं मलिनं यथा ।

अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः ॥ ८ ॥

8. இதுவரையில் यस्यैव स्फुरणं என்னும் முதல் பாதத்தின் தாத்பரியம் விவரிக்கப்பட்டது. இனி तत्त्वमसि என்னும் மஹாவாக்யத்தின் அர்த்தத்தை நிஷ்கர்ஷமாக நிரூபணம் பண்ணுவதால் இரண் டாவது பாதத்தின் தாத்பர்யம் விவரிக்கப்படுகிறது. ஆத்ம ப்ரகாசமே ஈச்வர ஸ்வரூபம் என்ருல் உலகத் திலுள்ளவர்களுக்கு ஏன் அப்படித் தோன்றவில்லை என்ற கேள்விக்கு பதில் சொல்லப்படுகிறது, கண்ணுடியில் இருக்கும் கருப்பான அழுக்கினுல் கண்ணுடி மலினமாகிறது. அதனுடைய ஸ்வச்சத் தன்மை மறைந்து விடுகிறது. அதுபோல ஆத்ம ஸ்வரூப ஜ்ஞானத்திலுள்ள அஜ்ஞானத்தால் ஆத்ம

ஸ்வரூபம் மறைந்திருக்கிறது. அந்த அஜ்ஞான மறைவினல் ஜனங்கள் ஆத்ம ஸ்வரூபத்தைப்பற்றின மோஹத்தை அடைந்திருக்கிருர்கள்.

घटाकाशो महाकाशो घटोपाधिकृतो यथा ।
देहोपाधिकृतो भेदः जीवात्मपरमात्मनोः ॥ ९ ॥

9. ஆகாசம் எங்கும் வ்யாபித்த ஒரே வஸ்து. ஒரு குடத்திலிருக்கும் ஆகாசத்தை கடாகாசம் என்றும் குடத்தினளவில்லாத வெளி ஆகாசத்தை மஹாகாசமென்றும் சொல்லுகிருர்கள். ஒரு ஆகாசத்திற்கு கடாகாசம் மஹாகாசம் என்ற பேதம் ஸ்வபாவமாக இல்லே; ஆனல் குடம் என்னும் உபாதியால் ஏற்படுகிறது. அதுபோல தேஹத்தோடு கூடின ஆத்ம ஸ்வரூபம் ஜீவன் என்றும் அப்படியில்லாத ஆத்ம ஸ்வரூபம் பரமாத்மா என்றும் பேதம் ஸ்வபாவத்தால் இல்லாதபோனலும் தேஹம் முதலிய உபாதியினல் ஏற்படுகிறது.

तत्त्वमस्यादिवाक्यैस्तु तयोरैक्यं प्रदर्श्यते ।
सोऽयं पुरुष इत्युक्ते पुमानेको हि बुध्यते ॥ १० ॥

10. सोऽयं पुरुषः என்ற வாக்யத்தால் ஒரே புருஷ ஸ்வரூபம் போதிக்கப்படுகிறதுபோல தேஹம் முதலிய உபாதியால் வேறு வேருகத் தோன்றும் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் ஐக்யம்: அபேதம் तत्त्वमसि, अहं ब्रह्मास्मि முதலிய மஹாவாக்யங்களால் போதிக்கப்படுகிறது.

यज्जगत्कारणं तत्त्वं तत्पदार्थः स उच्यते ।
देहादिभिः परिच्छिन्नो जीवस्तु त्वंपदाभिधः ॥ ११ ॥

11. தத்த்வமஸி என்ற வாக்கியத்தின் அர்த்தத்தை நிரூபணம் செய்வதற்காக முதலில் அந்த வாக்யத்திலிருக்கும் **தத்** என்ற பதத்திற்கும் **த்வம்** என்ற பதத்திற்கும் வாச்யார்த்தம் இந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. இந்த மஹாவாக்யோபதேசத்தின் ஆரம்பத்தில் உலகத்தை **ஸத்** உண்டு பண்ணினதாகக் கூறப்பட்டிருப்பதால் தத் என்ற பதத்திற்கு உலகத்தின் காரணமான தத்வம் வாச்யமான அர்த்தம். த்வம் பதத்திற்கு ச்வேதகேதுவைப்பார்த்து உபதேசம் செய்வதால் அந்த வாக்யத்தால் போதிக்கப்படும் ஜீவன் அர்த்தம்—அதாவது தேஹம் முதலியவற்ருல் பரிச்சின்னனுன சித்ஸ்வரூபம் அர்த்தம்.

तद्देशकालावस्थादौ दृष्टः स इति कथ्यते ।
तथैतद्देशकालादौ दृष्टोऽयमिति कीर्त्यते ॥ १२ ॥

12. மஹாவாக்யத்திற்கு திருஷ்டாந்தமான வாக்யம் ஸோயம் தேவதத்த: என்ற வாக்யம். அதன் வாக்யார்த்தத்தை நிரூபித்துக் காண்பிப்பதற்காக அந்த வாக்யத்திலிருக்கும் தத் பதத்திற்கும் அயம் என்னும் பதத்திற்கும் வாச்யார்த்தம் சொல்லப்படுகிறது. வெகு காலத்திற்கு முன் காசியில் சரீர புஷ்டியோடு கூடிய தேவதத்தனைப் பார்த்து பிறகு பலநாட்கள் கழித்து சிதம்பரத்தில் சரீரம் தளர்ச்சியடைந்த தேவதத்தனைப் பார்க்கிருேம். அடையாளங்களைக் கொண்டு 10 வருஷங்கள் முன் காசியில் புஷ்டியாயிருந்தவனே இப்போது சரீரம் மெலிந்து சிதம்பரவாஸியாக இருக்கிருன் என்று सोयं देवदत्तः என்று சொல்லுகிருேம். இவ்விடத்தில்

स: என்ற பதத்திற்கு காசிதேசத்தில் 10 வருஷங்கள் முன்னிருந்த புஷ்டியுள்ள தேவதத்தன் என்பது வாச்யார்த்தம். अयं என்ற பதத்திற்கு இப்போது மெலிந்து சிதம்பரத்தில் இருக்கும் தேவதத்தன் என்பது வாச்யார்த்தமாகும்.

मुख्यं तदेतद्वैशिष्ट्य विसृज्य पदयोर्द्वयोः ।
पुंमात्रं लक्षयत्येकं यथा सोऽयं पुमान्वचः ॥ १३ ॥

13. காசி தேசம் அந்த காலம் அந்த அவஸ்தை முதலியவைகளோடு விசிஷ்டனான தேவதத்தனுக்கும் சிதம்பரம் இந்தக்காலம் இந்த அவஸ்தை முதலியவைகளோடு கூடின தேவதத்தனுக்கும் அபேதம் ஸம்பவிக்காது. ஆகையால் விசிஷ்ட பதார்த்தங்களின் அபேதத்தை போதிப்பதில் வாக்யத்தை சொல்லுபவருக்கு தாத்பர்யமிருக்காது என்று அறிந்து கொள்ளுகிறோம். பிறகு தத்பதவாச்யமான தத்தேசகாலாவஸ்தா ஸம்பந்தத்தை (वैशिष्ट्यं) யும் अयं பத வாச்யமான ஏதத் தேசகாலாவஸ்தா (वैशिष्ट्यं) ஸம்பந்தத்தையும் தள்ளி தத் அயம் என்ற இரண்டு பதங்களாலும் லக்ஷணாவ்ருத்தியால் விசேஷ்யமான தேவதத்த ஸ்வரூபம் ஒன்றையே सोऽयं पुमान् என்னும் வாக்யம் போதிக்கிறது.

प्रत्यक्त्वं च परोक्त्वं च त्यक्त्वा तत्त्वमसीति वाक् ।
तथैव लक्षयत्यैक्यं जीवात्मपरमात्मनोः ॥ १४ ॥

14. தத்த்வமஸி என்ற விடத்திலும் தத்பத வாச்யார்த்தமான ஜகத் காரணத்வம் ஸர்வஜ்ஞத்வம் பரோக்ஷத்வம் முதலிய குண விசிஷ்ட ஸ்வரூபத்திற்

கும் த்வம் என்ற பத வாச்யார்த்தமான தேஹபரிச்சின்னத்வம் சிறிய அறிவு முதலிய குண விசிஷ்ட ஜீவனுக்கும் அபேதம் விருத்தம். ஆகையால் அதை போதிப்பதில் இந்த வாக்யத்திற்கு தாத்பரியமில்லை என்று தெரிந்து கொள்ளுகிறோம். பிறகு தத்பத வாச்யார்த்தமான பராக்த்வம் முதலிய விசேஷணங்களையும் த்வம் பதவாச்யார்த்த விசேஷணமான தேஹ பரிச்சின்னத்வம் சிற்றறிவு முதலிய விசேஷணங்களையும் விட்டு லக்ஷணு வ்ருத்தியால் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் ஐக்யம் என்று சொல்லப்படும் சுத்தமான சித் ஸ்வரூபத்தை தத்த்வமஸி என்னும் மஹாவாக்யம் போதிக்கிறது.

सामानाधिकरण्याख्यः संबन्धः पदयोरिव ।

विशेषणविशेष्यत्व संबन्धः स्यात्पदार्थयोः ॥ १५ ॥

15. தத்த்வமஸி என்ற வாக்யத்திலிருக்கும் **தத் த்வம்** என்ற இரண்டு பதங்களுக்கும் ஸாமானுதிகரண்யம் என்று சொல்லப்படும் சம்பந்தமிருக்கிறது. ஒரு வஸ்துவை போதிக்கும் இரண்டு பதங்களை ஸமானுதிகரண பதங்கள் என்று சொல்லுகிருர்கள். த்வம் பதத்தின் அர்த்தம் ஜீவன் விசேஷ்யமாகவும் அதில் தத் பதத்தின் அர்த்தமான ஈச்வரன் அபேத சம்பந்தத்தால் விசேஷணமாயும் தோன்றுகிருர். ஆகையால் தத்பதார்த்தத்திற்கும் த்வம் பதார்த்தத்திற்கும் விசேஷண விசேஷ்யத்வம் என்ற சம்பந்தமிருக்கிறது.

लक्ष्यलक्षणसंयोगात् वाक्यमैक्यं च बोधयेत् ।

15½. தத் பத வாச்யார்த்தத்திற்கும் த்வம் பத வாச்யார்த்தத்திற்கும் அபேதம் விருத்தமாகையால் ஸமானாதிகரண தத் பதமும் த்வம் பதமும் வாச்யார்த்தத்தின் ஏக தேசத்தை விட்டு லக்ஷணையால் விசேஷ்யமான சித் ஸ்வரூபத்தை போதிக்கிறது. ச்லோகத்தில் லக்ஷ்ய லக்ஷண ஸம்யோக பதத்திற்கு லக்ஷ்ய லக்ஷண ஸம்பந்தம் என்று அர்த்தம். தத் பதமும் த்வம் பதமும் லக்ஷகம். (லக்ஷணம்) சுத்தமான சைதன்யம் லக்ஷ்யம் (லக்ஷணையால் போதிக்கப்படுகிறது.) இந்த லக்ஷ்ய லக்ஷண ஸம்பந்தத்தால் ஐக்யத்தை போதிக்கிறது என்பதற்கு லக்ஷணாவ்ருத்தியால் ஐக்யம் போதிக்கப்படுகிறது என்று தாத்பர்யம்.

गङ्गायां घोष इतिवन्न जहल्लक्षणा भवेत् ॥ १६ ॥
नाजहल्लक्षणापि स्यात् श्वेतो धावति वाक्यवत् ।
तत्त्वमस्यादिवाक्यानां लक्षणा भागलक्षणा ॥ १७ ॥
सोऽयं पुरुष इत्यादिवाक्यानामिव कीर्तिता ।

16—17½. லக்ஷணா, ஜஹல்லக்ஷணா அஜஹல் லக்ஷணா ஜஹதஜஹல்லக்ஷணா என்று மூன்று வகைப்படும். பதத்தின் வாச்யார்த்தம் முழுவதையும் தள்ளி அதோடு ஸம்பந்தப்பட்ட வஸ்துவை மாத்திரம் போதிக்கும் லக்ஷணா ஜஹல்லக்ஷணா எனப்படும். கங்காயாம் கோஷ:(घोष:)என்ற வாக்கியத்தில் கங்கா பதம் லக்ஷணையால் தீரத்தை (கரையை) போதிக்கிறது. கங்காபதத்திற்கு வாச்யமான அர்த்தம் கங்கா ப்ரவாஹம். அதில் घोष மென்று சொல்லப்படும் இடைச்சேரி இருக்கமுடியாது. இரண்டிற்கும்

ஸம்பந்தம் பொருத்தமில்லை. ஆகையால் கங்காபதம் லக்ஷணையால் ப்ரவாஹம் என்னும் வாச்யார்த்தத்தைத் தள்ளி ப்ரவாஹத்தை ஒட்டிய தீரத்தை போதிக்கிறது. கங்கா பதத்திற்கு தீரத்தில் ஜஹல் லக்ஷணை என்று சொல்லுகிருர்கள். அவ்விதம் தத்த்வமஸி என்ற விடத்தில் தத்பதத்திற்கு ஜஹல்லக்ஷணை என்று சொல்ல முடியாது. ஏனென்ருல் தத்பத வாச்யார்த்தம் முழுவதையும் தள்ளவில்லை. விசேஷ்யமான சைதன்யம் போதிக்கப்படுகிறது. பதத்தின் வாச்யார்த்தத்தை விடாமல் அத்துடன் கலந்த ஒரு வஸ்துவை போதிக்கும் லக்ஷணை—அஜஹல் லக்ஷணை. ச்வேதோ தாவதி என்ற வாக்யத்தில் ச்வேத பதத்தால் லக்ஷணையால் வெள்ளை நிறமுடையவன் என்று அர்த்தம் போதிக்கப்படுகிறது. ச்வேத பதத்திற்கு வெள்ளை நிறம் வாச்யார்த்தம்; நிறம் ஓடாது. ஆகையால் வெள்ளை நிறமுடையவன் என்று பொருள் கொண்டிருக்கிறோம். இங்கு ச்வேத பத வாச்யார்த்தமான நிறத்தை விடாமலே அதையுடைய மனிதன் அர்த்தமானபடியால் ச்வேத பதத்திற்கு வெள்ளை நிறமுடையவன் என்ற அர்த்தத்தில் அஜஹல் லக்ஷணை என்று சொல்லப்படுகிறது. அவ்விதம் தத் பதத்திற்கு அஜஹல்லக்ஷணை என்று சொல்லமுடியாது. தத்பத வாச்யார்த்தம் முழுவதையும் தள்ளாமலிருந்தால் விரோத பரிஹாரம் ஏற்படாது. ஆகையால் அஜஹல்லக்ஷணை இல்லை. ஆகவே सोऽयं पुरुषः என்ற வாக்யத்தில் தத்பதத்தின் வாச்யமான ஒரு பாகத்தை (விசேஷணத்தை) அந்த தேசகாலாவஸ்தை முதலியவைகளை விட்டு மற்றொரு பாகமான விசேஷ்யமான

தேவதத்தஸ்வரூபத்தை போதிப்பதால் ஜஹத ஜ ஹல்லக்ஷணை பாகலக்ஷணை என்று சொல்லுவது போல தத்த்வமஸி என்ற வாக்யத்திலும் தத்த்வம் பதத்திற்கு வாச்யமான விசேஷணங்களை விட்டு விசேஷ்யமான சைதன்ய ஸ்வரூபத்தை போதிப்ப தால் பாக லக்ஷணை. ஜஹதஜஹல்லக்ஷணை என்று பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கிறது.

भिन्नवृत्तिनिमित्तानां शब्दानामेकवस्तुनि ॥ १८ ॥

प्रवृत्तिस्तु समानाधिकरणत्वमिहोच्यते ।

18—18½. தத்த்வமஸி என்னும் வாக்யத்திலிருக் கும் தத் பதத்திற்கும் த்வம் பதத்திற்கும் ஸாமா னுதிகரண்யம் என்ற ஸம்பந்த மிருக்கிறதென்று சொல்லப்பட்டது. உலகத்தில் ஒரே இடத்தில் இருக்கும் இரண்டு வஸ்துக்களை ஸமானுதிகரணம் என்றும் சொல்லுகிறோம். இவ்விதம் தத் பதத்திற் கும் த்வம் பதத்திற்கும் ஸாமானுதி கரண்யம் என்று சொன்னால் எல்லா பதங்களும் ஆகாசத்திலேயே இருப்பதால் ஸமானுதி கரணமாக இல்லாத பதங் களே இல்லையென்று சொல்லும்படி நேரும். ஆகை யால் பதங்களுக்குள்ள ஸாமானுதிகரண்யம் நிரூ பிக்கப்படுகிறது. ஒரு பதம் அதன் அர்த்தத்தில் ப்ரவர்த்திக்கிறது. அதாவது போதிக்கிறது. கடம் என்ற பதம் குடத்தை போதிப்பதற்கு நிமித்தம் கடத்வம் என்ற ஜாதி. கடத்வம் அப்பொருளில் இருப்பதால் அந்தப் பொருளில் கடம் என்ற பதம் ப்ரவ்ருத்திக்கிறது. கட பதத்திற்கு கடத்வம் ப்ர வ்ருத்தி நிமித்தம். நையாயிகர்கள் சக்யதாவச்

சேதகம் என்று சொல்லும் பொருள் ப்ரவ்ருத்தி நிமித்தமாகும். வெவ்வேறு ப்ரவ்ருத்தி நிமித்த முடைய பதங்கள் ஒரே வஸ்துவில் ப்ரவ்ருத்திப்பது (போதிப்பது) ஸாமானாதிகரண்யம் என்று சொல் லப்படும். नीलः घटः என்ற விடத்தில் நீல பதத் திற்கு நீலத்துவம் ப்ரவ்ருத்தி நிமித்தம். கட பதத் திற்கு கடத்துவம் ப்ரவ்ருத்தி நிமித்தம். வெவ்வேறு ப்ரவ்ருத்தி நிமித்தமுடைய நீல பதமும் கட பதமும் நீல ரூபமுள்ள குடம் என்ற ஒரே வஸ்துவை போதிப் பதால் இரண்டு பதங்களும் ஸமானாதிகரண பதங் கள். இரண்டிற்கும் ஸாமானாதிகரண்யம் சம்பந்தம் என்று சொல்லப்படுகிறது. ச்லோகத்தில் பின் னவ்ருத்தி நிமித்தானும் என்ற பதத்திற்கு பின்ன ப்ரவ்ருத்தி நிமித்தானும் என்று அர்த்தம்.

परस्यांशो विकारो वा जीवो वाक्येन नोच्यते ॥ १९ ॥
जीवात्मना प्रविष्टत्वात् स्वमायासृष्टमूर्तिषु ।
निरंशो निर्विकारोऽसौ श्रुत्या युक्त्या च गम्यते ॥ २० ॥
घटाकाशो विकारो वा नांशो वा वियतो यथा ।

19—20½. தத்த்வமஸி என்ற வாக்யத்தால் அகண்டமான சைதன்ய ஸ்வரூபம்தான் போதிக்கப் படும்; வேறு எந்த விதமாயும் அந்த வாக்கியததிற்கு அர்த்தம் நிரூபணம் செய்ய முடியாதென்று விஸ் தாரமாக நிரூபணம் செய்யப்படுகிறது. நீ, உல கத்தைப் படைத்த ஈச்வரன் என்பதற்கு நீ (ஜீவன்) ஈச்வரனுடைய அம்சம் = ஏகதேசம் = ஒரு பாகம் அல்லது ஈச்வரனுடைய விகாரம் என்று பொருள். ஆகவே தத்த்வமஸி என்னும் வாக்யம் ஜீவன் ஈச்வர

னுடைய ஏகதேசம், அல்லது விகாரம் என்று போதிக்கிறது என்று சொல்லமுடியாது. பரமேச்வரன் தன் மாயையால் ஸ்ருஷ்டித்த வஸ்துக்களில் ஜீவனாக ப்ரவேசிக்கிறான் என்று अनेन जीवेन आत्मनाऽनुप्रविश्य என்று உபநிஷத் கூறுகிறது. பரமேச்வர மாயையால் உண்டு பண்ணப்பட்ட வஸ்துக்களில் தோன்றும் ஈச்வர ஸ்வரூபமே ஜீவன். அவன் ஈச்வரனுடைய அம்சமல்ல விகாரமுமல்ல. ஆகையால் இவ்விதம் தத்வத்தை போதிக்காது. மேலும் ஈச்வரனுக்கு அம்சமில்லை அதாவது அவயவமில்லை, விகாரமுமில்லை என்று निष्कलं, निष्क्रियं शान्तं நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் என்ற வேதத்தால் அறிகிறோம். அது யுக்திக்கும் பொருத்தமாகவே இருக்கிறது. அவயவமுள்ள வஸ்துவெல்லாம் உண்டானவை. ஈச்வரன் அவயவமுள்ளவனானால் அவருக்கு உத்பத்தி சொல்லவேண்டியிருக்கும். ஈச்வரன் எல்லாவற்றிற்கும் கர்த்தா என்று சொல்லுவது பொருத்தமாகாது. விகாரம் என்றால் பரிணாமம். அவயவமில்லாத வஸ்துவிற்கு பரிணாமம் ஏற்படமுடியாது. அவயவமுள்ள மண் முதலிய வஸ்துக்களே உண்டை முதலிய பரிணாமங்களை அடைகின்றன. ஆகவே ஈச்வரன் அம்சமில்லாதவரும் விகாரமில்லாதவருமானதால் ஜீவன் ஈச்வரனுக்கு அம்சம் என்றோ விகாரம் என்றோ போதிப்பது சரியல்ல. மேலும் ஆகாசம் எங்கும் வ்யாபித்த ஒரே வடிவான வஸ்து. கடாகாசம் மஹாகாசத்திற்கு அம்சமுமில்லை விகாரமுமில்லை. விபுவிற்கு அம்சம் விகாரம் கிடையாது. ஈச்வரனும் விபுவானபடியால் ஈச்வரனுக்கு ஜீவன் விகாரமோ அம்சமோ ஆகமாட்டான்.

त्वमिन्द्रोऽसीतिवद्वाक्यं न खलु स्तुतितत्परम् ॥ २१ ॥

21. இந்திரனல்லாத ஒரு அரசனை நீ இந்திரன் என்று சொல்லுவது அவனிடம் இந்திரத்வத்தை ஆரோபணம் செய்வது ஸ்தோத்ரம் ஆகும் அது போல தத்த்வமஸி என்ற வாக்யம் ஈச்வரனாக இல்லாத ஜீவனை ஈச்வரன் என்று ஆரோபித்து ஸ்தோத்திரத்தில் தாத்பர்யமுள்ளது என்று சொல்வது பொருத்தமாகாது. இதற்குக் காரணம் கடைசியில் जीवात्मना प्रविष्टोऽसौ ईश्वरश्श्रूयते यतः । என்ற ச்லோகத்தால் சொல்லப்படப் போகிறது.

न सादृश्यपरं वाक्यमग्निर्माणवकादिवत् ।

न कार्यकारणत्वस्य साधनं मृद्धटादिवत् ॥ २२ ॥

22. மிகவும் பரிசுத்தமான ஒரு வித்யார்த்தியைக் குறித்து அக்நிர்மாணவக: என்று சொல்லுகிறார்கள். வித்யார்த்தி அக்னியாகமாட்டான். ஆனால் அக்னிபோல் மிக பரிசுத்தனாகையால் அக்நிக்குச் சமமாயிருக்கிறான் என்று அந்த வாக்கியத்தின் அர்த்தம். அதுபோல தத்வமஸி என்ற வாக்யம் ஈச்வரனாயில்லாத ஜீவன் ஈச்வரன்போல சேதனன் ஆனபடியால் ஈச்வரனுக்கு சமமானவன் என்ற அர்த்தத்தில் தாத்பரிய முள்ளது என்பதும் பொருந்தாது. ம்ருத்திகையில் உண்டான கடத்தை ம்ருத்கட: என்று சொல்லுகிறார்கள். அந்த வாக்யம் ம்ருத்திகையின் காரியம் குடம் என்பதை போதிக்கிறது. அதுபோல தத்த்வமஸி வாக்யம் ஈச்வரனுக்குக் காரியம் ஜீவன் என்ற அர்த்தத்தில் தாத்பரிய முள்ளது என்பதும் பொருந்தாது.

न जातिव्यक्तिगमकं गौ: खण्ड इतिवद्वच: ।
गुणगुण्यात्मकं वाक्यं नैतत् नीलोत्पलादिवत् ॥ २३ ॥

23. खण्ड: गौ: என்கிற வாக்யம் கோத்வம் என்ற ஜாதியை யுடைய கண்ட வ்யக்தியை போதிப்பது போல் தத்த்வமஸி என்கிற வாக்யம் ஈச்வர ரூபமான ஜாதியையுடைய ஜீவ வ்யக்தியை போதிக்கிறது என்பதும் பொருந்தாது. நீலம் உத்பலம் என்கிற வாக்கியம் நீல குணமுள்ள குணியான உத்பல புஷ்பத்தை போதிப்பதுபோல தத்த்வமஸி என்கிறவாக்யம் ஈச்வரன் என்னும் குணமுள்ள ஜீவனை போதிக்கிறது என்று சொல்வதும் பொருந்தாது. இந்த ச்லோகத்தில் நீலோத்பலாதிவத் என்பதற்கு நீலோத்பல வாக்யவத் என்றும் குணகுண்யாத்மகம் என்ற பதத்திற்கு குணகுண்யாத்மக வஸ்து போதகம் என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

नोपासनापरं वाक्यं प्रतिमास्वीशबुद्धिवत् ।
न चौपचारिकं वाक्यं राजवद्राजपूरुषे ॥ २४ ॥

24. ஈச்வரனுயில்லாத ஈச்வர ப்ரதிமையை ஈச்வரனுக பாவித்து உபாஸிப்பதுபோல ஜீவன் ஈச்வரனில்லாத போனுலும் ஈச்வரனுக உபாஸிக்கப்பட வேண்டும் என்ற தாத்பரியமுள்ளது தத்த்வமஸி என்கிற வாக்யம் என்பதும் பொருந்தாது. ராஜாவாயில்லாதவனும் ராஜாவிடம் வேலையிலமர்ந்திருக்கும் புருஷனிடத்தில் ராஜாவிடம் சொல்லும் உபசார வார்த்தைகள் சொல்லுகிறோம். அதுபோல ஈச்வரனைச் சேர்ந்த ஜீவனை ஈச்வரன் என்று உபசாரமாகச் சொல்லுகிறது என்பதும் பொருந்தாது.

जीवात्मना प्रविष्टोऽसावीश्वरः श्रूयते यतः ।

24½. எல்லா உபநிஷத்துக்களிலும் ஈச்வரனே ஈச்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களில் ஜீவனாக ப்ரவேசிக்கிறான் என்று ஒரு முகமாகச்சொல்லப்பட்டிருப்பதால் ஜீவஸ்ரூபம் ஈச்வரனே என்று ஸித்தமானபடியால் ஸ்தோத்ரம் பண்ணுகிறவன் ஸ்துதிக்கப்படுகிறவன் முதலிய பேதங்களைக் கல்பித்து அர்த்தம் சொல்வது உசிதமற்றது. ஆகையால் ஜீவத்வம் என்பது உபாதியால் ஏற்பட்டதானபடியால் ஒளபாதிகமான ஜீவபாவத்தைப் போக்கி ஸ்வபாவமாயுள்ள ப்ரஹ்மஸ்வரூபத்தையே தத்த்வமஸி என்ற மஹாவாக்யம் உபதேசிக்கிறது.

देहेन्द्रियमनोबुद्धिप्राणाहंकारसंहतौ ॥ २५ ॥

आत्मसंकलनादज्ञैरात्मत्वं प्रतिपद्यते ।

वह्निधीः काष्ठलोहादौ वह्निसंकलनादिव ॥ २६ ॥

25—26. ஜீவ ஸ்வரூபம் பரமேச்வரனாயிருந்தாலும் இரும்புத் துண்டிலோ விறகிலோ அக்னி முழுவதும் வ்யாபித்தபடியால் இரும்புத்துண்டும் விறகும் அக்னியென்றே தோன்றுகிறது. கொல்லன் உலையில் பழுக்கக் காய்ச்சின இரும்பு நெருப்பாகவே காணப்படுகிறது. அதுபோல தேஹம் கண் காது முதலிய இந்திரியங்கள் பிராணன் மனது புத்தி ஆனந்தமய கோசம் என்னும் அஹங்காரம் இவைகளின் ஸங்காதத்தில் இவைகளுக்கு ஸாக்ஷியான ஆத்மசைதன்யம் வ்யாபித் திருப்பதால் அறிவில்லாத அஜ்ஞானிகள் ஸங்காதத்தை ஆத்மா என்று நினைக்கிறார்கள்.

देहमन्नमयं कोशमाविश्यात्मा प्रकाशते ।

स्थूलो बालः कृशः कृष्णः वर्णाश्रमविकल्पवान् ॥ २७ ॥

27. ஆத்மஜோதிக்கு ஐந்து அரைகள் இருக்கின்றன. அவைகள் ஒன்றுக்குள் ஒன்ருக இருக்கின்றன. ஐந்தாவது வெளியிலிருக்கும் உரை அன்ன ரஸத்தால் உண்டு பண்ணின தேஹமே. அதுவரையிலும் ஐந்தாவது உரைக்குள்ளேயிருக்கும் ஸாக்ஷியான ஆத்மஜோதிஸ் பரவியிருப்பதால் தேஹத்தையே அஹம் (நான்) என்று அனுபவிக்கிருேம். அதாவது தேஹத்திலிருக்கும் தர்மங்களை பருமன், இளைத்தல்,பாலியம்,கருப்பு,ப்ராஹ்மண்யம்,ப்ரஹ்மசர்யம் முதலியவைகளை நம்மிடமிருப்பதாக நான், பருமன், பாலன், கருப்பு நிறமுள்ளவன், ப்ராஹ்ணன், ப்ரஹ்மசாரி என்று நினைக்கிருேம், அன்னமயகோசம் உள்ளேயிருக்கும் கோசக்கணக்கில் ஐந்தாவது,

प्राणकोशोपि जीवामि क्षुधितोऽस्मि पिपासितः ।

27. அதற்கடுத்த உள்ளேயிருக்கும் உரை ப்ராண மயகோசம், அதையும் நாம் என்று நினைக்கிருேம். ஜீவனம், பசி, தாகம் இவைகள் ப்ராணனின் தர்மங்கள். அவைகள் தனக்கே இருப்பதாக, நான் ஜீவித்திருக்கிறேன். பசியுள்ளவனுக யிருக்கிறேன் தாஹமுள்ளவனுகயிருக்கிறேன் என்று அனுபவம் உண்டாகிறது. இவ்விதம் ப்ராணமயகோசத்தில் ஆத்ம ஸ்வரூபம் ப்ரகாசிக்கிறது.

संशितो निश्चितो मन्ये इति कोशे मनोमये ॥ २८ ॥

28. ப்ராணமய கோசத்திற்கும் உள்ளேயிருக்கும் உரை மநோமயகோசம். ஸந்தேஹம், நிச்சயம், மநநம்முதலிய மனோதர்மத்தை தன்னிடமிருப்பதாக, நான் ஸந்தேஹிக்கிறேன். நான் எண்ணுகிறேன், நான் தீர்மானிக்கிறேன் என்று மனோமய கோசத்தில் ஆத்மா ப்ரகாசிக்கிறது.

विज्ञानमयकोशस्थो विजानामीति तिष्ठति ।

28½. மனோமய கோசத்திற்கும் உள்ளேயிருப்பது விஜ்ஞானமயகோசம் என்னும் உரை. விஜ்ஞானம் என்னும் அந்த:கரணத்தின் தர்மமான விஜ்ஞானம் கர்த்ருத்வம் முதலியவைகளை ஆத்ம தர்மமாக வைத்து நான், இதை அறிந்து கொள்ளுகிறேன் இதைச் செய்கிறேன் என்று நினைக்கிறோம்.

आनन्दमयकोशाख्ये त्वहंकारे पुराकृतैः ॥ २९ ॥
पुण्यैरुपासनाभिश्च सुखितोऽस्मीति मोदते ।

29—29½. விஜ்ஞானமயகோசத்திற்கும் உள்ளேயிருக்கும் உரை ஆனந்தமய கோசம். அதுவே அஹங்காரமென்று சொல்லப்படுகிறது. ஆனந்தமெல்லாம் அதன் அவயவம்; அஹங்கார தர்மமான ஆனந்தம் முதலியவைகளை ஆத்ம தர்மமாகநினைத்து, முன் ஜன்மத்தில் செய்த புண்யங்களாலும் ஈச்வரோபாஸனங்களாலும் ஸுகமுள்ளவனாயிருக்கிறேன் என்று சந்தோஷப்படுகிறோம்.

एवं कंचुकितः कोशैः कंचुकैरिव पञ्चभिः ॥ ३० ॥
परिच्छिन्न इवाभाति व्याप्तोऽपि परमेश्वरः ।

30—30½. இவ்விதம் ஐந்து கோசங்களால் ஐந்து உரைகளால் மூடப்பட்ட சாக்ஷியான ப்ரமேச்வரன் எங்கும் வ்யாபித்தவனுயிருந்தும் பரிச்சின்னன் குறிப்பிட்ட ப்ரதேசத்திலிருப்பவன் போலத் தோன்றுகிருன்.

यथा सलिलमाविश्य बहुधा भाति भास्करः ॥ ३१ ॥

तथा शरीराण्याविश्य बहुधा स्फुरतीश्वरः ।

31—31½. ஆகாசத்தில் இருக்கும் ஒரே சூரியன் பலவித பாத்திரங்களிலுள்ள ஜலங்களில் (பிரதிபிம்பமாக) ப்ரவேசித்து அநேகசூரியனுகத் தோன்றுகிருர். அதுபோல ஒரே ஈச்வர ஸ்வரூபம் பலவித சரீரங்களில்ப்ரவேசித்ததால் அநேகமாகத் தோன்றுகிறது. ஆகையால் ஒரு ஜலத்தில் ப்ரதிபலிக்கும் சூரியன் அசையும் போது மற்ருெரு ஜலத்தில் பிரதிபிம்பமான சூரியன் அசைவதில்லை. அதுபோல ஒரு சரீரத்திலிருக்கும் ஆத்மா ஸுக துக்கத்தை அனுபவிக்கும்போது வேறு சரீரத்திலிருக்கும் ஆத்மா ஸுக துக்கத்தை அனுபவிப்பதில்லை என்பது பொருத்தமாகிறது.

कारणत्वं च कार्यत्वं तटस्थं लक्षणं तयोः ॥ ३२ ॥

शाखायां चन्द्र इतिवत् नैव मुख्यमिदं मतम् ।

32—32½, ஆத்ம பரிச்சேத முடையவனுயும் அநேகமாயும் ஈச்வரனைக்காட்டிலும் வேருய் இருப்பதாயும் உபாதி வசத்தால் தோன்றுகிருன் என்று சொல்லப்பட்டது. தத் பதார்த்தமும் த்வம் பதார்த்தமும் லக்ஷணத்தை யனுசரித்தால் ஒன்ருகவே

இருப்பது பொருத்தமானது என்று நிரூபணம் செய்வதற்காக தத்பதார்த்தத்திற்கும் லக்ஷணம் நிரூபிக்கப்படுகிறது. லக்ஷணம் தடஸ்த லக்ஷணம் ஸ்வரூப லக்ஷணம் என இரண்டுவிதம். லக்ஷ்யமிருக்கும் காலம் முழுவதும் இல்லாமலேயே தனியாக லக்ஷ்யத்தைக் காட்டும் தடஸ்த லக்ஷணம். ஆகாசத்திலிருக்கும் சந்திரனை போதிப்பதற்காக மரத்தின் கிளையிலிருப்பது சந்திரன் என்று சொல்லுகிருர்கள். ஆகாயத்தில் பல விடங்களைப் பார்க்காமல் சந்திரன் தெரியுமிடத்தைக் காட்டி அங்கே இருப்பவன் சந்திரன் என்று போதனம் செய்கிருர்கள். மரக்கிளை என்ற லக்ஷணம் சந்திரனோடு சம்பந்தப்படாமலே சந்திரனிருக்கும் காலம் முழுவதுமில்லாமலே சந்திரனை வேறு நக்ஷத்திரம் முதலியவற்றை விட வேருகக் காண்பிக்கிறது. ஆகையால் இது தடஸ்த லக்ஷனம்.

महाप्रकाशमित्युक्तं स्वरूपं चन्द्रलक्षणम् ॥ ३२ ॥

सच्चिदानन्दरूपत्वं स्वरूपं लक्षणं तयोः ।

33—33½. லக்ஷ்யத்தின் ஸ்வரூபத்தை போதிக்கும் ஸ்வரூபமான லக்ஷணம் ஸ்வரூப லக்ஷணம். மஹாப்ரகாச: சந்த்ர: ஆகாசத்தில் அதிக பிரகாசமாயிருப்பது சந்திரன் என்று சொன்னுல் சந்திரன் ஸ்வரூபம் தெரிகிறது. ஆகவே இதுஸ்வரூப லக்ஷணம். தத் பதார்த்தத்திற்கு காரணத்வம் ஜகத் காரணத்வம் என்பது தடஸ்த லக்ஷணம். ஸ்வரூபத்தை போதிக்காது முக்கியமான லக்ஷணமல்ல. த்வம்

பதார்த்தமான ஜீவனுக்கு கார்யத்வம் கார்யமான அந்த:கரணம் தேஹம் முதலியவைகளை உபாதியாக உடைத்தாயிருக்கும் தன்மை என்பதும் शाखायां चन्द्रः என்ற லக்ஷணம்போல தடஸ்த லக்ஷணமாகும். அதிக ப்ரகாசமானது சந்திரன் என்ற லக்ஷணம் சந்திர ஸ்வரூபத்தை அறிவிக்கும் ஸ்வரூபமான லக்ஷணம். அதுபோல தத் பதார்த்தத்திற்கும் த்வம் பதார்த்தத்திற்கும் ஸ்வரூப லக்ஷணம் ஒன்றே. அதாவது ஸச்சிதானந்த ரூபத்வம்: பொய்யில்லாமல் ஸத்யமாயும் ஜடமாயில்லாமல் சைதன்ய பிரகாசமாயும் துக்கமாயில்லாமல் ஆனந்தமாயும் இருப்பது என்பது. வேதங்களில் இரண்டின் ஸ்வரூபம் அவ்விதமே சொல்லப்பட்டிருக்கிறது.

एकलक्षणयोरैक्यं वाक्येन प्रतिपाद्यते ॥ ३४ ॥

34. ஆகவே தத்த்வமஸி என்னும் மஹாவாக்யம் ஒரேவித ஸ்வரூப லக்ஷணமுள்ள தத்பத லக்ஷ்யார்த்தத்திற்கும் த்வம் பத லக்ஷ்யார்த்தத்திற்கும் ஐக்யத்தை உபதேசிக்கிறது.

तस्मादेकप्रकाशत्वं सर्वात्मत्वमिति स्थितम् ।

34½. ஆகையால் ஒரேப்ர்காசமாயிருப்பதுதான் ஸர்வாத்மத்வம் என்று तस्मात्तत् सर्वमभवत् என்று உபநிஷத்துக்களில் கூறப்பட்டிருக்கிறது.

देवतिर्यङ्मनुष्याणां प्रकाशान्न पृथक् स्थितिः ॥ ३५ ॥
जीवः प्रकाशाभिन्नत्वात् सर्वात्मेत्यभिधीयते ।

35—35½. தேவர்கள் மனுஷ்யர்கள் பக்ஷி முதலிய திர்யக்குகள் இவைகள் ப்ரகாச ஸ்வரூபமே. ப்ரகாச ஸத்தையைவிட தனியாக வேறு ஸத்தை இவைகளுக்கில்லை. ஜீவன் ப்ரகாச ஸ்வரூபமானதால் ஸர்வாத்மா என்று சொல்லப்படுகிறான்.

एवं प्रकाशरूपत्वपरिज्ञाने दृढीकृते ॥ ३६ ॥

पुनरावृत्तिरहितं कैवल्यं पदमश्नुते ।

36—36½. இவ்வாறாக ஜீவன் ப்ரகாச ஸ்வரூபனே என்ற மஹாவாக்யார்த்தஜ்ஞானம் அப்யாஸத்தால் ஸம்ஸ்காரங்களோடு த்ருடமாக ஆனால் திரும்பி ஜனன மரண ப்ரவாஹரூப ஸம்ஸாரத்திற்கு வருவதில்லாத கைவல்யம் என்ற மோக்ஷத்தை அடைகிறான்.

सकृत्प्रसक्तमात्रोऽपि सर्वात्मत्वे यदृच्छया ॥ ३७ ॥

सर्वपापविनिर्मुक्तः शिवलोके महीयते ।

37—37½. ஜீவன் ஸர்வாத்மா என்ற ஞானம் யத்ருச்சையால் முன்ஜன்மங்களில் செய்த புண்ய பரிபாகத்தால் ஒரு தடவை வந்தாலும் அவன் ஸர்வ பாபங்களிலுமிருந்து விடுபட்டு சிவலோகத்தில் பூஜிக்கப் படுகிறான்.

सर्वात्मभावना यस्य परिपक्वा महात्मनः ॥ ३८ ॥

संसारतारकः साक्षात्स एव परमेश्वरः ।

38—38½ மஹாவாக்யார்த்தமான ஸர்வாத்மத்வத்தின் ஞானம் தியானம் செய்து நல்ல பரிபக்வ

மாயிருந்து விட்டால் அந்த ஞானி ஸம்ஸாரத்தைத் தாண்டினவனாய் பரமேச்வர ஸ்வரூபமாகவே ஆகி விடுகிறான். ब्रह्म वेद ब्रह्मैव भवति பரப்ரஹ்மமாக இருக் கிறான்.

इति श्रीदक्षिणामूर्तिस्तोत्रार्थप्रतिपादके ॥ ३९ ॥

प्रबन्धे मानसोल्लासे तृतीयोल्लाससङ्ग्रहः ॥

39—39½. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் தாத்பர்யத்தை விளக்கும் மானஸோல்லாஸம் என் னும் புத்தகத்தில் மூன்றாவது உல்லாஸச் சுருக்கம் முற்றிற்று.

நான்காவது சுலோகத்தின்

அவதாரணிகை

स्वतस्सन्तः प्रकाशन्ते भावा घटपटादयः ।
नेश्वरस्य समावेशादित्यस्योत्तरमुच्यते ॥ १ ॥

1. குடம் வஸ்திரம் முதலிய வஸ்துக்கள் ஸ்வபாவத்திலேயே ஸத்ரூபமானவை ஸ்வபாவமாகவே பிரகாசமானவை. घटः अस्ति, घटः प्रकाशते என்னும் அனுபவத்தில் ஈச்வர ஸம்பந்தத்தால் அவைகள் இருக்கின்றன, பிரகாசிக்கின்றன என்பதாக தெரியவில்லை. ஆகையால் असत्कल्पेषु भावेषु जडेषु क्षणनाशिषु । अस्तित्वञ्च प्रकाशत्वं नित्यात्संक्रामतीश्वरात् ॥ என்று சொல்வது பொருந்தாது என்ற கேள்விக்கு பதில் நாலாவது சுலோகத்தால் சொல்லப்படுகிறது.

**नानाच्छिद्रघटोदरस्थितमहादीपप्रभाभास्वरं
ज्ञानं यस्य तु चक्षुरादिकरणद्वारा बहिस्स्पन्दते ।
जानामीति तमेव भान्तमनुभात्येतत्समस्तं जगत्
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ४ ॥**

பதவுரை:—नानाच्छिद्र घटोदर स्थित महा दीपप्रभा भास्वरं அநேக துவாரங்களையுடைய குடத்தின் மத்யத்தில் உள்ள பெரிய தீபத்தின் வெளிச்சம்போல் ப்ரகாசரூபமான यस्य ज्ञानं तु எவருடைய ஸ்வரூப ஜ்ஞானமானது चक्षुरादि करणद्वारा கண் முதலிய இந்திரியங்கள் வழியாக बहिः வெளியே स्पन्दते செல்லுகிறதோ जानामीति அறிகிறேன் என்று भान्तं விளங்

கும் तमेव அந்த ஆத்மஜ்ஞானத்தையே. एतत् समस्तं जगत् இந்த எல்லா உலகமும் अनुभाति அனுஸரித்து விளங்குகிறதோ, तस्मै—नमः அந்த குருமூர்த்தி ஸ்வரூபமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் உரியது.

அநேக துவாரங்களுள்ள ஒரு குடத்தின் மத்யத்தில் பெரியதீபம் இருந்தால் அந்த தீபத்தின் வெளிச்சம் குடத்தின் துவாரங்கள் வழியாக வெளியே சென்று குடத்திற்கு வெளியிலிருக்கும் வஸ்துக்களை வ்யாபித்து அந்தந்த வஸ்துவின் ஆகாரமாக இருந்து அவ்விடமிருக்கும் அந்தகாரத்தை போக்கடிக்கிறது. அதுபோல சரீரத்தில் பலவிதமான இந்திரியஸ்தானமான துவாரங்களிருக்கின்றன. சரீர மத்யத்தில் ஆத்ம ஸ்வரூபஜ்ஞானமென்கிற ப்ரகாசமிருக்கிறது. அந்த:கரணம் தேஹ துவாரங்களிலிருக்கும் இந்திரியங்கள் வழியாக தேஹத்தின் வெளியிலிருக்கும் வஸ்துக்களை அடைந்து அந்தந்த வஸ்துவின் ஆகாரமாக ஆகும்பொழுது அந்த:கரணத்தில் பிரதிபலித்த ப்ரகாசமும் இந்திரியம் வழியாக வெளியிலிருக்கும் வஸ்துக்களிடம் செல்லுகிறது. சென்று வஸ்துக்களில் இருக்கும் அஜ்ஞானமாகிற இருட்டை போக்கடிக்கிறது. அப்பொழுது விஷய ப்ரகாசம் என்று பெயர் வழங்கப்படுகிறது. நான் குடத்தை அறிகிறேன் என்று குடம் முதலிய விஷயத்தை ப்ரகாசப்படுத்தி ஆத்ம ஸ்வரூபமும் ப்ரகாசிக்கிறது. சூரியன் முதலிய ஸகல வஸ்துக்களும் ப்ரகாசிக்கும் ஆத்ம ஸ்வரூபத்தை அனுசரித்தே ப்ரகாசிக்கின்றன. உலையில் காய்ச்சின இரும்புத் துண்டு அக்

னியை அனுசரித்து சுடுகிறது என்று சொன்னல் இரும்புத் துண்டுக்கு அக்னியின் சுடும் தன்மையே தவிர தனியாக சுடும் தன்மையில்லை. அதுபோல ஆத்ம பிரகாசத்தை விட வேறு ப்ரகாசம் இல்லை. எவருடைய ஸ்வரூபஜ்ஞானம் பல துவாரங்களுடைய குடத்தின் மத்யத்திலிருக்கும் பெரிய தீப வெளிச்சம் போல் ப்ரகாசமுள்ளதோ கண் முதலிய இந்திரியங்கள் வழியாக தேஹத்திற்கு வெளியே போகிறதோ, நான் இதை அறிகிறேன் என்று ப்ரகாசிக்கும் அந்த ஸ்வரூபத்தை அனுசரித்தே எல்லா உலகமும் பிரகாசிக்கின்றதோ, அந்த குருமூர்த்தி ஸ்வரூபமான ஸ்ரீ தக்ஷிணமூர்த்திக்கு நமஸ்காரம்.

अस्यायं भाव:—இதின் தாத்பர்யம் சொல்லப்படுகிறது.

अहमित्यनुसंधाता जानामीति न चेत्स्फुरेत् ।
कस्य कोवा प्रकाशेत जगच्च स्यात् सुषुप्तवत् ॥ २ ॥

2. குடம் முதலிய வஸ்துக்கள் தானகவே ப்ரகாசிக்கின்றன வென்ருல் நான் குடத்தை அறிகிறேன். अहं घटं जानामि என்னும் அவபாஸத்தில் விஷயத்தை அனுஸந்தானம் செய்யும் ஆத்ம ஸ்வரூபத்திற்கும் ஸ்புரணம் இராது. அவ்விதம் ஸ்புரணம் இல்லாமல்போனல் கடினமான கற்பாறைக்குள் தீபம்போல ஒருவருக்கும் உலகம் ப்ரகாசிக்கவில்லையென்ருல் தூக்கத்தில் ஸுஷுப்திகாலத்தில் உலகம் பிரகாசிப்பதில்லை. அதுபோல உலகம் ஒருவருக்கும் பிரகாசிக்காது, ஆகவே உலகத்தின் ஸ்புரணம் ஸ்வபாவமாக இல்லை, ஆத்மஸ்புரணுதீநமாக இருக்கிறது.

प्रागूर्ध्वं चासतः सत्त्वं वर्तमानेऽपि न स्वतः ।
तस्मादीशे स्थितं सत्त्वं प्रागूर्ध्वत्वविवर्जिते ॥ ३ ॥

3. கயிற்றில் தோன்றின பாம்பு, இது பாம்பு என்ற ப்ரமஜ்ஞாநம் வருவதற்கு முன் இல்லை. இது கயிறே என்ற உண்மையை அறிந்த பிறகும் இல்லை. ப்ரம மிருக்கும் போதிருப்பது அந்த ஸர்ப்பத்திற்கு ஸ்வபாவமாக ஸத்தை இல்லை. அதுபோல குடம் முதலிய வஸ்துக்களுக்கும் உண்டாவதற்குமுன் ஸத்தை இல்லை. நாசமடைந்த பிறகும் ஸத்தை இல்லை. ஆகையால் இருக்கும் காலத்திலும் ஸ்வபாவமாக ஸத்தை கிடையாது. ஆதலால் முன் அவஸ்தை பிந்திய அவஸ்தையில்லாத ஈச்வரனிடத்திலேயே ஸத்தை இருக்கிறது. ஈச்வர ஸத்தையே குடம் முதலியவற்றின் ஸத்தை.

स्वयमेव प्रकाशेरन् जडा यदि विनेश्वरम् ।
सर्वं सर्वस्य भासेत नवा भासेत किञ्चन ॥ ४ ॥

4. ஜடமான குடம் முதலிய வஸ்துக்கள் ஸ்வ ப்ரகாசமான வஸ்துக்களை கிரஹிக்கும் ஈச்வரனை அபேக்ஷிக்காமலே தானாகவே ப்ரகாசித்தால் எல்லா வஸ்துவும் எல்லாருக்கும் பிரகாசிக்கும். அல்லது ஒன்றும் ஒருவருக்கும் ப்ரகாசிக்காது.

तस्मात्सर्वज्ञमज्ञं वा जगत्स्यादेकरूपकम् ।

4½. எல்லாம் எல்லாருக்கும் பிரகாசித்தால் உலகத்தில் எல்லாரும் ஸர்வஜ்ஞர்களாவார்கள், ஒருவருக்கும் ஒன்றும் ப்ரகாசிக்கிறதில்லை யென்றால் உலகத்தில் எல்லாரும் ஒன்றும் தெரியாதவர்களாக

ஆவார்கள். உலக முழுவதும் ஒரே மாதிரியாயிருக்கும். சிலர் சிலவிஷயங்களைத் தெரிந்தவர்கள் என்பது பொருந்தாது.

तुल्ये स्वयंप्रकाशत्वे जडचेतनयोर्मिथः ॥ ५ ॥

तुल्यमेव प्रसज्येरन् ग्राह्यग्राहकतादयः ।

इन्द्रियाणामनियमात् चाक्षुषाः स्यूरसादयः ॥ ६ ॥

5—6. இவ்வாறு குடம் முதலிய வஸ்துக்களும் சேதனமான வஸ்துவும் ஸ்வயம் ப்ரகாசமென்றால் ஜடவஸ்து (க்ராஹ்யம்) கிரஹிக்கப்படுவது சேதனம் (க்ராஹகம்) கிரஹிப்பது என்று சொல்வதுபோல சேதனம் க்ராஹ்யமாயும் குடம் முதலியவைகள் க்ராஹகம் என்றும் சொல்ல நேரிடும். க்ராஹ்யம் இதுதான் க்ராஹகம் இதுதான் என்ற வ்யவஸ்தை இல்லாமல்போனால் சுவை ரசம் முதலியவைகள் கண் முதலிய இந்திரியங்களால் தெரியும்படிக்கும் நேரிடும்.

ஆகையால் எல்லாவஸ்துக்களும் ஸ்வபாவமாக ஸத்தை உள்ளதல்ல. அப்படியானால் எக்காலத்திலுமிருக்கும்படி நேரிடும். வஸ்துக்களும் ஸ்வயம்ப்ரகாசமானவையல்ல. ஆத்ம ப்ரகாசத்தாலேயே பிரகாசிக்கின்றன. ஆத்மாவை வேறு ஒன்று ப்ரகாசப்படுத்துவதில்லை, ஆனதால் ஸ்வயம்ப்ரகாசமானது என்று கருத்து.

मलिनामालिनादर्शपश्चात्प्राग्भागतुल्ययोः ।

क्रियाशक्तिज्ञानशक्त्योरन्तःकरणभागयोः ॥ ७ ॥

प्रतिबिम्बे स्फुरन्नीशः कर्ता ज्ञातेति कथ्यते ।

7—7½. அந்த:கரணம் என்ற ஒரே வஸ்து ஞாந சக்தி கிரியாசக்தி என்னும் இரண்டு சக்திகளுள்ளது. கிரியாசக்தியை ப்ரதானமாகக்கொண்டு ப்ராணன் என்றும், ஜ்ஞாநசக்தியை பிரதானமாகக்கொண்டு புத்தி என்றும் சொல்லப்படுகிறது. அந்த:கரணத்திற்கு கிரியாசக்தி ஒருபாகம். அது ரஸம் தடவினதால் மலினமாயிருக்கும் கண்ணுடியின் பின்பாகம் போல் உள்ளது. ஜ்ஞாநசக்திபாகம் மற்ருெரு பாகம். அது அழுக்கில்லாமல் சுத்தமான கண்ணுடியின் மேல்பாகம்போல் உள்ளது. இரண்டு பாகங்களிலும் ஈச்வர ஸ்வரூபம் ப்ரதிபலனத்தை அடைகிறது. க்ரியாசக்திபாகத்தில் ப்ரதிபிம்பித்த ஈசுவரன் (பிராணனை உபாதியாகக் கொண்டவன்) கர்த்தா என்று வழங்கப்படுகிருன். ஜ்ஞாந சக்தி பாகத்தில் (புத்தியில்) ப்ரதிபலனமடைந்த ஈசுவரன் (புத்தியை உபாதியாகக் கொண்டவன்) ஜ்ஞாதா (அறிகிறவன்) என்று சொல்லப்படுகிருன்.

बुद्धिस्सत्त्वगुणोत्कर्षान्निर्मलो दर्पणो यथा ॥ ८ ॥

गृह्णाति विषयच्छायाम् आत्मच्छायानुभावतः ।

8—8½. புத்தி என்று சொல்லப்படும் அந்த:கரணம் ரஜோகுணமும் தமோகுணமும் அடங்கி ஸத்வகுணம் மேலிட்டபோது அழுக்கில்லாமல் சுத்தமான கண்ணுடிபோலிருக்கிறது. அதில் ஈச்வராத்ம ஸ்வரூபத்தின் சாயை ப்ரதிபிம்பம் ஏற்படுகிறது. ஆத்ம ப்ரகாச பிரதிபிம்பத்தோடு கூடின மாஹாத்மியத்தால் குடம் முதலிய விஷயங்களின் சாயையையும் புத்தி கிரஹிக்கின்றது.

अन्तःकरणसंबन्धान्निखिलानीन्द्रियाण्यपि ॥ ९ ॥

रथाङ्गनेमिवलये कीलिता इव कीलकाः ।

9—9½. ஒரு வண்டி சக்ரத்தில் மத்தியபாகம் குடம் (நாபி). வலயமாயிருக்கும்பாகம் நேமி. குடத்திற்கும் நேமிக்கும் நடுவில் அரங்கள் என்று சொல்லப்படும் கட்டைகள் கோர்க்கப்பட்டு இருக்கின்றன. கண் காது முதலிய இந்திரியங்களுக்கு நியாமகமான அந்த:கரணத்தின் சம்பந்தத்தால் ஸகலமான இந்திரியங்களும் பாஹ்யமான ரூபம் ரஸம் முதலிய தன் தன் விஷயங்களில் சக்கிரத்தின் வலயம் என்னும் நேமியில் கோர்க்கப்பட்ட கீலகம் என்னும் கட்டைகள் போல கோர்க்கப்பட்டு இருக்கின்றன. சக்கரத்தின் குடஸ்தானத்தில் அந்த:கரணமும் கட்டைகள் ஸ்தானத்தில் இந்திரியங்களும், நேமியின் ஸ்தானத்தில் இந்திரிய விஷயங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன,

नाड्योऽन्तःकरणे स्यूता जालसंस्यूतसूत्रवत् ॥ १० ॥

ताभिस्तु गोलकान्ताभिः प्रसर्पन्ति स्फुलिङ्गवत् ।

करणानि समस्तानि यथा स्वं विषयं प्रति ॥ ११ ॥

10—11. நூல்கயிறுகளால் செய்த மீன்பிடிக்கும் வலையில் நூல்கள் சேர்த்து கோர்க்கப்பட்டு இருக்கின்றன. அதுபோல ஞானசக்தி கிரியாசக்தி இரண்டுமுள்ளதான லிங்கசரீர மென்று சொல்லும் அந்த:கரணத்தில் தேஹத்திற்குள்ளே இருக்கும் உள்ளே துவாரமுள்ள நாடிகள் கோர்க்கப்பட்டு இருக்கின்றன. நாடிகள் ஒவ்வொரு இந்திரியம்

அபிவ்யக்தி அடையும் ஸ்தானமாகிய கோளகம் (கண்விழிகள் இருக்குமிடம் முதலியவை) வரையில் வ்யாபித்து இருக்கும். அந்த நாடிகளின் வழியாக கண் காது முதலிய இந்திரியங்கள் தன் தன் விஷய மாகிய ரூபம், ரஸம், சப்தம் முதலிய வஸ்துக்களிடம் நெருப்புத் தூள்கள் போவதுபோல் செல்லுகின்றன.

देहस्य मध्यमं स्थानं मूलाधारमितीर्यते ।

गुदात्तु द्व्यङ्गुलादूर्ध्वं मेढ्रात्तु द्व्यङ्गुलादधः ॥ १२ ॥

12. அந்த:கரணத்தில் கோர்க்கப்பட்டதும் இந்திரியங்களின் ஸஞ்சாரஸ்தானமுமாகிய நாடிகளை சொல்வதற்காக மூலாதாரம் இருக்குமிடம் சொல் லப்படுகிறது. மலங்களை வெளிப்படுத்தும் பாயு என்ற இந்திரியஸ்தானமான குதத்திற்கு இரண்டு அங்குலம் மேலாகவும், மூத்திரத்தை வெளிப்படுத் தும் இந்திரிய ஸ்தானத்திற்கு இரண்டு அங்குலம் கீழாகவும் இருக்கும் தேஹத்தின் நடு பாகம் மூலா தாரம் என்று சொல்லப்படுகிறது.

त्रिकोणोऽधोमुखाग्रश्च कन्यकायोनिसन्निभः ।

यत्र कुण्डलिनी नाम परा शक्तिः प्रतिष्ठिता ॥ १३ ॥

प्राणाग्निबिन्दुनादानां सवित्री सा सरस्वती ।

13—13½. மூலாதாரம் முக்கோண வடிவமா யிருக்கும். அதன் முன்பாகம் கீழ்நோக்கி இருக்கும். கந்யகையின் யோநிபாகம்போலிருக்கும். அந்த மூலாதாரத்திற்கு பராசக்தி அதிஷ்டாந தேவதை குண்டலிநீ என்ற பெயருடையவள். தேஹத்திற் குள்ளே ஸஞ்சரிக்கும் ப்ராணன், சாப்பிட்ட அன்

னத்தை பக்குவப்படுத்தும் அக்நி. அவ்யக்தமான த்வநி (ध्वनि) என்ற பிந்து. இரு காதுகளையும் அடைத்துக்கொண்டால் உள்ளே கேழ்க்கும் கோஷ ரூபமான நாதம், இவைகளின் ஸஞ்சாரத்தையும் குண்டலிநீ சக்தியே செய்கிறது. அதுவே பிறரால் கேழ்க்கும்படியான வர்ணரூபமான ஸரஸ்வதியாகவு மிருக்கிறது.

मूलाधाराग्रकोणस्था सुषुम्ना ब्रह्मरन्ध्रगा ॥ १४ ॥

मूलेऽर्धच्छिन्नवंशाभा षडाधारसमन्विता ।

14—14½. மூலாதாரத்தின் முன் கோணமாகிற கிழ் பாகத்தில் ஸுஷும்நா என்ற நாடி கிளம்பு கிறது. அது நேராக சிரசிலிருக்கும் ப்ரம்ம ரந்திரம் என்று சொல்லப்படும் துவாரம் வரையில் செல்லு கிறது. அதன் அடி ப்ரதேசம் பாதி சேதிக்கப் பட்ட மூங்கில் போலிருக்கும். அதாவது அடியில் ஸூக்ஷ்மமான துவாரமுள்ளது. ப்ரம்மரந்திரம் வரையில் மத்யத்தில் ஆறு ஆதாரங்களோடு கூடி யது. (1) மூலாதாரம், (2) லிங்கம். (3) நாபி, (4) ஹிருதயம், (5) கண்டம், (6) ப்ரூமத்யம் என்று ஆறு ஸ்தானங்களிலுள்ள ஆறு ஆதாரங் களோடு (பிடிப்புகள் = Stations) கூடியது.

तत्पार्श्वकोणयोर्जाते द्वे इडापिङ्गले स्थिते ॥ १५ ॥

नाडीचक्रमिति प्राहुः तस्मान्नाड्यस्समुद्गताः ।

15—15½. ஸுஷும்நா என்ற நாடியின் இரு பக்கங்களிலும் அதாவது மூலாதாரத்தில் வடக்கு கோணத்திலும் தெற்கு கோணத்திலும் இடா என்

றும் **பிங்களா** என்றும் இரண்டு நாடிகள் இருக்கின்றன. அவை நெற்றியின் அடிபாகம் பர்யந்தம் வியாபித்து இருப்பதாக கூறுகிறார்கள். இவ்விதம் இடா, பிங்களா, ஸுஷும்நா என்னும் ப்ரதானமான மூன்று நாடிகள் இருக்கும் ப்ரதேசத்தை, நாடீசக்ரமென்று யோகசாஸ்திரகாரர்கள் சொல்லுகிறார்கள். நாடீசக்கிரத்திலிருந்துதான் எல்லா நாடிகளும் கிளம்புகின்றன.

गान्धारीहस्तिजिह्वाख्ये नयनान्तं प्रधावतः ॥ १६ ॥

नाडीचक्रेण संस्यूते नासिकान्तमुभे गते ।

16—16½. நாடீ சக்ரத்தோடு சேர்க்கப்பட்ட காந்தாரீ, ஹஸ்திஜிஹ்வா என்று பெயருள்ள இரண்டு நாடிகள் ஸ்வபாவமாக மூக்குபர்யந்தம் போயிருக்கின்றன. அவைகளே இடை பிங்களைகளில் வாயு பூரணமாகி கிளம்பும் பொழுது (उन्नीयमानदशायां) கண்கள் வரையில் ஓடுகின்றன.

नाभिमण्डलमाश्रित्य कुक्कुटाण्डमिव स्थितम् ॥ १७ ॥

पूषा चालंबुसा नाडी कर्णद्वयमुपाश्रिता ।

17—17½. கோழிமுட்டைபோலிருக்கும் நாபி மண்டலத்தை (மணிபூரக ஸ்தானம்) ஆச்ரயித்து, பூஷா அலம்புஸா என்ற இரண்டு நாடிகள் இரண்டு காதுவரையில் செல்லுகின்றன.

नाडी शुक्लाह्वया तस्माद्भ्रूमध्यमुपसर्पति ॥ १८ ॥

18. நாபிமண்டலத்திலேயே, கீழே சொல்லிய பூஷா அலம்புஸா என்னும் இரண்டு நாடிகளின்

மத்யத்தில் வெளுப்பான சுக்லா என்ற நாடி புறப்பட்டு புருவங்களின் மத்ய ப்ரதேசம் வரையில் செல்லுகிறது.

सरस्वत्याह्वया नाडी जिह्वान्ता वाक्प्रसारिणी ।

नाडी विश्वोदरी नाम भुङ्क्तेऽन्नं सा चतुर्विधम् ॥ १९ ॥

19. நாபி மண்டலத்திலிருக்கும் ஸரஸ்வதி என்று பெயருள்ள நாடி நாக்குவரையில் செல்லுகிறது. பேசுவது என்னும் வாக்ப்ரஸரத்தை உண்டுபண்ணுகிறது. லேஹ்யம், சோஷ்யம், போஜ்யம், பக்ஷ்யம் என்று நாலுவிதமான அன்னத்தை ஜாடராக்நி பாகம் செய்கிறது. அதன் ரஸத்தை விசுவோதரீ என்னும் நாடி சாப்பிடுகிறது.

पीत्वा पयस्विनी तोयं कण्ठस्था कुरुते क्षुतम् ।

19½. நாபிமண்டலத்திலிருந்து கிளம்பும் பயஸ்விநீ என்னும் நாடி ஜலத்தைசாப்பிட்டு கண்டதேசத்திலிருந்து கொண்டு க்ஷுதத்தை (தும்மலை) செய்கிறது.

नाडीचक्रात्समुद्भूताः नाड्यस्तिस्रस्त्वधोमुखाः ॥ २० ॥

राका शुक्रं सिनीवाली मूत्रं मुञ्चेत्कुहूर्मलम् ।

20—20½ கீழே சொல்லப்பட்ட நாடீசக்கரத்திலிருந்து கீழ்நோக்கி ராகா, ஸிநீவாலீ, குஹூ என்ற மூன்று நாடிகள் கிளம்புகின்றன. அவைகளில் ராகா என்ற நாடி சுக்லம் என்ற இந்திரிய தேஜஸ்ஸை வெளிப்படுத்துகிறது. ஸிநீவாலி என்ற நாடி மூத்திரத்தை வெளிப்படுத்துகிறது. குஹூ என்ற நாடி மலத்தை வெளிப்படுத்துகிறது.

भुक्तान्नरसमादाय शखिनी धमनी पुनः ॥ २१ ॥

कपालकुहरं गत्वा मूर्ध्नि संचिनुते सुधाम् ।

21—21½. நாபீ சக்ரத்திலிருந்து கிளம்பும் சங்கிநீ என்னும் தமநீ ரத்தக்குழாய் சாப்பிட்ட அன்னத்தின் ரஸத்தை எடுத்துக்கொண்டு தலையிலிருக்கும் மண்டையோட்டின் நடு ப்ரதேசமான ஆகாசத்தை அடைந்து மஸ்தகத்தில் (ஸஹஸ்ரார பத்ம ஸ்தானத்தில்) அம்ருதத்தை எப்பொழுதும் விருத்தி பண்ணிக்கொண்டேயிருக்கிறது. யோகாப்யாஸத்தால் அந்த அம்ருதத்தை பானம் பண்ணுவார்களென்று யோக சாஸ்திரம் கூறுகிறது.

शतं चैका च नाड्यस्स्युस्तासामेका शिरोगता ॥ २२ ॥

तयोर्ध्वमायन्मुक्तः स्यादिति वेदान्तशासनम् ।

22—22½. இவ்வாறு ப்ராணன், மனது, இந்திரியங்கள் ஸஞ்சரிக்குமிடமான நாடிகள் 101 இருக்கின்றன. அவைகளில் ஒரு நாடி தலைவரையில் செல்லுகிறது. அதுதான் ஸுஷும்நா நாடி. அதன் வழியாக ப்ராணன் வெளியில் சென்றால் அர்ச்சிராதி மார்க்கம் வழியாய் ப்ரம்ம லோகம்போய் மோக்ஷத்தை அடைகிறான் என்று (शतं चैकाच हृदयस्य नाड्यः तासां मूर्धानमभिनिस्सृतैका । तयोर्ध्वमायन्नमृतत्वमेति विष्वङ्ङन्या उत्क्रमणे भवन्ति ॥ என்ற வேதாந்த வாக்யம் உபநிஷத் வாக்யம் போதிக்கிறது.

यदा बुद्धिगतैःपुण्यैः प्रेरितेन्द्रियमार्गतः ॥ २३ ॥

शब्दादीन् विषयान् भुंक्ते तदा जागरितं भवेत् ।

23—23½. கிரியாசக்தி உள்ள அந்த:கரணம் என்னும் புத்தியிலிருந்து புண்ய பாபங்களால் ப்ரேரணம் செய்யப்பட்ட இந்திரியங்களின் மார்க்க மான கோளகம் வரையில் வியாபித்த நாடிகள் வழி யாக வெளியிலிருக்கும் சப்தம் முதலிய விஷயங்களை அனுபவிக்கும்போது அந்த:கரணத்தில் ப்ரதிபிம்ப மாயிருக்கும் சைதந்ய ஸ்வரூபமான ஆத்மாவுக்கு ஜாகரிதம் என்ற அவஸ்தை ஏற்படுகிறதென்று சொல்லுவார்கள்.

संहृतेष्विन्द्रियेष्वेषु जाग्रत्संस्कारजान् पुमान् ॥ २४ ॥
मानसान्विषयान् भुङ्क्ते स्वप्नावस्था तदा भवेत् ।

24—24½. அந்த:கரணத்தால் எல்லா இந்திரி யங்களும் கோளகத்திலிருந்து நாடீ ஸ்தானங்களில் உப ஸம்ஹரிக்கப்படும்பொழுது இந்திரியங்களால் அனுபவம் ஏற்படாது. அப்பொழுது ஜாகரித காலத் தில் இந்திரியங்களால் உண்டான அனுபவத்தா லுண்டான ஸம்ஸ்காரத்தோடு கூடிய மனதின் பரிணமமான யானை, குதிரை, ரதம் முதலிய விஷ யங்களை ஆத்மா அனுபவிக்கிறான். அது ஸ்வப்நா வஸ்தை என்று சொல்லப்படும்.

मनसोऽप्युपसंहारः सुषुप्तिरिति कथ्यते ॥ २५ ॥

25. ஸம்ஸ்காரம் என்னும் வாசனைகளோடு கூடின அந்த:கரணம் என்னும் மனது தன் ஸ்வரூப மான காரணமான அஜ்ஞானமாகவே இருப்பதுதான் மனதின் உபஸம்ஹாரம். ஒருவித ஞானமுமில்லாம லிருக்கும் அந்த சமயம் ஆத்மாவுக்கு ஸுஷுப்தி அவஸ்தையென்று சொல்லுகிறார்கள்.

तस्मान्मायासमाच्छन्नः सन्मात्रो वर्तते पुमान् ।
मूढो मत्तोऽज्ञ इत्येवं मायावेशात् प्रकाशते ॥ २६ ॥

26. ஆகையால் மனது ஸ்வகாரணமான மாயா ஸ்வரூபமாயிருப்பதால் ஸுஷுப்தி காலத்தில் ஸத்ரூபமான ஆத்மா மாயையால் மூடப்பட்டவனுயிருக்கிருன். மாயா ஸம்பந்தத்திஞல் தூங்கின மனிதன் விழித்துக் கொண்ட பிறகு, தான் மூடனுகவும் மதமுள்ளவனுயும் அஜ்ஞனுயுமிருந்ததாக நினைக்கிருன்.

सुखमस्वाप्समित्येवं प्रबोधसमये पुमान् ।
सच्चिदानन्दरूपस्सन् सम्यगेव प्रकाशते ॥ २७ ॥

27. விழித்துக்கொண்ட பிறகு நான் சுகமாய் தூங்கினேன் என்ற அனுபவத்தால் ஸத்ரூபமாயும் சித்ரூபமாயும் ஆனந்த ரூபமாயுமுள்ள ஆத்மா நன்ருக ப்ரகாசிக்கிருன். நித்திரை காலத்தில் ஆனந்தத்தை கொடுக்கக்கூடிய வேறு ஸாதனங்களில்லாதபடியால் ஆத்மாவின் உண்மை ஸ்வரூபமான சுகமே அப்பொழுது அனுபவிக்கப்பட்டது. விழித்த பிறகு அதுவே அனுஸந்தானம் செய்யப்படுகிறது. ஆகையால் ஆத்மா வெவ்வேறு அவஸ்தைகளில் வெவ்வேறு விதமாகத் தோன்றினுலும் உண்மையில் ஸச்சிதாநந்தரூபன் என்ற தத்துவம் வெளியாகிறது.

इत्थं जगत्समाविश्य भासमाने महेश्वरे ।
सूर्यादयोऽपि भासन्ते किमुतान्ये घटादयः ॥ २८ ॥

28. ஜாகராவஸ்தையை அபிமானிக்கும் ஜீவாத்மாவுக்கு விச்வனென்றும், ஸ்வப்நாவஸ்தையை அபிமானிக்கும் ஜீவனுக்கு தைஜஸனென்றும் ஸுஷுப்

தியவஸ்தையை அபிமானிக்கும் ஜீவாத்மாவுக்கு ப்ராஜ்ஞனென்றும் பெயர் சாஸ்திரத்தில் சொல்லப் பட்டு இருக்கிறது. இவ்விதம் பிரபஞ்சத்தில் ப்ர வேசித்து மஹேசுவரன் (चिदात्मा) விச்வ தைஜஸ ப்ராஜ்ஞ ரூபமாக ப்ரகாசிக்கும்பொழுதுதான் ப்ரகாச ஸ்வபாவமான சூரியன் முதலியவர்களும் பிரகாசிக்கிறார்கள், தானாக ப்ரகாசிப்பதில்லை. அப்படியிருக்க ப்ரகாச ஸ்வபாவமில்லாத குடம் முதலிய வஸ்துக்கள் தானாக ப்ரகாசிப்பதில்லை என்று சொல்லவேண்டியதே இல்லை.

तस्मात् सत्ता च भावानामीश्वराश्रयणाश्रया ।
सत्यं ज्ञानमनन्तञ्च श्रुत्या ब्रह्मोपदिश्यते ॥ २९ ॥

29. ஆகையால் ஸத்தையும் ஸ்புரணமும் ஈசுவர னுடையதே. ஈசுவரனிடத்தில் தாதாத்மிய ஸம்பந் தத்தால் உலகம் ஆரோபிதமானதால் ஈசுவர ஸத் தையும் ஈசுவர ஸ்புரணமும் உலகத்தில் தோன்று கிறது. (ईश्वराश्रयणाश्रया) (ஈச்வர ஸம்பந்தாதீனமானது) என்று பொருள். சுலோகத்தில் "ச" என்ற பதத் தால் ஸ்புரணம் சொல்லப்பட்டிருக்கிறது. ஈசுவரன் ஸ்வபாவமாகவே ஸத்ரூபமென்றும் ப்ரகாசஸ்வரூப மென்றும் "सत्यं ज्ञानमनन्तं ब्रह्म" என்ற வேதம் உபதேசிக் கிறது. ஆகையால் ஸ்வபாவத்திலேயே ஸத்யமா யும் ப்ரகாசமாயுமிருப்பவர் ஈசுவரனே.

जाग्रत्स्वप्नोद्भवं सर्वमसत्यं जडमन्ववत् ।
ईश्वरश्चाहमित्येवं भासते सर्वजन्तुषु ॥ ३० ॥

30. ப்ரம்மம் ஸத்யம் என்று சொன்னதாலேயே அதைத் தவிர ஜாக்ரத் காலத்திலும் ஸ்வப்ந காலத்திலுமுள்ள எல்லா வஸ்துவும் அஸத்தியம் என்றும், ப்ரம்மம் ஜ்ஞானஸ்வரூபம் என்பதாலேயே அதைத் தவிர எல்லா வஸ்துவும் அப்ரகாசம், ஜடம், குருடன் போலுள்ளது என்றும் விளங்குகிறது. ஈசுவரனே எல்லா ஜந்துக்களிலும் நான் (अहं) என்று ப்ரகாசிக்கிறான்.

निर्विकल्पश्च शुद्धश्च मलिनश्चेत्यहं त्रिधा ।

30½. அஹம் என்னும் அனுபவத்தில் பாஸிக்கும் வஸ்து (1) நிர்விகல்பம், (2) சுத்தம், (3) மலினம் என்று மூன்று விதம்.

निर्विकल्पं परं ब्रह्म निर्धूताखिलकल्पनम् ॥ ३१ ॥

धूल्यन्धकारधूमाभ्रनिर्मुक्तगगनोपमम् ।

31—31½. ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை யடைந்த யோகிகளுக்கு அஹம் என்ற அனுபவத்தில் புழுதி இருட்டு புகை மேகம் முதலியவைகளற்ற சுத்தமான எங்கும் நிறைந்த ஆகாசம் போல, ஒருவிதமான உலக கல்பனையற்றதான பரம் ப்ரம்மமே தோன்றுகிறது. யோகிகளின் அஹம் என்னும் அவபாஸத்தில் விஷயமானது நிர்விகல்பம் பர ப்ரம்மமே.

विवेकसमये शुद्धं देहादीनां व्यपोहनात् ॥ ३२ ॥

यथाऽन्तरिक्षं संक्षिप्तनक्षत्रैः किञ्चिदीक्ष्यते ।

32—32½. புழுதி முதலிய அழுக்குகளில்லாம லுள்ள ஆகாசம் அதிஸ்வல்பமான நக்ஷத்திர ஒளிக ளோடுகூட சற்று நேரம் தெரிவதுபோல, சரீரம் ப்ராணன் மனது இவைகள் அஹம் பதார்த்தமாக (நாளுக) இருக்க முடியாதென்று தேஹாதிகளை விலக்கி, விவேகம் செய்யுங் காலத்தில் அஹம் என் னும் அனுபவத்தில் விஷயமாகத் தோன்றுவது சுத்தம்.

देहेन्द्रियादिसंसर्गान्मलिनं कलुषीकृतम् ॥ ३३ ॥
यथाऽऽकाशं तमोरूढं स्फुरत्यनवकाशवत् ।

33—33½. இருட்டு சூழ்ந்த குறிப்பிட்ட பிரதேசத் திலிருப்பதாகத் தோன்றும் ஆகாசம்போல, அஜ் ஞானிகளான எல்லாருடைய அஹம் என்னும் அனு பவத்தில் தேஹம் ப்ராணன் இந்திரியம் இவைகளாக எண்ணினதால் அவைகளால் அழுக்கடைந்த ஸ்வரூ பம் தோன்றுகிறது.

अहमित्यैश्वरं भावं यदा जीवः प्रबुध्यते ॥ ३४ ॥
सर्वज्ञः सर्वकर्ता च तदा जीवो भविष्यति ।

34—34½. ஜீவன் புண்யவசத்தால் அஹம் என் னும் ஈச்வரபாவத்தை (அதாவது ஒரு கல்பனையு மற்ற நிர்விகல்ப ஸச்சிதானந்தத்தை) அனுபவிக் கும்பொழுது, ஜீவன், ஸர்வஜ்ஞன் ஸர்வகர்த்தா என்று சொல்லும் ஸ்வரூபமாகவே ஆய்விடுவான்.

माययाऽधिकसंमूढो विद्ययेशः प्रकाशते ॥ ३५ ॥
निर्विकल्पानुसंधाने सम्यगात्मा प्रकाशते ।

35—35½. ஜீவன் ஈசுவரன் என்ற விபாகம் மாயையால் ஏற்பட்டபடியால் மாயையால் மூடனுன ஈச்வரஸ்வரூபம் ஆத்ம வித்யையால் நன்ருக ப்ரகா சிக்கப்படுகிறது. கல்பனையற்ற நிர்விகல்பமான ஆத்மாநுஸந்தானத்தில் ஆத்மா நன்ருக பிரகாசிக் கிறது. ஆதலால் அதற்கு யத்னம் செய்யவேண்டு மென்று கருத்து.

अविद्याख्यतिरोधानव्यपाये परमेश्वरः ॥ ३६ ॥
दक्षिणामूर्तिरूपोऽसौ स्वयमेव प्रकाशते ।

36—36½. ஆத்ம வித்யையால் அவித்யை என்ற மறைவு போனுல் ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி ஸ்வரூபமான பரமேசுவரன் தானுகவே ப்ரகாசிக்கிருன்.

इति श्रीदक्षिणामूर्तिस्तोत्रार्थप्रतिपादके ॥ ३७ ॥
प्रबन्धे मानसोल्लासे चतुर्थोल्लाससंग्रहः ॥

37—37½. ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்திரத்தின் கருத்தை விளக்கும் மானஸோல்லாஸ புத்தகத்தில் நான்காவது உல்லாஸத்தின் சுருக்கம் முற்றிற்று.

ஐந்தாவது சுலோகத்தின்

அவதரணிகை

प्रमाणमेकं प्रत्यक्षं तत्त्वं भूतचतुष्टयम् ।
मोक्षश्च मरणान्नान्यः कामार्थौ पुरुषार्थकौ ॥ १ ॥

1. சார்வாகர் பௌத்தர் முதலிய வாதிகளின் மதத்தின் தூஷணத்திற்காக ஐந்தாவது சுலோகம் ஆரம்பிக்கப்படுகிறது.

முதலில் ஐந்து சுலோகங்களால் சார்வாகமதம் நிரூபிக்கப்படுகிறது. யதார்த்தஞானம் ப்ரத்யக்ஷம் ஒன்றே. அதற்கு காரணமான ப்ரமாணமும் ப்ரத்யக்ஷம் ஒன்றே. இந்திரியங்களால் அறியாத வஸ்துக்கள் கிடையாது. ஆகையால் ப்ருதிவீ, ஜலம், தேஜஸ், வாயு என்னும் நான்கு பூதங்களே பதார்த்தங்கள். வாயு வீசும்பொழுது த்வகிந்திரியத்தால் ப்ரத்யக்ஷமாக வாயுவை அறிகிறோம். ஆகாசம், காலம், ஆத்மா முதலியவைகள் அவ்விதம் அறியப்படாததால் அவைகள் ஒப்புக்கொள்ளப்படவில்லை. நான்கு புருஷார்த்தங்கள் என்று சொல்லுவதும் தவறு. தர்மம் என்பது இந்திரியங்களால் அறியப்படவில்லை யாகையால் கிடையாது. மோக்ஷம் என்பது மரணத்தை தவிர வேறில்லை. மரணம் ஒருவனாலும் விரும்பப்படுவதில்லை. ஆகையால் புருஷார்த்தமாகாது. ஆகவே காமமே எல்லாராலும் விரும்பப்படும் புருஷார்த்தம். அதற்கு ஸாதனமான அர்த்தமும் விரும்பப்படுகிறது. ஆகையால் காமமும், அர்த்தமும் இரண்டு புருஷார்த்தங்கள்.

न कश्चिदीश्वरः कर्ता परलोककथा वृथा ।

1½. ப்ருதிவீ முதலிய பூதங்கள் ஸ்வபாவ மாகவே பரிணமங்களை அடைகின்றன. பூமியில் விதைத்த விதையிலிருந்து முளையை உண்டுபண்ணு கிறவர் யாரும் காணப்படவில்லை. ஆகவே உல கத்தை படைத்தவர் ஈசுவரர் என்று ஒருவர் கிடை யாது. நாம் இறந்த பிறகு பரலோகத்தில் சௌக் கியத்தை அடையவேண்டும். அதற்கு ஸாதனமான தர்மங்களை கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற வாதமெல்லாம் வ்யர்த்த மான கதையே. பரலோகம் நமக்கு புலன்களால் புலப்படவில்லை.

देहं विनास्ति चेदात्मा कुंभवद्दृश्यतां पुरः ॥ २ ॥
ह्रस्वो दीर्घो युवा बाल इति देहोभिदृश्यते ।
अस्ति जातः परिणतो वृद्धः क्षीणो जरन्मृतः ॥ ३ ॥
इत्येवमुक्ताः षड्भावविकारा देहसंश्रयाः ।

2—3½. நாம் இறந்த பிறகு வேறு சரீரத்தை எடுத்து சுகதுக்கங்களை அனுபவிக்கிறோம் என்று சொன்னால் இந்த சரீரமே ஜன்மாந்தரத்தை அடைய முடியாது. இந்த சரீரம் மரணமடைந்த பிறகு சாம் பலாய் விடுகிறது. ஆகவே தேஹத்தைத் தவிர வேறு ஒரு ஜீவன் இந்த தேஹ ஸம்பந்தத்தை விட்ட பிறகு அவனுடைய புண்ய பாபத்தை அனுசரித்து வேறு சரீரத்தை அடைகிறான் என்று சொல்லவேண் டும். அது சரியல்ல. தேஹத்தைத் தவிர வேறு ஆத்மா இல்லை. அப்படி இருக்குமேயானால் நமக்கு

எதிரில் குடம் இந்திரியங்களால் அறியப்படுவது போல தேஹத்தை விட வேறுபட்ட ஆத்மா தெரிய வேண்டும். அப்படி தெரியவில்லை. இந்திரியங்க ளால் குட்டையாயும் நெட்டையாயும் பாலனுயும் யௌவன முள்ளவனுயும் காணப்படுகிறது. குள்ளம் உயரம் முதலியவைகள் தேஹத்தின் தர்மங்களே. ஆகையால் இந்திரியங்களுக்கு சரீரமே புலப்படு கிறது. ஒருவன் பிறந்து இருக்கிருன், கொஞ்ச நாளாய் கொஞ்சம் கொஞ்சமாய் வளருகிருன், பிறகு விருத்தியடைகிருன், பிறகு க்ஷீண தசையை அடை கிருன், பிறகு நாசத்தை அடைகிருன் என்று சொல் லும் ஷாவவிகாரங்கள் தேஹத்திலேயே காணப் படுகின்றன. ஒரு பதார்த்தத்திற்கு ஆறு விகாரங் கள், அதாவது: (1) உண்டாவது (2) இருப்பது (3) விருத்தியடைவது. (4) (பரிணமத்தை) மாறு தலை அடைவது (5) குறையும் அவஸ்தை (6) நாச மடைவது, என்று யாஸ்க நிருக்தத்தில் சொல்லி யிருக்கிறது.

वर्णाश्रमविभागश्च देहेष्वेव प्रतिष्ठितः ॥ ४ ॥

जातकर्मादिसंस्कारः देहस्यैव विधीयते ।

शतं जीवेति देहस्य प्रयुञ्जन्त्याशिषं शुभाम् ॥ ५ ॥

4—5. வேதத்தை நம்பின ஆஸ்திகர்களுடைய பிராமணன், க்ஷத்திரியன், வைச்யன், சூத்ரன் என்ற வர்ணப் பிரிவுகளும் ப்ரம்மசாரி, கிருஹஸ்தன், வானப்ரஸ்தன், சந்யாசி என்ற ஆசிரமப் பிரிவுகளும், தேஹத்தை யொட்டியே இருக்கின்றன. சரீரமே, ப்ராம்மணன், ப்ரம்மசாரி முதலிய வியவஹாரத்துக்

குரியதாக இருக்கிறது. வைதிகர்களால் குழந்தை பிறந்தவுடன் ஜாதகர்மா என்னும் ஒரு ஸம்ஸ்காரம் விதிக்கப்படுகிறது. அதுவும் தேஹத்திற்குரியது. வைதிகர்கள் கொள்கையிலும் பிறப்பது சரீரமே. பெரியோர்கள் நூறு வயது ஜீவித்து இருப்பாயாக என்று சுபமான ஆசீர்வாதம் செய்கிருர்கள். நூறு வயது ஜீவிப்பது சரீரமே.

इति प्रपञ्चं चार्वाको वाचयत्यल्पचेतनः ।

5½. ஆகவே தேஹமே ஆத்மா அதைத் தவிர வேறில்லே என்று விஸ்தாரமாக, அதிக ஸூக்ஷ்ம புத்தி இல்லாத ஸ்தூல புத்தி உள்ளவனும் அழகாகப் பேசுபவனுமான சார்வாகன் சிஷ்யர்களுக்கு போதிக்கிருன்.

केचिच्छ्वसिमि जीवामि क्षुधितोऽस्मि पिपासितः ॥ ६ ॥

इत्यादिप्रत्ययबलात् प्राण आत्मेति मन्वते ।

6—6½. சார்வாகர்களேவிட கொஞ்சம் ஸூக்ஷ்ம திருஷ்டியுள்ள சிலர் தேஹத்தைவிட வேருன, ப்ராணனே ஆத்மா வென்று அபிப்ராயப்படுகிருர்கள். ஏனெனில் நான் மூச்சு விடுகிறேன் நான் ஜீவித்து இருக்கிறேன் நான் பசி உள்ளவனுக இருக்கிறேன் நான் தாஹ முள்ளவனுக இருக்கிறேன் என்று நமக்கு அனுபவமிருக்கிறது. ஜீவனம், பசி, தாஹம் முதலியவை தேஹ தர்மமல்ல. ப்ராணன் போன பிறகு இவைகள் சரீரத்தில் காணப்படுவதில்லே. ஆகவே பசி, தாஹம் ஜீவித்தல் முதலிய தர்மங்களே உடைய ப்ராணனே ஆத்மா என்று சிலர் அபிப்பிராயப்படுகிருர்கள்.

केचिच्छृणोमि पश्यामि जिघ्रामि स्पन्दयाम्यहम् ॥ ७ ॥

इतीन्द्रियाणामात्मत्वं प्रतियन्ति ततोऽधिकम् ।

7—7½. நான் கேட்கிறேன், நான் பார்க்கிறேன், நான் முகருகிறேன், நான் அசைகிறேன் என்று அனுபவம் உண்டாகிறது. கண் பார்க்கிறது, காது கேட்கிறது. மூக்கு முகருகிறது கை முதலிய கர்மேந்திரியங்கள் கிரியைகளை செய்கின்றன. ஆகையால் பார்க்கும் கேட்கும் இந்திரியங்களே ஆத்மா. ஒரு சரீரத்தில் பல ஆத்மாக்கள் உண்டு என்று மற்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

जानामिप्रत्ययबलात् बुद्धिरित्यपरे जगुः ॥ ८ ॥

मायाव्यामूढचित्तानां तेषां दूषणमुच्यते ।

8—8½. அஹம் ஜாநாமி (अहं जानामि) நான் அறிகிறேன் என்று அனுபவத்தால் விஜ்ஞானம் ஆத்மா.

விஜ்ஞானம் இரண்டு விதம் (1) ஆலய விஜ்ஞானம், (2) ப்ரவிருத்தி விஜ்ஞானம். நான் என்ற விஜ்ஞானம் ஆலய விஜ்ஞானம். இது குடம் இது வஸ்திரம் என்றவாறுள்ள விஜ்ஞானம் ப்ரவிருத்திக்குக் காரணமானதால் ப்ரவிருத்தி விஜ்ஞானம். ஆலய விஜ்ஞானம் ஆத்மா. விஜ்ஞானம் ஒரு க்ஷணமேயிருக்கும். காவேரியில் ஜலப்ரவாஹம் ஓடுகிறது. சற்றுமுன் ஓடின ஜலம் வேறு, அது கிழக்கே போய் விட்டது. வேறு ஜலம் இப்பொழுது ஓடுகிறது. ஆனால் தடையில்லாமல் ஓடிக்கொண்டிருப்பதால் ஒன்றாகத் தோன்றுகிறது. அதுபோல ஆலய விஜ்ஞானம் ஒரு க்ஷண மிருக்கும். அடுத்த க்ஷணத்

தில் மற்றெரு ஆலய விஜ்ஞானமுண்டாகிறது. இவ்விதமாக ப்ரவாஹமாக ஒவ்வொரு க்ஷணத்தி லுண்டாகி நாசத்தையடையும் விஜ்ஞானம் க்ஷணிக விஜ்ஞானம் ஆத்மாவென்று பௌத்தர்கள் கூறுகிறார் கள். ஸ்வப்நாவஸ்தை தாண்டி ஸுஷுப்தி அவஸ் தையில் ஒருவித விஜ்ஞானமும் இல்லாமையால் ஆத்மா சூந்யமென்று சில பௌத்தர்கள் கூறுகிறார் கள். இவ்விதம் மாயையால் மதிமயக்கமடைந்த வாதிகள் ஐந்தாவது சுலோகத்தால் நிராகரிக்கப் படுகிறார்கள்.

देहं प्राणमपीन्द्रियाण्यपि चलां बुद्धिञ्च शून्यं विदुः
स्त्रीबालान्धजडोपमास्त्वहमिति भ्रान्ता भृशं वादिनः ।
मायाशक्तिविलासकल्पितमहाव्यामोहसंहारिणे
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ५ ॥

பதவுரை:—ये वादिनः =எந்தவாதிகள் देहं = தேஹத்தையும் प्राणमपि =பிராணனையும் इन्द्रियाण्यपि = இந்திரியங்களையும் चलां बुद्धिं = க்ஷணிக விஜ்ஞானத்தையும் शून्यञ्च =சூன்யத்தையும் अहमिति = நான் என்று அதாவது ஆத்மாவென்று विदुः =அறிகிறார்களோ, ते =அவர்கள் स्त्रीबालान्धजडोपमाः = ஸ்திரீகள், சிறுவர்கள், குருடர்கள், மூடர்கள் இவர் களைப்போன்றவர்களாக भृशं = மிகவும் भ्रान्ताः = உண்மை அறிவு இல்லாமல் பிராந்தி உள்ளவர்கள். (மயங்கியவர்கள்.) मायाशक्ति विलासकल्पितमहाव्यामोहसंहारिणे =ஸ்வரூபத்தை அறியாமை என்னும் மாயா சக்தியின் விலாஸத்தினால் ஏற்பட்ட பெரிய

மோஹத்தை (தத்துவ உபதேசத்தால்) நீக்குபவரான तस्मै—नमः அந்த குருமூர்த்தி ஸ்வரூபமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் உரியது.

அஹம் (நான்) என்னும் அனுபவத்திற்கு விஷயமானது தேஹம் என்றும் ப்ராணன் என்றும் இந்திரியங்கள் என்றும் க்ஷணிக விஜ்ஞானம் என்றும் சூந்யமென்றும் அறியும் வாதிகள் ஸ்திரீகள் போலவும், குழந்தைகள் போலவும் குருடர் போலவும் பிசாசம் முதலிய கிரஹங்களால் பீடிக்கப்பட்டவர்கள் போலவும் மிகவும் உண்மையறிவு இல்லாமல் ப்ராந்தி உடையவர்களே. இவ்விதம் பலவிதமாக ஒன்றுக்கொன்று முரண்படும் கல்பனைகளை கல்பிப்பது, இந்த கல்பனைகளுக்கு ஸாக்ஷியாக இருக்கும் ஸாக்ஷிஸ்வரூபத்தை அறியாமை என்னும் மாயா சக்தியின் விலாஸமே. இவ்வாறு மாயாசக்தியின் விலாஸத்தால் உண்டான பெரிய மோஹத்தை தத்துவோபதேசத்தால் ஸம்ஹாரம் செய்யும் ஸ்ரீ குருமூர்த்தி ஸ்வரூபமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

इदमस्य तात्पर्यं = இந்த சுலோகத்தின் அபிப்பிராயம் சொல்லப்படுகிறது.

देहादीनां जडादीनां पाषाणवदनात्मनाम् ॥ ९ ॥

कथं भवेदहंभावः समावेशं विनेशितुः ।

9—9½. தேஹம் இந்திரியம் முதலியவைகள் ஜடமானவை. கற்கள் ஜடமானவை. ஆத்மாவாக இருப்பதில்லை. ஆகவே கற்கள்போல ஜடமான அனாத்மாவான சரீரம் முதலியவற்றில் நமக்கு அஹம்

என்ற நான் என்னும் பாவம் சித்ரூபமான ஈசுவர னுடைய சம்பந்தமில்லாமல் எப்படி யுண்டாகும்? அசேதனமான சரீராதிகளை நாம் என்று நினைப்பது சேதனமான சித்ஸ்வரூபத்தின் ஸம்பந்தத்தாலே தான். ஆகையால் சித்ஸ்வரூபமே சேதனன் ஆத்மா என்பது கருத்து.

देहस्तावदयं नात्मा दृश्यत्वाज्जाड्यवत्त्वतः ॥ १० ॥

रूपादिमत्त्वात्सांशत्वात् भौतिकत्वाच्च कुम्भवत् ।

10—10½. தேஹம் ஆத்மாவாகாது என்ற விஷ யம் நான்கு சுலோகங்களால் நிரூபிக்கப்படுகிறது. வேறென்றால் ப்ரகாசிக்கின்ற குடம் ஆத்மா இல்லை. அதுபோல சரீரமும் தானாகப்பிரகாசிப்பதில்லை. வேறு பதார்த்தத்தால் பிரகாசிக்கப்படுகிறது. ஆகவே குடம்போல் சரீரமும் ஆத்மாவாக இருக்க முடியாது. (2) குடம் ஸ்புரணரூபமில்லை. அப்படி யானால் அது இருக்கும்போதெல்லாம் அதன் ப்ரகா சம் இருக்கவேண்டும், அப்படி இல்லை. ஆகையால் அது ஜடம். ஆத்மாவாக இல்லை. அதுபோலவே சரீரமும் ஸ்புரணஸ்வரூபமாக இல்லாத ஜடமான தால் ஆத்மாவாக இருக்கமுடியாது. (3) கருப்பு வெளுப்பு முதலிய ரூபமுள்ள அனாத்மாவான குடம் போல் கருப்பு முதலிய ரூபமுள்ள சரீரமும் ஆத்மா வாக இருக்கமுடியாது. (4) அவயவமுள்ள அனாத்மா வான குடம்போல அவயவமுடைய சரீரமும் ஆத்மா வாக இருக்கமுடியாது. ப்ருதிவீ என்ற பூதத்தா லுண்டாக்கிய குடம் போல ப்ருதிவீ ஜலம் தேஜஸ் வாயு ஆகாசம் என ஐந்து பூதங்களால் உண்டான

சரீரமும் ஆத்மாவாக இருக்கமுடியாது. 5 அனுமானங்களால் சரீரம் ஆத்மாவாகாது என்று நிரூபணம் செய்யப்பட்டது.

मूर्च्छासुषुप्तिमरणेष्वपि देहः प्रदृश्यते ॥ ११ ॥

देहाद्व्यतिरिक्तत्वात्तदात्मा न प्रतीयते ।

11—11½. தேஹமே ஆத்மாவாக இருந்தால் தேஹம் நன்முக தெரியும்பொழுது, நான் என்று ஆத்மாவுக்கு அவபாஸம் (தோற்றம்) ஏற்படவேண்டும். ப்ராணவியோகமான பின்பு மரணவஸ்தையிலும், ஸ்வப்நாவஸ்தைக்கு பிறகு (ஒருவித அறிவுமில்லாத) ஸுஷுப்தியவஸ்தையிலும் அதிக சிரமத்தை அனுபவித்ததால் மூர்ச்சை என்னும் அர்த்த ஸம்பத்தி அவஸ்தையிலும் நான் என்று ஆத்மாவின் தோற்றமில்லை. ஆனல் சரீரம் இருக்கிறது. ஆகையால் சரீரம் ஆத்மாவாகாது. தேஹத்தைக் காட்டிலும் வேருக சித்ஸ்வரூபமான ஆத்மாவிருக்கிருன். அவன் கீழ்ச்சொல்லிய அவஸ்தைகளில் பிரகாசிப்பதில்லை. ஜாக்ரதவஸ்தையில் பிரகாசிக்கிருன்.

यथा जगत्प्रवृत्तीनामादिकारणमंशुमान् ॥ १२ ॥

पुमांस्तथैव देहादिप्रवृत्तौ कारणं परम् ।

12—12½. பகலில் உலகத்தில் உண்டாகும் ஸகலவிதமான வ்யாபாரங்களும் உலகத்திற்கு ப்ரகாசமான ஸூர்யனல் ஏற்படுகின்றன. உண்டாகும் வ்யாபாரங்கள் ஸூர்யனிடமில்லை. ஆகவே வ்யாபாரங்கள் தாங்களிருக்கும் இடத்தைத் தவிர வேறு ப்ரகாசத்தாலேயே உண்டாகின்றன என்பதைக் காண்

கிறோம். அதே போல சரீரம் வேலைகளைச் செய் கிறது. இந்த வேலைகள் வேலைகளுக்கிருப்பிடமான சரீரத்தைக் காட்டிலும் வேறான ஒரு ப்ரகாசத்தா லேயே உண்டாக்கப்பட்டிருக்கவேண்டுமென்று தீர் மானம் செய்கிறோம். அந்த ப்ரகாசமே தேஹத்தைக் காட்டிலும் வேறான ஆத்மா.

मम देहोऽयमित्येवं स्त्री बालोऽन्धश्च मन्यते ॥ १३ ॥

देहोऽहमिति नावैति कदाचिदपि कश्चन ।

13—13½. ஒரு ஆபரணத்தை என்னுடையது என்று நினைக்கிறோம். ஆபரணம் ஆத்மா இல்லை. அதுபோல விவேகமில்லாத ஸ்திரீ, குழந்தை, குருடன் இவர்கள் கூட தம்முடைய சரீரம் இளைத்து இருக்கிறது கருப்பாயிருக்கிறதென்று, சரீரத்தை தம்முடையதென்று நினைக்கிறார்கள். ஆகவே ஆபர ணம்போல சரீரமும் ஆத்மாவாகயிருக்க முடியாது. மேலும், தேஹமே ஆத்மாவானால் நான் சரீரமென்று அனுபவம் உண்டாவது பொருத்தமாகும். அவ் விதம் யாருக்கும் ஒரு காலத்திலும் அனுபவம் வரு கிறதில்லை. ஆகையால் சரீரம் ஆத்மாவாக விருக்க முடியாது. நான் மனிதன் என்ற அனுபவம் உண் டாகிறது. மனிதத்தன்மை சரீரத்திற்குரியது. ஆகவே மனிதன் என்ற சரீரத்தில் நான் என்ற அனு பவம் உண்டாகிறது. ஆனால் ஸ்வப்னத்தில் தன் னையே ஒரு புலியாக நினைக்கிறான். தான் புலி என்று தோற்றமேற்படுகிறது. நான் என்னும் அனு பவம் தொடர்ந்து வருகிறது. மனிதன் என்ற அனு பவம் தொடரவில்லை. ஆகையால் மனிதன் புலி

முதலிய மாறி மாறி வரும் தோற்றங்களில் தொடர்ந்து அஹம் (अहं) என்று தோன்றும் ஆத்மா மனிதர்களின் சரீரத்தைவிட வேருனது என்று தீர்மானம் செய்கிருேம்.

इन्द्रियाण्यपि नात्मानः करणत्वात्प्रदीपवत् ॥ १४ ॥

14. 3½ சுலோகங்களில் இந்திரியங்கள் ஆத்மாமாவாக இருக்கமுடியாது என்று நிரூபணம் செய்யப்படுகிறது. இருட்டிலிருக்கும் வஸ்துவைப் பார்க்க வேண்டுமானுல் தீபம் வேண்டியதாக இருக்கிறது. தீபத்தின் ஸஹாயத்தால் நாம் வஸ்துவை அறிகிருேம். தீபம் அறிவிற்கு ஸாதனமான கரணம். அது ஆத்மா வில்லை. (நான் என்று அறியப்படுவதில்லை சேதனமில்லை.) அதுபோல நாம் ரூபத்தை அறிய கண் ஸாதனமாய் கரணமாய் இருக்கிறது. ஆத்மா கரணத்தை உடையவன். ஆகவே இந்திரியங்கள் தீபம்போல ஞான கரணமாயிருப்பதால் ஆத்மாவாகயிருக்க முடியாது.

वीणावादनवच्छ्रोत्रं शब्दग्रहणसाधनम् ।

चक्षुः तेजस्त्रितयवत् रूपग्रहणसाधनम् ॥ १५ ॥

गन्धस्य ग्राहकं घ्राणं पुष्पसंपुटकादिवत् ।

रसस्य ग्राहिका जिह्वा दधिक्षौद्रघृतादिवत् ॥ १६ ॥

15—16. இந்திரியங்கள் தன் தன் விஷயங்களின் அறிவை உண்டுபண்ணும் ஸாதனமாயிருக்கின்றன என்பது உதாஹரணத்தோடு இரண்டு சுலோகங்களால் நிரூபிக்கப்படுகிறது. வீணை முதலிய வாத்யத்தின் சப்தத்தை நாம் அறிகிருேம். வீணையே

அறிவதில்லை. சப்தத்தை கிரஹிப்பதற்கு அறிவதற்கு அது ஒரு ஸாதனமாயுள்ளது. அதுபோல ச்ரோத்ர (श्रोत्र) இந்திரியமும் சப்த ப்ரத்யக்ஷத்திற்கு சாதனமான கரணம். சூரியன் சந்திரன் அக்னி என்ற மூன்று தேஜஸ்ஸுகள் ரூபத்தின் ப்ரத்யக்ஷத்திற்கு ஸாதனங்கள். அவைபோல் கண் இந்திரியமும் (தேஜஸ்) ரூபப்பிரத்யக்ஷத்திற்கு கரணமானது. புஷ்பங்கள் அடைத்த ஒரு சம்புடத்தைத் திறந்தால் வாசனை வீசுகிறது. அந்த ஸம்புடம் வாசனையின் ப்ரத்யக்ஷத்திற்கு ஸாதனம். அதுபோல மூக்கு கந்த ப்ரத்யக்ஷத்தின் கரணமாகும். தயிர் தேன் நெய் முதலியவைகள் தித்திப்பு முதலிய சுவைகளை அறிய ஸாதனமானவை. அதுபோல ஜிஹ்வா என்னும் நாக்கு, தித்திப்பு, புளிப்பு முதலிய ரஸங்களை அனுபவிக்க ஸாதனமான கரணம். இவ்விதம் த்வகிந்திரியமும் உஷ்ணம் சீதம் என்ற ஸ்பர்சத்தை அனுபவிக்க ஸாதன கரணம்.

इन्द्रियाणि न मे सन्ति मूकोऽसि बधिरोऽस्म्यहम् ।

इत्याहुरिन्द्रियैर्हीनाः जनाः किं ते निरात्मकाः ॥ १७ ॥

17. ஊமையன் எனக்கு வாக்இந்திரியம் இல்லையென்று ஜாடைகளால் தெரிவிக்கிறான். செவிடானவர்கள் எனக்கு காது இந்திரியமில்லை என்கிறார்கள். குருடர்கள் எனக்கு கண் இந்திரியமில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்கள் மற்ற இந்திரியங்களால் விஷயங்களை அனுபவிக்கிறார்கள். இந்திரியமே ஆத்மா என்றால் அவர்கள் இந்திரியமிழந்தவர்கள் சேதனமல்ல, ஆத்மாவில்லை என்று சொல்லும்

படி நேரிடும். அவ்விதம் யாரும் ஒப்புக்கொள்வதில்லை. மேலும் எனக்கு இந்திரியமில்லை என்று தன்னைக்காட்டிலும் பிரித்து அனுபவம் வருவதாலேயே இந்திரியங்கள் ஆத்மாவாக விருக்கமுடியாது.

प्राणोऽप्यात्मा न भवति ज्ञानाभावात् सुषुप्तिषु ।
जाग्रत्स्वप्नोपभोगोत्थश्रमविच्छित्तिहेतवे ॥ १८ ॥
सुषुप्तिं पुरुषे प्राप्ते शरीरमभिरक्षितुम् ।
शेषकर्मोपभोगार्थं प्राणश्चरति केवलम् ॥ १९ ॥

18—19. ப்ராணன் (வாயு) ஆத்மாவாகமாட்டான் என்பது 5 சுலோகங்களால் நிரூபணம் செய்யப்படுகிறது. ப்ராணனே ஆத்மாவானல் ஸுஷுப்தி ஸமயத்திலும் மூர்ச்சை ஸமயத்திலும் ப்ராணன் வேலை செய்து கொண்டிருப்பதால் ஞானமுண்டாக வேண்டும். நான் என்ற ஞானமாவது உண்டாகவேண்டும். ஒருவித ஞானமும் உண்டாவதில்லை. ஆகையால் ப்ராணன் ஆத்மாவாகமாட்டான். மனதை உபாதியாக உடைய சித்ஸ்வரூபனுன புருஷன் ஜாக்ரத் காலத்திலும் ஸ்வப்ன காலத்திலும் விஷய போகங்களின் அனுபவத்தால் சிரமத்தையடைந்து அந்த சிரமத்தை நிவர்த்தி பண்ணிக்கொள்வதற்காக ஸ்வஸ்தானத்தில் வேலை செய்யாமல் ஸ்வஸ்தமாக இருக்கிருன். அந்த ஸமயத்தில் சரீரத்தை இதர மனிதர்கள் அடக்கம் செய்ய எடுத்துப் போகாமலிருக்கும்படி காப்பாற்றுவதற்காக ப்ராணன் அந்த சரீரத்திலேயே அனுபவிக்க வேண்டிய பலனை உடைய கர்மாக்கள் பாக்கியிருப்பதால் அவைகளை அனுபவிப்பதற்காக

யஜமானனான மனதை உபாதியாக உடைய சித்ஸ்வரூபபுருஷன் ஸ்வஸ்தமாக இருக்கும்போது காவல்காரனாய் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிறான்.

प्राणस्य तत्र चैतन्यं करणोपरमे यदि ।
प्राणे व्याप्रियमाणे तु करणोपरमः कथम् ॥ २० ॥
सम्राजि हि रणोद्युक्ते विरमन्ति न सैनिकाः ।
तस्मान्न करणस्वामी प्राणो भवितुमर्हति ॥ २१ ॥

20—21. இந்திரியம் முதலிய கரணங்களுக்கு யஜமானன் ப்ராணனே. ப்ராணன் யஜமானனின் வேலைக்காரன் அல்ல என்று சொல்லுவது பொருத்தமாகாது. இந்திரியங்கள் வேலை செய்யாமலிருக்கும் ஸுஷுப்தி காலத்தில் ப்ராணனே சேதனனான யஜமானன் என்றால் யஜமானனான ப்ராணன் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது அவன் வேலைக்காரர்களான இந்திரியங்கள் வேலைசெய்யாமலிருக்க முடியாது. அரசன் போர்க்களத்தில் யுத்த வேலையிலீடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது அவனது சேனையிலிருப்பவர்கள் வேலை செய்யாமல் சண்டை செய்யாமலிருப்பதில்லை. ஆகையால் இந்திரியங்களின் யஜமானன் ப்ராணனல்ல.

मनसः प्रेरके पुंसि विरते विरमन्त्यतः ।
करणानि समस्तानि तेषां स्वामी ततः पुमान् ॥ २२ ॥

22. ஆகையால் "यो मनः अन्तरो यमयति" என்ற உபநிஷத்தின் வாக்யப்படி மனதையும் ப்ரேரணை செய்து கொண்டிருக்கும் புருஷன் வேலை செய்யாமல் ஸ்வஸ்தமாக உபரதியடைந்த ஸுஷுப்தி காலத்

தில் அவர் வேலேக்காரர்களான கண் காது முதலிய எல்லா இந்திரியங்களும் வேலே செய்யாமல் உபர தியை அடைகின்றன என்பது பொருத்தமானதால் எல்லா கரணங்களுக்கும் (இந்திரியங்களுக்கும்) யஜ மானன் புருஷனே ; ப்ராணனல்ல.

बुद्धिस्तु क्षणिका वेद्या गमागमसमन्विता ।
आत्मनः प्रतिबिम्बेन भासिता भासयेज्जगत् ॥ २३ ॥

23. க்ஷணிக விஜ்ஞானம் ஆத்மாவாகமாட்டா தென்று 3½ சுலோகங்களால் நிரூபிக்கப்படுகிறது. புத்தி (बुद्धिः) என்று சொல்லப்படும் க்ஷணிக விஜ் ஞானம் உற்பத்தி நாசம் இவ்விரண்டையுமுடையது (गमागम समन्विता = நாசம் உற்பத்தி இவைகளோடு கூடியது.) ஆகையால் மற்ெருரு ப்ரகாசத்தால் பிரகாசிக்கப்படுகிறது. அதாவது, க்ஷணிக விஜ்ஞா னம் என்னும் புத்தியில் ஆத்மஜோதிஸ்ஸின் பிரதி பிம்பம் ஸம்பந்தப்படுகிறது. அதனுல் ப்ரகாசிக்கப் படும் க்ஷணிக விஜ்ஞானம் ஜகத்தைப் ப்ரகாசப்படுத் தும். ஆகவே க்ஷணிக விஜ்ஞானத்திற்கு பாஸக மான சித்ஸ்வரூபமே ஆத்மா.

आत्मन्युत्पद्यते बुद्धिरात्मन्येव प्रलीयते ।
प्रागूर्ध्वञ्चासती बुद्धिः स्वयमेव न सिद्ध्यति ॥ २४ ॥

24. நான் என்னும் ஆலய விஜ்ஞான மென்ற புத்தி ஆத்மாவில் உண்டாகிறது. ஆத்மாவிலேயே லயத்தை நாசத்தை யடைகிறது. முன் இல்லாததும் ஒரு க்ஷணத்திற்குப் பின் இல்லாததுமான க்ஷணிக புத்தி எப்படி ஸித்திக்கிறது! என்று ஆலோசித்தால் அதன் உற்பத்தி நாசங்களுக்கு ஸாக்ஷியான ஆத்ம

ஸ்வரூபம் வேறு ஒப்புக் கொள்ளவேண்டும். விஜ்ஞானத்தின் உற்பத்தியும் நாசமும் தன்னுலேயே கிரஹிக்க முடியாது. கிரஹிக்கப்படவே இல்லை என்ருல் உற்பத்தியும் நாசமும் விஜ்ஞானத்திற்கு ஸித்திக்கமாட்டாது. ஆகவே வேறு ஒரு ஸ்வரூபத்தால் கிரஹிக்கப்படுகின்றன என்று சொல்லவேண்டும். ஆகையால் உத்பத்தி நாசங்களுள்ள விஜ்ஞானம் ஸித்திப்பதற்காக வேறு ஸாக்ஷியான ஆத்மப்ரகாசம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

ज्ञानाच्चेत्पूर्वपूर्वस्मादुत्तरोत्तरसंभवः ।
युगपद्बहुबुद्धित्वं प्रसज्येत क्षणे क्षणे ॥ २५ ॥
बुद्ध्यन्तरं न जनयेन्नाशोत्तरमसत्त्वतः ।

25—25½. க்ஷணிகமான ஒரு விஜ்ஞானம் ஆத்மாவில்லை. ஆனுல் ஜலப்பிரவாஹம்போல் முன்னிருக்கும் விஜ்ஞானத்தால் அடுத்த விஜ்ஞாநம் அதிலிருந்து வேறு விஜ்ஞாநம் உண்டாகிறது. க்ஷணிகமான விஜ்ஞானப்பிரவாஹம் ஆத்மா வென்பதும் பொருத்தமாகாது. மிருத்திகையிலிருந்து மண் உருண்டை உண்டாகிறது; அதிலிருந்து கபாலம், அதிலிருந்து குடம் உண்டாகிறது. மிருத்திகையிலிருந்து உண்டாகும் உருண்டை முதலான வஸ்துக்களில் மிருத்திகையின் ஸ்வரூபம் அனுவர்த்தித்துக் கொண்டேவருகிறது. அதுபோலவே முன் க்ஷணத்திலிருந்த விஜ்ஞானம் அடுத்த விஜ்ஞானத்தை உண்டுபண்ணும் பொழுது பூர்வக்ஷணத்திலிருந்த விஜ்ஞானமும் அனுவர்த்திக்கிறது என்று சொல்லும் பக்ஷத்தில் ஒவ்வொரு விஜ்ஞானமுண்டாகும் பொழுதும்

அதற்கு முன் உண்டான விஜ்ஞானமுமிருக்குமாத லால் ஒவ்வொரு க்ஷணத்திலும் அநேக விஜ்ஞானங் களிருக்கும்படி நேரிடுமானபடியால் க்ஷணிக விஜ் ஞானவாதம் கைவிடப் பட்டதாகும். முன் க்ஷணத் திலிருக்கும் விஜ்ஞானம் தன்னுடைய ஸம்பந்தம் ஒன்றுமில்லாமல் நாசமடைகிறது; வேறு விஜ்ஞா னம் உண்டாகிறது என்று சொல்லுவதும் பொருத்த மாகாது. அத்யந்தம் நாசமடைந்த முன் க்ஷணத்திய விஜ்ஞானம் அஸத்தாய்விடுகிறது. அஸத்தான முயற்கொம்பு முதலியவைகள் ஒன்றுக்கும் காரண மாவதில்லை. அதுபோலவே முன் க்ஷணத்திலிருந்த விஜ்ஞானமும் நாசமாகி அஸத்தானபடியால் அதிலி ருந்து இரண்டாவது விஜ்ஞானம் உண்டாக முடி யாது. ஆகையால் க்ஷணிக விஜ்ஞானம் ஆத்மா வென்று சொல்லுவது பொருத்தமாகாது.

एषां संघात आत्मा चेदेकदेशे पृथक्कृते ॥ २६ ॥
न चैतन्यं प्रसज्येत संघाताभावतस्तदा ।

26—26½ தேஹம் ப்ராணன் புத்தி இந்திரியங் கள் தனித்தனியே ஆத்மாவாக இல்லாமற்போனு லும் எல்லாவற்றின் ஸங்காதம் (எல்லாம் சேர்ந்த வஸ்து) ஆத்மா, சேதனன் என்று சொல்லும் பக்ஷத் தில் அந்த கூட்டத்திலடங்கிய ஏதாவது ஒரு கண் காது முதலிய இந்திரிய மில்லாமல் போனல் கீழே சொல்லிய கூட்டமில்லாமையால் சேதனனில்லை என்று சொல்ல நேரிடும். அது சரியல்ல. குருடர் களும் செவிடர்களும் அறிவாளியாக சேதனமா யிருக்கிருர்கள்.

भिन्नदिग्गत्यभिप्रायो बहु चेत्तन्न पूजितम् ॥ २७ ॥
सद्यो भिन्नं भवेदेतन्निष्क्रियं वा भविष्यति ।

27—27½ ஒவ்வொரு ஸங்காதத்திலிருக்கும் ஒவ்வொரு அவயவமும் சேதனமேயென்றால் ஒரு ஸங்காதத்தில் அநேகம் ஆத்மாக்களிருப்பதாக நேரிடும். அது ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல; ஒரு ஸமயம் ஒரு சேதனனுக்கு கிழக்கே போகவேண்டுமென்ற இச்சையும் அதே ஸமயத்தில் ஸங்காதத்திலிருக்கும் மற்றொரு சேதனனுக்கு மேற்கே போகவேண்டுமென்ற இச்சையு முண்டாகலாம். ஒவ்வொரு சேதனனால் வேறு வேறான திக்குகளில் இழுக்கப்பட்ட ஸங்காதம் உடனேயே பிரிந்து போய்விடும். அல்லது ஒருவன் கிழக்கு திக்கில் இழுக்கும் பொழுது மற்றொருவன் மேற்கே இழுப்பதால் ஒரு விதமான கிரியையுமில்லாமல் ஸங்காதம் இருக்கலாம். இரண்டும் அனுபவத்திற்கு ஏற்றதில்லை. ஆகையால் தேஹம் இந்திரியங்களைக் காட்டிலும் வேறாகவும் அவைகளின் ஸங்காதத்தைக் காட்டிலும் வேறானதாகவுமுள்ளது ஆத்மஸ்வரூபம்.

देहस्यान्तर्गतोऽप्यात्मा व्याप्त एवेति बुद्ध्यते ॥ २८ ॥
अणुप्रमाणश्चेदेष व्याप्नुयान्नाखिलं वपुः ।

28—28½. தேஹம் முதலியவற்றைக் காட்டிலும் வேறான ஆத்ம ஸ்வரூபம் எங்கும் வ்யாபித்து இருக்கிறது என்று 4 சுலோகங்களால் நிரூபணம் செய்யப்படுகிறது. ஆத்மா மிகச் சிறியது; அணுபரிமாணமுள்ளது என்று சிலர் கூறுகிறார்கள். அது பொருந்தாது. அதிக உஷ்ணத்தால் தபிக்கும்

காலத்தில் கங்கா நதியில் சரீரம் முழுவதும் அமிழ்ந்து ஸ்நாநம் செய்தால் தலையிலிருந்து பாதம் வரையில் ஸகலாவயவங்களிலும் குளிர்ச்சியை அனுபவிக்கிறோம். சரீரத்திலிருக்கும் ஆத்மா மிகச் சிறியதானால் ஸகல சரீரத்தை ஒரே சமயத்தில் வியாபித்து இருக்கமுடியாததால் ஸகலாவயவங்களும் குளிர்ச்சி ஸுகத்தை அனுபவிக்க முடியாது. ஆகையால் தேஹத்திற்குள்ளே இருந்த போதிலும் ஆத்மா எங்கும் வியாபித்த ஸ்வரூபம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

देहप्रमाणश्चेन्न स्याद्बालस्य स्थविरादिता ॥ २९ ॥

देहवत्परिणामी चेत् तद्वदेव विनङ्क्ष्यति ।

29—29½. ஸகல சரீரத்தையும் வியாபித்து ஸுகாநுபவம் வருவதால் ஆத்மா சரீரம் எவ்வளவு அளவுடையதோ அதே பரிமாணத்தை உடையது என்று சிலர் (ஜைனர்கள்) சொல்லுகிறார்கள். அதுவும் பொருந்தாது. ஒருவன் பாலனாக இருந்து யௌவனத்தை அடைந்து கிழத்தனத்தை அடைந்த பிறகு பாலியகாலம் முதல் அனுபவித்தவைகளை நினைத்துக்கொள்கிறான். ஆகவே பாலனும் வ்ருத்தனுமுள்ளவன் ஒருவனே என்று சொல்ல வேண்டும். சரீரத்தின் பரிமாணம் மாறுகிறது பரிமாணத்தின் பேதத்தால் பாலசரீரம் வேறு வ்ருத்த சரீரம் வேறு. அதுபோல பால்ய தசையிலுள்ள ஆத்மா அந்த தேஹ பரிமாணத்தை உடையவன். வ்ருத்த தசையிலுள்ள ஆத்மா அந்த தேஹ பரிமாணத்தை உடையவன். இருவரும் பரிணாம பேதத்தால் வேறு

என்றே சொல்லவேண்டும். ஆகவே, பாலனுக்கு வார்த்தக்யம், யௌவனம் முதலியவை ஸம்பவிக்க முடியாது. பரிமாணபேதத்தால் சரீரமும் வெவ்வேருக ஒத்துக்கொள்ளவில்லை. ஒரு சரீரமே பல விதமாறுதலை (பரிணமங்களை) அடைகிறது. ஆகையால் பால்ய சரீரமே வ்ருத்த சரீரம். ஆத்மாவும் பால்ய காலத்தில் ஒருவிதமான அளவுடையவனுக இருக்கிருன், வார்த்தக்யகாலத்தில் மாறி வேறு பரிமாணமுள்ளவனுக மாறுதலை அடைகிருன் என்று சொன்னல் பரிணமங்களையடையும் தேஹம் நாசத்தை அடைவதால் பரிணமத்தை அடையும் ஆத்மாவும் தேஹம் போல் நாசத்தையடையும்; நித்யமாயிருக்க முடியாது.

कर्मणां परिणामेन क्रिमिहस्त्यादिमूर्तिषु ॥ ३० ॥

व्याप्तत्वात्प्रविशत्यात्मा घटादिष्वन्तरिक्षवत् ।

30—30½. ஒரு மனிதன் மரணத்திற்குப் பிறகு ப்ராசீன கர்மாவின் பரிபாகத்தால் ஒரு சமயம் ஒரு சிறிய புழு சரீரத்தை எடுக்கலாம். அல்லது மிகப் பெரிய யானையின் சரீரத்தை எடுத்துக்கொள்ளலாம். ஆத்மா எங்கும் வியாபித்த வஸ்து ஆகையால் எங்கும் நிறைந்த ஆகாசம் சிறிய குடத்தில் பிரவேசிப்பது போல மனிதசரீரத்திலிருந்த ஆத்மா மிகச்சிறிய புழுவின் சரீரத்திலும் பெரியதான யானை சரீரத்திலும் ப்ரவேசிக்க முடியும் என்று சொன்னதிலிருந்து, ஆத்மா அந்தந்த சரீர பரிமாணமுள்ளதாக ஒப்புககொண்டால் மனித சரீரத்திலுள்ள ஆத்மா மனித சரீரத்தின் பரிமாணமுள்ளதாகையால் அதைவிட சிறிய புழு சரீரத்தில் அடங்காமலிருக்கும், பெரிய யானை சரீரத்தில் ப்ரவேசித்தால் சரீர முழு

வதும் ஆத்மா பிரவேசிக்க முடியாது. ஆகவே சரீர பரிமாணமுள்ளவன் ஆத்மாவென்பது பொருந் தாது என்று சொல்லப்பட்டதாகிறது.

परमाणुप्रमाणेऽपि मनसि प्रतिभासते ॥ ३१ ॥

स्वप्ने चराचरं विश्वमात्मन्येव प्रतिष्ठितम् ।

31—31½. மிகவும் ஸூக்ஷ்மமான மனதில் ஆத்ம ஸ்வரூபம் பிரகாசிக்கின்றது. ஸ்வப்னத்தில் ஸ்தாவ ரஜங்கம ரூபமான ஸகலப்ரபஞ்சத்தையும் பார்க்கி ரோம். அவைகள் ப்ராதிபாஸிகமான வஸ்துக்கள். அவைகள் ஆத்ம ஸ்வரூபத்திலேயே இருக்கின்றன. ஆகவே ஆத்மா எங்கும் வியாபித்ததாக ஒப்புக் கொள்ளவேண்டும்.

देहादिष्वहमित्येवं भ्रमः संसारहेतुकः ॥ ३२ ॥

अन्तः प्रविष्टः शास्तीति मोक्षायोपादिशच्छ्रुतिः ।

32—32½. தேஹம் இந்திரியங்கள் முதலியவை கள் ஆத்மாவென்பது யுக்திகளுக்குப் பொருத்த மில்லாதபடியால் தேஹம் முதலியவைகளை நான் என்று நினைப்பது பரமார்த்தமான ஆத்ம ஸ்வரூபத் தின் அஜ்ஞானம் என்னும் மாயா பலத்தால் உண் டான ப்ராந்தியே. ப்ராந்திக்குக்காரணமான ஆத் மாஜ்ஞானம் ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணம். ("अन्तः प्रविष्टः शास्ता जनानां") என்னும் வேதம் தன் ஞல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட தேஹங்களில் உள்ளே பிரவேசித்து ஆளுகிருர் என்று கூறுகிறது. தேஹத் திலிருந்து வேருனது ஆத்மாவென்று சரீரத்தி லிருந்து விவேகம் ஏற்பட்டு மோக்ஷம் அடைவதற் காக வேதம் அவ்விதம் உபதேசிக்கிறது.

एवमेषा महामाया वादिनामपि मोहिनी ॥ ३३ ॥

यस्मात्साक्षात्कृते सद्यः लीयते च सदाशिवे।

33—33½. இவ்வாறு தேஹம் ஆத்மாவென்றும் ப்ராணன் ஆத்மாவென்றும் சாஸ்த்ர நிபுணர்களான வாதிகளின் கல்பனைகளும், ஈச்வரசக்தியான மஹா மாயையாலுண்டான மோஹத்தாலேயே உண்டா னவை. ஸதாசிவ ஸ்வரூபத்தின் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் அடைந்தவுடன் எல்லா கல்பனை களும் லயத்தை அடைகின்றன. ஆகையால் எல்லா வாதிகளின் கல்பனைகளும் மாயாமயமே.

देहेन्द्रियासुहीनाय मानदूरस्वरूपिणे ॥ ३४ ॥

ज्ञानानन्दस्वरूपाय दक्षिणामूर्तये नमः।

34—34½. தேஹம் இந்திரியங்கள் ப்ராணன் இவைகளைக் காட்டிலும் வேருனவனுயும், ஸ்வயம் ப்ரகாச ஸ்வரூபனுனபடியால் ப்ரமாணங்களால் பிர காசப்படுத்த முடியாத காரணத்தாலே பிரமாணங் களுக்கு எட்டாத ஸ்வரூபமாயுமுள்ள ஜ்ஞானனந்த ஸ்வரூபமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

हेयोपादेयरहितं ब्रह्म என்று முதலிய பாஷ்யவாக் யங்களில் भिन्नं என்ற தாத்பர்யத்தில் रहित என்ற பதத்தை உபயோகப்படுத்துவதுபோல देहेन्द्रिया-सुभिन्नाय என்று தாத்பர்யங்கொண்டு देहेन्द्रियासुहीनाय என்ற பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

इति श्रीदक्षिणामूर्तिस्तोत्रार्थप्रतिपादके ॥ ३५ ॥

प्रबन्धे मानसोल्लासे पञ्चमोल्लाससंग्रहः ॥

35—35½. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் தாத்பர்யத்தை விளக்கும் மானஸோல்லாஸ புத்த கத்தில் ஐந்தாவது உல்லாஸச் சுருக்கம் முற்றிற்று.

ஆருவது சுலோகத்தின்

அவதாரணிகை

स्वप्ने विश्वं यथा तत्स्थं जाग्रत्यपि तथेति चेत् ।
सुषुप्तौ कस्य किं भाति कः स्थायी तत्र चेतनः ॥ १ ॥

1. ஸ்வப்னத்தில் எல்லாப் பிரபஞ்சமும் ஆத்ம ஸ்வரூபத்திலேயே இருப்பதுபோல் ஜாகரகாலத்திலும் உலகம் ஆத்ம ஸ்வரூபத்திலேயே இருக்கிறது என்று சொல்லப்பட்டது அப்படியானுல் ஸ்வப்னம் கண்டபின் ஸுஷுப்தி காலத்தில் யாருக்கு எந்த வஸ்து பிரகாசிக்கிறது? அப்பொழுது ஸ்திரமாயிருக்கும் சேதனன் யார்? ஸுஷுப்தி காலத்தில் ஒன்றும் பிரகாசிக்காதபடியால் ஸ்திரமாயும் ஸ்வப்ரகாசமுமான ஆத்மா கிடையாது என்பது கருத்து.

सर्वज्ञ क्षणिकं शून्यं सर्वमेव स्वलक्षणम् ।

1½. ஜ்ஞானம் ஜ்ஞேயம் எல்லாம் ஒரு க்ஷணம் மட்டில் இருப்பவைகள். முன்க்ஷணத்திலும் பின் க்ஷணத்திலும் இல்லாதவைகள். ஸ்வலக்ஷணமானது. இதர வஸ்துக்களைவிட வேறுபட்ட தன் தன் ஸ்வரூபத்தை உடையது.

संघातः परमाणूनां मह्यम्ब्वग्निसमीरणाः ॥ २ ॥

2. உலகத்தில் பாஹ்ய வஸ்துக்கள் எல்லாம் ப்ருதிவீ, ஜலம், தேஜஸ், வாயு என்னும் நாலுவிதமான பரமாணுக்களின் கூட்டம். ஆவரணமில்லாமையைத்தவிர வேறு ஆகாசம் ஒன்றுமில்லை. அபாவம் வஸ்துவே இல்லை. வஸ்துக்கள் பரமாணுக்

களால் உண்டுபண்ணப்பட்ட தனிப்பட்ட பொருள்கள் அல்ல. பரமாணு (குவியல்) புஞ்சமே. குடம் என்பது ப்ருதிவீ பரமாணுக்களின் கூட்டம் என்பது கருத்து.

मनुष्यादिशरीराणि स्कन्धपञ्चकसंहतिः ।
स्कन्धाश्च रूपविज्ञानसंज्ञासंस्कारवेदनाः ॥ ३ ॥

3. ரூபஸ்கந்தம் விஜ்ஞானஸ்கந்தம் ஸம்ஜ்ஞாஸ்கந்தம் ஸம்ஸ்காரஸ்கந்தம் வேதனாஸ்கந்தம் என்ற ஐந்துஸ்கந்தங்களின் சேர்க்கை, ஸங்காதமே மனிதர் முதலியவர்களின் சரீரங்கள். ஸ்கந்தம் என்ற பதத்திற்கு பௌத்த சாஸ்திரத்தில் பதார்த்தம் என்று பொருள். स्कन्धशब्दः पदार्थपर्यायः इति ब्रह्मविद्याभरणम् ।

रूप्यन्त इति रूपाणि विषयाश्चेन्द्रियाण्यपि ।
विषयेन्द्रिययोर्ज्ञानं विज्ञानस्कन्ध उच्यते ॥ ४ ॥

4. கண் காது முதலிய இந்திரியங்களும் அவைகளால் அறியப்படும் விஷயங்களும், ரூபஸ்கந்தம் என்று சொல்லப்படும். रूप्यन्ते इति रूपाणि என்ற வ்யுத்பத்தியைக் கொண்டால் அறியப்படும் விஷயங்கள் என்று ரூப பதத்தின் அர்த்தம். रूप्यन्ते एभिः என்னும் வ்யுத்பத்தியைக்கொண்டால் அறிவுக்கு ஸாதனமான இந்திரியங்கள் என்று ரூப பதத்தின் அர்த்தம். விஷயங்கள், இந்திரியங்கள் இவைகளின் அறிவு ஞானம் விஜ்ஞானஸ்கந்தம் என்று சொல்லப்படும். (अहं) நான் என்ற ஆலய விஜ்ஞானமும், ப்ரவ்ருத்தியை உண்டுபண்ணுவதால் ப்ரவ்ருத்தி விஜ்

ஞானம் என்று சொல்லப்படும் இது கருப்பு, வெளுப்பு குடம் என்ற ஞானமும் விஜ்ஞானஸ்கந்தம் எனப்படும்.

संज्ञागुणक्रियाजातिविशिष्टप्रत्ययात्मिका ।
पञ्चधा कल्पना प्रोक्ता संज्ञास्कन्धस्य सौगतैः ॥ ५ ॥

5. ஸுகதர் என்ற புத்தருடைய மதத்தைத் தழுவினவர்கள் ஸம்ஜ்ஞாஸ்கந்தத்தை (1) ஸம்ஜ்ஞா (2) ரூபம் முதலிய குணம் (3) க்ரியை (4) ஜாதி (5) அநேக விசேஷணங்களோடு கூடிய வஸ்துவின் ஞானம் என்னும் விசிஷ்டப்ரத்யயம் என்று ஐந்து விதமாக கல்பனை செய்திருக்கிறார்கள்.

விசிஷ்ட ப்ரத்யயம் என்பதை ஸம்ஜ்ஞாஸ்கந்தத்தில் சேர்த்தபடியால் ஆலய விஜ்ஞானமும் நிர்விகல்பக ஜ்ஞானமும் விஜ்ஞானஸ்கந்தத்தை சேர்ந்தவைகள். பெயர் ஜாதி முதலிய கல்பனைகள் இல்லாமல் வஸ்துவின் ஸ்வலக்ஷணத்தை அறியப்படுத்தும் ஞானம் நிர்விகல்பகம் என்று சொல்லப்படும்.

गवां गौरिति संज्ञोक्ता जातिर्गोत्वं तु गोगतम् ।
गुणाः शुक्लादयस्तस्य गच्छत्याद्यास्तथा क्रियाः ॥ ६ ॥
शृङ्गी चतुष्पाल्लाङ्गूली विशिष्टप्रत्ययो ह्यसौ ।
एवं पञ्चविधा क्लृप्तिः संज्ञास्कन्ध इतीर्यते ॥ ७ ॥

6—7. பசுக்களுக்கு பெயரான गौः என்ற சப்தம் ஸம்ஜ்ஞா எனப்படும். கோக்களில் இருக்கும் கோத்வம் (गोत्वं) என்பது ஜாதி. பௌத்த மதத்தில் கோத்வம் என்பது பாவபதார்த்தமல்ல (अतद्व्यावृत्तिरूपं)

கோவாக இல்லாத வஸ்துக்களைக் காட்டிலும் வேருக இருக்கும் தன்மை. வெளுப்பு கருப்பு முதலியவை கள் கோவின் குணங்கள். செல்வது முதலியவை கள் கோவின் கிரியைகள்: சுலோகத்திலிருக்கும் गच्छति என்ற பதத்திற்கு செல்லுதல் என்று அர்த் தம். "ईक्षतेर्नाशब्दं" என்னும் ஸூத்ரத்தில் ஈக்ஷதி என்ற பதத்திற்கு ईक्षण पार्वை என்ற பொருள் சொல்லுவது இதற்கு உதாஹரணமாகும். शृङ्गी चतुष्पात् लाङ्गूली நாலுகால்கள், வால், கொம்பு இவை களையுடையது பசு என்ற ஞானம் விசிஷ்ட ப்ரத்யயம் என்று சொல்லப்படும். இவ்விதமாக ஸம்ஜ்ஞா ஸ்கந்தம் ஐந்து விதமாகச் சொல்லப்படுகிறது.

रागाद्याः पुण्यपापे च संस्कारस्कन्ध उच्यते ।
सुखं दुःखञ्च मोक्षश्च स्कन्धः स्याद्वेदनाह्वयः ॥ ८ ॥

8. ஆசை த்வேஷம் புண்யம் பாபம் இவை ஸம்ஸ்கார ஸ்கந்தம் என்றும், சுகம் துக்கம் மோக்ஷம் இவைகள் வேதநா ஸ்கந்தம் என்றும் சொல்லப் படும்.

पञ्चभ्य एव स्कन्धेभ्यो नान्य आत्माऽस्ति कश्चन ।
न कश्चिदीश्वरः कर्ता स्वगतातिशयं जगत् ॥ ९ ॥

9. ஐந்து ஸ்கந்தங்களின் ஸம்ஹதி கூட்டம் (புஞ்சம்) என்பதைத் தவிர வேறு ஸ்திரமான போக் தாவான (भोक्ता) ப்ரகாச ரூபமான ஆத்மா ஒருவன் கிடையாது. விதையிலிருந்து முளை உண்டாகிறது. விதை நான் முளையை உண்டுபண்ணினேன் என்று அறிவதில்லை. முளையும் நான் விதையிலிருந்து

உண்டாயிருக்கிறேன் என்றுஅறிவதில்லை. விதையில் ப்ருதிவீ, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம், அந்தந்த முளை உண்டாவதற்குரிய காலம் இவைகளால் முளை உண்டாகிறது. பிருதிவீ முதலியவைகள் நாம் இந்த காரியத்தைச் செய்தோம் என்று தெரிந்து கொள்ள வில்லை. அங்கு ஒருவரும் முளையை உண்டு பண்ண வரவில்லை. விதையில் முளையை உண்டுபண்ணக் கூடிய (कुर्वद्रूपत्वं) அதிசயம் இருக்கிறது. ஆகையால் உண்டாகிறது. அது போல ஐந்து ஸ்கந்தங்களை ஒன்றுக புஞ்சமாகச் சேர்த்துவைக்க ஒரு கர்த்தா வான ஈசுவரன் தேவையில்லை. அவைகளில் அதிச யம் இருப்பதால் அவைகளுக்கு ஸங்காதம் ஏற்பட்டு விடும். ஐந்து ஸ்கந்த ஸங்காதத்தைத் தவிர வேறு ஸ்திரமான ஆத்மாவும் கிடையாது.

स्कन्धेभ्यः परमाणुभ्यः क्षणिकेभ्योऽभिजायते ।

पूर्वपूर्वक्षणादेव क्षणः स्यादुत्तरोत्तरः ॥ १० ॥

10. ஆத்யாத்மிக ஸங்காதங்கள் கீழே நிரூபிக் கப்பட்ட ஸ்கந்தங்களால் ஏற்படுகின்றன. பாஹ்ய மான வஸ்துக்கள் க்ஷணிகமான பிருதிவீ முதலிய நாலுவிதமான பரமாணுக்களால் உண்டாகின்றன.

குடம் ஒரு ப்ருதிவீ பரமாணுஸங்காதம். அது ஒவ்வொரு க்ஷணமும் உண்டாகி நசித்துக்கொண்டே இருக்கிறது. முதல் க்ஷணத்திலிருக்கும் பரமாணு அடுத்த க்ஷணத்திலிருக்கும் பரமாணுவை உண்டு பண்ணுகிறது. முதல் க்ஷணத்திலிருக்கும் பரமா ணுவை உபாதானம் என்று சொல்லுவார்கள். ஒரு க்ஷணத்திலிருக்கும் வஸ்துவை க்ஷணம் என்றே

பௌத்த சாஸ்திரம் கூறும். ஆகவே முன் க்ஷணத்தி லிருந்து பின் க்ஷணம் உண்டாகிறது. இவ்விதம் ஒவ்வொரு க்ஷணமும் உண்டாகி நாசமடைகிறது.

पूर्वस्मादेव हि ज्ञानाज्जायते ज्ञानमुत्तरम् ।
स एवायमिति ज्ञानं सेयं ज्वालेतिवद्भ्रमः ॥ ११ ॥

11. பாஹ்யமான குடம் முதலியவைகள் போலவே அஹம் (நான்) என்று ஆலயவிஜ்ஞானம் ஒவ்வொரு க்ஷணத்திலும் வேறு வேறு முந்திய ஞானத்தால் அடுத்த ஞானம் உண்டாகிறது. நேற்றையதினம் பார்த்தகுடமே இது (सोयं घटः) என்ற ஞானமுண்டாகிறது. (सोहं) ஸோஹம் என்று ஆலய விஜ்ஞானமும் ஒன்ருகத் தோன்றுகிறது. தீபத்தின் ஜ்வாலைகள் வெவ்வேருக இருந்தாலும் இடைவிடாமல் உண்டாய்க் கொண்டிருப்பதால் (सेयं दीपज्वाला) அதே தீப ஜ்வாலை என்று அறிவு உண்டாகிறது. அதுபோல குடம் ஆலய விஜ்ஞானம் முதலியவை இடைவிடாமல் உண்டாய்க்கொண்டே இருப்பதால் (स एवायं, सोहं) என்ற ஞானமுண்டாகிறது. தீப ஜ்வாலை ஒன்றென்ற ஞானம் ப்ராந்தி. அது போலவே सोयं ஸோயம் என்ற ப்ரத்யபிஜ்ஞானமும் பிராந்தியே.

अस्ति भातीति धीर्भ्रान्तैरात्मानात्मसु कल्प्यते ।
हानोपादानराहित्यादाकाशः किं प्रकाशते ॥ १२ ॥

12. ஆகவே, ஆகாசம் போல வ்யாபித்த ஸ்திரமான ஆத்மஸ்வரூபம் இருக்கிறது, அது பிரகாசிக்கிறது என்று உண்மையறியாத பிராந்த புருஷர்களால் கல்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகாசம் ஒரு

வஸ்துவே இல்லை. ஆவரணமின்மைதான் ஆகாசம். அது தள்ளவோ எடுக்கவோ முடியாதது. ஆகையால் ஆகாசம் வியாபித்த ஸ்திரமான வஸ்துவாக ப்ரகாசிக்கவே இல்லை.

इत्येवं बौद्धसिद्धान्ती भाषमाणो निषिद्धयते ।

12½. இவ்விதம் நிரூபணம் செய்யும் பௌத்த ஸித்தாந்தமுடையவன் ஆருவது சுலோகத்தால் நிராகரிக்கப்படுகிறுன்.

राहुग्रस्तदिवाकरेन्दुसदृशो मायासमाच्छादनात्
सन्मात्रः करणोपसंहरणतो योऽभूत्सुषुप्तः पुमान् ।
प्रागस्वाप्समिति प्रबोधसमये यः प्रत्यभिज्ञायते
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ६ ॥

பதவுரை:—यः पुमान् = எந்தபுருஷன் करणोपसंहरणतः = இந்திரியங்கள் தன்தன் காரணத்தில் அடங்கியதால் सुषुप्तः = தூங்கியவனுய் मायासमाच्छादनात् = மாயையால்மறைக்கப்படுவதால் राहुग्रस्तदिवाकरेन्दुसदृशः =ராகுவினுல்விழுங்கப்பட்ட (மறைக்கப்பட்ட)சூரிய சந்திரர்கள் போல सन्मात्रः = ஸத்ரூபனுகமட்டும் (பூர்ணனுக பிரகாசிக்காமல், விளங்குபவனுக) अभूत् =இருந்தாரோ प्रबोधसमये =விழித்துக்கொண்ட பொழுது प्राक् = முன்—விழித்துக் கொள்வதற்கு முன் अस्वाप्सं =தூங்கினேன் इति=என்று यः = எவர் प्रत्यभिज्ञायते = அறியப்படுகிறுரோ तस्मै + नमः = அந்த குருமூர்த்தி ஸ்வரூபமான ஸ்ரீ தக்ஷிணமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் உரியது.

ஸ்வப்நாவஸ்த்தைக்குப் பிறகு கண் காது முத லிய இந்திரியங்கள் தன் காரணத்தில் லயத்தை அடைந்தபடியால் குடம் வஸ்திரம் என்ற விசேஷ ஜ்ஞானமில்லாதவனாய் புருஷன் ஸத்ரூபனாகப் பிர காசித்துக்கொண்டிருக்கிறான். ஆனால் ஸம்பூர்ண ப்ரகாச ரூபமாய் பிரகாசிக்கவில்லை. ஏனென்றால் மாயையால் மூடப்பட்டு இருக்கிறான். பிரகாச ஸ்வரூபமான சந்திரன் சூரியன் இவர்கள் ராஹூ க்ரஹணம் ஏற்பட்ட சமயத்தில் மற்றஸமயம்போல ஸம்பூர்ணமாய் பிரகாசிக்காது போனாலும் ஸத்ரூப மாக பிரகாசிக்கிறார்கள். அதுபோலவே ஸுஷுப்தி காலத்தில் ஸ்வரூப சைதந்யம் ஸத்ரூபமாயிருந்தா லும் ஸம்பூர்ணமாய் பிரகாசிக்கிறதில்லை. இந்திரி யங்கள் அடங்கினபடியால் விசேஷ ஜ்ஞானமில்லை. यद्वै तन्न पश्यति पश्यन्वै तन्न पश्यति என்ற ப்ருஹ தாரண்யகோப நிஷத்தின் தாத்பர்யம் இதுவே. ஆத்மஸ்வரூபம் ஸுஷுப்தி காலத்திலிருந்தது என் பது, தூங்கி எழுந்திருந்த பிறகு, இது வரையில் ஸுகமாய் தூங்கினேன் ஒன்றுமறியாம லிருந்தேன் இப்பொழுது வஸ்துக்களை அறிகிறேன் என்ற ப்ரத்யபிஜ்ஞானத்தால் அறியப்படுகிறது. இவ்வித மாய் ஸுஷுப்தி காலத்தில் ஸத்ரூபமாய் விசேஷ ஜ்ஞானமில்லாதவனாயிருந்து விழித்த பிறகு (अहं प्राक् अस्वाप्सं) என்று ப்ரத்யபிஜ்ஞையால் அறியப்படும் குரு மூர்த்தியான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

अस्यायमाशयः = இந்த சுலோகத்தின் கருத்து சொல்லப்படுகிறது.

शून्यं चेज्जगतो हेतुः जगदेव न सिद्ध्यति ॥ १३ ॥
घटः शून्यः पटः शून्यः इति कैः प्रतिपाद्यते ।

13—13½. உலகத்தை உண்டுபண்ணுபவனை (ஈசுவரன்) ஆத்மா இல்லை, உலகம் முன்பு சூந்யமாக இருந்தது; சூந்யமே உலகத்திற்குக் காரணமென்ருல் உலகமே உண்டாயிருக்கமுடியாது. சூந்யம் அபாவம்; அதிலிருந்து எப்படி ஜகத் உண்டாக முடியும். மேலும் மிருத்திகையிலிருந்து குடம் உண்டாகிறது; மண்குடம் என்று தோன்றுகிறது; அப்படியே வியவஹாரம் செய்கிறோம். சூந்யத்திலிருந்து குடம் வஸ்திரம் முதலியவை உண்டானல் சூன்யகுடம் சூன்யவஸ்திரம் என்று தோன்றவேண்டும். அப்படியே வியவஹரிக்கவும் வேண்டும். அவ்விதம் யார் சொல்லுகிருர்கள்? ஆகவே சூந்யத்தால் உலகமுண்டானதென்பது பொருந்தாது.

नैव भासेत शून्यश्चेज्जगन्नरविषाणवत् ॥ १४ ॥
वस्त्वर्थी किमुपादद्यात् भारार्तः किं परित्यजेत् ।

14—14½ சூன்யத்தால் உண்டான உலகமும் சூன்யமே. ஆனல் (संवृति) ஸம்விருதி என்ற அவித்யையால் தோன்றுகிறது என்று சொல்லுவதும் பொருந்தாது. உலகம் சூன்யமானல் தோற்றமற்றதாய் விடும். "மனிதன் கொம்பு" (இல்லாதது) சூன்யம்; அது ஸம்விருதியாலும் தோன்றுவதில்லை. அது போல உலகம் சூன்யமானல் ஸம்விருதியால் கூடத்தோன்றுவது பொருந்தாது. மேலும் எதிரிலிருக்கும் வஸ்துவை அபேக்ஷிக்கும் புருஷன் அந்த வஸ்துவை எடுக்கிருன், தலையில் மூட்டையை சுமந்து

கொண்டு சிரமமடைந்தவன் மூட்டையை தள்ளுகிறான். ஸித்தமான வஸ்துவைத்தான் எடுக்கமுடியும் தள்ளவும் முடியும். உலகம் சூன்யமானால் மனிதன் எதை எடுத்துக் கொள்ளுவான்? பாரத்தால் சிரமத்தை அனுபவிப்பவன் எதைத்தள்ளுவான்?

को विदध्यात् निषिद्धयेद्वा शून्यत्वात्स्वस्य चात्मनः ॥ १५ ॥
अवसीदेन्निराकूतं तस्मात्सर्वमिदं जगत् ।

15—15½. இதைச்செய் இதைச்செய்யாதே என்ற விதி நிஷேதத்தையும் செய்ய ஒருவருமில்லை. சூந்ய வாதத்தில் ஆத்மாவும் சூன்யமானது. ஆகவே வ்யவஹாரம் செய்யும் புருஷனுமில்லாதபடியால் உலகம் காரணமற்றதாய் மிகவும் சங்கடத்தில் ஆழ்ந்திருக்கும்படி நேரிடும். ஆகையால் சூன்யம் என்ற வாதம் பொருந்தாது.

स्कन्धानां परमाणूनां न संघातयिताऽस्ति चेत् ॥ १६ ॥
संघातो न विना हेतुं जडा घटपटादयः ।

16—16½ ரூபவிஜ்ஞான ஸம்ஜ்ஞா ஸம்ஸ்கார வேதநா ஸ்கந்தங்களின் ஸங்காதமே சரீரம். ஐந்து ஸ்கந்தங்களையும் சேர்த்து வைப்பவர் ஒரு ஸ்திரமான ஆத்மாவில்லை என்றால் அவைகள் ஒன்றாகச் சேர்ந்து இருக்கமுடியாது. நூல்கள் தானாகவே வஸ்திரரூபமானஸங்காதத்தைஅடைவதில்லை. மண்ணும் தானாகவே குடமான ஸங்காதத்தை அடைவதில்லை. அவைகள் அசேதனமான ஜடங்கள். சேதன குயவனும் சேணியனும் மண்ணையும் நூல்களையும் குடமாயும் வஸ்திரமாயும் ஸங்காதமாயிருக்கும்படி (சேரும்

படி) செய்கிருர்கள். ரூபம் முதலிய ஸங்காதங்களும் மற்றும் பரமாணுக்களும் ஜடமானதால் அவைகளைச் சேர்த்துவைக்க ஒரு ஸ்தாயியான ஆத்மா சேதனமில்லாமல் ஸங்காதமாகச் சேரமுடியாது.

महानुभावो भूयासमिति भ्रान्तश्च मन्यते ॥ १७ ॥
आत्मापलापको बौद्धः किमर्थं चरति व्रतम् ।

17—17½ விவேகமில்லாதவன்கூட தான் விசேஷ கௌரவமுள்ளவனுக ஆகவேண்டும் என்று எண்ணுகிருன். ஸ்திரமான ஆத்ம ஸ்வரூபமில்லாவிட்டால் மரணத்தை அடைந்த பிறகு பரலோகத்தில் ஸௌக்யத்தை அடையவேண்டுமென்ற எண்ணத்துடன் பௌத்தன் சைத்யவந்தனம் முதலிய விரதத்தை அநுஷ்டிப்பது எப்படி பொருந்தும்? ஸ்திரமான ஆத்மா இல்லையென்று தன் ஸ்வரூபத்தையே அபலாபம் செய்கிருன். ஸ்திரமான ஆத்மா இல்லை என்று சொல்லிக்கொண்டே பரலோக ஸௌக்யத்திற்கு ஸாதனமென்று விரதத்தை அநுஷ்டிப்பது பௌத்தனுக்கு பொருந்தாது.

प्रत्यभिज्ञा यदि भ्रान्तिर्भोजनादि कथं भवेत् ॥ १८ ॥
इष्टसाधनमेवैतदन्नं गतदिनान्नवत् ।
इति निश्चित्य बालोऽपि भोजनादौ प्रवर्तते ॥ १९ ॥

18—19 सोऽहम् என்ற ப்ரத்யபிஜ்ஞை ப்ரமம் என்று சொன்னல் நேற்றைய தினம் வஸ்துவைப் பார்த்தவனும் இப்பொழுது பார்க்கிற ஆத்மாவும் ஒன்றில்லை. அப்படியாஞல் சாப்பிடுவதே முடியாது. நேற்று குழந்தை அன்னத்தைச் சாப்பிட்டு பசியை

நிவர்த்தி செய்து கொண்டது. அதிலிருந்து அன்னம், பசி நிவ்ருத்தி என்ற நமக்கு வேண்டியதைத் தேடிக் கொடுக்கிறது என்ற வ்யாப்தி ஜ்ஞானம் ஏற்படுகிறது. பிறகு இன்று அன்னத்தைப் பார்த்தவுடன் இதுவும் அன்னமானதால் நேற்றைய தினம் சாப்பிட்ட அன்னம்போல பசிநிவ்ருத்தியை இஷ்டத்தை உண்டுபண்ணும் என்று தீர்மானம் செய்து சாப்பிட ஆரம்பிக்கிருன். ஆகவே நேற்றைய தினம் சாப்பிட்டவனும் வ்யாப்தியை அறிந்தவனும் இன்று இஷ்டஸாதனம் என்று அறிந்தவனும் ஒரு ஸ்திரமான ஆத்மாவாக இல்லாவிட்டால் சாப்பிடவே முடியாது. ஆகையால் ஸ்திரமான ஆத்மஸ்வரூபம் ஒத்துக்கொள்ள வேண்டும்.

अवकाशप्रदातृत्वमाकाशार्थक्रिया यथा ।

तथैवार्थक्रिया पुंसः कर्तृत्वज्ञातृतादिका ॥ २० ॥

20. ஆகாசம் என்பது ஒரு வஸ்து ஆவரணமின்மையல்ல. எங்கு ஆவரணமில்லையோ அந்த வஸ்துவே ஆகாசம். அது இடைவெளியை கொடுக்கிறது. ஆகையால் அவகாசத்தைக் கொடுப்பதால் ஆகாசத்தில் அர்த்த க்ரியாகாரித்வம் (अर्थक्रियाकारित्वं) இருக்கிறது. அதுபோல புருஷனும் அறிகிருன். வேலையைச் செய்கிருன். ஜ்ஞாத்ருத்வம் (ज्ञातृत्वं) கர்த்ருத்வம் (कर्तृत्वं) முதலியவை புருஷனுக்கு அர்த்த க்ரியை. அர்த்தக்ரியாகாரித்வம் ஸத்வம் (अर्थक्रिया-कारित्वं सत्त्वं) என்று பௌத்த சாஸ்திரம் கூறுகிறது. பிரயோஜனமான காரியத்தைச் செய்வதே ஸத் என்று சொல்லப்படும். காரணமாயிருக்கும் தன்

மையே ஸத்வம். ஆகாசத்திலும் ஆத்மஸ்வரூபத்திலும் அது இருக்கிறது என்று இந்த சுலோகத்தில் நிரூபணம் செய்யப்படுகிறது. அபாத்யத்வம் ஸத்வம் (अबाध्यत्वं सत्त्वं) என்று வேதாந்த ஸித்தாந்தம். பௌத்த மதப்படியே ஆகாசமும் ஆத்மாவும் ஸத் என்று சொல்ல முடியுமென்று இவ்விடம் சொல்லப்பட்டு இருக்கிறது.

सुषुप्तिसमयेऽप्यात्मा सत्यज्ञानसुखात्मकः ।
सुखमस्वाप्समित्येवं प्रत्यभिज्ञायते यतः ॥ २१ ॥

21. ஜாகரகாலத்திலும் ஸ்வப்ன காலத்திலும் விசேஷ விஜ்ஞானம் காரியம் முதலிய செய்துகொண்டிருப்பதால் ஸத் ஆக இருப்பவனை ஆத்மாவே ஸுஷுப்தி காலத்திலும் ஸத்யமான ஆனந்த ஸ்வரூபமான பிரகாசமா யிருக்கிறுன். ஏனெனில் விழித்த உடன் இது வரையில் ஸுகமாக நான் தூங்கினேன் என்று ப்ரத்யபிஜ்ஞை உண்டாகிறது. அதிலிருந்து ஸுஷுப்தியையும் ஜாக்ரதவஸ்தையையும் அனுபவிப்பவன் ஒருவனே. விழித்துக் கொள்ளும் ஸ்வரூபமே ஸுஷுப்தி காலத்திலிருந்தது என்று தெரிகிறது. தூங்கும் ஸமயத்தில் ஸுகஸாதனம் ஒன்றுமில்லாமையால் ஆத்ம ஸ்வரூபம் ஸுகமென்று தெரிகிறது.

प्रत्यभिज्ञायत इति प्रयोगः कर्मकर्तरि ।
आत्मा स्वयंप्रकाशत्वाज्जानात्यात्मानमात्मना ॥ २२ ॥

22. முன் சுலோகத்தில் प्रत्यभिज्ञायते ப்ரத்யபிஜ்ஞாயதே என்ற பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. அது கர்மணி பிரயோகமானதால் ஆத்மா ப்ரத்ய

பிஜ்ஞானம் என்ற ஞானத்தில் விஷயமாகிறான் என்று பொருள் தோன்றுகிறது. ஆகவே ஸ்வயம் ஜ்யோதிஸ் ஸ்வரூபம் ஆத்மா வென்று வேதாந்த ஸித்தாந்தத்திற்கு மாறுதலாக இருக்கிறது என்று எண்ணவேண்டாம். பிரத்யபிஜ்ஞாயதே என்பது கர்மகர்த்தரி பிரயோகம், (वत्सः स्वयं मुच्यते) வத்ஸ: ஸ்வயம் முச்யதே என்ற வாக்யம் கன்று தானாகவே கட்டிலிருந்து விடுவித்துக்கொள்கிறது என்று போதிக்கிறது, விடுவிப்பவன் வேறு ஒருவர் இல்லை. விடுபடுவதும் கன்றுதான். விடுவிப்பதும் அதுவே. அதுபோல இந்த இடத்திலும் கர்மகர்த்தரி பிரயோகமானதால் ஆத்மா தன்னால் அறியப்படுகிறான் என்று பொருள். குடம் முதலிய ஜடவஸ்துக்கள் தன்னைத் தவிர வேறான ப்ரகாசத்தால் ப்ரகாசிப்பது போல, ஆத்மா தன்னைவிட வேறான ப்ரகாசத்தால் பிரகாசிக்கப்படவில்லை. ஏன் என்றால் ஆத்மா ஸ்வயம் ப்ரகாசம்; வேறு ஒன்றால் பிரகாசப்படுத்தாமலிருப்பது என்பதே ஸ்வயம்ப்ரகாசம் என்ற பதத்தின் பொருள். (परप्रकाश्यत्वाभावः स्वप्रकाशत्वं) தாதுவை (धातु) அடுத்தடுத்து இருக்கும் லகாரத்திற்கு கர்ம, கர்த்தா இரண்டையும் அர்த்தமாக எந்த இடத்தில் கொள்கிறோமோ அங்கு கர்ம கர்த்தரி ப்ரயோகம் என்று சொல்லப்படும்.

सुषुप्तौ मायया मूढो जडोऽन्ध इव लक्ष्यते ।
अप्रकाशतया भाति स्वप्रकाशतयाऽपि च ॥ २३ ॥

23. ஸுஷுப்தி காலத்தில் மாயையால் மூடப்பட்ட ஆத்மா அசேதனன்போலவும் ஒன்றையுமறியாத குருடன் போலவும் தோன்றுகிறான். குடம்

முதலிய வஸ்துவின் அறிவாகிற விசேஷ விஜ்ஞானம் ஏற்படவேண்டிய காரணங்களில்லாதபடியால் விசேஷ ஜ்ஞானமில்லாமல் அப்ரகாசமாயும் ஸாக்ஷி ஸ்வரூப சைதந்யப்ரகாசம் அழிவற்றதாய்ப்ரகாசிப்பதால் ஸ்வப்ரகாசமாயும் ஆத்மா தோன்றுகிறான்.

जडात्मनि च देहादौ साक्षादीशो विविच्यते ।

23½. ஜடமான தேஹம் இந்திரியம் மனது முதலியவைகளின் வியாபாரங்களை பிரகாசப்படுத்துபவனான எல்லா விஷயங்களின் ப்ரத்யபிஜ்ஞையை உடைய ஆத்மா தேஹம் முதலியவற்றிலிருந்து பிரித்து தெரியப்படுத்தப் படுகிறான். அவனே ஈச்வரன்.

एषैव मोहिनी नाम मायाशक्तिर्महेशितुः ॥ २४ ॥

मोहापोहः प्रमातृणां मोक्ष इत्यभिधीयते ।

24—24½. ஆத்மாவின் பரமார்த்தமான நித்ய சுத்தானந்த ப்ரகாச ஸ்வரூபம் எதனால் மூடப்பட்டு இருக்கிறதோ அதுவே மோஹினீ என்ற பெயருள்ள பரமேச்வரனின் மாயா சக்தி என்று சொல்லப்படுகிறது. ப்ரமாதாக்களான (அறிகிறவர்கள்) ஜீவர்களின் மோஹ நிவிருத்தியே மோக்ஷம் என்று சொல்லப்படுகிறது. (अविद्यास्तमयो मोक्षः सा च बन्ध उदाहृतः ।)

अवस्थात्रयनिर्मुक्तः दोषादिभिरनाविलः ॥ २५ ॥

(दोषादिभिः) देहादिभिः பாடாந்தரம்.

25. ஆத்ம ஸ்வரூபம் ஜாக்ரத் ஸ்வப்னம் ஸுஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளோடு

ஸம்பந்தப்படாதது. அவைகள் ஆத்மாவின் ஸ்வபாவமாக இருந்தால் ஆத்மா இருக்கும்போதெல்லாம் அவஸ்தையிருக்கவேண்டும். அக்நிக்கு உஷ்ணஸ்வபாவம் அக்நியிருக்கும் வரையிலிருக்கிறது. ஜாக்ரத் காலத்திலுள்ள பதார்த்தங்கள் ஸ்வப்னத்தில் இல்லை. ஸ்வப்ன பதார்த்தங்கள் ஜாக்ரத்தில் இல்லை. ஆகவே ஆத்மாவின் ஸ்வபாவமல்ல. ஆகையால் அவஸ்தாத்ரய ஸம்பந்தமில்லாதவன் ஆத்மா. சூரியனால் பிரகாசிக்கப்படும் வஸ்துவிலிருக்கும் தோஷங்கள் சூரியனை அண்டுவதில்லை. அது போலவே ஸாக்ஷி ஸ்வரூபமான ஆத்மப்ரகாசத்தில் அதனால் பிரகாசிக்கப்படும் வஸ்துக்களில் இருக்கும் தோஷங்கள் ஸம்பந்தப்படுவதில்லை.

इषीक इव सन्मात्रः न्यग्रोधकणिकोपमः ।
बाह्याद्बाह्यदलोन्मुक्तकदलीकन्दसन्निभः ॥ २६ ॥

26. முஞ்சம் என்ற பில்லுக்குள்ளே ஒரு சலாகை (குச்சி) யிருக்கும். அதுபோல ஆத்மா தேஹேந்த்ரியாதிகளுக்குள்ளே ஸத்ரூபமாக ஒரே ஸ்வரூபமாக இருப்பான். ஆலம்பழத்திலிருக்கும் விதைகள் எவ்வளவு ஸூக்ஷ்மமோ அப்படி பரம ஸூக்ஷ்மமானவன். வாழையின் தண்டு, இலைகள் பட்டைகள் முதலிய வெளியிலிருக்கும் வஸ்துக்களைத் தள்ளிப் பார்க்க வேண்டியது. அதுபோல ஆத்மா, சரீரம் ப்ராணன் மனஸ் விஜ்ஞானம் முதலிய வெளி பதார்த்தங்களைத் தள்ளி உள்ளே பார்க்கக்கூடிய வஸ்து.

निरंशो निर्विकारश्च निराभासो निरञ्जनः ।
पुरुषः केवलं पूर्णः प्रोच्यते परमेश्वरः ॥ २७ ॥

27. ஆனல் ஆத்மா கீழே சொன்ன வாழைத் தண்டு முதலியவைகள்போல அவயவமுள்ளவனல்ல. விருத்தி நாசம் முதலிய விகாரம் உள்ளவனுமல்ல. வேறு சைதந்யாபாஸத்தால் பிரகாசிக்கப் படுபவனல்ல. (ஜங்யஜ்ஞானத்திற்கு விஷயமாகாதவன்) ஒருவித பரமார்த்ததர்மமும் இல்லாமையால் ஒரு தர்மத்தோடும் ஒட்டினவனுமல்ல. ஹிருதய புரியில் சயனம் பண்ணிக்கொண்டிருப்பவன். எக்காலத்திலும் எத்தேசத்திலும் இருப்பவன். எல்லா வஸ்துவிலுமிருப்பவன். வேறு இரண்டாவது வஸ்து இல்லாதவன். அந்த ஆத்மா பரமேசுவரன் என்று வேதங்களில் சொல்லப்படுகிறுன்.

वाचो यत्र निवर्तन्ते मनो यत्र विलीयते ।
एकीभवन्ति यत्रैव भूतानि भुवनानि च ॥ २८ ॥
समस्तानि च तत्त्वानि समुद्रे सिन्धवो यथा ।
कः शोकस्तत्र को मोहः एकत्वमनुपश्यतः ॥ २९ ॥

28—29. ஈசுவராத்மஸ்வரூபத்தில் ஒருவித குணமோ கர்மாவோ இல்லாதபடியால் வாக்குகளால் ஈசுவராத்ம ஸ்வரூபத்தைச் சொல்ல முடியாது. ஒருவனைப்பற்றி சொல்லுவதென்றுல் அவன் குணம், கர்மா முதலியவைகளைக் கொண்டே பேசவேண்டும். அவையில்லாமையால் வாக்கால் சொல்ல முடியாது. மனதும் நிர்குணமான வஸ்துவிடம் போகாது. மனதால் ப்ரகாசப்படுத்த முடியாது. மனது ஆத்மஸ்வரூபத்திலேயே லயத்தை அடைகிறது. ஸகல பூதங்களும் பூதங்களாலுண்டான லோகங்களும் ஸகல ஜீவர்களும் ஆத்மஸ்வரூபத்திலேயே ஒன்ருக

ஆய்விடுகிறார்கள். கங்கை, யமுனை, காவேரி என்று வெவ்வேறு ரூபத்தையும் நாமத்தையும் உடைய பல வித நதிகள் ஸமுத்திரத்தில் ஒன்றாகச் சேர்ந்துவிடுகின்றன. கங்கை, யமுனை என்ற நாமங்களும் அவைகளுக்குத் தனித் தனியான ரூபங்களும் போய்விடுகின்றன. ஸமுத்ரமாகவே ஆய்விடுகின்றன. அதுபோல ஆத்மா ஒருவரே; அவரே ஈசுவரன் என்ற ஆத்மதத்துவ ஸாக்ஷாத்காரம் அடைந்தவுடன் ஆத்மாவிலிருந்து உண்டான அதன் விவர்த்தமான ஸகல வஸ்துக்களும் அதிஷ்டானமான ஆத்மஸ்வரூபமாகவே ஆய்விடுகின்றன. அப்பொழுது தன்னைத் தவிர வேறு ஒன்று இல்லாததால் சோகமோ மோஹமோ ஒன்றுமிருக்க இடமில்லை. சோகமோஹ நிவிருத்தியை அடைகிறான்; அதாவது முக்தியை அடைகிறான்.

वाच्यवाचकरूपत्वात् सविकल्पोऽपि सन्नहम् ।

देहादीनां व्यपोहेन संभवेन्निर्विकल्पकम् ॥ ३०॥

30. வாசகம் = பதம், வாச்யம் = பதத்தின் பொருள். இவைகளையே நாமரூபங்கள் என்று சொல்லுகிறார்கள். ப்ரபஞ்சம் நாமரூபஸ்வரூபமே. அஹம் (अहं = நான்) என்று தோன்றும் ஸ்வரூபம் நாமரூபத்திற்குள் அந்தர்கதமானதாகக் காணப்படுகிறது. தேஹாந்தர்கதமாக தோன்றுகிறது. ஆகவே நாமரூப கல்பனை உடையது என்று தோன்றினாலும் தேஹாதிகள் நான் என்னும் ஞானவிஷயமாக முடியாது என்று சோதனம் செய்து தேஹாதிகளை

தள்ளினுல் கல்பனையற்ற நிர்விகல்பகமாகவே ஆகி விடும்.

असन्नेव भवेद्विद्वानसद्ब्रह्मेति वेद चेत् ।
अस्ति ब्रह्मेति चेद्वेद सन्तमेनं ततो विदुः ॥ ३१ ॥

31. தேஹாதிகள் ஆத்மாவாகாது என்று தள்ளுவதுபோலவே ப்ரஹ்மமும் இல்லை என்று ப்ரஹ்ம அஸத் ब्रह्म असत् என்று அறிந்தால் அப்படி அறிந்தவனே இல்லாதவனுகவே ஆகிவிடுவான்; ஏனென்ருல் அறியும் ஆத்ம ஸ்வரூபமே ப்ரஹ்மம். ஆகவே ப்ரஹ்மம் இருப்பதாக அறிந்தால் அவ்விதம் அறிந்தவனை இருப்பதாகவே பெரியோர்கள் கருதுகிருர்கள். சூந்யவாதம் சரியல்ல என்பதே முடிவாகியது.

इति श्रीदक्षिणामूर्तिस्तोत्रार्थप्रतिपादके ।
प्रबन्धे मानसोल्लासे षष्ठोल्लासस्य संग्रहः ॥ ३२ ॥

32. ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி ஸ்தோத்திரத்தின் தாத்பர்யத்தை விளக்கும் மானஸோல்லாஸம் என்னும் புத்தகத்தில் ஆருவது உல்லாஸச் சுருக்கம் முற்றிற்று.

ஏழாவது சுலோகத்தின்

அவதரணிகை

प्रत्यभिज्ञाबलादात्मा स्थायी निर्धार्यते यदि ।
का नाम प्रत्यभिज्ञैषा किं वा तस्याश्च कारणम् ॥ १ ॥
प्रत्यक्षादिप्रमाणेषु प्रत्यभिज्ञा न पठ्यते ।
कथं तस्याः प्रमाणत्वमिति पृच्छन् प्रबोध्यते ॥ २ ॥

1—2. *முன் சுலோகத்தில் ப்ரத்யபிஜ்ஞையின் பலத்தைக்கொண்டு ஆத்மஸ்வரூபம் ஸ்திரமாயிருக்கிறது என்று தீர்மானம் செய்யப்பட்டது. ப்ரத்யபிஜ்ஞை என்றால் என்ன? அதன் ஸ்வரூபம் எவ்வாறு இருக்கும்? அதற்கு காரணம் எது? ப்ரத்யபிஜ்ஞையின் பலத்தால் ஸ்திரமான ஆத்மா ஸித்திக்கிறதென்றால் ப்ரத்யபிஜ்ஞை என்பது ஒரு ப்ரமாணம் என்று ஏற்படுகிறது. ப்ரத்யக்ஷம் அநுமானம் உபமாநம் சப்தம் அர்த்தாபத்தி அனுபலப்தி என்று ப்ரமாணங்களைச் சொல்லுமிடத்தில் பரத்யபிஜ்ஞை என்ற ப்ரமாணம் சொல்லப்படவில்லை. ஆகையால் ப்ரத்யபிஜ்ஞை எப்படி ப்ரமாணமாக ஆகிறது என்று கேழ்க்கும் சிஷ்யனுக்கு பதில் ஏழாவது சுலோகத்தால் நிரூபணம் செய்யப்படுகிறது.*

बाल्यादिष्वपि जाग्रदादिषु तथा सर्वास्ववस्थास्वपि
व्यावृत्तास्वनुवर्तमानमहमित्यन्तः स्फुरन्तं सदा ।
स्वात्मानं प्रकटीकरोति भजतां यो मुद्रया भद्रया
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ७ ॥

பதவுரை:—बाल्यादिषु अपि = பால்யம் முதலிய அவஸ்தைகளும் जाग्रदादिषु = ஜாகரணம் முதலிய அவஸ்தைகளும் तथा=அப்படியே सर्वासु अवस्थासु अपि =மூர்ச்சை முதலிய எல்லா அவஸ்தைகளும் व्यावृत्तासु =மாறி மாறி வரும்பொழுது अन्तः = உள்ளே अहमिति = நான் என்று सदा=எப்பொழுதும் अनुवर्तमानं =மாறுதலடையாமல் स्फुरन्तं =பிரகாசித்துக் கொண்டு இருக்கும் स्वात्मानं = மனிதனின் ஸாக்ஷியாக இருக்கும் ஆத்மஜ்யோதிஸ்ஸை यः = எவர் भजतां = அண்டினவர்களுக்கு भद्रया = மங்களமான मुद्रया – சிந்முத்திரையினுல் प्रकटीकरोति = உபதேசிக்கிருரோ (வெளிப்படுத்துகிருரோ) तस्मै + नमः =அந்த குருமூர்த்தி ரூபமான தக்ஷிணுமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் உரியது.

சரீரத்திற்கு பால்யம் யௌவநம் வார்த்தகம் என்ற அவஸ்தைகள் இருக்கின்றன. இந்திரியங்களால் அறிவு உண்டாகும்படியான ஜாக்ரதவஸ்தை ஸ்வப்நாவஸ்தை ஸுஷுப்தி அவஸ்தை மற்றும் மூர்ச்சை முதலிய அவஸ்தைகளிருக்கின்றன. இந்த அவஸ்தைகள் மாறிமாறி வருகின்றன. ஒரு அவஸ்தா சமயத்தில் மற்றொரு அவஸ்தை இல்லை. அப்படி இருந்தும் அஹம் (நான்) என்று எப்பொழுதும் ஒரே மாதிரியாக ஸ்புரித்துக்கொண்டிருக்கிறது. மனதில் ஸாக்ஷியாக இருக்கும் ஆத்ம ஜ்யோதிஸ் தனியாகத் தெரியாமல் மனது முதல் தேஹம் வரையில் வ்யாபித்துத் தோன்றுகிறது. பலவித அவஸ்

னைதகள் மாறி மாறி யிருந்தும், அஹம் என்று ஒரே மாதிரியாக ஸ்புரிப்பதால் மாறும் அவஸ்தைகள் இல்லாததும் அவைகளுக்கு ப்ரகாசகமாயுமுள்ள ஸ்வரூபம் "நான் ஆத்மஸ்வரூபம்" என்று அறிந்து கொள்ளுங்கள் என்று மங்களகரமான சின்முத்திரையினால் தன்னை அண்டின பக்தர்களுக்கு உபதேசித்து ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை உண்டுபண்ணும் குருமூர்த்தியான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

एतदुक्तं भवति । இந்த சுலோகத்தின் தாத்பர்யம் விவரிக்கப்படுகிறது.

ज्ञातस्य कस्यचित्पूर्वं भासमानस्य सांप्रतम् ।
सोऽयमित्यनुसन्धानं प्रत्यभिज्ञानमुच्यते ॥ ३ ॥

3. முன்பு அறிந்ததாயும் இந்திரியம் முதலியவைகளால் இப்பொழுது அறியப்படுவதுமான வஸ்துவின், முன்பு அறிந்த வஸ்துவே இப்பொழுது பார்க்கப்படும் வஸ்து (सोऽयं) என்ற ஞானம், ப்ரயத்பிஜ்ஞானம், பிரத்யபிஜ்ஞை என்று சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது.

तद्देशकालाकारादीनवधूयानुषङ्गिकान् ।
यथैकं वस्त्वनुस्यूतं प्रत्यभिज्ञानमात्मनः ॥ ४ ॥

4. காசியில் பத்து வருஷங்களுக்குமுன் சிறிய சரீரத்தோடு கூடிய தேவதத்தனைப் பார்த்தோம். பிறகு இப்பொழுது சிதம்பரத்தில் பெரிய சரீராக்ருதியோடு கூடிய தேவதத்தனைப் பார்க்கிறோம். அடையாளங்களைக் கொண்டு காசியில் பார்த்த தேவதத்தனே இவன் (सोऽयं) என்று அறிகிறோம்.

அந்த தேசம் காலம் சரீராக்ருதி முதலியவைகள் தேவதத்தஸ்வரூபத்தில் சேராமல் ஸ்வபாவ ஸித்த மாக இல்லாத வஸ்துக்கள்; அவைகள் மாறிப் போனாலும் அவைகளைத் தள்ளி அப்பொழுதும் இப் பொழுதும் அந்த தேசத்திலும் இந்த தேசத்திலும் அந்த ஆக்ருதியிலும் இந்த ஆக்ருதியிலும் அனுவர்த் திக்கும் ஒரு அனுகதமான தேவதத்த ஸ்வரூபம் ஸோயம் என்ற ப்ரத்யபிஜ்ஞை என்னும் ஞானத் தில் தோன்றுகிறது. அதுபோலவே ஆத்மாவின் ப்ரத்யபிஜ்ஞையும் அறியவேண்டியது.

मायानुषङ्गसंजातकिञ्चिज्ज्ञत्वाद्यपोहनात् ।
सर्वज्ञत्वादिविज्ञानं प्रत्यभिज्ञानमात्मनः ॥ ५ ॥

5. ஸர்வஜ்ஞேச்வர ஸ்வரூபமானது ஆத்மா. மாயை என்னும் அஜ்ஞானத்தின் ஸம்பந்தத்தால் உண்டான கிஞ்சிஜ்ஜ்ஞத்வம் சிலவற்றை அறியும் தன்மை முதலிய தர்மங்களைத்தள்ளி ஸோஹம் ஜீவ னை நான் ப்ரம்மமே என்ற ஸாக்ஷாத்காரம் ஆத்மா வின் ப்ரத்யபிஜ்ஞை. ஜீவஸ்வரூபமில்லாத மாயா ஸம்பந்தத்தால் வந்த தர்மங்களைத் தள்ளி ஜீவ பாவத்திலேயே இருந்த அனுகதமான அளவற்ற ஆனந்த சித்ஸ்வரூபத்தின் ஸாக்ஷாத்காரமே ஆத்ம ப்ரத்யபிஜ்ஞானம் என்பது கருத்து.

पूर्वजन्मानुभूतार्थस्मरणान्मृगशावकः ।
जननीस्तन्यपानाय स्वयमेव प्रवर्तते ॥ ६ ॥
तस्मान्निश्चीयते स्थायीत्यात्मा देहान्तरेष्वपि ।
स्मृतिं विना न घटते स्तन्यपानं शिशोर्यतः ॥ ७ ॥

6—7. மான்குட்டி பிறந்த உடனேயே தாயின் ஸ்தன்யத்தைக் குடிப்பதற்கு தானுகவே ப்ரவர்த்திக்கிறது. ஸ்தன்யத்தை பானம் செய்வது, பசியை நிவர்த்தி செய்யும் திருப்தியை கொடுக்கும் என்ற இஷ்டஸாதனதா ஜ்ஞானமில்லாமல் மான்குட்டி பிரவர்த்திக்க முடியாது. ஆகையால் அதற்கு முன் ஜன்மத்தில் ஸ்தன்யபானம் செய்து திருப்தியை அடைந்த படியால் ஸ்தன்யபானம் இஷ்டஸாதனம் என்ற அனுபவமிருந்தது. அதனுல் ஆத்மாவில் அதனுடைய வாஸனை (ஸம்ஸ்காரம்) ஏற்பட்டு இருந்தது. பிழைத்து ஜீவிக்கும் படியான அதிருஷ்டமிருந்ததால் அதனுல் உத்போதத்தை அடைந்த ஸம்ஸ்காரத்தால், முன் திருப்தியை கொடுத்தவஸ்து போல இருப்பதால் இதுவும் இஷ்டத்தை கொடுக்கும் என்று ஸ்மரணம் ஏற்பட்டு, ஸ்தன்யபானத்தில் பிரவர்த்திக்கிறது என்று சொல்லவேண்டும். ஆகவே பால்யம் முதலிய அவஸ்தைகளால் மாறி மாறி சரீரமிருந்தாலும் அவைகளில் அனுகதமாக நான் என்ற அனுபவத்தால் ஒரு வஸ்து அவஸ்தைகளோடு சம்பந்தப்படாதது ஆத்மா என்று சொல்லுவதுபோல, பல ஜன்மங்களில் பலசரீரங்களை எடுத்து இருந்தாலும் சரீரங்கள் உண்டாகி நாசத்தை அடைந்து இருந்தாலும் முன் தேஹத்திலிருந்து அனுபவித்தவனும் அந்த விஷயத்தை நினைத்து இந்த ஜன்மத்தில் ப்ரவர்த்திப்பவனும் ஒரு ஸ்திரமான ஆத்மா என்று தீர்மானம் பண்ணப்படுகிறது.

पूर्वत्रानुभवे काले स्मृतिकाले परत्र सन् ।
आत्मा संस्काररूपेण स्मरत्यर्थं स्वनिष्ठितम्॥ ८ ॥

8. முன்பு ஒரு விஷயத்தை ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களால் அனுபவிக்கிருன். இப்பொழுது அந்த விஷயத்தை முன்பு அனுபவித்தேன் என்று நினைத்துக் கொள்கிருன். அனுபவித்த காலத்திலும் ஸ்மரணம் ஏற்படும் காலத்திலும் ஆத்மா இருக்கிருன். அவன் ஸம்ஸ்காரரூபமாக தன்னிடமிருக்கும் வஸ்துவை இப்பொழுது நினைத்துக் கொள்கிருன்.

प्रत्यभिज्ञेति भावानां स्मृतिश्चेदभिधीयते ।

आत्मस्थैर्ये प्रमाणत्वं स्मृतिश्च प्राप्नुयात् कथम् ॥ ९ ॥

9. மூன்று சுலோகங்களால் ஒரு ஆக்ஷேபம் நிரூபிக்கப்படுகிறது. கீழே நிரூபணம் செய்ததிலிருந்து ஆத்மா ஸ்திரமானவன் என்பதில் ப்ரத்யபிஜ்ஞை ப்ரமாணம் என்று சொல்லப்பட்டது. स्मरत्यर्थं स्वनिष्ठितं என்ற சுலோகம் வரையில் உள்ள வாக்யங்களால் வஸ்துக்களின் ஸ்மரணம் ப்ரத்யபிஜ்ஞை என்று சொல்லப்பட்டதாக தெரியவருகிறது. அப்படியானல் ஸ்மரணம் ஒரு ப்ரமாணமில்லை. ஆகையால் அது ஆத்மா ஸ்திரமானவன் என்ற விஷயத்தில் எப்படி ப்ரமாணமாயிருக்க முடியும் ?

स्मृतौ प्रकाशो नार्थस्य नचाप्यर्थस्य निश्चयः ।

नचाप्यर्थानुभवयोरङ्गुल्योरिव संभवेत् ॥ १० ॥

10, ப்ரத்யக்ஷத்தில் ஒரு வஸ்துவின் உண்மையான ஸ்வரூபம் எப்படி ப்ரகாசிக்கிறதோ அப்படி ஸ்மரணத்தில் பிரகாசிப்பதில்லை. அனுமானத்தால், ஒரு வஸ்துவை தீர்மானம் செய்வதுபோல் ஸ்மர

ணத்தால் வஸ்துவுக்கு நிச்சயமும் ஏற்படுவதில்லை. இரண்டு விரல்களும் சேர்ந்து ப்ரகாசிப்பது போல பூர்வானுபவம் அர்த்தம் இரண்டும் சேர்ந்து பிரகாசிக்கின்றன என்பதும் பொருந்தாது.

नानुभूतिविशिष्टस्य पदार्थस्य च दण्डिवत् ।
सर्वात्राप्येवमित्येवं प्रसङ्गादिति तच्छृणु ॥ ११ ॥

11. दण्डी पुरुषः என்ற அனுபவத்தில் தண்டத்தோடு கூடின புருஷன் தோன்றுகிறான். அதுபோல ஸ்மரணத்தில் முன்னால் அனுபவிக்கப்பட்ட வஸ்து வென்று பூர்வானுபவத்தோடுகூடின வஸ்து பிரகாசிக்கிறது என்று சொன்னால் எல்லாவிதமான ஸ்மரணங்களிலும் பூர்வானுபவ விசிஷ்டமான வஸ்து தோன்றுகிறது. ஒரு घट பதத்தைக் கேட்டால் குடம் என்னும் வஸ்துவுக்கு ஸ்மரணம் உண்டாகுமிடத்திலும் பூர்வானுபவ விசிஷ்டமான குடமே ஸ்மரிக்கப்படுகிறது என்று சொல்லும்படி நேரிடும். ஆகையால் ஸ்மிருதி எப்படி ப்ரமாணமாகும் என்ற ஆக்ஷேபம் வந்து இருக்கிறது. அதற்கு சமாதானம் அடுத்த சுலோகங்களில் நிரூபிக்கப்படுகிறது.

प्राक्तनानुभवे नष्टे तदवष्टम्भसंभवात् ।
संस्कारसंज्ञात्सामग्र्यात् पौरुषाज्जायते स्मृतिः ॥ १२ ॥

12. ஸ்மிருதி உண்டாகும் ப்ரகாரம் இந்த சுலோகத்தில் நிரூபிக்கப்படுகிறது. கொஞ்சம் காலம் முன்போ அல்லது முன் ஜன்மத்திலோ அனுபவிக்கிறோம்; அந்த அனுபவ ஜ்ஞானம் சற்றுநேரமிருந்து மறைந்துவிடுகிறது. பிறகு அந்த அனுபவமிருந்த

ஆத்மாவில் அனுபவித்த வஸ்துவின் ஸம்ஸ்காரம் (வாசனை) உண்டாகிறது. புருஷனுன ப்ரமாத்ரு சைதந்யத்தாலும் ஈசுவரனுலும் அதிஷ்டிதமான ஸம்ஸ்காரம் என்னும் அஸாதாரணமான காரணத்தால் இப்பொழுது நாம் முன் அனுபவித்ததை ஸ்மரிக்கிறோம். அனுபவம் வந்த ஆத்மாவினிடத்திலிருக்கும் ஸம்ஸ்காரம் ஸ்மரணத்திற்கு அஸாதாரண காரணமாகும்.

आवेद्यानुभवे नष्टे तदीयं विषयं प्रति ।
अनुभावकमात्मानं बोधयत्यनपायिनम् ॥ १३ ॥

13. அறிந்து கொள்ளவேண்டிய வஸ்துவின் அனுபவம் (ப்ரத்யக்ஷம் முதலியவை) நாசத்தை அடைந்த பிறகு அந்த அனுபவத்தின் விஷயத்தை யார் அனுபவித்தாரோ அந்த ஆத்மா அப்பொழுதும் இப்பொழுதுமுள்ளதான நாசமில்லாதவன் என்று ஸ்மரணம் தெரியப்படுத்துகிறது. முன்பு பல விஷயங்களை அனுபவித்த நானே இப்பொழுது ஸ்மரிக்கிறேன் என்று அறிகிறுன். அதுவே ப்ரத்யபிஜ்ஞை. ஸ்மிருதியானது ப்ரத்யபிஜ்ஞானம் வருவதற்கு உபாயமாயிருப்பதால் ப்ரத்யபிஜ்ஞை ஸ்மிருதி என்னும் சொல்லால் வ்யவஹரிக்கப்பட்டது. ஸம்ஸ்காரத்தாலே மட்டும் உண்டான ஞானம் ஸ்மரணம். பூர்வாநுபவ ஸம்ஸ்காரமும் இந்திரிய ஸம்பந்தமும் சேர்ந்து உண்டுபண்ணின ஞானம் ப்ரத்யபிஜ்ஞை. இது ப்ரத்யக்ஷத்தில் சேர்ந்தது. ஆகையால் ஸ்மிருதியே ஆத்மா ஸ்திரம் என்பதற்கு ப்ரமாணம் என்று சொல்லுவதின் கருத்து, ஒரு ஸ்திரமான ஆத்மாவில்லாத போனுல் ஸ்மரணம்வர

ணத்தால் வஸ்துவுக்கு நிச்சயமும் ஏற்படுவதில்லே. இரண்டு விரல்களும் சேர்ந்து ப்ரகாசிப்பது போல பூர்வானுபவம் அர்த்தம் இரண்டும் சேர்ந்து பிரகாசிக்கின்றன என்பதும் பொருந்தாது.

नानुभूतिविशिष्टस्य पदार्थस्य च दण्डिवत् ।
सर्वात्राप्येवमित्येवं प्रसङ्गादिति तच्छृणु ॥ ११ ॥

11. दण्डी पुरुषः என்ற அனுபவத்தில் தண்டத்தோடு கூடின புருஷன் தோன்றுகிருன். அதுபோல ஸ்மரணத்தில் முன்ஞல் அனுபவிக்கப்பட்ட வஸ்துவென்று பூர்வானுபவத்தோடுகூடின வஸ்து பிரகாசிக்கிறது என்று சொன்ஞல் எல்லாவிதமான ஸ்மரணங்களிலும் பூர்வானுபவ விசிஷ்டமான வஸ்து தோன்றுகிறது. ஒரு घट பதத்தைக் கேட்டால் குடம் என்னும் வஸ்துவுக்கு ஸ்மரணம் உண்டாகுமிடத்திலும் பூர்வானுபவ விசிஷ்டமான குடமே ஸ்மரிக்கப்படுகிறது என்று சொல்லும்படி நேரிடும். ஆகையால் ஸ்மிருதி எப்படி ப்ரமாணமாகும் என்ற ஆக்ஷேபம் வந்து இருக்கிறது. அதற்கு சமாதானம் அடுத்த சுலோகங்களில் நிரூபிக்கப்படுகிறது.

प्राक्तनानुभवे नष्टे तदवष्टम्भसंभवात् ।
संस्कारसंज्ञात्सामग्र्यात् पौरुषाज्जायते स्मृतिः ॥ १२ ॥

12. ஸ்மிருதி உண்டாகும் ப்ரகாரம் இந்த சுலோகத்தில் நிரூபிக்கப்படுகிறது. கொஞ்சம் காலம் முன்போ அல்லது முன் ஜன்மத்திலோ அனுபவிக்கிருேம் ; அந்த அனுபவ ஜ்ஞானம் சற்றுநேரமிருந்து மறைந்துவிடுகிறது. பிறகு அந்த அனுபவமிருந்து

ஆத்மாவில் அனுபவித்த வஸ்துவின் ஸம்ஸ்காரம் (வாசனை) உண்டாகிறது. புருஷனுை ப்ரமாத்ரு சைதந்யத்தாலும் ஈசுவரனுலும் அதிஷ்டிதமான ஸம்ஸ்காரம் என்னும் அஸாதாரணமான காரணத்தால் இப்பொழுது நாம் முன் அனுபவித்ததை ஸ்மரிக்கிருேம். அனுபவம் வந்த ஆத்மாவினிடத்திலிருக்கும் ஸம்ஸ்காரம் ஸ்மரணத்திற்கு அஸாதாரண காரணமாகும்.

आवेद्यानुभवे नष्टे तदीयं विषयं प्रति ।

अनुभावकमात्मानं बोधयत्यनपायिनम् ॥ १३ ॥

13. அறிந்து கொள்ளவேண்டிய வஸ்துவின் அனுபவம் (ப்ரத்யக்ஷம் முதலியவை) நாசத்தை அடைந்த பிறகு அந்த அனுபவத்தின் விஷயத்தை யார் அனுபவித்தாரோ அந்த ஆத்மா அப்பொழுதும் இப்பொழுதுமுள்ளதான நாசமில்லாதவன் என்று ஸ்மரணம் தெரியப்படுத்துகிறது. முன்பு பல விஷயங்களை அனுபவித்த நானே இப்பொழுது ஸ்மரிக்கிறேன் என்று அறிகிருன். அதுவே ப்ரத்யபிஜ்ஞை. ஸ்மிருதியானது ப்ரத்யபிஜ்ஞானம் வருவதற்கு உபாயமாயிருப்பதால் ப்ரத்யபிஜ்ஞை ஸ்மிருதி என்னும் சொல்லால் வ்யவஹரிக்கப்பட்டது. ஸம்ஸ்காரத்தாலே மட்டும் உண்டான ஞானம் ஸ்மரணம். பூர்வாநுபவ ஸம்ஸ்காரமும் இந்திரிய ஸம்பந்தமும் சேர்ந்து உண்டுபண்ணின ஞானம் ப்ரத்யபிஜ்ஞை. இது ப்ரத்யக்ஷத்தில் சேர்ந்தது. ஆகையால் ஸ்மிருதியே ஆத்மா ஸ்திரம் என்பதற்கு ப்ரமாணம் என்று சொல்லுவதின் கருத்து, ஒரு ஸ்திரமான ஆத்மாவில்லாத போனல் ஸ்மரணம்வர

முடியாது, ப்ரத்யபிஜ்ஞையே (सोहं) ஸோஹம் என்ற ப்ரத்யக்ஷஜ்ஞானமே ஆத்மா ஸ்திரம் என்பதில் ப்ரமாணம் என்பதே.

विषये च प्रमुषिते नष्टे चानुभवे सति ।
स्वविश्रान्तं स्मरत्यर्थं देवोऽप्रमुषितस्सदा ॥ १४ ॥

14. முன் அனுபவத்த விஷயம் நாசத்தை அடைந்தாலும் பூர்வானுபவம் நாசத்தை அடைந்தாலும் எப்பொழுதும் பிரகாசிக்கும் நாசமில்லாத தேவனான ஆத்மா தன்னிடம் ஸம்ஸ்காரரூபமாய் விச்ராந்தியை (லயத்தை) அடைந்து இருக்கும் வஸ்துவை ஸ்மரித்துக்கொள்ளுகிறான்.

प्रमोषणं प्रमातॄणां मायया तमसा कृतम् ।
माया विद्ये प्रभोः शक्ती भानोश्छायाप्रभोपमे ॥ १५ ॥

15. விஷயங்களை அனுபவிக்கும் ப்ரமாதாவான ஆத்மா ஸுஷுப்திஸமயத்தில்நாசமடைந்தவனாகவே தோன்றுகிறான். (विनाशमेवापीतो भवति) ஆகவே அனுபவிக்கும் ஆத்மா எப்பொழுதும் நாசமடையாமலிருக்கிறார் என்று சொல்லுவது சரியில்லை என்று கொள்ளக்கூடாது. ஸுஷுப்தி முதலிய காலத்தில் அஜ்ஞானம் என்னும் மாயையால் மூடப்பட்டிருப்பதால் விசேஷ ஜ்ஞானமில்லாமையால் இல்லாதது போலத் தோன்றுகிறது. அந்த மாயை (ஆத்ம ஸாக்ஷாத்காரம் பிரத்யபிஜ்ஞை என்று சொல்லப்படும்) வித்யையால் நிவர்த்தி அடைகிறது. பிரபுவான ஆத்மாவுக்கு மாயை என்றும் வித்யை என்றும் இரண்டு சக்திகளிருக்கின்றன. பிரகாச

மயமான சூர்யனோடு சம்பந்தப்படாத சாயை (வாயாகு ரூஹமான ராஹு) சூரியனை மறைக்கிறது. அப்பொழுது நன்றாக உள்ளபடி சூரியன் தோன்றுவதில்லை. அதுபோல ஒருவித சம்பந்தமுமில்லாத அஸங்கமான ஆத்மஸ்வரூபத்தில் பரமார்த்தமாக ஸம்பந்தமில்லாத மாயை என்னும் அநிர்வசநீயசக்தி மறைத்து பூர்ணாநந்தஸ்வரூபத்தை தெரியாமல் செய்கிறது. ப்ரகாசமயமான சூரியனுக்கு வெளிச்சம் என்று சொல்லப்படும் ப்ரபா சூரியனைக் காட்டிலும் வேறாக இல்லாதபோதிலும் வேறாகத் தோன்றுவது போல ஆத்மஸ்வரூபத்திற்கு வித்யை என்று சக்தி இருக்கிறது.

सर्वानाच्छादयेन्माया विद्या व्याक्षिप्य दर्शयेत् ।
प्रत्यभिज्ञैव सर्वेषां प्रमाणानाञ्च साधनम् ॥ १६ ॥

16. எல்லாருக்கும் தத்துவத்தை மாயை மறைக்கும். நிஜமான ஸ்வரூபம் இல்லை என்றும் வேறு விதமான வஸ்து என்றும் தோற்றத்தையும் கொடுக்கும். வித்யை = ஞானம், மாயையை, அவித்யையை, அஜ்ஞானத்தை நாசம் செய்து தத்துவத்தை காண்பிக்கும் ஒவ்வொரு அந்த:கரண விருத்தியிலும் ப்ரத்யகாத்மா என்று சொல்லப்படும் ஸாக்ஷி சைதந்யம் அனுஸ்யூதமாக பிரகாசிக்கிறபடியால் ஸாக்ஷிபூதமான சைதந்யமே ஸர்வவிதமான பிரமாணங்களின் விஷயங்களை ஸாதித்துக் கொடுக்கிறது. இந்த சுலோகத்தில் விருத்தியில் ப்ரதிபலனமடைந்த ஸாக்ஷியே ப்ரத்யபிஜ்ஞை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ईश्वरोऽन्योऽहमप्यन्यः इति विच्छेदकारिणीम् ।
व्याक्षिप्य विद्यया मायामीश्वरोऽहमिति स्मृतिः ॥ १७ ॥

17. இருட்டைப் போக்கடித்துக் கொண்டே வெளிச்சம் வருவதுபோல நான் வேறு ஈசுவரன் வேறு என்று பேதத்தை உண்டுபண்ணும் மாயையை நிவர்த்தி செய்துகொண்டே உண்டாகும், நான் ஈசுவரன் அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற ஸ்மரணம் என்ற வித்யையே ப்ரத்யபிஜ்ஞை. ஸ்மரிக்கப் படும் நிஜமான ஆத்மஸ்வரூபம் ப்ரத்ய பிஜ்ஞை என்றும் சொல்லப்படுகிறது.

ईषत्प्रकाशोऽभूदीशो मायायवनिकावृतः ।
सम्यगावरणा-ाये सहस्रांशुरिव स्फुरेत् ॥ १८ ॥

18. மாயை என்ற திரையால் மறைக்கப்பட்ட ஈசுவரன் நன்ருக பிரகாசிக்காமல் மேகத்தால் மறைக்கப்பட்ட சூரியன் போல கொஞ்சம் பிரகாசித்துக் கொண்டிருந்தான். மேகம் மறைத்த காலத்திலும் சூரியன் கொஞ்சம் பிரகாசிக்கிருன். நடு இரவு போல் அந்தகாரமாக இருப்பதில்லை. அவ்விதம் மாயாகாலத்திலும் ஈசுவரன் பரிபூர்ணுநந்த ஸ்வரூபமாக பிரகாசிக்காவிட்டாலும் ஸத்ரூபமாக பிரகாசித்துக்கொண்டிருக்கிருன் வித்யையால் மாயை என்ற மறைவு நாசத்தை அடைந்த உடன் மேகம்போன சூரியன் தாஞகவே பிரகாசிப்பது போல ஆத்மஸ்வரூபம் நிஜப்ரகாசத்தாலே பிரகாசிக்கிறது.

न कारणानां व्यापारात् प्रमाणानां न वा पुनः ।
प्रत्यभिज्ञापनं नाम मोहापसरणं परम् ॥ १९ ॥

19. இந்த விஷயத்தில் காரணங்களின் செய்கைகளாலோ, அறிவை உண்டுபண்ணும் இந்திரியம் அனுமானம் முதலிய ப்ரமாணங்களின் செய்கைகளாலோ புதிதாக ஒன்றும் உண்டாவதில்லை தெரியப்படுத்தப்படுவதுமில்லை. ப்ரத்யபிஜ்ஞை என்ற வித்யை மறைவான அஜ்ஞானமென்ற மோஹத்தை நாசமாக்கிவிடுகிறது. பூர்வஸித்தமான ஆத்மஜ்யோதிஸ் தானாக பிரகாசிக்கிறது.

यावन्ति सन्ति मानानि व्यवहारप्रवृत्तये ।
तेषां मोहापसरणात् व्यापारोऽन्यो न विद्यते ॥ २० ॥

20. உலகத்தில் வ்யவஹாரம் நடக்க வேண்டியதற்காக உள்ள எல்லா ப்ரமாணங்களும் தங்களால் அறியப்படுத்தும் விஷயத்தில் புதிதாக ஒன்றையும் உண்டுபண்ணுவதில்லை. ஆனால் கண்ணினால் குடத்தைப் பார்த்தால் ப்ரத்யக்ஷ ப்ரமாணம் குடத்தின் ஆவரணமான அஜ்ஞானம் என்ற மோஹத்தை நிவர்த்தி செய்கிறது. அதைத் தவிரவேறு ஒன்றையும் உண்டுபண்ணுவதில்லை. ப்ரமாணங்களின் பலன் ப்ரமா, யதார்த்தஜ்ஞானம். ஞானம் என்ற அர்த்தத்தைக்கொடுக்கும் தாதுவுக்கு "ஆவரண நிவிருத்தியை உண்டுபண்ணும் வ்யாபாரம் அர்த்தம்" என்று வ்யாகரண சாஸ்திரக்காரர்கள் கூறுகிறார்கள். (आवरणभङ्गानुकूलव्यापारः जानात्यर्थः इति प्राचीनवैयाकरणाः)

जडानृतपरिच्छिन्नदेहधर्माश्चिदात्मनि ।
सत्यज्ञानसुखात्मत्वं मोहाद्देहेऽपि कल्प्यते ॥ २१ ॥

21. அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற ஸாக்ஷாத்காரத்தால் மோஹம் என்று சொல்லப்படும் அஜ்ஞானம் நிவர்த்தியடைந்த உடன் மோஹகார்யமான தேஹாதி பந்தமும் நிவர்த்தி அடைகிறது என்று நிரூபணம் செய்வதற்காக. ஆத்மாவுக்கு தேஹபந்தம் பரமார்த்தமல்ல; பரஸ்பர அத்யாஸம் என்னும் பிரமத்தால் ஏற்பட்டது என்று இந்த சுலோகத்தில் நிரூபணம் செய்யப்படுகிறது. தேஹம் ஜடமாயும் அஸத்யமாயும் சில காலத்தில் மட்டும் சிலவிடத்தில் மட்டுமிருப்பதுமான வஸ்து. ஆத்மா ஜ்ஞான ஸ்வரூபமாயும் ஸத்யமாயும் ஆனந்த ஸ்வரூபமாயும் எங்கும் நிறைந்ததுமான வஸ்து. இரண்டும் வெவ்வேருனது என்றறியாமல் தேஹமும் ஆத்மாவும் ஒன்ருகத் தோன்றுவதால், அதாவது ஆத்மா தேஹமாயும் தேஹம் ஆத்மாவாகவும் தோன்றுவதால், தேஹத்தின் தர்மங்களான கருப்பு சிகப்பு குட்டை நெட்டை முதலியவைகள் ஆத்மாவிலும், ஆத்ம தர்மங்களான ஸத்ரூபத்வம் ஞாநாநந்தஸ்வரூபத்வம் முதலியவைகள் தேஹத்திலும், குட்டையாகவும் கருப்பாகவும் உள்ள நான் சுகமாக இருக்கிறேன் என்று மோஹத்தால் அஜ்ஞானத்தால் கல்பிக்கப்படுகிறது.

शुक्तौ रजतमित्येव यथा व्यामुह्यतेऽन्यथा ।
सदेव रूप्यं चेद्भाति विलयस्ते न सिद्ध्यति ॥ २२ ॥

22. பளப்பளப்பான சிப்பியை வெள்ளி என்று உலகத்தில் ப்ரமத்தை அடைகிருர்கள். ப்ரமஜ்ஞானத்தில் விஷயமாயிருக்கும் (தோன்றும்) வெள்ளி ஸத்துமல்ல அஸத்துமல்ல, இரண்டு விதமாகவும் சொல்லமுடியாத பொய்யான பதார்த்தம் என்று நிரூபணம் செய்வதற்காக முதலில் ப்ரமஜ்ஞானத்தில் தோன்றும் வெள்ளி ஸத் என்று சொல்லமுடியாது என்று சொல்லப்படுகிறது. எப்பொழுதும் பாதம் (बाधः) அடையாத வஸ்துவே ஸத் என்று சொல்லப்படும். இது வெள்ளி என்ற ப்ரமம் வந்த பிறகு பின் பக்கத்தில் கருப்பாயிருப்பதை பார்த்தால் இது வெள்ளியல்ல (नेदं रजतं) என்ற பாதஜ்ஞானம் உணடாகிறது. ஆகையால் அந்த வெள்ளி ஸத் என்று சொல்லுவது பொருந்தாது,

नात्यन्तासत्प्रकाशेत नरशृङ्गादिवत्क्वचित् ।
कान्ताकरादौ रजतमिति स्यात् स्मरणं भ्रमे ॥ २३ ॥

23. ப்ரமஜ்ஞானத்தில் தோன்றும் வெள்ளி ஸத் இல்லை என்பதற்காக அத்யந்தாஸத் என்று சொல்லுவது பொருந்தாது; ஏனென்ருல் மனிதக்கொம்பு என்பது அத்யந்தாஸத் என்று சொல்லுகிருர்கள். அது ஒரு சமயமும் ப்ரத்யக்ஷமாக பிரகாசிப்பதில்லை. வெள்ளியோ ப்ரத்யக்ஷமாக பிரகாசிக்கிறது. அது அத்யந்தாஸத்தாக யிருந்தால் ப்ரத்யக்ஷமாகத் தோன்ருது.

ப்ரபாகரமீமாம்ஸகர்கள் சுக்தியில் இந்திரிய ஸம்பந்தத்தால் வெள்ளிக்கு ப்ரத்யக்ஷமில்லை. முன்பு பார்த்த வெள்ளியின் ஸ்மரணமே அந்த ஞானம்.

இது என்னும் ப்ரத்யக்ஷஜ்ஞானம். வெள்ளி என்ற ஞானம் ஸ்மரணம் என்று சொல்லுகிருர்கள். அது பொருந்தாது. ஸ்மரணமான ஞானமாயிருந்தால் நாயிகையின் கையில் வெள்ளி இருக்கிறதென்ற ஞானமுண்டாகவேண்டும். தத்தா ஸ்மரணத்தில் தோன்றுகிறது என்று சாஸ்திரக்காரர்கள் சொல்லுவார்கள். எதிரிலிருக்கும் பதார்த்தமே வெள்ளியாக தோன்றுகிறது. ஆதலால் அந்தஞானம்ஸ்மரணமாகாது. [भ्रमे ப்ரமஸ்தலத்தில் स्मरणं (यदि) ஸ்மரணமான ஞாநம் அங்கீகரிக்கப் படுமாஞல் तदा அப்பொழுது என்று சேர்த்து வ்யாக்யானம் செய்ய வேண்டும்.

तेनेदं तुल्यमित्येवं स्यात्सादृश्यात्तु विभ्रमः ।
पीतश्शङ्खो गुडस्तिक्तः इत्यादौ नास्ति तुल्यता ॥ २४ ॥

24. முன்பு பார்த்த வெள்ளிபோல் பளப்பளப்பாக இருப்பதால் வெள்ளியினுடைய ஸாம்யத்தைப் பார்த்ததஞல் வெள்ளியை ஸ்மரித்துக்கொள்கிருன். அவ்விதம் ஸ்மரிக்கப்பட்ட வெள்ளியை எதிரிலிருக்கும் வஸ்துவில் ஆரோபித்து இது வெள்ளி என்ற ஞானம் உண்டாகிறது என்று சிலர் அந்யதாக்யாதிவாதிகள் (अन्यथाख्याति) நிரூபணம் செய்கிருர்கள். அதுவும் சரியல்ல. ரஜதத்தின் ஸாத்ருச்யத்தால் ப்ரமம் உண்டாஞல் நினைக்கப்பட்ட அந்த வெள்ளிக்கு சமமாக இது இருக்கிறது என்று ஞானம் உண்டாவது பொருத்தமானது. இது வெள்ளியென்று ஞானம் உண்டாகிறது என்பது பொருத்தமாகாது. மேலும் ப்ரமம் உண்டாகும் எல்லா விடங்

களிலும் ஸாத்ருச்யம் இருப்பதில்லை. சங்கம் மஞ்சளாக இருப்பதாக ப்ரமம் உண்டாகிறது. நாக்கில் பித்ததோஷமுள்ளவனுக்கு வெல்லம் கசப்பாயிருக்கிறதென்று ப்ரமம் உண்டாகிறது. அங்கே மஞ்சள் நிறமுள்ள வஸ்துவுக்கும் சங்கத்திற்கும் ஒருவித ஸாத்ருச்யமும் கிடையாது.

तादात्म्येन स्फुरति चेद्रजतत्वेन शुक्तिका ।

विभ्रमो निरधिष्ठानो बाधो निरवधिर्भवेत् ॥ २५ ॥

25. கிளிஞ்சல் ரஜத தாதாத்ம்யத்திஞல் (रजताभेदं) வெள்ளியாகத் தோன்றுகிறது என்ருல் அந்த தோற்றத்திற்கு அதிஷ்டானம் இல்லாததாகும். ஸத்யமான வஸ்துவே அதிஷ்டானமாகும். இந்த பிரமத்தில் தோற்றும் சுக்தியும் அஸத்யமான ரஜதமாக இருப்பதால் அஸத்யமாகும். ஆகவே அது (சுக்தி) அதிஷ்டாநமாகாது. ஸத்யமான அதிஷ்டான ஜ்ஞானமே ப்ரமத்திற்கு அவதி (முடிவு). ஸத்யமான அதிஷ்டான ஜ்ஞானமில்லாததால் ப்ரமம் எல்லையற்றதாகிவிடும்; அதாவது ப்ரமத்திற்கு பாதம் (बाधं) ஏற்படாது.

बुद्धिस्थितं चेद्रजतं बाह्यत्वेन प्रतीयते ।

गुञ्जादौ ज्वलनारोपे देहदाहः प्रसज्यते ॥ २६ ॥

26. ஆத்மக்யாதி வாதிகளான சிலர் உள்ளே இருக்கும் விஜ்ஞானமென்ற புத்தியின் தர்மமே வெள்ளி; அது நம் கண்ணுக்கு எதிரிலிருப்பதாகத் தோன்றுவது தான் ப்ரமம். नेदं रजतं என்று பின்ஞல் உண்டாகும் பாதஜ்ஞானமும் வெள்ளி இது

வல்ல (வெளியிலிருப்பதல்ல) என்றே போதிக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதுவும் பொருந்தாது. குந்துமணிக் குவியல் சிகப்பாயிருக்கிறது, அதை தூரத்திலிருந்து பார்க்கும்பொழுது சில சமயம் (ज्वलनं) நெருப்பு என்று ப்ரமிக்கிறோம்; அங்கும் உள்ளே இருக்கும் நெருப்பு வெளியில் தோன்றுகிறது என்றே சொல்லவேண்டும். உள்ளே நெருப்பு இருக்குமானால் சரீரம் எரிந்து விடும்படியாக நேரிடும். ஆகையால் ஆந்தரமான பதார்த்தம் பாஹ்யமாக ப்ரமஜ்ஞானத்தில் தோன்றுகிறது என்ற வாதம் பொருந்தாது.

युक्तिहीनप्रकाशत्वात् भ्रान्तेर्नह्यस्ति लक्षणम् ।

यदि स्याल्लक्षणं किञ्चित् भ्रान्तिरेव न सिद्ध्यति ॥ २७ ॥

27. इदं रजतं என்று உண்டாகும் ப்ராந்தி ஜ்ஞானத்தில் தோன்றும் வெள்ளி ஸத்துமல்ல அஸத்துமல்ல. ஸ்மரிக்கப்படும் வெள்ளியுமல்ல. உள்ளே இருக்கும் வெள்ளியுமல்ல. ஆனாலும் வெள்ளி என்று தோன்றுகிறது. ஆகவே ஒருவிதமாயும் லக்ஷணம் சொல்லி நிரூபணம் செய்யமுடியாத அநிர்வசநீயமான வெள்ளியே ப்ராந்தியில் தோன்றுகிறது. ப்ராந்தியில் தோன்றும் வஸ்து லக்ஷணம் சொல்லி நிரூபணம் செய்யப் படுமானால் ஞானம் ப்ராந்தி என்றே ஸித்திக்காது. ஏனென்றால் யுக்திக்குப் பொருந்தாத ப்ரகாசம்தான் ப்ராந்தி எனப்படும்.

जलचन्द्रवदेकस्मिन् निर्भये रज्जुसर्पवत् ।

प्रतीयते यथा स्वर्णे कारणे कटकादिवत् ॥ २८ ॥

28. இதரவாதங்களைத் தள்ளி ப்ராந்தி ஜ்ஞானத்தில் மாயமயமான வஸ்துவே தோன்றுகிறதுஎன்று விவர்த்த வாதம் நிரூபணம் செய்யப்பட்டது. ஆத்ம ஸ்வரூபத்தில் பலவிதமான தோற்றங்கள் ஏற்படுகின்றன என்ற விஷயம் பலவித உதாஹரணங்களால் நிரூபணம் செய்யப் படுகிறது.

ஒரே சந்திரன் பல ஜலபாத்திரங்களில் ப்ரதிபலன மடையும்பொழுது பல சந்திரனுய் தோன்றுகிருன். அதுபோல ஒரே ஆத்மா பல தேஹங்களில் தேஹமென்ற உபாதியின் பேதத்தால் அநேக ஆத்மாவாகத் தோன்றுகிருன். கயிறு பயத்தை உண்டு பண்ணுத வஸ்து. அதை இருட்டில் வளைந்து கீழே இருப்பதைப் பார்த்து பயங்கர ஸர்ப்பமாக நினைக்கிருேம். அதுபோல அஹயமான ஆத்ம ஸ்வரூபத்தில் பலவிதமான ஸம்ஸார பயங்கள் தோன்றுகின்றன. சுவர்ணத்திலிருந்து கடகம் முதலிய ஆபரணங்கல் உண்டாகின்றன. அவைகளெல்லாம் வெவ்வேறு அமைப்புடையதாக இருந்தாலும் காரணமான சுவர்ணத்தைவிட வேறில்லை. அவைகள் தன் காரணமான சுவர்ணத்திலேயே தோன்றுவது போல உலகம் காரணமான ஆத்மஸ்வரூபத்திலேயே தோன்றுகிறது.

कटकादिवत् என்ற இடத்தில், வத் என்ற பதம் அதிகப்படியாக இருப்பதினுல் அதற்குத்தனியாக அர்த்த மில்லை.

उपात्ते रूप्यवच्छुक्तौ व्याप्ते यक्षपुरीव खे ।
रश्म्यम्बुवत्स्फुरद्रूपे स्थाणौ चोरवदक्रिये ॥ २९ ॥

असत्कल्पमिदं विश्वमात्मन्यारोप्यते भ्रमात् ।

29—29½. நமக்கு எதிரில் ஸ்வயமாகவே ஸித்த மான சிப்பியில் வெள்ளியை ஆரோபிக்கிறோம். அது போல उपात्त ஸ்வயம் ஸித்தமானதில், ஸ்வயம் ஸித்தமான ஆத்ம ஸ்வருபத்தில் ஸத்தாயில்லாமை யால் அஸத் போன்ற மாயாமயமான உலகம்ஆரோ பிக்கப்படுகிறது. ஆகாயத்தில்மேகங்களின் அமைப் பால் ஒரு நகரம் இருப்பது போல காணப்படுகிறது. அதற்கு கந்தர்வ நகரம் என்று பெயர். எங்கும் வ்யா பித்து இருக்கும் ஆகாசத்தில் யக்ஷபுரீ கந்தர்வ நகரம் ஆரோபிக்கப்படுகிறது. அவ்விதமே எங்கும் வ்யா பித்த ஆத்ம வஸ்துவில் உலகம் ஆரோபிக்கப்படு கிறது. கடுமையமான வெய்யில் காலத்தில் உஷ்ண மான ப்ரதேசத்தில் உஷ்ணத்தோடு சம்பந்தப்பட்ட சூரிய கிரணங்கள் தூரத்திலிருந்து பார்த்தால் ஜலம் என்று தோன்றும். மிருகதிருஷ்ணிகை என்று அதைச் சொல்லுவார்கள். ப்ரகாச சம்பந்தமிருந் தால் ப்ராந்தி வராது என்று எண்ணுகிறோம். ஆனல் ப்ரகாசத்தையே சூரிய கிரணங்களேயே ஜலம் என்று ப்ரமிக்கிறோம். அதுபோல ஸ்புரத்ருபமான ப்ரகாச ஸ்வரூபமான ஆத்மாவில் ப்ரமத்தால் பலவித உலகம் ஆரோபிக்கப்படுகிறது. இருட்டு வேளேயில் உயர மாக அசையாமல் நிற்கும் கட்டையைப் பார்த்து திருடன் என்று பிரமிக்கிறோம். அதுபோல ஒருவித வேலேயும் செய்யாத நிஷ்கிரியமான ஆத்ம ஸ்வரூ பத்தில் கிரியை இருப்பதாகத் தோன்றுகிறது.

அஸத் மாதிரியான அதாவது மாயாமயமான உலகம் ஸ்வதஸ்ஸித்தமாயும் வ்யாபித்ததும் கிரியை இல்லாததும் ஸ்வப்ரகாசமுமான ஆத்மஸ்வரூபத்தில் ப்ரமத்தால் ஆரோபிக்கப்படுகிறது.

स्वयंप्रकाशं सद्रूपं भ्रान्तिबाधविवर्जितम् ॥ ३० ॥

प्रत्यभिज्ञायते वस्तु प्राग्वन्मोहे व्यपोहिते ।

30—30½. கயிறு பாம்பாகத் தோன்றுங் காலத்திலும் கயிற்றின் ஸ்வரூபம் ஒரேவிதமாயிருக்கிறது. அது பாம்பு அல்ல கயிறு என்ற தத்வஜ்ஞான மேற்பட்டபின் எப்பொழுதும் உள்ள கயிற்றின் ஸ்வரூபமே பிரகாசிக்கிறது. அதுபோல ஸத்ரூபமானதும் ஸ்வயம் ப்ரகாசமானதும் ப்ராந்தியால் வேறிடத்தில் ஆரோபித்துத்தோன்ருததும், ஆத்மா இல்லை என்று பாத ஜ்ஞானமில்லாததுமான ஆத்மஸ்வரூபம், ஈச்வரோஹம் என்ற ஸாக்ஷாத்காரத்தால் மோஹம் என்னும் அஜ்ஞானமாயை போன பிறகு எப்பொழுதுமுள்ள ஸ்வரூபமாகவே அறியப்படுகிறது. ஆத்மா இல்லை என்ற அறிவு உண்டானுல் அந்த அறிவு ஸாக்ஷியே ஆத்மாவாகையால் ஆத்மாவுக்கு பாதம் (बाध) சொல்ல முடியாது.

देहाद्युपाधौ निर्धूते स्यादात्मैव महेश्वरः ॥ ३१ ॥

31. ஆத்மஸாக்ஷாத்காரத்தால் அஜ்ஞானம் போனுல் அஜ்ஞான காரியமான தேஹம் முதலிய உபாதிகள் போய்விடுகின்றன. அநேக ஜலங்களில் வெவ்வேருகத் தோன்றின சந்திரன் ஜலங்களான

உபாதிகள் நாசமடைந்தால் ஆகாயத்தில் இருக்கும் ஒரு சந்திரனுகவே ஆவதுபோல, தேஹம் முதலிய உபாதியின் பேதத்தால் பலவாருகத் தோன்றின ஆத்மா உபாதி போனவுடன் ஒரே ஈச்வர ஸ்வரூபமாக ஆய்விடுகிருன். (ब्रह्म वेद ब्रह्मैव भवति.)

स्मृतिः प्रत्यक्षमैतिह्यमित्यादीन्यपराण्यपि ।

प्रमाणान्याप्तवागाह प्रत्यभिज्ञाप्रसिद्धये ॥ ३२ ॥

32. அஹம் ப்ரம்மாஸ்மி ஈச்வரோஹம் என்னும் ப்ரத்யபிஜ்ஞை ஸித்திக்கும் விஷயத்தில் அதாவது அந்த ப்ரதியபிஜ்ஞையில் விஷயமான ஈச்வராத்மா பேதம் ஸித்திக்கும் விஷயத்தில், ஆப்த வாக்கான வேதம் 'क्षेत्रज्ञं चापि मां विद्धि' என்ற ஸ்மிருதி ஆத்மஜ்ஞாநிகளின் அஹம் ப்ரஹமாஸ்மி என்ற ப்ரத்யக்ஷானுபவம் तत्त्वमसि என்று குரு உபதேசமான ஐதிஹ்யம் அனுமானம் முதலிய ப்ரமாணங்களையும் நமக்கு போதிக்கிறது,

इति श्रीदक्षिणामूर्तिस्तोत्रार्थप्रतिपादके ।

प्रबन्धे मानसोल्लासे सप्तमोल्लाससंग्रहः ॥ ३३ ॥

33. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திஸ்தோத்ரத்தின் தாத்பார்யத்தைவிளக்கும் மானஸோல்லாஸம் என்ற புத்தகத்தில் ஏழாவது உல்லாசத்தின் சுருக்கம் முற்றிற்று.

எட்டாவது சுலோகத்தின்

அவதாரணிகை

प्रकाशव्यतिरेकेण पदार्थः कोऽपि नास्ति चेत् ।
परमार्थोपदेशान्तो व्यवहारः कथं भवेत् ॥ १ ॥

1. ப்ரகாசமான ஆத்ம ஸ்வரூபமே தத்வம்; அதைவிட வேறான ஒரு வஸ்துவும் இல்லையென்றால் லோகவ்யவஹாரம் எவ்வாறு நடக்கும்? பந்தம் போவதற்கு தத்தவமஸி என்னும் பரமார்த்த தத்வத்தின் உபதேசம் வரையிலுள்ள ஸகல வ்யவஹாரமும் எப்படி பொருத்தமாகும்? குரு ஒருவர், சிஷ்யன் வேறொருவர், சிஷ்யனுக்கு பந்தம் துக்கம், அதன் நிவர்த்திக்காக குருவிடம் போய் உபதேசம் பெற்றுக்கொள்வது என்னும் வ்யவஹாரங்கள் பல வஸ்துக்களிருந்தால் தான் பொருத்த மாகும்.

कस्य बन्धश्च मोक्षश्च बध्यते केन हेतुना ।
मायाया लक्षणं किं स्यात् इत्येवं परिपृच्छतः ॥ २ ॥
प्रश्नः स्यादुत्तरं वक्तुं प्रतिपत्तुं सुखेन च ।
उक्तोऽर्थः सप्तभिः श्लोकैः पुनःसंक्षिप्य कथ्यते ॥ ३ ॥

2—3. மேலும், யாருக்கு ஸம்ஸார பந்தம் சொல்ல முடியும்? பந்தமென்பதே சொல்ல முடியாமற் போனால் அதிலிருந்து மோக்ஷம் யாருக்கு ஏற்படும்? பந்தம் எந்த காரணத்தினால் உண்டாகிறது? கீழே மாயா என்று சொல்லப்பட்டது. அதற்கு லக்ஷணம் என்ன? என்று கேள்விகள் கேட்கும் சிஷ்யனுக்கு பதில் சொல்வதற்காகவும் சிஷ்யன் ஆயா

ஸப்படாமல் தெரிந்து கொள்வதற்காகவும் ஆரம்ப முதல் (ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரத்தில்) ஏழு சுலோகங்களால் நிரூபணம் செய்யப்பட்ட விஷயம் எட்டாவது சுலோகத்தால் சுருக்கமாகச் சொல்லப் படுகிறது.

पौनरुक्त्यं न दोषोऽत्र शब्देनार्थेन वा भवेत् ।
अभ्यासे हि गरीयस्त्वमर्थस्य प्रतिपद्यते ॥ ४ ॥

4. கீழே ஏழு சுலோகங்களால் சொல்லப்பட்ட விஷயமே கீழ் சொன்ன சப்தத்தால் சொல்லப்படு வதாலோ, அல்லது வேறு சப்தங்களால் சொல்லப் படுவதாலோ (புநருக்தி) ஒன்றையே திருப்பித் திருப்பிச் சொல்லுதல் என்றதோஷம் வரலாமென்று நினைக்கக் கூடாது. அடிக்கடி ஈச்வராத்மத்வம் என்னும் விஷயம் சொல்லப்பட்டால் உயர்ந்த விஷயம் முக்கியமாய் போதிக்க வேண்டுமென்ற தாத்பர்யத்திற்கு விஷயம் என்பதாக அறியப்படுகிறது. ஈச்வராத்மத்வம் மிகவும் ஸூக்ஷ்மமான விஷயமானதால் அவ்விஷயத்தில் புநருக்திதோஷமே கிடையாது.

विश्वं पश्यति कार्यकारणतया स्वस्वामिसंबन्धतः
शिष्याचार्यतया तथैव पितृपुत्राद्यात्मना भेदतः ।
स्वप्ने जाग्रति वा य एष पुरुषो मायापरिभ्रामितः
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ८ ॥

பதவுரை :—मायापरिभ्रामितः = ஆத்மாவின் அறியாமை என்ற மாயையால் சுற்றப்பட்டவரான (மயங்கினவரான) = य एष पुरुषः யாதொரு புருஷன்

(ஸாக்ஷீ) स्वप्ने=ஸ்வப்நத்திலும் जाग्रति वा= விழித்துக்கொண்டிருக்கும்பொழுதும் विश्वं = உலகத்தை कार्यकारणतया = சிலவற்றை காரியங்களாகவும் காரணங்களாகவும், स्वस्वामि संबन्धतः = சிலவற்றை வேலைக்காரன்|யஜமானன் இவர்களாகவும், शिष्याचार्यतया – சிலவற்றை சிஷ்யன் குரு இவர்களாகவும், तथैव = அப்படியே पितृपुत्राद्यात्मना =புத்ரன் தகப்பனார் இது முதலிய भेदतः=பேதபுத்தியுடன் पश्यति=பார்க்கிருனே, (அந்த ப்ரத்யக்ஸ்வரூபமான, மாயா விலாஸம் நீங்கிய) तस्मै + नमः = குரு மூர்த்தியான தக்ஷிணமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் உரியது.

ஆத்மாஜ்ஞானம் என்னும் மாயையால் சுற்றப்பட்ட அதாவது மோஹத்தை அடைந்த யாதொரு புருஷன், விழித்துக் கொண்டிருக்கும் ஜாக்ரதவஸ்தையிலும் ஸ்வப்நகாலத்திலும் உலகத்தில் சிலவற்றை காரணமாகவும் சிலவற்றை காரியமாகவும், சிலரை யஜமானனுகவும் மற்ற சிலரை அவருடைய வேலைக்காரர்களாயும், சிலரை சிஷ்யர்களாயும் சிலரை குருவாகவும், சிலரை தகப்பனுராகவும் சிலரை புத்ரன் புத்ரீ என்பதாகவும், பலவிதமான ப்ரபேதங்களோடு பார்க்கிருனே, பிறகு தத்வ ஜ்ஞாநத்தால் எந்த புருஷனுக்கு மாயாவிப்ரமம் நீங்குகிறதோ, அந்த குருமூர்த்தியான தக்ஷிணமூர்த்திக்கு நமஸ்காரம்.

अस्यायमभिसन्धिः ॥ இந்த சுலோகத்தின் தாத்பர்யம் நிரூபிக்கப்படுகிறது.

ஸப்படாமல் தெரிந்து கொள்வதற்காகவும் ஆரம்ப முதல் (ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரத்தில்) ஏழு சுலோகங்களால் நிரூபணம் செய்யப்பட்ட விஷயம் எட்டாவது சுலோகத்தால் சுருக்கமாகச் சொல்லப் படுகிறது.

पौनरुक्त्यं न दोषोऽत्र शब्देनार्थेन वा भवेत् ।
अभ्यासे हि गरीयस्त्वमर्थस्य प्रतिपद्यते ॥ ४ ॥

4. கீழே ஏழு சுலோகங்களால் சொல்லப்பட்ட விஷயமே கீழ் சொன்ன சப்தத்தால் சொல்லப்படுவதாலோ, அல்லது வேறு சப்தங்களால் சொல்லப் படுவதாலோ (புநருக்தி) ஒன்றையே திருப்பித் திருப்பிச் சொல்லுதல் என்றதோஷம் வரலாமென்று நினைக்கக் கூடாது. அடிக்கடி ஈச்வராத்மத்வம் என்னும் விஷயம் சொல்லப்பட்டால் உயர்ந்த விஷயம் முக்கியமாய் போதிக்க வேண்டுமென்ற தாத்பர்யத்திற்கு விஷயம் என்பதாக அறியப்படுகிறது. ஈச்வராத்மத்வம் மிகவும் ஸூக்ஷ்மமான விஷயமானதால் அவ்விஷயத்தில் புநருக்திதோஷமே கிடையாது.

विश्वं पश्यति कार्यकारणतया स्वस्वामिसंबन्धतः
शिष्याचार्यतया तथैव पितृपुत्राद्यात्मना भेदतः ।
स्वप्ने जाग्रति वा य एष पुरुषो मायापरिभ्रामितः
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ८ ॥

பதவுரை :—मायापरिभ्रामितः = ஆத்மாவின் அறியாமை என்ற மாயையால் சுற்றப்பட்டவரான (மயங்கினவரான) = य एष पुरुषः யாதொரு புருஷன்

(ஸாக்ஷீ) स्वप्ने = ஸ்வப்நத்திலும் जाग्रति वा = விழித்துக்கொண்டிருக்கும்பொழுதும் विश्वं = உலகத்தை कार्यकारणतया = சிலவற்றை காரியங்களாகவும் காரணங்களாகவும், स्वस्वामि संबन्धतः = சிலவற்றை வேலைக்காரன்।யஜமானன் இவர்களாகவும், शिष्याचार्यतया — சிலவற்றை சிஷ்யன் குரு இவர்களாகவும், तथैव = அப்படியே पितृपुत्राद्यात्मना = புத்ரன் தகப்பனுர் இது முதலிய भेदतः = பேதபுத்தியுடன் पश्यति = பார்க்கிருனே, (அந்த ப்ரத்யக்ஸ்வரூபமான, மாயா விலாஸம் நீங்கிய) तस्मै + नमः = குரு மூர்த்தியான தக்ஷிணுமூர்த்திக்கு இந்த நமஸ்காரம் உரியது.

ஆத்மாஜ்ஞாநம் என்னும் மாயையால் சுற்றப்பட்ட அதாவது மோஹத்தை அடைந்த யாதொரு புருஷன், விழித்துக் கொண்டிருக்கும் ஜாக்ரதவஸ்தையிலும் ஸ்வப்நகாலத்திலும் உலகத்தில் சிலவற்றை காரணமாகவும் சிலவற்றை காரியமாகவும், சிலரை யஜமானனுகவும் மற்ற சிலரை அவருடைய வேலைக்காரர்களாயும், சிலரை சிஷ்யர்களாயும் சிலரை குருவாகவும், சிலரை தகப்பனுராகவும் சிலரை புத்ரன் புத்ரீ என்பதாகவும், பலவிதமான ப்ரபேதங்களோடு பார்க்கிருனே, பிறகு தத்வஜ்ஞாநத்தால் எந்த புருஷனுக்கு மாயாவிப்ரமம் நீங்குகிறதோ, அந்த குருமூர்த்தியான தக்ஷிணுமூர்த்திக்கு நமஸ்காரம்.

अस्यायमभिसन्धिः ॥ இந்த சுலோகத்தின் தாத்பர்யம் நிரூபிக்கப்படுகிறது.

स्वयंप्रकाशे सद्रूपेऽप्येकस्मिन् परमेश्वरे ।
कार्यकारणसंबन्धाद्यनेकविधकल्पना ॥ ५ ॥

5. ஸ்வயம் ப்ரகாசமாயும் ஸத்ரூபமாயுமுள்ள ஒரே பரமேசுவர ஸ்வரூபத்தில், அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற ஸாக்ஷாத்காரமாகிற வித்யையால் அவித்யை என்ற மாயை நிவர்த்தி அடையும் வரையில், மாயையால் கார்யம் காரணம் பிதா புத்ரன் முதலிய அநேக விதமான கல்பனைகள் உண்டாகின்றன. ஸகல கல்பனைகளும் மாயாவிலாஸமே.

राहोःशिरः सुषिः खस्य ममात्मा प्रतिमावपुः ।
इत्यादिकल्पनातुल्या न पृथग्वस्तुगोचरा ॥ ६ ॥

6. ஒரு வஸ்துவே பிந்நமாக வேருக வ்யவரிக்கப் படுகிறது என்பதற்கு உதாஹரணங்கள் சொல்லப்படுகின்றன. (ராஹோ:சிர:) ராகுவின் தலைஎன்று ராகுவைக்காட்டிலும் தலையை வேருகவே கல்பித்து வ்யவஹரிக்கிருர்கள். ஆனல் பாம்பின் தலைக்கே ராகு என்று பெயர். இவ்விதம் खस्य सुषिः ஆகாயத்தின் இடைவெளி என்று சொல்லுகிருர்கள். ஆகாசமே இடைவெளி ஆயினும் அதைக் காட்டிலும் வேருக கல்பனை செய்து ஆகாசத்தினுடைய छिद्रं என்று சொல்லுகிருர்கள். ममात्मा என்னுடைய ஆத்மா என்று வ்யவஹாரமிருக்கிறது. நான் என்பதும் ஆத்மாவும் ஒன்றே. ஆனலும் பேதத்தை கல்பிக்கிருேம், प्रतिमावपुः புருஷாக்ருதியாகச் செய்யப்பட்ட பொம்மையைப் பார்த்து இந்த பொம்மையின் சரீரம் நன்ருக இருக்கிறது என்று சொல்லுகிருேம். நம்முடைய சரீரம்

என்று சொல்லுகிறோம். நான் என்பது ஆத்மா: அதைவிட வேறானது சரீரம். அதுபோல பொம்மை சரீரத்தைக் காட்டிலும் பொம்மை என்பது வேறானது இல்லை. ஆனாலும் வேறான கல்பனை செய்கிறோம். இந்தக் கல்பனைகள் ஒரு வஸ்துவையே தழுவியிருக்கின்றன. வேறு வஸ்துவைத் தழுவி இல்லை. அதுபோல ஒரே பரமேச்வரஸ்வரூபத்தில் குரு, சிஷ்யன், பிதா, புத்ரன் முதலிய பேத கல்பனைகளும் ஒரு ஸ்வரூபத்தைத் தழுவியவைகளே. வேறு வஸ்துவைத் தழுவினவைகளல்ல.

उपास्योपासकत्वेन गुरुशिष्यक्रमेण च ।

स्वामिभृत्यादिरूपेण क्रीडति स्वेच्छयेश्वरः ॥ ७ ॥

7. ஈசுவரன் ஸ்வேச்சை என்று சொல்லும் மாயையால் உபாஸிக்கப்படும் வஸ்துவாகவும், உபாஸிப்பவனாகவும், குருவாகவும், சிஷ்யனாகவும், யஜமானனாயும் வேலைக்காரனாயுமிருந்து விளையாடுகிறான். (लोकवत्तु लीला कैवल्यम् ।)

पितरं प्रति पुत्रो यः पुत्रं प्रति पितैव सः ।

एक एव हि नानेव कल्प्यते शब्दमात्रतः ॥ ८ ॥

8. பிதா புத்திரன் என்பவைகள் கல்பனைகளே. அவைகள் கல்பனையாயில்லாமலிருந்தால் தகப்பன் தகப்பனாகவே இருக்க வேண்டும். புத்திரன் புத்திரனாகவே இருக்கவேண்டும். அப்படி இருப்பது இல்லை. தேவதத்தனுக்கு யஜ்ஞதத்தன் புத்ரனாகிறான். அவனே விஷ்ணுமித்ரன் என்ற தன்னுடைய புத்திரனுக்கு பிதாவாக இருக்கிறான். ஆகவே ஒருவனே

பிதா புத்திரன் என்னும் சப்தத்தால் மட்டும் வெவ்வேருக கல்பிக்கப்படுகிறுன். இது போலவே குரு சிஷ்யபாவமும் கல்பனேயே. சிஷ்யன் தன்னுடைய சிஷ்யனுக்கு குருவாக இருக்கிறுன். ஆகையால் இவைகள் கல்பனேகளே.

तस्मात्प्रकाश एवास्ति परमार्थनिरूपणे ।

भेदप्रतीतिर्मिथ्यैव माययाऽऽत्मनि कल्पिता ॥ ९ ॥

9. கல்பனேகள் எல்லாம் மாயாமயமாதலால் பரமார்த்த ஸத்யம் எது என்று விசாரித்துப் பார்த்தால் ப்ரகாசம் (ஆத்மஜ்யோதிஸ்) ஒன்றே இருக்கிறது. ஆகவே ப்ரகாச ஸ்வரூபமான ஆத்மாவில் மாயையால் பேதஜ்ஞானம் கல்பிக்கப்பட்டது. அந்த பேதஜ்ஞானம் மித்யையே. யதார்த்தஜ்ஞானத்தால் இல்லே என்று நிரூபிக்கப்பட்டதான அஸத்யமான வஸ்துவை (பேதத்தை) நாடி இருக்கிறது.

मिथ्यात्वं नाम बाध्यत्वं सम्यग्ज्ञानोदये सति ।

शिष्याचार्योपदेशादि स्वप्नवत्प्रतिभासते ॥ १० ॥

10. மித்யை என்னும் பதத்திற்கு ஞானத்தால் பாதிக்கப்பட்டதென்று பொருள். ஸ்வப்னத்தில் காடு, மலே, யானே முதலிய பல வஸ்த்துக்களேப் பார்க்கிறோம். அவைகளெல்லாம் விழித்துக்கொண்டு இந்திரியங்களால் உண்டாகும் ஞானம் உதித்த உடன் போய்விடுகின்றன. ஆகையால் அவைகள் ஜ்ஞான பாத்யம் (ज्ञानबाध्यं) என்று சொல்லப்படுகின்றன. அவைகள் மித்யை, ஸ்வப்ந ஜ்ஞானம் மித்யை. அதாவது மித்யையான வஸ்துவை தழுவி இருக்கும்

ஞானம். அதுபோல அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற யதார்த்த ஜ்ஞானம் (தத்வ ஜ்ஞானம்) உண்டானவுடன், சிஷ்யன், ஆசாரியன், அவருடைய உபதேசம் என்னும் பேதப்ரபஞ்சமெல்லாம், விழித்தவுடன் ஸ்வப்நத்தில் கண்ட வஸ்துக்கள் மித்யை, அஸத்யம் என்று தோன்றுவதுபோல அஸத்யமென்று தோன்றுகிறது.

मिथ्याभूतोऽपि वेदान्तः सत्यमर्थं प्रबोधयेत् ।
देवताप्रतिमावच्च चित्रवत्प्रतिबिम्बवत् ॥ ११ ॥

11. ஸகலப்ரபஞ்சமும் (अहं ब्रह्मास्मि) என்ற தத்வ ஜ்ஞானத்தால் பாதிக்கப்பட்டால் ப்ரபஞ்சத்துக்குட்பட்ட வேதாந்தமும் ஞானத்தால் பாதிக்கப்பட வேண்டும். ஆகவே, அது மித்யை. மித்யையான வேதாந்தத்தால் போதிக்கப்படும் ப்ரஹ்மம் எப்படி ஸத்யமாக இருக்க முடியுமென்று ஆக்ஷேபிக்கக் கூடாது. ஈசுவரனுடைய விக்ரஹத்தை நாம் ஈசுவரனுக பாவித்துப் பூஜிக்கிறோம். நாம் அதிலிருந்து ஸத்யமான பலன்களை அடைகிறோம். விக்ரஹமே ஈசுவரனில்லை. ப்ரதிமையில் ஆரோபிக்கப்பட்ட தேவதை ஸத்யமான பலனை கொடுக்கிறது. நல்ல சித்திரவேலைக்காரனுல் சுவற்றில் எழுதிய புலியைப் பார்த்து குழந்தைகள் ஸத்யமான பயத்தை அடைகின்றன. சித்திரப் புலி ஸத்யமல்ல. ஆனலும் ஸத்யமான பயத்தை உண்டு பண்ணுகிறது. கண்ணுடியில் ஒரு பிரதிபிம்பம் விழுகிறது. அதைப் பார்க்கிறோம். அதிலிருந்து பிம்பத்தில் இருக்கும் சுத்தியோ அழுக்கோ வாஸ்தவமானது அறிந்து

கொள்ளப்படுகிறது. ப்ரதிபிம்பம் என்பது அஸத்ய மானது. ஆயினும் அது ஸத்யமான அழுக்கு முதலியவைகளை தெரியப்படுத்துகிறது. அதுபோல வேதாந்தம் மித்யையாயிருந்தாலும் ஸத்யமான ப்ராஹ்ம ஸ்வரூபத்தைப் போதிக்கும்.

सर्वोऽपि व्यवहारोऽयं मायायाः परिजृम्भणम् ।
सुषुप्तिसदृशी माया स्वप्रबोधेन बाध्यते ॥ १२ ॥

12. ஆகவே உலகத்திலுள்ள எல்லா வ்யவஹாரமும் மாயையின் கார்யமே; மாயாமயம். மாயை என்பது ஸுஷுப்திக்குச் சமமானது. (ப்ரபோதத்தால்) விழித்துக் கொள்வதால் ஸுஷுப்தி பாதிக்கப்படுவதுபோல் ஸ்வப்ர போதம் என்னும் ஆத்மதத்வஸாக்ஷாத்காரத்தால் மாயை பாதிக்கப்படுகிறது. ஆகவே ஸுஷுப்திக்குச் சமமானது மாயை.

युक्तिहीनप्रकाशस्य संज्ञा मायेति कथ्यते ।

12½. நன்ருகப் பிரகாசித்தும் ஒருவித யுக்திக்கும் பொருத்தமில்லாமலிருக்கும் வஸ்துவுக்கு மாயை என்ற பெயர் கூறப்படுகிறது.

नासती दृश्यमाना सा बाध्यमाना न वा सती ॥ १३ ॥

13. 2½ சுலோகங்களால் மாயை யுக்திக்குப் பொருந்தவில்லை யென்று நிரூபிக்கப்படுகிறது. மாயை ஸத் என்றோ அஸத் என்றோ நிரூபணம் செய்ய முடியாத வஸ்து. மனிதக்கொம்பு முயற்கொம்பு போன்ற அஸத் ப்ரத்யக்ஷமாகத் தோன்றுவதில்லை. மாயை என்ற அஜ்ஞானம் अहमज्ञः என்று

ப்ரத்யக்ஷமாகத் தோன்றுகிறது. ஆகையால் அஸத்தாகச் சொல்ல முடியாது. ஸத் என்றும் சொல்ல முடியாது, எக்காலத்திலும் பாதிக்கப்படாத வஸ்து ஸத் என்று சொல்லப்படும். மாயை ஆத்மாநுபவத்தால் பாதிக்கப்படுகிறது. ஆகையால் மாயை ஸத் என்றோ அஸத் என்றோ நிரூபணம் செய்ய முடியாத வஸ்து.

न प्रकाशादियं भिन्ना छायेवार्कस्य तामसी ।
न चाभिन्ना जडत्वेन विरोधान्नोभयात्मिका ॥ १४ ॥

14. மாயை ப்ரகாசமான ஆத்மாவைக் காட்டிலும் பிந்நம் வேறானது என்றோ அபிந்நம் என்றோ அல்லது பிந்நமாயும் அபிந்நமாயும் இருக்கிறதென்றோ நிரூபணம் செய்ய முடியாது. சூரியனுக்கு சாயாரூபமான (தமஸ்) இரவானது சூரியனைக்காட்டிலும் எப்படிஅத்யந்தம் பிந்நமாய் வேறுபட்டதாயிருக்கிறதோ, அதுபோல மாயை பிரகாசமான ஆத்மஸ்வரூபத்தைக் காட்டிலும் அத்யந்தம் வேறுபட்டதல்ல. (देवात्मशक्ति) என்ற வேதம் ஆத்மாவின் சக்தியாக மாயையைச் சொல்லுகிறது. சக்திக்கும் சக்திமத்தான வஸ்துவுக்கும் பேதமில்லை. ப்ரகாச ஸ்வரூபமாகவே இருக்கிறதென்பதும் பொருந்தாது. பிரகாசம் சேதனன். மாயை அசேதனம் ஜடம். சேதனமும் அசேதனமும் ஒன்றாக முடியாது. ப்ரகாசத்தோடு பிந்நாபிந்நமானதென்பதும் பொருந்தாது. பேதமிருந்தால் அதற்கு விருத்தமான அபேதம் அங்கு இருக்காது.

स्वहेत्ववयवाभावात् नेयं सावयवोच्यते ।
न चावयहीना सा कार्येष्ववयवान्विता ॥ १५ ॥

15. மாயை அவயவத்தோடு கூடினதென்ருே அவயவமில்லாதததென்ருே நிருபணம் செய்யமுடியாது. ஒரு வஸ்திரம் ஸாவயவமென்று சொல்லுகிருேம். வஸ்திரத்தின் அவயவம் நூல்கள். அவைகள் வஸ்திரத்திற்குக் காரணமாய் இருக்கின்றன. அதுபோல மாயைக்குக் காரணமான அவயவமில்லை. ஏனென்ருல் மாயை அனுதியானது, உண்டாவதில்லை. ஆகையால் வஸ்திரம் முதலியவைபோல ஸாவயவமாகாது. அவயவமில்லாத நிரவயவம் என்றும் சொல்ல முடியாது. மாயையால் உண்டான குடம் முதலிய வஸ்துக்கள் ஸாவயவமாயிருக்கின்றன. ஆகவே அதற்குக் காரணமான மாயை அவயவமில்லாததென்றும் நிரூபிக்க முடியாது.

अविचारितसिद्धेयं माया वेश्याविलासिनी ।
पुरुषं वञ्चयत्येव मिथ्याभूतैः स्वविभ्रमैः ॥ १६ ॥

16. வேசி குல கோத்ரங்களையும் குணங்களையும் பற்றி விசாரிக்கத்தகாதவளாயிருப்பாள். அவள் தன்னிடம் வரும் புருஷனிடம் விசேஷ அநுராகம் இருப்பதாகக் காண்பித்துப் பொய்யான சேஷ்டாவிலாஸங்களால் அவனை ஏமாற்றுகிருள். அதுபோல ஸத் அஸத் ஸாவயவம் நிரவயவம் என்ற ஒருவிதமாயும் விசாரித்து முடிவுக்குவருத மாயை, அநிர்வசநீயமான மாயாமயமான தன்னுடைய ப்ராந்திஜ்ஞானங்களால் புருஷனை ஆத்ம ஸ்வரூபத்தை வஞ்சிக்கிறது.

न तस्या मूलविच्छेदमभिवाञ्छन्ति केचन ।
तेषां पक्षे कथं मोक्षो मनसस्सम्भविष्यति ॥ १७ ॥

17. சிலர் (அஜ்ஞானிகள்) மாயை என்னும் வேசியினிடத்தில் ஈடுபட்டு மூலத்தோடு மாயை யைத்தொலைக்க இஷ்டப்படுவதில்லை. அவர்கள் மதத்தில் மனதுக்கு மோக்ஷம் (நாசம்) எப்படி வரப் போகிறது? மாயையை அடியோடு தொலைத்தால் தான் அதன் காரியமான மனது நாசத்தையடையும். மனது நாசத்தை யடைந்தால்தான் பரமானந்தா விர்ப்பாவம் என்னும் மோக்ஷம் ஸித்திக்கும்.

तिस्रोऽप्यवस्था मनसो जाग्रत्स्वप्नसुषुप्तयः ।
चक्रवत्परिवर्तन्ते भेदभ्रान्त्येकहेतवः ॥ १८ ॥

18. வண்டியின் சக்ரம் சுற்றுகிறது. கீழ்பாகம் மேலே போகிறது. மேலே இருந்து மறுபடியும் கீழே வருகிறது. அதுபோல மனது இருப்பதால் அதற்கு ஜாக்ரத் ஸ்வப்னம் ஸுஷுப்தி என்று மூன்று அவஸ்தைகளும் மாறி மாறி வந்துகொண்டே இருக்கின்றன. ஜாக்ரதவஸ்தையிலிருந்து ஸ்வப்நா வஸ்தையை யடைந்து ஸுஷுப்தியை அடைகிறது. மறுபடியும் மனது ஸுஷுப்தியிலிருந்து ஸ்வப்நத் திற்கு வந்து ஜாக்ரதவஸ்தைக்கு வருகிறது. இவ் விதம் மூன்று அவஸ்தைகளும் சக்ரம் சுற்றுவது போல மாறிக்கொண்டு வருகின்றன. அவைகள் பேதப்ரமத்தை உண்டு பண்ணுகின்றன.

ताभिः करोति कर्माणि पुनस्तैर्बध्यते मनः ।
मनसः केवलः साक्षी भानुवत्पुरुषःपरः ॥ १९ ॥

19. நான் வேறு, என்னால் உபாஸிக்கும் வஸ்து வேறு, அதற்கு கொடுக்கும் வஸ்து வேறு என்ற பேத ஜ்ஞானமில்லாமல் கர்மாக்களைச் செய்யமுடியாது. ஆகவே பேத ப்ராந்திகளால் மனது கர்மாக்களைச் செய்கிறது. கர்மாக்களால் மனது மறுபடியும் ஸம்ஸாரபந்தத்தை யடைகிறது. இவ்விதம் மூன்று அவஸ்தைகளிலும் கார்யங்களைச் செய்து கொண்டு பந்தத்தை அடையும் மனதை சூரியன் போல ப்ரகாசப்படுத்தும் ஸாக்ஷியாக பரமபுருஷன் என்னும் ஆத்மா இருக்கிறான்.

यथा प्राणिकृतैरर्कः कर्मभिर्नैव बध्यते ।

तथा मनःकृतैरात्मा साक्षित्वान्नैव बध्यते ॥ २० ॥

20. பகலில் உலகத்திலுள்ள பிராணிகள் பல காரியங்களைச் செய்கின்றன. அவைகள் ஆகாயத்தில் இருக்கும் சூரியனால் ப்ரகாசிக்கப்படுகின்றன. சூரியன் ஸாக்ஷி என்று சொல்லுகிறோம். பிராணிகளின் கார்யங்களால் சூரியன் பந்தப்படுவதில்லை. அதுபோல மனது செய்த கார்யங்களால் அவைகளுக்கு ஸாக்ஷியான ஆத்மா பந்தத்தை அடைவதில்லை. இரண்டு மனிதர்கள் அடித்துக்கொண்டும் அடிபட்டுக்கொண்டிமிருக்கிறார்கள். அடிபடாமலும் அடிக்காமலும் கார்யங்களோடு சம்பந்தப்படாமல் அதை அறிந்த வேறு மனிதனையே ஸாக்ஷி என்று சொல்லுகிறோம். அடிப்பதினால் உண்டான பந்தம் (துக்கமோ தண்டனையோ) ஸாக்ஷிக்குக் கிடையாது. அதைச் செய்த மனிதருக்கே உரியது. அதுபோல மனது செய்த கர்மாக்களுக்கு ஸாக்ஷியான புருஷன்

பந்தத்தை அடையமாட்டான். கர்மாக்களைச்செய்த மனதே பந்தத்தை அடையும்.

आत्मा करोति कर्माणि बध्यते मुच्यते च तैः ।
इत्यौपचारिकी क्लृप्तिः भ्रममात्रैव केवलम् ॥ २१ ॥

21. ஆகையால் ஆத்மா கர்மாக்களைச் செய்கிறான். அதனால் பந்தத்தை அடைகிறான். ஞானம் அடைந்து மோக்ஷத்தையும் அடைகிறான் என்பது ப்ராந்தியே. அப்படிச் சொல்லுவது முக்கியமான வ்யவஹாரமாகாது.

धूमाभ्रधूलीनीहारैरस्पृष्टोऽपि दिवाकरः ।
यथा छन्न इवाभाति तथैवात्माऽपि मायया ॥ २२ ॥

22. மாயையால் (மாயையின் கார்யமான மனது முதலியவைகளால்) ஆத்ம ப்ரகாசம் சரியாக இல்லை என்றால், ஒன்றோடும் ஸம்பந்தமில்லாத அஸங்கமானது ஆத்மா என்பது எப்படிப் பொருத்தமாகும் என்று ஸந்தேஹம் வேண்டாம். ஆகாயத்தில் சூரியன் ப்ரகாசிக்கிறான், புகை கிளம்பினாலும், மேகங்கள் ஸஞ்சரித்தாலும், புழுதிகள் கிளம்பினாலும், பனி இருந்தாலும் சூரியன் மறைவுபட்டவனாகத் தோன்றுகிறான். ஆனால் புகை, மேகம், பனி முதலியவைகள், உறை தனக்குள்ளே இருக்கும் கத்தி முதலிய வஸ்துவை மூடி மறைப்பதுபோல; சூரியனோடு சம்பந்தப்பட்டு மறைப்பதில்லை: அவைகளோடு சம்பந்தப்படாமலே சூரியன் மறைந்ததாகக் காணப்படுகிறான். அதுபோல மாயையோடு சம்பந்தப் படாமலே ஆத்மா (அஸங்கன்) மறைபடுகிறான்.

இதனுல் மாயைக்கு, உள்ள வஸ்துவை உள்ளபடி தோன்றுமல் மறைக்கும் ஆவரண சக்தி நிரூபிக்கப் பட்டது.

यथा लीलावशात्कैश्चिद्भ्राम्यमाणः कुमारकः ।
भ्रमन्तं पश्यति जगच्छतचन्द्रं नभस्स्थलम् ॥ २३ ॥
तथैव मायया जीवः भ्रामितो वासनावशात् ।
नानाकारमिदं विश्वं भ्रममाणश्च पश्यति ॥ २४ ॥

23—24. மாயையின் விக்ஷேபசக்தி நிரூபிக்கப் படுகிறது. சிலர் சிறிய குழந்தையை விளையாட்டாக சுற்றுவார்கள். சுற்றப்படும் குழந்தை உலகமேசுற்றுவதாகப் பார்க்கிறது. ஆகாயத்தில் அநேக சந்திரன் இருப்பதாகவும் பார்த்துக்கொண்டிருக்கிறது. அது போல் மாயை ஜீவனை முன்னுல் உண்டான பேத ப்ரமத்தின் வாசனை வசத்தால் சுற்றுகிறது, சுற்றப் படும். ஜீவன் சஞ்சலமாயும் மனிதன், பசு, பக்ஷி, தேவன் முதலிய பலவிதமாயும் உலகத்தைப் பார்க்கிருன்.

संसृज्य मनसा देवः संसरन्निव लक्ष्यते ।
यथाऽर्को जलसंसर्गाच्चलन्नानेव लक्ष्यते ॥ २५ ॥

25. பலவிதமாக அசையும் பல ஜலங்களில் ஆகாயத்திலுள்ள சூரியன் ப்ரதிபலிக்கிருன். ஜலம் எவ்வளவு விதமாக இருக்கிறதோ அவ்வளவு விதமாக சூரியன் தோன்றுகிருன். ஜலம் அசையுங்கால் சூரியன்களும் அசைவதாகக் காணப்படுகின்றன. ஆகவே அசையும் ஜலங்களின் சம்பந்தத்தால் அசை

வதாயும் அநேகங்களாகவும் சூரியன் காணப்படுவது போல் ஸம்ஸார பந்தத்தை யனுபவிக்கும் மனதின் சம்பந்தத்தால், மனதில் பிரதிபலிக்கும் ப்ரகாச ஸ்வரூபமான ஆத்மாவும், ஸம்ஸார பந்தத்தை அடைந்தவன் போலக் காணப்படுகிறுன்.

योगाभ्यासवशाद्येन मनो निर्विषयं कृतम् ।
निवृत्तः स पुमान्सद्यः जीवन्मुक्तो भविष्यति ॥ २६ ॥

26. பந்தப் படுத்துகிற காரணத்தால் அனுத்மாவான வஸ்துக்கள் விஷயமென்று சொல்லப்படுகின்றன. பூர்வ புண்ய வசத்தால் யோகாப்யாஸம் செய்தால் மனதை அனுத்மாவில் போகாதிருக்கும்படி செய்தால் (நிர்விஷயமாகச் செய்து) புருஷன் அப்பொழுதே விஷயங்களிலிருந்து விடுபட்டு ஜீவன் முக்தனுக ஆய்விடுவான். ப்ரஹ்மாகாரமாக மனது ஆன ஸமயத்திலேயே மோக்ஷத்தை அடைகிறுன். கொஞ்சம்கூட தாமதமேற்படுவதில்லை.

द्वा सुपर्णौ च सयुजावभवन्मायया शिवः ।
अजामेकां जुषन्नेको नानेवासीदिति श्रुतिः ॥ २७ ॥

27. "द्वासुपर्णा सयुजा सखाया समान वृक्षं परिषस्वजाते ।" என்ற சுருதி, ஒரு மரத்தில் ஸகாவாயும் சேர்ந்துமிருக்கும் இரண்டு பக்ஷிகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று பலத்தை சாப்பிடுகிறது. மற்ருென்று சாப்பிடாமலே ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. அதாவது சரீரத்தில் ஜீவன், ஈசுவரன் என்று இருவர்கள் இருக்கிருர்கள். ஜீவன் கர்மபலத்தை அனுப

விக்கிருன். ஈசுவரன் கர்ம பலனே அனுபவிப்ப தில்லையென்று கூறுகிறது. 'आजामेकां लोहित-शुक्लकृष्णां वह्वीः प्रजाः सृजमानां सरूपाः । अजामेको जुषमाणोऽनुशेते जहात्येनां भुक्तभोगामजोऽन्यः ॥" என்னும் வேதம், ஒரு ஆடு, சிவப்பு, வெளுப்பு, கருப்பு மூன்று நிறமுள்ளதும் தனக்கு ஸமமான ரூபமுள்ள பல பிரஜைகளை ஆட்டுக்குட்டிகளை உண்டுபண்ணும் பெண் ஆடுடன் மிகவும் ப்ரீதியுடன் சயனம் செய்து கொண்டிருக் கிறது. மற்றொரு ஆடு அந்த போகத்தை அனுப வித்து அதை விட்டுவிடுகிறது. அதாவது ஸத்வ ரஜஸ் தமஸ் என்ற குணமயமான மாயையோடு ப்ரியமாக ஒரு ஜீவன் இருக்கிறது. ஞானியான ஜீவன் போகத்தை அனுபவித்து மாயையை விட்டுவிடு கிருன் என்று கூறுகிறது. முதல் வேதத்திலிருந்து ஜீவனும் ஈசுவரனும் வெவ்வேருகத் தோன்றுகிறது. இரண்டாவது வேதத்திலிருந்து ஜீவர்கள் அநேகர் கள் என்று தோன்றுகிறது. ஆனல் சிவஸ்வரூபமே மாயையால் பலவிதமாக இருக்கிறதென்று மாயிக மான பேதத்தையே வேதம் கூறுகிறது.

इति श्रीदक्षिणामूर्तिस्तोत्रार्थप्रतिपादके ।

प्रबन्धे मानसोल्लासे अष्टमोल्लाससंग्रहः ॥ २८ ॥

28. ஸ்ரீ தக்ஷிணுமூர்த்திஸ்தோத்திரத்தின் தாத் பர்யத்தை விளக்கும் மானஸோல்லாஸம் என்னும் புத்தகத்தில் எட்டாவது உல்லாஸச் சுருக்கம் முற்றிற்று.

———

ஒன்பதாவது சுலோகத்தின்

அவதரணிகை

कथमेवंविधा माया निवर्तेतेति पृच्छतः ।
ईश्वरोपासनारूपस्तदुपायः प्रकीर्त्यते ॥ १ ॥

1. யுக்திக்குப் பொருத்தமில்லாமலேயே ப்ரகாசித்துக் கொண்டிருப்பதும் புருஷனை வஞ்சிப்பதுமான மாயை எப்படி நிவர்த்தியாகும்? அஹம் ப்ரஹ்மாஸ்மி என்னும் ஸாக்ஷாத்காரத்தால் நிவர்த்தியாகுமென்றால் அதை அடைய உபாயம் என்ன? என்று கேட்பவனுக்கு ஈச்வரோபாஸநம் உபாயம் என்று 9-வது சுலோகத்தால் கூறப்படுகிறது.

षट्त्रिंशत्तत्त्वरूपासु परमेश्वरमूर्तिषु ।
प्रत्यक्षेणोपलभ्यन्ते सर्वैरप्यष्टमूर्तयः ॥ २ ॥

2. முப்பத்தாறு தத்வங்கள் பரமேச்வரனுடைய மூர்த்திகள் என்று சைவாகமங்களில் கூறப்பட்டுள்ளன. அவைகளின் ஐந்து பூதங்கள், சந்திரன், சூரியன், ஆத்மா என்ற எட்டு மூர்த்திகள் ப்ரத்யக்ஷ ப்ராமாணத்தால் அறியப்படுகின்றன. ஐந்து பூதங்களில் ஒன்றான ஆகாசம் ரூபமில்லாதபடியால் ப்ரத்யக்ஷமாக அறிய முடியாது என்று நையாயிகர்கள் சொன்னாலும், வேதாந்த சாஸ்திரத்தில், வெளிச்சமாயிருக்கும் பொழுது கண்ணைத் திறந்து பார்த்தால் ஆகாசம் புலப்படுகிறது. கண்ணை மூடினால் தெரியவில்லை. ஆகையால் ஸாக்ஷி ப்ரத்யக்ஷத்தால் ஆகாசம் அறியப்படுகிறதென்று தீர்மானம் செய்து இருக்

கிறார்கள். (आलोकाकारवृत्त्यभिव्यक्तसाक्षिवेद्यत्वम् आकाशस्य ।) ஆகவே எட்டு மூர்த்திகள் ப்ரத்யக்ஷமானவை.

अमेयासु मनः क्षिप्रमारोढुं नार्हतीत्यतः ।
मूर्त्यष्टकमयीं ब्रूते गुरुः सर्वात्मभावनाम् ॥ ३ ॥

3. ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தால் அறிய முடியாததான பாக்கி மூர்த்திகளில் சீக்கிரம் மனதை நிலை நிறுத்த முடியாது என்று சங்கர பகவத்பாதாசார்யாளான குரு (ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ர கர்தா) எட்டு மூர்த்தியின் த்யான ரூபமான ஸர்வாத்ம பாவனையை ஒன்பதாவது சுலோகத்தால் நிரூபணம் செய்கிறார். (मूर्त्यष्टकमयीं =मूर्त्यष्टकध्यानरूपाम् ।)

भूरम्भांस्यनलोऽनिलोऽम्बरमहर्नाथो हिमांशुः पुमान्
इत्याभाति चराचरात्मकमिदं यस्यैव मूर्त्यष्टकम् ।
नान्यत्किञ्चन विद्यते विमृशतां यस्मात्परस्माद्विभोः
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥ ७ ॥

பதவுரை :—भूः = பூமி ; अम्भांसि = ஜலம் ; अनलः = அக்நி ; अनिलः = வாயு ; अम्बरं = ஆகாசம் ; अहर्नाथः = சூரியன் ; हिमांशुः = சந்திரன் ; पुमान् = ஸுக துக்கத்தை யனுபவிப்பவனான ஆத்மா ; इति = என்று ; चराचरात्मकम् इदं = சரமாயும், அசரமாயும் உள்ள இந்த உலகம் ; यस्य = எவருடைய ; मूर्त्यष्टकम् एव = எட்டு உருவங்கள் தானே ; आभाति = ப்ரகாசிக்கிறதோ, विमृशतां = நன்றாக விசாரிப்பவர்களுக்கு ; विभोः = வியாபகரான ;

यस्मात्परस्मात् = எந்த பரமேசுவரரைக் காட்டிலும்; अन्यत् किञ्चन வேறு ஒன்றும்; न विद्यते = இல்லையோ; तस्मै श्रीगुरुमूर्तये दक्षिणामूर्तये इदं नमः = அந்த குருமூர்த்தி ஸ்வரூபமான ஸ்ரீ தக்ஷிணு மூர்த்திக்கு இந்த நமஸ்காரம் உரியது.

பூமி, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், ஸுக துக்கத்தை அனுபவிக்கும் ஆத்மா என்றிவ்வாறு சரமாயும் அசரமாயும் ப்ரகாசிப்பதெல்லாம் எந்த பரமேசுவரனுடைய எட்டு சரீரமோ; நன்ருக விசாரித்துப் பார்த்தால் எல்லாம் ஸர்வ வ்யாபியான பரமேச்சுவரனிடத்தில் கல்பிதமானதால் எந்த பரமேசுவரனைவிட வேருனவையாக ஒன்றுமில்லையோ அந்த அஷ்டமூர்த்தியான குருமூர்த்தி ஸ்வரூபமான தக்ஷிணுமூர்த்திக்கு நமஸ்காரம்.

अस्यैवं सिद्धान्तः—

विराट्शरीरे ब्रह्माण्डे प्राणिनामपि विग्रहे ।
षट्त्रिंशत्तत्त्वसंघातः सर्वत्राप्यनुवर्तते ॥ ४ ॥

4. உலகம் அஷ்டமூர்த்தி ஸ்ரூவபமானது. அது முப்பத்தாறு தத்வமயம். அது அதிதைவம் என்றும் அத்யாத்மம் என்றும் இருவகைப்படும். பதினன்கு லோகங்களும் சேர்ந்த ப்ரம்மாண்டம் அதிதைவம். நம்முடைய சரீரம் என்னும் பிண்டம் அத்யாத்மம். ப்ரம்மாண்டத்தின் கார்யம் பிண்டம், ப்ரம்மாண்டமென்பது ஸமஷ்டி (எல்லாம் சேர்ந்தது) சரீரம் விராட் சரீரமென்று சொல்லுகிருர்கள். அதில் வ்யஷ்டி (व्यष्टि) தனித்தனியானது ப்ராணிகளின்

சரீரங்கள். ப்ரம்மாண்டத்தில் பலவித அவயவங்களிருக்கின்றன. ப்ராணி சரீரங்களிலும் (பிண்டத்திலும்)பல அவயவங்களிருக்கின்றன. ப்ரம்மாண்டத்தின் அவயவங்களையும் சரீரத்தின் (பிண்டத்தின்) அவயவங்களையும் ஒன்றாக ஸம்பத்தி செய்து (உபாஸனை செய்து) சரீரத்தையே ப்ரம்மாண்டமாக ஸம்பத்தி செய்து ப்ரம்மாண்டமான நம்முடைய சரீரத்தில் அஷ்டமூர்த்தியின் பிண்டஸ்வரூபமாக ஈசுவரனை உபாஸனை செய்தால் அதில் மனிதனுக்கு நிலை ஏற்பட்டு ஈசுவரானுக்கிரஹத்தால் ஈசுவரனுடைய பரமார்த்தமான, ஸ்வயம்ப்ரகாசமான நிர்குண தத்துவத்தின் ஸாக்ஷாத்காரமடைந்து கிருதார்த்தனுகலாமென்று ஒன்பதாவது சுலோகத்தின் தாத்பர்யம் வர்ணிக்கப்படுகிறது. பதினுன்கு உலக ஸ்வரூபமான ப்ரம்மாண்டமென்னும் சமஷ்டியான விராட் சரீரத்திலும், வ்யஷ்டியான ப்ராணிகளின் சரீரத்திலும், முப்பத்தாறு தத்வங்கள் இருக்கின்றன. ஐந்து பூதங்கள், ஐந்து ப்ராண வாயுக்கள், பதினுன்கு இந்திரியங்கள் ; மஹத், காலம், ப்ரதானம், மாயா, அவித்யா, புருஷன், பிந்து, நாதம், சக்தி, சிவம், சாந்தம், அதீதம் என்று முப்பத்தாறு தத்வங்கள் சைவாகமங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

व्याप्तिर्व्यष्टिशरीरेऽस्मिन् मनसो व्यष्टिरूपिणः ।
तस्मात्सर्वात्मकमिदं स्वशरीरं विचिन्तयेत् ॥ ५ ॥

5. ஸ்தூல ப்ரம்மாண்ட சரீராபிமானியை விராட் என்றும் ஸூக்ஷ்ம சரீராபிமானியை ஹிரண்ய கர்ப்பன் என்றும் சொல்லுகிருர்கள். ஸூக்ஷ்ம சரீரமென்பது மனது என்று சொல்லலாம். ஆகவே ஸமஷ்டி

யான மனதே ஹிரண்ய கர்ப்பன். அந்த ஸமஷ்டி மனதால் ஸமஷ்டி சரீரமான ப்ரம்மாண்டம் வ்யாபிக்கப்பட்டு இருக்கிறது. வ்யஷ்டியான (தனித்தனியான) பிண்டமென்னும் சரீரமும் வ்யஷ்டியான மனதால் வ்யாபிக்கப்பட்டு இருக்கிறது. காரணமும் காரியமும் ஒன்றே. மிருத்திலிருந்து குடம் உண்டாகிறது. மிருத்திகைக்கும் குடத்திற்கும் அபேதமென்று சாஸ்திரக்காரர்கள் சொல்லுகிறுர்கள். ஆகையால் வ்யஷ்டி மனதால் வ்யாபிக்கப்பட்ட வ்யஷ்டி சரீரமும் ஸமஷ்டி மனதால் வ்யாபிக்கப்பட்ட ஸமஷ்டி ப்ரம்மாண்டமும் ஒன்ருகையால் நம்முடைய சரீரத்தை ஸர்வாத்மகமாக (ப்ரம்மாண்டமாக) த்யானம் செய்யவேண்டும்.

व्यष्ट्युपासनया पुंसः समष्टिव्याप्तिमश्नुयात् ।

उपसंक्रामतीत्येवं दशकृत्वः उपादिशत् ॥ ६ ॥

6. இவ்விதம் ப்ரம்மாண்டமாக ஸம்பத்தி செய்யப்பட்ட பிண்டமான வ்யஷ்டி ஸ்வரூபமாக பரமேஶ்வரனை உபாஸிப்பதால் ஸர்வாத்மகமான ப்ரம்ம ஸ்வரூபமாய் ஆகிவிடலாம். (पुंसः=परमेश्वरस्य) व्यष्ट्युपासनया = व्यष्टिशरीरात्मतया उपासनया) தைத்திரீய உபநிஷத்து உபஸங்க்ராமதி என்று பத்து தடவை உபதேசித்தது. பரப்ரஹ்மஸ்வரூபத்தைஅறியப்படுத்துவதற்கு ஐந்து கோசங்கள் தைத்திரீய உபநிஷத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது (1) அன்னமய கோசம், (2) ப்ராணமய கோசம். (3) மனோமய கோசம், (4) விஜ்ஞானமய கோசம், (5) ஆனந்த மய கோசம். அன்னமய கோசத்தை ஆத்மாவாக நினைக்

கிறான். அதாவது வ்யஷ்டி சரீரம் ஸமஷ்டியான ப்ரம்மாண்டம் எல்லாவற்றையும் ஒன்றாக நான் என்று அறிகிறான். பிறகு அதில் ஆத்ம புத்தியைவிட்டு அன்ன மயத்திற்கும் உள்ளே இருக்கும் ப்ராண மயத்தை ஆத்மாவாக நினைக்கிறான். அதைவிட்டு மனோமயத்தை, பிறகு விஜ்ஞானமயத்தை, பிறகு ஆனந்தமயத்தை நான் என்று அபிமானிக்கிறான். கடைசியில் எல்லாவற்றிற்கும் ஆதாரமான பரப்ரஹ்ம ஸ்வரூபஜ்ஞானமேற்பட்டவுடன், அந்நமயாதிகளில் ஆத்ம புத்தி ப்ரமம் போய்விடுகிறது. ப்ரம்மத்தை யடைகிறான்.

(अविद्याविभ्रमनाशे संक्रमणशब्द उपचर्यते) (तैत्तिरीय-भाष्यं = (तत्तत्कोशगोचरविभ्रमनाशः तत्र तत्र संक्रमो विवक्षितः।) (वनमाला।) இவ்விதம் ஐந்து தடவை உபஸங்க்ராமதி என்று ப்ரம்மவல்லியில் உபதேசிக்கப்பட்டு இருக்கிறது. பிருகுவல்லியில் அன்னமய முதலிய ஐந்து கோசங்களையும் உபஸங்க்ரமணம் செய்து (ஆத்ம வித்யையால் ஐந்து கோசங்களிலும் ஆத்ம புத்தியைத் தள்ளி) ஸாமகானம் செய்து கொண்டு ப்ரம்மஜ்ஞானி இருக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரஹ்ம வல்லியில் அத்யாத்மகமான ஐந்து கோசங்களும், ப்ருகுவல்லியில் அதிதைவமான ஐந்து கோசங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விதம் பத்து தடவை உபதேசித்ததிலிருந்து வ்யஷ்டியான அநேகத்தில் திருஷ்டியும் பரிபூரணாத்ம திருஷ்டிக்கு ஸாதனமாய் விடுகிறதென்பதை நன்கு அறிகிறோம்.

ब्रह्माण्डस्योदरे लोकाः सप्त भूरादयः स्मृताः ।
मूलादिब्रह्मरन्ध्रान्तेष्वाधारेषु वसन्ति ते ॥ ७ ॥

7. ப்ரம்மாண்டத்திற்குள் भूः, भुवः, सुवः, महः, जनः, तपः, सत्यं என்னும் ஏழு லோகங்கள் இருக்கின்றன. பிண்டத்தில் மூலாதாரம் முதல் ப்ரம்மரந்திரம் வரையில் மூலாதாரம், ஸ்வாதிஷ்டாநம், மணிபூரகம் முதலிய ஆதாரங்களிருக்கின்றன. ஆதாரங்களில் ப்ரம்மாண்டத்திலுள்ள ஏழு லோகங்களிருக்கின்றன வென்று தியானம் செய்யவேண்டும்.

वीणादण्डो महामेरुः अस्थीनि कुलपर्वताः ।
गङ्गा तु पिङ्गला नाडी यमुनेडा प्रकीर्तिता ॥ ८ ॥
सरस्वती सुषुम्नोक्ता नाड्योऽन्याः पुण्यनिम्नगाः ।
द्वीपाः स्युर्धातवः सप्त स्वेदबाष्पादयोऽब्धयः ॥ ९ ॥

8—9. உள்ளே துவாரமுள்ள முதுகெலும்பு வீணாதண்டம் என்று சொல்லப்படுகிறது. மத்ய பாகத்தில் இருப்பதால் அது மஹாமேரு பர்வதம். அதைச் சுற்றியிருக்கும் எலும்புகள் பாரியாத்ரகம் முதலிய குல பர்வதங்கள். மூலாதாரத்தில் நாடீ சக்ரத்தில் (अधोमुख) அதோமுகமாயிருக்கும் கோணத்திலிருந்து கிளம்பும் நாடீ ஸுஷும்நா நாடீ. அதற்கு இடது பக்கத்தில் கிளம்புவது இடா. வலதுபக்கத்திலிருப்பது பிங்களா நாடீ. அது கங்காநதி, இடது பக்கத்திலிருக்கும் இடா யமுனா நதீ, நடுவிலிருக்கும் ஸுஷும்நா நாடீ ஸரஸ்வதீ நதீ, மற்ற நாடிகள் எல்லாம் உலகத்திலுள்ள மற்ற புண்ய நதிகள்.

சரீரத்திலுள்ள தோல், மாமிசம், ரக்தம், மஜ்ஜை முதலிய ஏழு தாதுக்களும் ஜம்பூத்வீபம் முதலிய ஏழு த்வீபங்கள், வேர்வை ஜலம் கண்ணீர் முதலியவைகள் த்வீபங்களைச் சுற்றியிருக்கும் சமுத்திரங்கள் என்று தியானம் செய்யவேண்டும்.

मूले तिष्ठति कालाग्निः अस्थिमध्ये च वाडवः ।
विद्युतोऽग्निः सुषुम्नायां पार्थिवो नाभिमण्डले ॥ १० ॥
हृदि तिष्ठति सूर्याग्निः कपाले चन्द्रमण्डलम् ।
नक्षत्राण्यपराण्याहुः नेत्रादीनीन्द्रियाण्यपि ॥ ११ ॥

10—11. ப்ரம்மாண்டத்திலுள்ள பலவித தேஜஸ்ஸுகள் சரீரமத்யத்தில் இருப்பதாக தியானம் செய்ய வேண்டுமென்று இரண்டு சுலோகங்களால் நிரூபிக்கப்படுகிறது.

மூலாதாரத்தில் ப்ரளய காலத்திலிருக்கும் காலாக்நி இருக்கிறது. எலும்புகளின் நடுவில் பாடபாக்நி இருக்கிறது. ஸுஷும்நா நாடியில் வித்யுதக்நி (மின்னல் ஜோதிஸ்) இருக்கிறது. பிருதிவீ தாதுவை சோஷிக்கும்படிச் செய்யும் அக்நி நாபி மண்டலத்தில் இருக்கிறது. ஸௌர்யதேஜஸ் ஹிருதயத்திலிருக்கிறது. சந்திரமண்டலம் கபாலத்தில் (ललाटे) நெற்றியில், மற்ற நக்ஷத்திரங்கள் கண் முதலிய இந்திரியங்கள் என்னும் தியானம் செய்ய வேண்டும்.

धार्यन्ते वायुभिर्लोका यथा प्रवहणादिभिः ।
प्राणादिभिर्दशविधैः धार्यते वायुभिर्वपुः ॥ १२ ॥

12. ப்ரம்மாண்டத்தில் வாயு, ப்ரவஹம், ஆவஹம், அனுவஹம், ஸுவஹம், விவஹம், பராவஹம்.

பரிவஹம் என்னும் ஏழுவிதமாக இருந்துகொண்டு தன்னுடைய ஸஞ்சாரத்தால் ப்ரம்மாண்டத்தைத் தாங்குகிறது. பிண்டமென்னும் சரீரமும் ப்ராணன், அபானன் முதலிய பத்துவித வாயுக்களால் தரிக்கப் படுகிறது. சரீரத்தில் இருக்கும் தேஹத்தை தரிக்கும் ப்ராண வாயுவை ப்ரம்மாண்டத்தைத் தரிக்கும் வாயுவாகத் தியானம் செய்யவேண்டும்.

प्राप्येडापिङ्गले प्राणो मूलात्सूर्यस्वरूपतः ।
नासिकाभ्यां बहिर्गत्वा लीयते द्विषडङ्गुले ॥ १३ ॥

13. சரீரத்திலிருக்கும் பத்துவித வாயுக்களும் அவைகளின் கார்யங்களும் வேலைகளும் 5½ சுலோகங்களால் நிரூபணம் செய்யப்படுகின்றன. மூச்சு விடும் வாயு ப்ராணவாயு. அது ஸௌர்ய ஸ்வரூபமான மூலாதாரத்தில் இருந்து கிளம்பி இடா பிங்களை யென்ற நாடிகளையடைந்து மூக்கு துவாரங்கள் வழியாக தேஹத்தின் வெளியில் பன்னிரண்டு அங்குல தூரம் வரையில் போய் லயத்தை அடைகிறது,

अष्टाङ्गुलेन सोमात्मा नाडीभ्यामन्तराविशेत् ।
मलमूत्रमरुच्छुक्राण्यपानो विसृजेद्बहिः ॥ १४ ॥

14. உள்ளே இழுக்கப்படும் வாயு அபானவாயு ஸோமஸ்வரூபமாய் நாஸிகையின் துவாரங்கள் வழியாக சரீரத்திற்குள் எட்டு அங்குலம் வரையில் ஹிருதயம் வரையில் பிரவேசிக்கிறது. அந்த வாயு மலம் மூத்திரம் காற்று வீர்யம் இவைகளை சரீரத்திலிருந்து வெளியே தள்ளிவிடுகிறது.

अग्नीषोममयो भूत्वा सुषुम्नारन्ध्रमाश्रितः ।
आब्रह्मरन्ध्रमुद्गच्छन्नुदानो वर्धते स्वयम् ॥ १५ ॥

15. ப்ராணவாயுவே அக்நீஷோமஸ்வரூபமாயிருந்துகொண்டு ஸுஷும்ந நாடியின் மத்தியத்திலிருக்கும் துவாரத்துக்குள் பிரவேசித்து கபாலத்திலிருக்கும் பிரம்ம ரந்திரம் வரையில் மேல் பாகத்தில் போய் உதானன் என்று சொல்லப்படுகிறது.

व्यापयेद्वपुषि व्यानो भुक्तान्नरसमन्वहम् ।
सन्धुक्षणं समानस्तु कायाग्नेः कुरुते सदा ॥ १६ ॥

16. ப்ரதி தினம் சாப்பிடும் அன்னத்தின் ரஸத்தை சரீரத்திலுள்ள எல்லா நாடிகளிலும் வ்யாபிக்கும்படி செய்துகொண்டிருப்பது வ்யானன், காயாக்நியை தன் ஸஞ்சாரத்தினல் எரியும்படியாக செய்துக்கொண்டிருப்பது ஸமானன்.

नागो हिक्काकरः कूर्मो निमेषोन्मेषकारकः ।
क्षुतं करोति कृकरः देवदत्तो विजृम्भणम् ॥ १७ ॥
स्थौल्यं धनञ्जयः कुर्यान्मृतञ्चापि न मुञ्चति ।

17—17½. விக்கலை உண்டுபண்ணுவது நாகன் என்ற வாயு. கண்மூடித் திறப்பதை உண்டுபண்ணுவது கூர்மம். கொட்டாவியை உண்டுபண்ணுவது தேவதத்தன் என்றவாயு. உடம்புக்கு பருமனை உண்டு பண்ணுவது தநஞ்சயன். அது ப்ராணன் போன பிணமான சரீரத்தையும் விடுகிறதில்லை. பிணமான சரீரத்திற்குள் தநஞ்சயன் என்ற வாயு இருந்து

ஸ்தூலமாகச் செய்துவிடுகிறது. பத்துவித வாயுக்கள் சரீரத்தில் சொல்லப்பட்டன.

आकाशो बहिरप्यन्तरवकाशं प्रयच्छति ॥ १८ ॥

18. பிரம்மாண்டத்தில் பெரிய ஆகாசம் வெளியில் இடவெளியைக் கொடுக்கிறது. உள்ளே இருக்கும் ஆகாசம் உள்ளே இடவெளியைக் கொடுக்கிறது.

चन्द्रार्कौ कालनेतारौ प्राणापानौ शरीरिणाम् ।

साक्षी पुरुष इत्येवं मूर्त्यष्टकमिदं वपुः ॥ १९ ॥

19. பிரம்மாண்டத்தில் காலத்தைச் செய்யும் சந்திர சூரியர்கள் மனிதர்களின் சரீரத்திலே பிராணன் அபானன் என்ற இரண்டு வஸ்துக்கள் என்று தியானம் செய்யவேண்டும். சரீரத்திற்கு ஸாக்ஷியாக இருக்கும் சைதன்ய (चैतन्य)மே புருஷனென்று சொல்லப்படுகிறது. ஆகவே கீழ் சொல்லிய பிரகாரம் நம்முடைய சரீரமே ப்ருதிவீ, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம், சந்திரன், சூரியன், புருஷன் என்று எட்டுவித மூர்த்தியாக இருக்கிறது.

समनस्कमिदं योगी सेवमान उपासनम् ।

अष्टाङ्गयोगयुक्तस्सन्नमनस्कं स गच्छति ॥ २० ॥

20. மனதால் வ்யாபிக்கப்பட்டதால் ஸமனஸ்கம் என்று சொல்லும் அஷ்டமூர்த்தி ஸ்வரூபத்தின் உபாஸனத்தை அப்யாஸம் செய்துகொண்டிருக்கும் யோகி, யமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி என்று எட்டுவித அங்கங்களோடு கூடினவனாய் மனதில்லாத பரமேஶ்வர ஸ்வரூபத்தை அடைகிறான்.

मनःप्रसादः सन्तोषो मौनमिन्द्रियनिग्रहः ।
दया दाक्षिण्यमास्तिक्यम् आर्जवं मार्दवं क्षमा ॥ २१ ॥
भावशुद्धिरहिंसा च ब्रह्मचर्यं स्मृतिर्धृतिः ।
इत्येवमादयोऽन्ये च मनस्साध्या यमाः स्मृताः ॥ २२ ॥

21—22. பத்து சுலோகங்களால் யோகத்தின் எட்டு அங்கங்கள் நிரூபிக்கப்படுகின்றன. மனதால் சாத்யமான யமம் என்ற யோகாங்கம் இரண்டு சுலோகங்களால் சொல்லப்படுகிறது. மனதின் பிரஸாதம் = தெளிவு = கிடைத்ததைக் கொண்டு சந்தோஷம். உபயோகமற்ற பேச்சு பேசாமலிருப்பது மௌனம். இந்திரியங்களை இஷ்டப்படிவிடாமல் வசப்படுத்துவது இந்திரிய நிக்ரஹம். ப்ராணிகளிடம் துரோகம் செய்யாமல் இருப்பது தயை. வ்யவஹாரங்களில் ஆக்ரஹமில்லாமல் இருப்பது தாக்ஷிண்யம். சாஸ்திரங்களில் சொல்லிய விஷயங்களில் நம்பிக்கை ஆஸ்திக்யம். மனது, வாக், சரீரம், மூன்றும் ஒரே மாதிரியாக காரியம் செய்வது, ஆர்ஜவம் (மனதில் நினைத்தபடியே பேசி பேசினபடியே காரியத்தைச் செய்வது). பிறருடன் சேருவதற்கு யோக்யமாக இருக்கும் தன்மை மார்தவம். கோபம் உண்டாவதற்குக் காரணமிருந்தும் கோபம் கொள்ளாமலிருப்பது க்ஷமை. கபடம் முதலிய தோஷமில்லாமை பாவசுத்தி. பிறரை ஹிம்ஸிக்காமலிருப்பது அஹிம்ஸா. ஸ்திரீ விஷயமான பார்வை முதலிய ஒரு கார்யங்களிலும் ஈடுபடாமலிருப்பது ப்ரஹ்மசர்யம். பிறவி முதலியவைகளிலுள்ள தோஷங்களை நினைப்பது ஸ்மிருதி. தியானம்

செய்யும்பொழுது மனது சோர்ந்தால் மனதை தைரியப்படுத்திக்கொள்வது திருதி. இன்னும் பகவத் கீதையில் தைவ ஸம்பத் என்றும் சொல்லி யிருக்கும் (अमानित्वं) அமா நித்வ முதலியவைகள் யமங்கள் என்று சொல்லப்படுகின்றன.

स्नानं शौचं क्रतुः सत्यं जपो होमश्च तर्पणम् ।

तपो दानं तितिक्षा च नमस्कारः प्रदक्षिणम् ॥ २३ ॥

व्रतोऽपवासाद्याश्चान्ये कायिका नियमाःस्मृताः ।

23—23½. சரீரத்தால் ஸாத்யமானவை நியமங்கள். இவை இரண்டாவது யோகாங்கம். ஸ்நாநம் செய்வது சரீரத்தை சுத்தமாக வைத்துக்கொள்வது. ஈசுவர பூஜை, (क्रतुः ईश्वरपूजनं) எக்காலத்திலும் பொய் பேசாமல் ஸத்யமே பேசுவது. உபநிஷத்தின் பாராயணம், ப்ரணவ ஜபம், ஹோமம், தேவர் ருஷி பிதிரு தர்ப்பணம், கிருச்சிரம் முதலிய தபஸ், பிறருக்குத் திரவியத்தைக் கொடுப்பது, சீதம் உஷ்ணம் முதலிய த்வந்துவங்களை ஸஹிப்பது, ஈசுவரன் குரு முதலியவர்களை ப்ரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் செய்வது, அந்தந்த சமயத்துக்குத் தகுந்த வ்ரதங்கள் உபவாஸங்கள் முதலியவைகள் சரீர ஸாத்யமான நியமங்கள் எனப்படும்.

स्वस्तिकं गोमुखं पद्मं हंसाख्यं ब्राह्ममासनम् ॥ २४ ॥

24. இரண்டு சுலோகங்களால் மூன்றுவது யோகாங்கமாகிற ஆஸனம் நிரூபிக்கப்படுகிறது. ஆஸனம், பிராம்மம், வைஷ்ணவம், ரௌத்திரம், சாக்தம் என்று நான்குவிதம். அதில் பிரம்ம தேவ

தையாயுள்ள ஆஸனம், ஸ்வஸ்திகம், கோமுகம், பத்மம், ஹம்ஸம் என்று நான்கு விதம்.

नृसिंहं गारुडं कूर्मं नागाख्यं वैष्णवासनम् ।

24½. விஷ்ணுவை தேவதையாயுள்ள (வைஷ்ண வாஸநம்) ந்ருஸிம்ஹாஸநம், கருடாஸநம், கூர்மா ஸநம், நாகாஸநம் என்று நான்கு வகைப்படும்.

वीरं मयूरं वज्राख्यं सिद्धाख्यं रौद्रमासनम् ॥ २५ ॥

25. ருத்திரனை தேவதையாக உள்ள (ரௌத்தி ராஸனம்) வீராஸனம், மயூராஸனம், வஜ்ராஸனம், ஸித்தாஸனம் என்று நான்கு வகைப்படும்.

योन्यासनं विदुः शाक्तं शैवं पश्चिमतानकम् ।

25½. சக்தியை தேவதையாக உள்ள சாக்தாஸ னம் யோன்யாஸனம். சிவனை தேவதையாக உள்ள சைவமான ஆஸனம் பச்சிமதானகாஸனம் என்று இவ்வாறு யோகிகள் அறிவார்கள்.

निरालम्बनयोगस्य निरालम्बनमासनम् ॥ २६ ॥

निरालम्बतया ध्यानं निरालम्बस्सदाशिवः ।

26—26½. கீழே சொல்லப்பட்ட ஒவ்வொரு ஆஸ னம் செய்வதற்கு கைகள் கால்கள் சரீர மத்யம் இவைகள் சில சில இடங்களில் வைக்கப்படவேண்டு மென்ற நியமங்கள் உண்டு. ஆனல் நிராலம்ப யோகத்தை அனுஷ்டிப்பதற்கு ஸாதனமான ஆஸன மும் நிராலம்பாஸனமே. அதாவது கை கால் முதலிய அவயவங்களை இவ்விதமாகத்தான் வைத்துக் கொள்ளவேண்டுமென்ற நியமத்தின் பிடிப்பு இல்

லாத ஆஸனம். ஒருவித தர்மமுமில்லாத நிர்க்குண தத்துவமான ஸதாசிவரே நிராலம்பர். அவரிடத்தில் மனதைச் செலுத்துவதே நிராலம்ப யோகமாகும்.

रेचकः पूरकश्चैव कुम्भकः प्राणसंयमः ॥ २७ ॥

27. ப்ராணயாமம் நான்காவது யோகாங்கம். ப்ராண வாயுவின் வ்யாபாரத்தை நிறுத்துவது ப்ராணயாமம். அது ரேசகம், பூரகம், கும்பகம் என்று மூவகைப்படும். உள்ளே இருக்கும் ப்ராண வாயுவை வெளியில் விடுவது ரேசகம், உள்ளே ப்ராண வாயுவை இழுத்துக்கொள்வது பூரகம், ப்ராணனை ஸ்தம்பனம் செய்வது (நிலைநிறுத்துவது) கும்பகம் என்று சொல்லுவார்கள்.

इन्द्रियाणां समस्तानां विषयेभ्यो निवारणम् ।

प्रत्याहार इति प्रोक्तं प्रत्याहारार्थवेदिभिः ॥ २८ ॥

28. ப்ரத்யாஹாரம் ஐந்தாவது யோகாங்கம். கண், காது, நாக்கு, மூக்கு, த்வக் என்ற ஐந்து இந்திரியங்கள் ஸ்வபாவமாகத் தன் தன் விஷயங்களான ரூபம், சப்தம், ரஸம், கந்தம், ஸ்பர்சம் முதலியவைகளை கிரஹிப்பதற்காக வெளியே செல்லும்; அவைகளை அதன் விஷயங்களிடம் போக விடாமல் உள்ளே திருப்புவதே ப்ரத்யாஹாரமென்று அதை அறிந்தவர்கள் கூறுகிறுர்கள்.

आधारे क्वापि मनसः स्थापनं धारणोच्यते ।

28½. ஆருவது யோகாங்கம் தாரணை. சஞ்சலமான மனதை ஆறு ஆதாரங்களுக்குள் ஏதாவது

ஒரு ஆதாரத்தில் அல்லது ஹிருதயத்தில் தோன்றும் விஷ்ணு முதலான மூர்த்திகளில் நிலைநிற்கும்படிச் செய்வது தாரணை என்று சொல்லப்படுகிறது.

ब्रह्मविष्णुशिवादीनां चिन्तां ध्यानं प्रचक्षते ॥ २९ ॥

29. ஏழாவது யோகாங்கம் த்யானம். ஓரிடத்தில் நிறுத்தி வைக்கும் மனதை ப்ரம்மா, விஷ்ணு, சிவன் முதலியவர்களில் ஏதாவது ஒரு மூர்த்தியினிடத்தில் இடைவிடாது செலுத்துவதை த்யானம் என்று சொல்லுகிறார்கள்.

ध्यानादस्पन्दनं बुद्धेः समाधिरभिधीयते ।
अमनस्कसमाधिस्तु सर्वचिन्ताविवर्जितम् ॥ ३० ॥

30. த்யானத்தால் புத்தி (மனது) அசையாமல் இருப்பதே ஸமாதி எனப்படும். நான் சிவனை தியானிக்கிறேன் என்ற மூன்று (திரிபுடி) வஸ்துக்கள் தியானிப்பவன், தியானம், தியானம் பண்ணப் படும் பொருள்கள் தோன்றுவதால் ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி (संप्रज्ञातसमाधि) என்றும் ஸமனஸ்க ஸமாதி என்றும் சொல்லுவார்கள். இதைச் சேர்த்து எட்டு அங்கங்களும் அங்கியான ப்ரதானமான அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி (असंप्रज्ञातसमाधि) அமனஸ்க ஸமாதி ஏற்படுவதில் உபயோகப்படுகின்றன. அறிவாளி, அறிவு, அறியப்படும் பொருள் என்ற த்ரிபுடி இல்லாமல் மனது ஒருவிதமான விருத்தியுமில்லாமல் நித்திரை முதலிய லயம், வெளி பதார்த்த விருத்தி என்ற விக்ஷேபமும் இல்லாமல் சாந்தமாக இருக்கும். அதுதான் அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதி (निरुद्धमनः).

चित्ते निश्चलतां याते प्राणो भवति निश्चलः ।
चित्तस्य निश्चलत्वाय योगं सध्यानमभ्यसेत् ॥ ३१ ॥

31. சித்தம் அசையாமல் நிச்சலமாக இருந்தால் ப்ராணனும் சேஷ்டைகளில்லாமல் நிச்சலமாக ஆகிவிடும். ஆகையால் சித்தம் நிச்சலமாவதற்கு தியானம் முதலிய முக்ய ஸாதனங்களோடு யோகாப்யாஸம் செய்யவேண்டும்.

आकुञ्चनमपानस्य प्राणस्य च निरोधनम् ।
लंबिकोपरिजिह्वायाः स्थापनं योगसाधनम् ॥ ३२ ॥

32. சித்த வ்ருத்திநிரோதம் என்ற யோகத்தை யடைய முக்கியமான ஸாதனம் சொல்லப்பட்டிருக்கிறது. மலம் வெளியில் செல்லும் துவாரத்தின் வழியாக அபான வாயு வெளியில் செல்லுகிறது. அந்த துவாரத்தை விரிக்காமல் குறுக்கிக்கொண்டு கீழ் நோக்கிச் செல்லும் அபான வாயுவை மேல் நோக்கிச் செல்லும்படியாகச் செய்வது (1); ப்ராண வாயுவை கும்பக ப்ராணயாமத்தால் சரீர மத்யத்திலேயே நிறுத்திவைப்பது (2); தாடையின் அடி பாகத்தில் ஸ்தனம்போல் தொங்கும் மாம்ஸத்தின் மேல் நாக்கை வைத்துக்கொள்வது (3); என்ற மூன்று காரியங்கள் யோகம் சித்திப்பதற்கு முக்கியமான ஸாதனங்கள்.

चित्ते निश्चलतां याते प्राणे मध्यपथं गते ।
चिह्नान्येतानि जायन्ते पञ्चभूतजयात्पृथक् ॥ ३३ ॥

33. அப்யாஸத்தால் சித்தம் நிச்சலமாயிருக்கும்படியும் ப்ராணன் சரீர மத்யத்திலேயே இருக்கும்

படியாயும் மனதையும் ப்ராணனையும் வசம் செய்து கொண்ட யோகியின் அடையாளங்கள் மேலே ஐந்து சுலோகங்களால் சொல்லப்படுகின்றன. சரீரத்திற்குள் ப்ருதிவீ முதலிய ஐந்து பூதஸ்தானங்களிருக்கின்றன; (1) பாதத்திலிருந்து முழங்கால் வரையில் ப்ருதிவீ ஸ்தானம்; (2) முழங்காலிலிருந்து நாபி (தொப்புள்) வரையில் ஜல ஸ்தானம்; (3) நாபியிலிருந்து கண்டம் (கழுத்து) வரையில் தேஜ ஸ்தானம்; (4) கண்டத்திலிருந்து புருவங்களின் மத்யம் வரையில் வாயு ஸ்தானம்; (5) புருவ மத்தியத்திலிருந்து ப்ரம்ம ரந்திரம் வரையில் ஆகாச ஸ்தானம். ஒவ்வொரு ஸ்தானத்தில் தாரணையை அப்யாஸம் செய்வதால் ஒவ்வொரு அடையாளம் உண்டாகிறது.

मलमूत्रकफाल्पत्वमारोग्यं लघुता तनोः ।
सुगन्धः स्वर्णवर्णत्वं प्रथमं योगलक्षणम् ॥ ३४ ॥

34. ப்ருதிவீ ஸ்தானம் என்ற முதல் பூமிகையின் ஜயத்தால் மலம், மூத்திரம், கபம் இவைகள் குறைவாகும். சரீரத்தில் ரோகமிராது. சரீரம் லகுவாகும், நல்ல வாசனையும், சரீரத்தில் ஸ்வர்ணம் போல் நிறமும் உண்டாகும். இவைகள் முதல் பூமிகா ஜயத்தின் அடையாளங்கள்.

कण्टकाग्रेष्वसङ्गत्वं जलपङ्केष्वमज्जनम् ।
क्षुत्तृडादिसहिष्णुत्वं द्वितीयं योगलक्षणम् ॥ ३५ ॥

35. ஜலஸ்தானத்தில் தாரணப்யாஸத்தால் இரண்டாவது பூமிகா ஜயத்தை அடைந்த யோகி

முள்ளுகளால் தேய்க்கப்படமாட்டான். ஜலத்திலும் சேற்றிலும் மூழ்கிவிடமாட்டான். பசி தாகத்தை ஸஹித்துக்கொள்வான்.

बह्वन्नपानभोक्तृत्वमातपादिसहिष्णुता ।
दर्शनं श्रवणं दूरात् तृतीयं योगलक्षणम् ॥ ३६ ॥

36. தேஜஸ் ஸ்தானத்தில் தாரணு யோக சித்தியை அடைந்த யோகி அதிகமான அன்ன பானங்களை சாப்பிட முடியும். எவ்வளவு உஷ்ணம் இருந்தாலும் சகித்துக் கொள்வான். வெகு தூரத்திலிருக்கும் வஸ்துவைப் பார்ப்பான். வெகு தூரத்திலுண்டாகும் சப்தத்தைக் கேட்பான். இவைகள் மூன்ருவது பூமிகையின் ஜயத்திற்கு அடையாளங்கள்.

मण्डूकप्लवनं भूमौ मर्कटप्लवनं द्रुमे ।
आकाशगमनञ्चेति चतुर्थं योगलक्षणम् ॥ ३७ ॥

37. வாயுஸ்தானத்தில் தாரணு யோக சித்தியை அடைந்த யோகி பூமியில் தவளைபோல் தாண்டுவான். மரத்தில் குரங்குபோல் தாவுவான். ஆகாசத்தில் சஞ்சரிப்பான். இவை நான்காவது பூமிகா ஜயத்தின் அடையாளங்கள்.

ज्ञानं त्रिकालविषयमैश्वर्यमणिमादिकम् ।
अनन्तशक्तिमत्त्वञ्च पञ्चमं योगलक्षणम् ॥ ३८ ॥

38. ஆகாச ஸ்தானத்தில் தாரணு யோக சித்தியை அடைந்த யோகி அதீதம், வர்த்தமானம், ஆகாமி என்று மூன்று காலத்திலுள்ள வஸ்துக்களை

அறிவான். அணிமா முதலிய ஐச்வரியத்தை அடைந்தவனுயிருப்பான். அதாவது மிகவும் சிறிய ப்ராணிகளிடம்கூட ப்ரவேசிப்பான். அபரிமிதமான பலமுள்ளவனுயும் இருப்பான். இவைகள் ஐந்தாவது பூமிகா ஜயத்தின் அடையாளங்கள்.

प्राणे सुषुम्नां संप्राप्ते नादोऽन्तः श्रूयतेऽष्टधा ।
घण्टा-दुन्दुभि-शङ्ख-अब्धि-वीणा-वेण्वादितालवत् ॥ ३९ ॥

39. ஸுஷும்ண நாடியில் ப்ராணனை நிரோதம் செய்து மனதை வசப்படுத்தின யோகிக்கு ப்ராணன் ஸுஷும்ண நாடியிலிருக்கும்போது உள்ளே எட்டு விதமாக சப்தம் கேட்கும். அதாவது (1) மணியோசை; (2) துந்துபி சப்தம்; (3) சங்கத்தின் சப்தம்; (4) சமுத்திரத்தின் சப்தம்; (5) வீணு சப்தம்; (6) புல்லாங்குழல் ஓசை; (7) மிருதங்க சப்தம்; (8) தாள சப்தம். இவை போல சப்தம் கேட்கும்.

तनूनपात्तडित्तारातारेशतपनोपमम् ।
ब्रह्मनाडीं गते प्राणे बिम्बरूपं प्रकाशते ॥ ४० ॥

40. ஸுஷும்ண நாடியில் ப்ராணனைத் தரித்து தாரணுயோகம் சாதித்தால் ஈச்வர ஸ்வரூபம் முதலில் அக்னிபோல் ப்ரகாசிக்கும். பிறகு மின்னல் போலவும் அதன் பிறகு நக்ஷத்திரம்போலவும், அதன் பிறகு சந்திரன் போலவும், பிறகு சூரியன் போலவும் ப்ரகாசிக்கிறது. (ஈச்வர ஸ்வரூபம் அந்த:கரணத்தில் ப்ரதி பலிக்கிறது.) ப்ரதிபிம்பம் ஜீவன், பிம்பம் ஈச்வரன். ஆகையால்

'பிம்ப ரூபம்' என்றதில் ஈச்வர ஸ்வரூபம் சொல்லப் படுகிறது. ஸுஷும்னு நாடி வழியாக ப்ராணன் வெளியில் சென்றால் ப்ரம்மலோகம் போகலாம் என்று 'तयोर्ध्वमायन्नमृतत्वमेति' என்ற சுருதி சொல்லு கிறபடியால் ப்ரம்ம நாடீ என்ற பதத்தால் ஸுஷும்னு நாடீ சொல்லப்படுகிறது.

श्वासाश्चरन्ति यावन्तः मनुष्यस्य दिनं प्रति ।
तावन्ति योजनान्यर्कः श्वासेश्वासे प्रधावति ॥ ४१ ॥

41. மனிதன் ஒவ்வொரு நாளும் சூரிய உதய காலத்திலிருந்து மறுநாள் சூரிய உதய பரியந்த முள்ள காலத்தில் 21600 சுவாஸம் விடுகிறான். நாம் ஒவ்வொரு சுவாஸம் விடும்பொழுதும் சூரியன் 21600 யோசனை தூரம் ஓடுகிறான்.

एकविंशतिसाहस्रं षट्शतं श्वाससंख्यया ।
सोहमित्युच्चरत्यात्मा मन्त्रं प्रत्यहमायुषे ॥ ४२ ॥

42. ஒரு நாளில் 21600 சுவாஸம் விடுகிறான். ஆயுள் அபிவிருத்திக்காக सोहम् ஸோஹம் என்னும் மந்திரத்தை ஸ்வபாவமாகவே உச்சரணம் செய் கிறான். சுவாஸத்தை இழுத்துவிடுவது ஸோஹம் என்று சொல்லுவதுபோல கூறப்படுகிறது.

सकारञ्च हकारञ्च लोपयित्वा प्रयोजयेत् ।
सन्धिं वै पूर्वरूपाख्यं ततोऽसौ प्रणवो भवेत् ॥ ४३ ॥

43. இவ்விதம் ஸ்வபாவமாகவே உச்சரிக்கப் படும் ஸோஹம் என்னும் மந்திரத்தில் ஸகாரத்தை யும் ஹகாரத்தையும் லோபிக்கும்படிச் செய்ய

அறிவான். அணிமா முதலிய ஐச்வரியத்தை அடைந்தவனுயிருப்பான். அதாவது மிகவும் சிறிய ப்ராணிகளிடம்கூட ப்ரவேசிப்பான். அபரிமிதமான பலமுள்ளவனுயும் இருப்பான். இவைகள் ஐந்தாவது பூமிகா ஜயத்தின் அடையாளங்கள்.

प्राणे सुषुम्नां संप्राप्ते नादोऽन्तः श्रूयतेऽष्टधा ।
घण्टा-दुन्दुभि-शङ्ख-अब्धि-वीणा-वेण्वादितालवत् ॥ ३९ ॥

39. ஸுஷும்ஞ நாடியில் ப்ராணனை நிரோதம் செய்து மனதை வசப்படுத்தின யோகிக்கு ப்ராணன் ஸுஷும்ஞ நாடியிலிருக்கும்போது உள்ளே எட்டு விதமாக சப்தம் கேட்கும். அதாவது (1) மணியோசை; (2) துந்துபி சப்தம்; (3) சங்கத்தின் சப்தம்; (4) சமுத்திரத்தின் சப்தம்; (5) வீணு சப்தம்; (6) புல்லாங்குழல் ஓசை; (7) மிருதங்க சப்தம்; (8) தாள சப்தம். இவை போல சப்தம் கேட்கும்.

तनूनपात्तडित्तारातारेशतपनोपमम् ।
ब्रह्मनाडीं गते प्राणे विश्वरूपं प्रकाशते ॥ ४० ॥

40. ஸுஷும்ஞ நாடியில் ப்ராணனைத் தரித்து தாரணுயோகம் சாதித்தால் ஈச்வர ஸ்வரூபம் முதலில் அக்னிபோல் ப்ரகாசிக்கும். பிறகு மின்னல் போலவும் அதன் பிறகு நக்ஷத்திரம்போலவும், அதன் பிறகு சந்திரன் போலவும், பிறகு சூரியன் போலவும் ப்ரகாசிக்கிறது. (ஈச்வர ஸ்வரூபம் அந்த:கரணத்தில் ப்ரதிபலிக்கிறது.) ப்ரதிபிம்பம் ஜீவன், பிம்பம் ஈச்வரன். ஆகையால்

'பிம்ப ரூபம்' என்றதில் ஈச்வர ஸ்வரூபம் சொல்லப் படுகிறது. ஸுஷும்ந நாடி வழியாக ப்ராணன் வெளியில் சென்றால் ப்ரம்மலோகம் போகலாம் என்று 'तयोर्ध्वयायन्नमृतत्वमेति' என்ற சுருதி சொல்லு கிறபடியால் ப்ரம்ம நாடீ என்ற பதத்தால் ஸுஷும்ந நாடீ சொல்லப்படுகிறது.

श्वासाश्चरन्ति यावन्तः मनुष्यस्य दिनं प्रति ।
तावन्ति योजनान्यर्कः श्वासेश्वासे प्रधावति ॥ ४१ ॥

41. மனிதன் ஒவ்வொரு நாளும் சூரிய உதய காலத்திலிருந்து மறுநாள் சூரிய உதய பரியந்த முள்ள காலத்தில் 21600 சுவாஸம் விடுகிறான். நாம் ஒவ்வொரு சுவாஸம் விடும்பொழுதும் சூரியன் 21600 யோசனை தூரம் ஓடுகிறான்.

एकविंशतिसाहस्रं षट्शतं श्वाससंख्यया ।
सोहमित्युच्चरत्यात्मा मन्त्रं प्रत्यहमायुषे ॥ ४२ ॥

42. ஒரு நாளில் 21600 சுவாஸம் விடுகிறான். ஆயுள் அபிவிருத்திக்காக सोहम् ஸோஹம் என்னும் மந்திரத்தை ஸ்வபாவமாகவே உச்சரணம் செய் கிறான். சுவாஸத்தை இழுத்துவிடுவது ஸோஹம் என்று சொல்லுவதுபோல கூறப்படுகிறது.

सकारञ्च हकारञ्च लोपयित्वा प्रयोजयेत् ।
सन्धिं वै पूर्वरूपाख्यं ततोऽसौ प्रणवो भवेत् ॥ ४३ ॥

43. இவ்விதம் ஸ்வபாவமாகவே உச்சரிக்கப் படும் ஸோஹம் என்னும் மந்திரத்தில் ஸகாரத்தை யும் ஹகாரத்தையும் லோபிக்கும்படிச் செய்ய

வேண்டும். ஸ, ஹ, இரண்டையும் தள்ளினல் ஓ+அம் என்று பாக்கி இருக்கிறது. ஓகாரத்திற்கும், அகாரத்திற்கும் பூர்வரூபஸந்தி சொல்லவேண்டும். அதாவது அகாரத்தை ஓகாரத்தோடு ஒன்று சேர்க்க வேண்டும். அப்படிச் செய்தால் ஓ+ம்=ஓம் என்று ப்ரணவமாக ஆய்விடுகிறது.

अकारश्चाप्युकारश्च मकारो विन्दुनादकौ ।
पञ्चाक्षराण्यमून्याहुः प्रणवस्थानि पण्डिताः ॥ ४४ ॥

44. ஓம்காரம் என்ற ப்ரணவத்தில் ஐந்து அக்ஷரங்கள் இருக்கின்றன. அதாவது अ-उ-ओ-म्. (1) அகாரம்; (2) உகாரம்; (3) மகாரம்; (4) ம் என்ற அக்ஷரம் மெய் எழுத்தான காரணமாக ஸ்வரமில்லாதபடியால் சேர்க்கப்பட்டிருக்கிற பிந்து; (5) மூலாதாரத்திலிருந்து கிளம்பின நாதத்தால் முழு ப்ரணவமும் ஒலிக்கிறபடியால் பொதுவான நாதம் என்று ஐந்து அக்ஷரங்கள் இருக்கின்றன என்று ஆத்மவித்யையில் சிறந்த பண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

ब्रह्मा विष्णुश्च रुद्रश्चापीश्वरश्च सदाशिवः ।
तेष्वक्षरेषु तिष्ठन्ति षट्त्रिंशत्तत्वसंयुताः ॥ ४५ ॥

45. ப்ரணவத்தின் அகாரத்திற்கு ப்ரம்மாவும், உகாரத்திற்கு விஷ்ணுவும், மகாரத்திற்கு ருத்திரனும், பிந்துவுக்கு ஈச்வரனும், நாதத்திற்கு ஸதாசிவனும் தேவதைகளாவார்கள். ஐந்து அக்ஷரங்களில் அதன் தேவதைகள் 36 தத்துவங்களுடன் சேர்ந்திருக்

கிறார்கள். 36 தத்துவங்களும் பிரணவத்தில் அடங்கியவைகளே. குடம் என்னும் வஸ்து குடம் என்ற அதன் பெயரான சப்தத்தோடுகூடத் தோன்றுகிறது. ஆகையால் எல்லா வஸ்துக்களும் அந்தந்த வஸ்துவின் நாமதேயத்தில் அடங்கியவை. எல்லா நாமதேயங்களும் ஓம்காரத்தில் அடங்கியவைகளே. "तद्यथा शङ्कुना सर्वाणि पर्णानि संतृण्णानि एवमोंकारेण सर्वा वाक् संतृण्णा" । என்ற சுருதியில் எல்லா சப்தங்களும் பிரணவத்தால் கோர்க்கப்பட்டிருக்கின்றனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ப்ரணவம் ஸகல வஸ்துக்களின் ஸ்வரூபம். सर्वं ह्येतद्ब्रह्म "ओमित्येदक्षरं सर्वं", ஸர்வாத்மகமான ப்ரஹ்ம ஸ்வரூபமே ப்ரணவம் என்று பிரணவத்தை உபாஸனம் செய்ய வேண்டுமென்பது கருத்து.

गुरुप्रसादाल्लभते योगमष्टाङ्गलक्षणम् ।
शिवप्रसादाल्लभते योगसिद्धिं च शाश्वतीम् ॥ ४६ ॥

46. மனிதன் எட்டு அங்கங்களோடு கூடிய யோகத்தை ஆசார்யானுக்கிரஹத்தாலேயே அடைகிறான். யோகாப்யாஸத்தால் அடையவேண்டிய சாசுவதமான ஸித்தியை ஆத்ம ஸ்வரூபாவிர்ப்பாவத்தை சிவப்ரஸாதத்தாலேயே அடைகிறான்.

सच्चिदानन्दरूपाय बिन्दुनादान्तरात्मने ।
आदिमध्यान्तशून्याय गुरूणां गुरवे नमः ॥ ४७ ॥

47. ப்ரணவத்தின் அர்த்தமான தக்ஷிணமூர்த்திக்கு நமஸ்காரம் என்று நிரூபிக்கப்படுகிறது.

ப்ரணவத்தில் இருக்கும் பிந்து = ரூபம், நாதம் = சப்தம் = நாம ரூபமாகிற ப்ரபஞ்சத்தின் உற்பத்தி ஸ்திதி லயம் இவைகளுக்கு ஆதாரமானதும் அகாரம் உகாரம் மகாரம் என்ற அக்ஷரங்களின் முறையே பொருளான ஸத் சித் ஆனந்த ஸ்வரூபமானதும் உற்பத்தி ஸ்திதி லயமற்றதுமான ஸ்வரூபம் ப்ரணவத்தின் பொருள். அதுவே குருவுக்கு எல்லாம் குருவான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபம் அவருக்கு நமஸ்காரம்.

इति श्रीदक्षिणामूर्तिस्तोत्रार्थप्रतिपादके ।
प्रबन्धे मानसोल्लासे नवमोल्लाससंग्रहः ॥ ४८ ॥

48. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் தாத்பர்யத்தை விளக்கும் மானஸோல்லாஸ புத்தகத்தில் ஒன்பதாவது உல்லாஸச் சுருக்கும் முற்றிற்று.

பத்தாவது சுலோகத்தின்

அவதாரிகை

परिच्छिन्नमहम्भावं परित्यज्यानुषङ्गिकम् ।
पूर्णाहम्भावलाभोऽस्य स्तोत्रस्य फलमुच्यते ॥ १ ॥

1. தேஹத்தின் அபிமானத்தால் நாம் என்ற பாவம் குறுகியதாக இருக்கிறது. நாம் என்று நம்முடைய தேஹத்தை ஸஹஜமாக நினைக்கிறோம். இந்த குறுகிய அஹம்பாவத்தைவிட்டு எல்லா வஸ்துவும் நானே என்று பரிபூர்ணமான அஹம்பாவம் என்று சொல்லப்படும். ஸர்வாத்மபாவம்-மோக்ஷம் இந்த தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரத்தின் பலம் என்று பத்தாவது ச்லோகத்தால் சொல்லப்படுகிறது.

सर्वात्मत्वमिति स्फुटीकृतमिदं यस्मादमुष्मिंस्तवे
तेनास्य श्रवणात्तथार्थमननात् ध्यानाच्च संकीर्तनात् ।
सर्वात्मत्वमहाविभूतिसहितं स्यादीश्वरत्वं स्वतः
सिध्येत् तत्पुनरष्टधा परिणतञ्चैश्वर्यमव्याहतम् ॥ १० ॥

பதவுரை:—यस्मात् = யாதொரு காரணத்தினலே, अमुष्मिन् स्तवे = இந்த ஸ்தோத்திரத்தில், इति = இவ்வாறு सर्वात्मत्वं = ஸர்வமும் ஆத்ம ஸ்வரூபமென்பது, इदंस्फुटीकृतं = ப்ரத்யக்ஷமாக விளக்கப்பட்டதோ, तेन = ஆகையால், अस्य श्रवणात = இந்த ஸ்தோத்திரத்தின் அர்த்தத்தை குருமுகமாகக் கேட்பதாலும், तथा अर्थमननात् = அப்படியே அர்த்தத்தை யுக்திகளால் சிந்திப்பதாலும், ध्यानात = த்யானம் செய்வதாலும், संकीर्तनात् =

ஸ்தோத்திரத்தைப் படிப்பதாலும், सर्वात्मत्व महाविभू-तिसहितं = ஸர்வாத்மத்வம் என்ற விபூதியோடுகூடிய, ईश्वरत्वं = ஐச்வர்யம், स्वत: सिद्ध्येत् = தானகவே ஸித்திக்கும். तत्पुन: = அப்படி ப்ரஸித்தமான, अष्टधा परिणतं = அணிமா முதலிய எட்டுவிதமாக பரிணமித்த, ऐश्वर्यम् = ஐச்வர்யமும் अव्याहतं = தடங்கலிலில்லாமல், सिद्ध्येत् = ஸித்திக்கும்.

உலகமெல்லாம் ஒரு ஆத்ம ஸ்வரூபம் என்ற ஸர்வாத்மத்வம் (सर्वात्मत्वं) இந்த தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்திரத்தில் ப்ரத்யக்ஷமாக நிரூபணம் செய்யப் பட்டபடியால் இந்த ஸ்தோத்திரத்தின் அர்த்தத்தை குருமுகமாக சிரவணம் செய்தாலும் அந்த அர்த்தத்தை யுக்திகளால் மனனம் செய்தாலும் வேறு அறிவினல் தடைபடாமல் த்யானம் செய்தாலும் அல்லது ஸ்தோத்திரத்தைச் சொன்னலும் ஸர்வாத்மத்வம் = ஸர்வமாக இருப்பது என்ற மோக்ஷம் என்னும் மஹாவிபூதியோடுகூடின ஸித்தமான ஐச்வர்யம் தானகவே ஸித்திக்கும். யோக சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் அணிமா முதலிய எட்டுவிதமான ஐச்வர்யமும் தடையில்லாமல் ஸித்திக்கும்.

इदमत्राकूतम् = இந்த சுலோகத்தின் கருத்து விளக்கப்படுகிறது.

पुत्रपौत्रगृहक्षेत्रधनधान्यसमृद्धय: ।
अर्वाचीनाश्च सिद्ध्यन्ति स्वर्गपातालभूमिषु ॥ २ ॥

2. மோக்ஷத்தைவிட கீழ்ப்பட்டதான பிள்ளை பேரன்கள், வீடு, பூமி, பணம், தான்யம் இவைகளின்

ஸம்ருத்திகள் என்ற பலன்கள் ஸ்வர்க்கத்திலோ பாதாளத்திலோ பூமியிலோ இந்த ஸ்தோத்திரத்தால் ஸித்திக்கின்றன.

पाके प्रवर्तमानस्य शीतादिपरिहारवत् ।

प्रासङ्गिकाश्च सिद्ध्यन्ति स्तोत्रेणानेन सर्वदा ॥ ३ ॥

3. அன்னம் வேண்டுமென்று ஆஸ்தையால் சமையல் செய்தால் எதிர் பார்க்காமலே அடுப்பு சமீபத்தில் உட்காருவதால் குளிர் நிவிருத்தி என்ற பலன் கிடைக்கிறது. அதுபோல மோக்ஷத்தை அடைய ஸ்தோத்திரத்தில் ப்ரவர்த்திப்பதால் எதிர் பார்க்காமலே ஸகல பலன்களும் ஸித்திக்கின்றன. ஆனல் மோக்ஷத்தைத் தவிர வேறு பலன்களில் ஆஸ்தை வைக்காமல் மோக்ஷத்தில் ஆசை வைத்து அதற்காக ஸ்தோத்திர சிரவணம் மனனம் த்யானம் இவைகளைச் செய்தால் மோக்ஷம் ஸித்திக்கும். ஆஸ்தைபடாமலே இதர பலன்கள் கிடைக்கும்.

ऐश्वर्यमीश्वरत्वं हि तस्य नास्ति पृथक् स्थितिः ।

पुरुषे धावमाने हि छाया तमनुधावति ॥ ४ ॥

4. பத்தாவது சுலோகத்தில் பலனைச் சொல்லிய ஈசுவரத்வம் என்பது ஐச்வர்யம். அது ஈசுவரஸ்வரூபத்தைவிட்டு தனியாக இருப்பதில்லை. புருஷன் ஓடினல் அவன் நிழல் அவனை அனுஸரித்து ஓடுகிறது: நிழல் என்பது புருஷனைவிட்டு தனியாக இருப்பதில்லை. அதுபோல ஐச்வர்யம் என்பது ஈச்வரனைவிட்டு தனியாக இருப்பதில்லை.

अनन्तशक्तिरैश्वर्यं निष्यन्दाश्चाणिमादयः ।
स्वस्येश्वरत्वे संसिद्धे सिद्ध्यन्ति स्वयमेव हि ॥ ५ ॥

5. வாக்கினுல் சொல்லமுடியாததான ஸஹஜமான ஸாமர்த்தியமே ஐச்வர்யம் என்று சொல்லப்படும். யோக சாஸ்திரத்தில் ஐச்வர்யமென்று சொல்லப்படும் அணிமா முதலியஸித்திகள் ஞானியின் ஐச்வர்யத்தின் திவிலேகளே. ஸ்தோத்ர ச்ரவண மனனுதிகளால் நாம் ஈச்வரனுக ஆகிவிட்டால் அணிமாதிகளான ஐச்வர்யங்கள் தானுகவே ஸித்திக்கின்றன.

यदीयैश्वर्यविप्रुड्भिर्ब्रह्मविष्णुमहेश्वराः ।
ऐश्वर्यवन्तो भासन्ते स एवात्मा सदाशिवः ॥ ६ ॥

6. ஆத்மாவே ஸதாசிவம், ஸதாசிவமே ஆத்மா. அவருடைய ஐச்வர்ய திவிலேகளைக்கொண்டு ப்ரஹ்மா விஷ்ணு சிவன் முதலிய ஈச்வரர்கள் ஐச்வர்யத்தை உடையவர்களாக விளங்குகிருர்கள்.

पुष्पमानयता गन्धो विनेच्छामनुभूयते ।
पूर्णाहम्भावयुक्तेन परिच्छिन्ना विभूतयः ॥ ७ ॥

7. புஷ்பத்தைக் கொண்டு வரும் மனிதன் வாசனையை முகர வேண்டுமென்ற ஆசையில்லாமலிருந்தாலும் வாசனையை அனுபவிக்கிருன். அதுபோல பரிபூர்ணமான அஹம்பாவமுள்ள யோகி ஸர்வாத்ம பாவமுள்ள யோகி இச்சை யில்லாமற் போனுலும் குறைவு பட்டதான ஐச்வர்யங்களை (விபூதிகளை) அனுபவிக்கிருன்.

अणिमा महिमा चैव गरिमा लघिमा तथा ।

प्राप्तिः प्राकाम्यमीशित्वं वशित्वञ्चाष्टसिद्धयः ॥ ८ ॥

8. எட்டுவிதமான ஐச்வர்யங்களும் பத்து சுலோகங்களால் நிரூபிக்கப்படுகின்றன. (1) அணிமா; (2) மஹிமா; (3) கரிமா; (4) லகிமா; (5) ப்ராப்தி; (6) ப்ராகாம்யம்; (7) ஈசித்வம்; (8) வசித்வம் என்று ஸித்திகள் எட்டு விதமானவை.

अत्यन्तमणुषु प्राणिष्वात्मत्वेन प्रवेशनम् ।

अणिमासंज्ञमैश्वर्यं व्याप्तस्य परमात्मनः ॥ ९ ॥

9. எங்கும் வ்யாபித்த பரமாத்மாவுக்கு மிகவும் சிறியதான புழு முதலிய ப்ராணிகளின் சரீரத்திலே ஆத்மாவாகப் ப்ரவேசிப்பது அணிமா என்று சொல்லப்படும் ஐச்வர்யம்.

ब्रह्माण्डादिशिवान्तायाः षट्त्रिंशत्तत्त्वसंहतेः ।

बहिश्च व्याप्यवृत्तित्वमैश्वर्यं महिमाह्वयम् ॥ १० ॥

10. ப்ரஹ்மாண்டம் முதல் விராட் ஸ்வரூபத்தில் அபிவ்யக்தி அடைந்த புருஷன் வரையிலுமுள்ள 36 தத்துவங்களுக்கு வெளியிலும் வ்யாபித்து இருப்பது மஹிமா என்று சொல்லப்படும் ஐச்வர்யம்.

महामेरुसमाङ्गस्य समुद्धरणकर्मणि ।

योगिनस्तूलतुल्यत्वं लघिमानं विदुर्बुधाः ॥ ११ ॥

11. தன்னுடைய இச்சையினால் மேரு பர்வதம் போல அதிக ஸ்தூலமாயிருக்கும் யோகி, பிறரால் தூக்கப்பட்ட பொழுது பஞ்சுபோல மிகவும் லேசாக

இருப்பான். அதை லகிமா என்னும் ஐச்வர்யம் என்று பண்டிதர்கள் அறிகிறார்கள்.

परमाणुसमाङ्गस्य समुद्धरणकर्मणि ।
योगिनो मेरुतुल्यत्वं गरिमाणं विदुर्बुधाः ॥ १२ ॥

12. இச்சாவசத்தால் பரமாணுபோல மிகச் சிறிய சரீரமுடைய யோகி, பிறரால் தூக்கப்படும்பொழுது மேரு பர்வதம்போல தூக்க முடியாத கனமாக இருப்பான். அவ்விதமிருப்பதை கரிமா என்னும் ஐச்வர்யம் என்று சொல்லுவார்கள்.

पातालवासिनः पुंसः ब्रह्मलोकावलोकनम् ।
प्राप्तिर्नाम महैश्वर्यं सुदुष्प्रापमयोगिनाम् ॥ १३ ॥

13. கீழேயுள்ள பாதாள லோகத்திலுள்ள யோகி, மேலேயுள்ள ப்ரஹ்ம லோகத்தைப் பார்ப்பான். அவ்விதம் பார்ப்பது ப்ராப்தி என்ற பெரிய ஐச்வர்யம், யோகாப்யாஸமில்லாதவர்களால் அடைய முடியாது.

आकाशगमनादीनामन्यासां सिद्धिसंपदाम् ।
स्वेच्छामात्रेण संसृष्टिः प्राकाम्यमभिधीयते ॥ १४ ॥

14. ஆகாசத்தில் ஸஞ்சாரம் செய்வது முதலிய சக்திகளை இச்சா மாத்திரத்தால் ஸாதிப்பது ப்ராகாம்யம் என்னும் ஐச்வர்யம் என்று சொல்லப்படுகிறது.

स्वशरीरप्रकाशेन सर्वार्थानां प्रकाशनम् ।
प्राकाश्यमिदमैश्वर्यमिति केचित् प्रचक्षते ॥ १५ ॥

15. தன்னுடைய சரீரத்தை ப்ரகாசப்படுத்துவதாலேயே எல்லா வஸ்துக்களையும் ப்ரகாசப்படுத்துவது ப்ராகாச்யம் என்னும் ஐச்வர்யமென்று சிலர் சொல்லுகிறார்கள்.

स्वेच्छामात्रेण लोकानां सृष्टिस्थित्यन्तकर्तृता ।

सूर्यादीनां नियोक्तृत्वमीशित्वमभिधीयते ॥ १६ ॥

16. விச்வாமித்திரரைப்போல் தன்னுடைய ஸங்கல்ப மாத்திரத்தால் வேறு ஸாதனங்களை எதிர்பாராமல் நகரம் முதலியவைகளை உண்டுபண்ணுவது பரிபாலிப்பது நாசமாக்குவது சூரியன் முதலியவைகளை தன்னிஷ்டப்படி ஏவுதல் முதலியவை ஈசித்வம் என்னும் ஐச்வர்யம் என்று சொல்லப்படுகிறது.

सलोकपालास्सर्वेऽपि लोकाः स्ववशवर्तिनः ।

तदैश्वर्यं वशित्वाख्यं सुलभं शिवयोगिनाम् ॥ १७ ॥

17. இந்திரன், யமன், வருணன் முதலிய லோகபாலர்கள் கூடிய ஸகல லோகங்களும் தன் வசமாயிருப்பது வசித்வம் என்னும் ஐச்வர்யம். சிவயோகிகளால் சுலபமாக அடையக்கூடியது.

यस्त्वेवं ब्राह्मणो वेत्ति तस्य देवा वशे स्थिताः ।

किं पुनः क्ष्मापतिव्याघ्रव्यालस्त्रीपुरुषादयः ॥ १८ ॥

18. சிவயோகிகளுக்கு வசித்வமென்ற ஐச்வர்யம் ஸித்திக்கிறதென்று "यस्त्वैवं ब्राह्मणो विद्यात् तस्य देवा असन्वशे" என்ற வேதம் சொல்லுகிறது. தேவர்களே

யோகியின் வசமாயிருந்தால் அரசன், புலி. ஸர்ப்பம், ஸ்திரீ, புருஷர் முதலியவர்கள் வசமாயிருப்பார்கள் என்று சொல்லுவதே அவசியமில்லை.

सर्वात्मभावसाम्राज्यनिरन्तरितचेतसाम् ।
परिपक्वसमाधीनां किं किं नाम न सिद्ध्यति ॥ १९ ॥

19. ஸர்வாத்மபாவம் என்ற மோக்ஷ ஸாம்ராஜ்யத்தில் ஈடுபட்ட மனதை உடைய ஸதாசிவாத்மஸ்வரூப சமாதியின் நல்ல பரிபாகத்தை அடைந்த யோகிகளுக்கு ஸித்திக்காத ஐச்வர்யமே கிடையாது. ஸர்வ விதமான ஐச்வர்யங்களும் ஸித்திக்கின்றன.

स्तोत्रमेतत्पठेद्धीमान् सर्वात्मत्वञ्च भावयेत् ।
अर्वाचीने स्पृहां मुक्त्वा फले स्वर्गादिसंभवे ॥ २० ॥

20. ஸ்வர்க்காதி போகங்களால் உண்டாகும் ஸுகமான அல்ப பலத்தில் ஆஸ்தையைவிட்டு மோக்ஷத்தை விரும்பி மேதாவியானவன் இந்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தை படிக்கவேண்டும். அஹம் ஸர்வம் என்று ஆத்மா ஸர்வ ஸ்வரூபமென்று பாவனை செய்யவேண்டும்.

स्वर्गादिराज्यं साम्राज्यं मनुते नहि पण्डितः ।
तदेव तस्य स्वाराज्यं यत्तु स्वाराज्यमात्मनि ॥ २१ ॥

21. மிகவுமுயர்ந்த பலமான ஸாம்ராஜ்யம் ஸ்வர்க்க ராஜ்யம் முதலியவைகளை ஸ்வாராஜ்யமென்று ஆத்மஜ்ஞானியான பண்டிதன் நினைப்ப

தில்லே. ஆத்ம ஸ்வாராஜ்யம் என்பதே ஆத்ம ஜ்ஞானிக்கு ஸ்வராஜ்யமாகும்.

सर्वात्मभावनावन्तं सेवन्ते सर्वसिद्धयः ।
तस्मादात्मनि साम्राज्यं कुर्यान्नियतमानसः ॥ २२ ॥

22. எல்லாம் ஆத்ம ஸ்வரூபம்தான் என்று ஸர்வாத்ம பாவனேயை உடைய ஞானியை எல்லாவித மான ஐச்வர்ய ஸித்திகளும் சேவிக்கின்றன. ஆகையால் மனதை அடக்கி ஆத்ம ஸ்வரூபத்தில் ஸாம்ராஜ்யத்தைக் கொள்ளவேண்டும்.

यस्य देवे परा भक्तिर्यथा देवे तथा गुरौ ।
तस्यैते कथिता ह्यर्थाः प्रकाशन्ते महात्मनः ॥ २३ ॥

23. எவன் ஈச்வரனிடத்தில் பக்தியை உடையவனும் ஈச்வரனிடத்தில் வைத்திருக்கும் பக்திபோல குருவினிடத்திலும் பக்தியுடையவனுகவும் இருக்கிருனே, அந்த மஹானுபாவனுக்குத்தான் (குருவால் உபதேசிக்கப்பட்ட விஷயங்கள்) இங்கே ஸ்தோத்திரத்தில் சொல்லப்பட்ட விஷயங்கள் பிரகாசிக்கின்றன. ஆகையால் குரு பக்தியோடு இந்த ஸ்தோத்திரத்தைப் படிக்கவேண்டும்.

प्रकाशात्मिकया शक्त्या प्रकाशानां प्रभाकरः ।
प्रकाशयति यो विश्वं प्रकाशोऽयं प्रकाशताम् ॥ २४ ॥

24. உலகத்தை ப்ரகாசப்படுத்தும் சந்திரன் சூரியன் முதலிய ப்ரகாசங்களே தன்னுடைய ப்ரகாச சக்தியால் ஈச்வர ஸ்வரூபம் ப்ரகாசப்படுத்துகிறது.

तमेव भान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति । என்ற வேதம் இதைக் கூறுகிறது. அவ்விதம் சூரியன் முதலியவைகளை ப்ரகாசப்படுத்திக்கொண்டே உலகம் முழுவதையும் ப்ரகாசிக்கும்படிச் செய்துகொண்டிருக்கும் ப்ரகாச ஸ்வரூபம் எனக்கு ப்ரகாசிக்கவேண்டும்.

इति श्रीदक्षिणामूर्तिस्तोत्रार्थप्रतिपादके ।

प्रबन्धे मानसोल्लासे दशमोल्लाससंग्रहः ॥ २५ ॥

25. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் கருத்தை விளக்கும் மானஸோல்லாஸம் என்ற புத்தகத்தில் பத்தாவது உல்லாஸச் சுருக்கம் முற்றிற்று.

அனுபந்தம்

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்

(ஸ்ரீ ஆசார்யாள் உபதேசம்)

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அஷ்டகத்தில் 10 சுலோகங்கள் இருக்கின்றன. அதில் ஞான விஷயங்களாக 8 சுலோகங்கள். பகவானுடைய கிருபையினால்தான் உத்தமமான ஞானம் வருமென்பது அவைகளின் கருத்து. மனுஷ்யனுக்கு வியாமோஹம் தொலைய வேண்டுமானால் பரமேச்வரனுடைய கிருபை அவசியம் வேண்டுமென்பதை देहं प्राणमपि என்னும் சுலோகத்தில் व्यामोह संहारिणे என்ற பதத்தால் பகவத்பாதாள் ஸூசிப்பிக்கிறார்கள்.

ईश्वरानुग्रहादेव पुंसामद्वैतवासना ।
ईश्वरात् ज्ञानमन्विच्छेत् ॥

ईशानः सर्वविद्यानां முதலிய சுருதி ஸ்மிருதி வசனங்கள் நம்மிடம் அனாதியாய் தங்கி இருக்கும் அஜ்ஞானம் என்ற இருள் நிச்சேஷமாகப் போகவேண்டுமானால் ஞானமென்ற தீப மன்றியில் இயலாது; ஞானமோ ஈச்வரப்ரஸாதம் பெற்றவருக்கே ஸுலபம் என்பது இவைகளின் பொருள். अद्वैत वासना என்று சொல்லியிருப்பதால் மனிதனுக்கு அத்வைதப் பற்றுண்டாவதற்கே ஈச்வரானுக்ரஹம் தேவை. பின்பு வேதாந்த ச்ரவணம், மனனம் முதலிய ஸாதனங்களையடைய ஈசன் அருள் வேண்டுமென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

त्र्यंबकं यजामहे सुगंधिं पुष्टिवर्धनम् ।
उर्वारुकमिव बन्धनान्मृत्योर्मुक्षीय माऽमृतात् ॥

என்று வேதம் கூறுகிறது. இவ்விடம் ம்ருத்யு என்ருல் பிரமாதம் என்று பொருள். ஸனத்ஸுஜாதீயத்தில் न वै व्याघ्रादिकं मृत्युः प्रमादं वै मृत्युमहं ब्रवीमि । என்னுமிடத்தில் க்ரூர ஸ்வபாவமுள்ள புலி கரடி முதலிய பிராணிகள் மிருத்யு அல்ல; அனேகவிதமான பிறவிக்குக் காரணமான அஜ்ஞானந்தான் மிருத்யு என்று கூறப்பட்டிருக்கிறது. தைத்திரீய உபநிஷத்தும் குருகுலத்திலிருந்து வீட்டிற்குத் திரும்பும் சிஷ்யனுக்கு ஆசிரியர் உபதேசிக்குங்கால் அடிக்கடி नप्रमदितव्यं என்று கூறுகிறது. பிரமாதம் என்னும் மிருத்யுவை விலக்க வேண்டுமென்று தாத்பர்யத்துடன் விளக்குகிறது. அந்த உத்தமமான ஞானம் வருவதற்கு ஈச்வராராதனம் செய்யவேண்டும். எவன் ஈச்வரனை ஆராதிக்கிருனே எவன் கை சிவலிங்கத்தை ஸ்பர்சித்து அர்ச்சிக்கிறதோ, அவன் கையே பகவான். அது பகவானைவிட உயர்ந்தது என்று अयं मे हस्तो भगवान् अयं मे भगवत्तरः என்னும் ரிக்வேத வாக்யங்கள் கோஷிக்கின்றன. ஒவ்வொரு தடவையும் பஸ்மதாரணம் செய்து கொள்ளும்பொழுது त्र्यंबकं यजामहे என்னும் மந்திரத்தைச் சொல்லவேண்டும். எப்பொழுதும் சிவார்ச்சனம் செய்கிறவர்களும் விபூதிதாரணம் செய்கிறவர்களும் பரமசிவஸ்வரூபர்களென்றே புராணங்கள் வியவஹரிக்கின்றன. ஜாபால சுருதியில் भस्मच्छन्नो भस्मशय्याशयानो रुद्राध्यायी मुच्यते सर्वपापैः என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஷை திரியம்பக மந்திரத்துடன் பஸ்மதாரணம் செய்து கொள்கிறவன் ஸகல பாபங்களிலிருந்து விலகி ஞானத்தை யடைகிருன்.

ஈச்வராராதனம் செய்பவர்களுக்கு ஈச்வரன் பரம மங்களமான சின்முத்ரை அருள்கிறார் என்பதை बाल्यादिष्वपि जाग्रदादिषु என்னும் சுலோகத்தில் உபதேசிக்கிறார்கள். தக்ஷிணாமூர்த்தியின் வலக்கையில் காணப்படும் சின்முத்ரை பரம மங்களமானது. यो मुद्रया भद्रया என்று சுலோகம். शिवं भद्रं कल्याणं मंगलं शुभं என்று நிகண்டு. குழந்தைக்கு மங்களம் என்று பெயரிடுகிறோம். இவைகளெல்லாம் மங்களமல்ல. जातस्य हि ध्रुवो मृत्युः பிறந்தவனுக்கு சாவு நிச்சயம்.

अंगुष्ठतर्जनीयोगमुद्राव्याजेन देहिनाम् ।
श्रुत्यर्थं ब्रह्मजीवैक्यं दर्शयन्नोऽवताच्छिवः ॥

என்று பெரியோர் மொழி. நாமெல்லாம் தன்னைக் காட்ட கட்டை விரலை உபயோகிக்கிறோம். अंगुष्ठमात्रः पुरुषः என்ற சுருதி ஜீவனை அங்குஷ்டமாத்ரன் என்கிறது. பிறரைச் சுட்டிக்காட்ட ஆள்காட்டி விரலை உபயோகிக்கிறோம். பெரும் ஆள் பெருமாள். அவனே ஈச்வரன். पुरुषं महान्तं என்று புருஷஸூக்தம். அங்குஷ்டத்தையும் ஆள்காட்டி விரலையும் ஐக்யமாகச் சேர்த்து செய்யப்படும் சின்முத்ரையானது ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் ஐக்யமென்னும் அத்வைத தத்வத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்குகிறது.

बाल्यादिषु என்ற சுலோகத்தில் பால்யம், யௌவனம், வார்த்தக்யம் முதலிய அவஸ்தைகள் வேறுபட்டாலும் மாலையில் அனுஸ்யூதமான கயிறு ஒன்றுதான், அதைப் போல் பால்யாதி அவஸ்தைகளில் அனுஸ்யூதமான ஆத்ம ஸ்வரூபம் ஒன்றுதான்.

எலெக்ட்ரிக் பல்புகள் பல நிறங்களாக இருந்த போதிலும் அதற்குள்ளிருக்கும் பிரகாசம் ஒன்று தான். या ब्रह्मादिपिपीलिकान्ततनुषु प्रोता जगत्साक्षिणी என்று பகவத்பாதாள் சொல்லியிருக்கிறார்கள். ப்ரஹ்மா முதல் சிறிய எறும்பு வரையிலுள்ள சரீரங்களில் ஸாக்ஷியான ஆத்மஸ்வரூபம் ஒன்றுதான் என்று கருத்து. மேல் இருக்கும் போர்வைகள் வெவ்வேறாக இருந்தபோதிலும் உள்ளே இருக்கும் அறிவு என்னும் வஸ்து ஒன்றே. பரமேச்வரன் தன்னை பஜிப்பவர்களுக்கு தன் ஸ்வரூபத்தைக் கொடுக்கிறார். ஜனகர் தன் குருவான யாஜ்ஞவல்க்யருக்கு முதலில் ஆயிரம் பசுக்கள் தருகிறேன் என்றார். ஞானத்தை யடைந்த பிறகு ஆத்ம ஸகித தேஹம் விதேஹம் இரண்டையும் கொடுத்தார். विदेहान् ददामि मां चापि सहदास्यायेति । என்று ப்ராஹ்மணம். ஞானஸ்வரூபமான ஆத்மாவும் வெளியிலிருக்கும் பிரபஞ்சமும் எப்படி ஒன்றாகுமென்று ஸந்தேகப்படலாம். भूरंभासि என்ற சுலோகத்தில் பூமி, ஜலம், காற்று, அக்னி முதலிய வஸ்துக்கள் விமர்சிக்குங்கால் அவைகளுக்குக் காரணமான ஈச்வரன் தான் என்பது நன்றாய் விளங்கும். மூகபஞ்சசதியில் दहनमयीं होतृमयीं என்று சொல்லியிருக்கிறது.

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரைப் பற்றிச் சொல்லும்பொழுது பூமி முதலிய ஈச்வர மூர்த்திகள் சுற்றினாலும் தீக்ஷிதர் என்ற சம்பு மூர்த்தியானது ப்ரமணமில்லாதது, சுற்றுதலில்லாதது. விபரீத ஞானமில்லாதது என்று சொல்லுகிறார். ஸமஸ்த ப்ரபஞ்சமும் ஈச்வரனுடைய மூர்த்தி என்பதை விளக்குகிறார்.

நான் என்பது பரமாத்ம ஸ்வரூபம் என்பது ஸரி ; மண் முதலியவை எப்படி பரமாத்மஸ்வரூபம் என்றால், சட்டி குடம் முதலியவை எப்படி மண்ணைத் தவிர வேறல்லவோ அப்படியே. ஒரு பால் குடத்திலிருந்து கொஞ்சம் பால் எடுத்துத் தயிராகத் தோய்த்துவைக்கிறோம். அதே குடத்திலிருந்து வேறு கொஞ்சம் பாலை எடுத்துத் தனியாக வைக்கிறோம். ஆனால் தயிருக்கும் பாலுக்கும் மூல காரணம் குடத்திலிருந்த பால் தான். ஆனால் பால் தயிராவது போல் ஈச்வரன் விஷயங்களாவதில்லை. கானலில் ஜலம் போலும், கிளிஞ்சலில் வெள்ளிபோலும் பரமாத்மாவிடம் பிரபஞ்சம் தோன்றுகிறது. கானலில் தோன்றும் ஜலத்திற்குக் காரணம் கானலைத் தவிர வேறல்ல. கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளிக்குக் கிளிஞ்சல்தான் காரணம். அப்படியே ஈச்வரன் தான் ஜகத்திற்குக் காரணம்.

विश्वं पश्यति என்ற சுலோகத்தில் ஜாக்ரதாதி அவஸ்தைகளில், ஈச்வரன் ஸ்வாமீ, நாமெல்லாம் ஈச்வரனுடைய ஸொத்து, ஈச்வரன் பிதா, நாமெல்லோரும் அவர் குழந்தைகள், நாமும் உலகத்தைப் பார்க்கிறோம், ஈச்வரனும் உலகத்தைப் பார்க்கிறார் ; ஆனால் இரண்டு பார்வைக்கும் வித்தியாசமுண்டு. நாம் உலகத்திலுள்ள விஷயங்களை அஜ்ஞானத்தால் பிரமித்து ஸத்யமாகப் பார்க்கிறோம். 'माया परिभ्रामितः' ஈச்வரனே பிரமமில்லாதவராதலால் உலகத்துக்கும் தனக்குமுள்ள ஸம்பந்தத்தை விவேகத்துடன் பார்க்கிறார். ஈச்வரன் விஷயத்தில் मायाऽपरिभ्रामितः என்று கொள்ளவேண்டும். பிரமமில்லாதவன் ஈசன் என்று பொருள்.

विश्वं दर्पण என்ற சுலோகத்தில் கண்ணுடியில் உலகம் தோன்றுகிறதுபோல் இல்வுலகம் தோன்றுகிறது ஸத்யமல்ல என்று சொல்லியிருக்கிருர். ஸகல வஸ்துக்களும் நமக்குள்ளிருக்குமாஞல் வெளியிலிருப்பதாகத் தோன்றுகிறதே அது எப்படி என்று கேட்கலாம். ஸ்வப்னத்தில் வஸ்துக்கள் தனக்குள்ளேயே இருந்தும் வெளியில் தோன்றுவது போல். அதற்கு இரண்டு திருஷ்டாந்தங்கள். ஸ்வப்னத்தில் உலகம் தோன்றுவது ஒன்று. கண்ணுடியில் மாடு தன் உருவத்தைப் பார்த்தால் அதை நிஜமான மாடு என்று நினைத்து கண்ணுடியை முட்டி உடைத்து விடுகிறது. கண்ணுடியை வைத்த மனிதனே கண்ணுடியில் தோன்றும் உலகத்தை பொய்யாகவே பார்க்கிருன். அஜ்ஞானிகள் உலகத்தை ஸத்யமென்று நினைத்து அநேகவித கஷ்டங்களை யனுபவிக்கின்றனர். ஞானியானவன் உலகத்தையும் ஸுகதுக்கங்களையும் வெறும் தோற்றமென்று நினைக்கிருன்.

बीजस्यान्त: என்னும் சுலோகத்தில், பெரிய ஆலமரமானது எப்படி முதலில் விதையில் அடங்கியிருந்து பிறகு பிரகாசத்திற்கு வருகிறதோ, அப்படியே பிரபஞ்சமானது ஸ்ருஷ்டிக்கு முன் பரமாத்மாவில் ஸூக்ஷ்மமாயிருந்து பிறகு மாயையால் விசித்திரமாகத் தோன்றுகிறது. சுத்தமான கண்ணுடியில் பச்சை சிவப்பு முதலிய பல வர்ணங்கள் தோன்றுவதுபோல், ஸ்வச்சமான பரமாத்மாவிடம் விசித்திர பிரபஞ்சங்கள் தோன்றுகின்றன என்று சொல்லப்படுகிறது.

यस्यैव स्फुरणं என்ற சுலோகத்தில், எப்படி தங்கத்தால் செய்யப்பட்ட தாம்பாளம் பன்னீர்செம்பு முதலியவைகளிலிருக்கும் மஞ்சள் நிறம் தங்கத்தைச் சேர்ந்ததே யொழிய பாத்திரங்களுடைய தல்லவோ, அப்படியே பிரபஞ்சத்திலுள்ள இருப்பு (सता) பிரகாசம், ஆனந்தம் (இஷ்டமாயிருக்கும் தன்மை) இம்மூன்றும் பரமாத்மாவினுடையது. உருவமும் பெயரும் தான் பிரபஞ்சத்தைச் சேர்ந்தவை என்ற சுருதியின் கருத்து இந்த சுலோகம் விளக்குகிறது.

सर्वात्मत्वमिति என்ற சுலோகத்தில், ஸமஸ்த வஸ்துக்களும் ப்ரம்மத்தில் கல்பிக்கப்பட்டுள்ளது. உண்மையான ஸ்வரூபம் பிரம்மம்தான் என்ற பாவனையுடன் இந்த ஸ்தோத்திரத்தைச் சொல்கிறவர்களுக்கும் இதன் தாத்பர்யத்தை இடைவிடாது அனுஸந்தானம் செய்கிறவர்களுக்கும் கருணாநிதியான பகவான் அஷ்டைச்வர்யங்களையும் பரம மங்களமான மோக்ஷமென்ற ஆனந்தத்தையும் கொடுக்கிறார் என்று சொல்லப்படுகிறது.

வாக்ய வ்ருத்தி

(ப்ரஹ்மஸ்ரீ போலகம் சுந்தர சாஸ்திரிகள்)

"வாக்யவ்ருத்தி" க்ரந்தத்தை ஆரம்பிக்கும் முன் பகவத்பாதாள் இரண்டு மங்கள ச்லோகங்களால் ஜ்ஞாநாநந்த ரூபியான லக்ஷ்மீபதியையும் தன்னை ப்ரஹ்மஸ்வரூபமாக செய்வித்த தனது குருவின் பாத கமலத்தையும்நமஸ்காரம் செய்கிறார்கள். தாபத்ரயத்தினால் வருந்திய, சமதமாதி ஸாதனங்களுடன் கூடிய ஒரு சிஷ்யன் ஸத்குருவைக் கேட்கிறான்: "இந்த ஸம்ஸார பந்தத்திலிருந்து ஆயாஸமின்றி மோக்ஷத்தை அடைய மார்க்கத்தை தயவு செய்து எனக்குச் சுருக்கிச் சொல்லவேண்டும்"

குரு:—உன் வசனம் நன்றாக விளங்குகிறது. ஸ்பஷ்டமாகச்சொல்லுகிறேன். கவனத்துடன் கேள்: தத்த்வமஸி முதலிய மஹாவாக்கியங்களிலிருந்து உண்டாகும் ஜீவபரமாத்மாபேதஜ்ஞானம்மோக்ஷஸாதனம்.

சிஷ்யன்:—ஜீவன் யார்? பரமாத்மா யார்? அவர்களுக்கு ஐக்யம் எப்படி மஹாவாக்யத்தால் அறியப்படும்?

குரு:—நீயே ஜீவன், நீயே ப்ரஹ்மமாகயிருக்கிறாய்.

சிஷ்யன்:—த்வம்பதார்த்தமான ஜீவனையும் தத்பதார்த்தமான பரமாத்மாவையும் நான் தெரிந்து

கொள்ளவில்லை. வாக்யார்த்தஜ்ஞானம் எப்படி உதிக்கும்?

குரு:—அந்த:கரணம், அதன்விருத்திகள் இவைகளுக்கு ஸாக்ஷியாயும், ஸத்யாநந்த ஸ்வரூபனுயும் ஜ்ஞாந ஸ்வரூபியுமான ஸாக்ஷி வஸ்துவை உன் ஆத்மஸ்வரூபமாக எப்பொழுதும் தியானம் செய். தேஹேந்திரியாதிகளின் நினைவை விடு. ரூபாஸகந்தாதிகளுடன் கூடியிருப்பதாலும் ஆகாசாதி பஞ்ச பூதங்களின் கார்யமாக யிருப்பதாலும், தேஹம் ஆத்மாவல்ல. குடத்தைப் பார்ப்பவன் குடமல்ல, அதுபோல் தேஹத்தைப் பார்ப்பவன் தேஹமல்ல. இவ்விதம் இந்திரியம், மனது, புத்தி, ப்ராணன் இவைகளைப் பார்ப்பவன் இவைகளைக் காட்டிலும் வேருக ஜ்ஞான ரூபியாக இருக்கவேண்டுமென்பதை அனுமானத்தினுல் தெரிந்து கொள்ளவேண்டும். தேஹேந்த்ரியாதி பதார்த்தங்கள் எதன் ஸன்னிதியில் உலக வ்யாபாரங்களைச் செய்ய சக்தி உள்ளனவோ அந்த வஸ்துவே நான் என்று அறிவாயாக. எது தான் மாறுதலை அடையாமல் அயஸ்காந்தம் போல் புத்தி முதலியவைகளை சலிக்கச் செய்கின்றதோ அதுவே நான்.

The Liberty Press, Madras-1

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகள்

		ரூ.	ந.பை
1.	ஸதாசிவேந்த்ர ப்ரஹ்மம் அருளிய—சிவமானஸிக பூஜா, கிர்த்தனங்கள், ஆத்ம வித்யா விலாஸம் :	0	94
2.	ஸ்ரீ முகுந்தமாலை	0	37
3.	ஸ்ரீ பஜகோவிந்தம்	0	37
4.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்—தேவநாகரி, தமிழ் லிபிகளில் மூலமும், தமிழ் உரையும்	1	50
4-a.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமும், நாமாவளி	0	16
5.	விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்திரம்	0	75
6.	ஸ்ரீ சாந்திவிலாசம்	0	75
7.	ஸ்ரீ சிவபாதாதி கேசாந்தவர்ணனம் முதலிய 5 சிவஸ்தோத்ரங்கள்	0	87
8.	ஸ்ரீ தேவீஸ்தோத்ர ரத்னுகரம்	1	00
9.	மாத்ருகா புஷ்பமாலா ஸ்துதி	0	62
10.	ஸ்ரீ மூகபஞ்சசதீ	2	00
11.	ஸ்ரீ ஆனந்த ஸாகரஸ்தவம்	0	87
12.	ஸ்ரீ தக்ஷிணுமூர்த்யஷ்டகம்	0	31
13.	ஸ்ரீ ஆக்யா ஷஷ்டி	0	75
14.	தயாசதகம்—ஸ்ரீதர அய்யாவாள் இயற்றியது	0	75
15.	திருக்குறள்—பொருட்பாலும் காமத்துப்பாலும் :	4	00

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபடகளான

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் அருளிய நன்மொழிகள்

16.	நாற்பது ஸம்ஸ்காரங்களும் கர்மானுஷ்டானங்களும்	0	62
17.	நமது வேதங்களும் சாஸ்திரங்களும்	1	00
18.	நமது ஆலயங்களும் மூர்த்திகளும்	0	75
19.	நமது அனுதிமதம்	0	37
20.	நமது தர்மம்	0	75
21.	ஐந்து பாகங்களும் சேர்ந்தது	3	00
	ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி ஸ்தோத்ரம்—ஸ்ரீஸுரேச்வராசார்யாளின் மானஸோல்லாஸ வார்த்திகத்துடன் கூடியது	1	75
22.	ஆத்மார்ப்பண ஸ்துதி	0	75
23.	ஸ்ரீ ஹரிபக்த ஸுதோதயம் (நாரதீய புராணஸாரம்)	3	50
24.	ஸ்ரீஜகத்குரு திவ்ய சரித்திரம்—500 பக்கங்கள்; 70 படங்கள் அடங்கியது. ஆர்ட் போர்ட் பைண்டு	5	00
	அரை காலிகோ ,, ...	6	50
	முழு காலிகோ ,, ...	7	50
25.	ஸ்ரீ ஜகத்குருவின் உபதேசங்கள் (இரண்டாம் பாகம்) ஸ்ரீ சங்கர விஜயம்	2	00
26.	ஸ்ரீ ஜகத்குருவின் உபதேசங்கள் (மூன்றும் பாகம்)	2	00
27.	ஸ்ரீ வரதராஜஸ்தவம்	0	94

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1.